# களத்தில்

## நூறாவது சிறப்பிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2026 சிலை 27 (10.01.1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: £1.00


### கவிதை மூலை

அன்னை தமிழுக்கு
இன்னல் விழையினும்
பொங்காத தமிழனைப்
பொசுக்கிப் பொங்கடா
தமிழா!
என்ன விழையினும்
என்ன வகையிலும்
தமிழின் துரோகியர்
தலையினைக்
கொய்து வா
தமிழா!

- சுடு கவி

# கிழக்குட்படத் தமிழீழத்தின் பல பாகங்களிலும் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்கள்

**புத்தாண்டு பிறந்த இரு தினங்களுள் மட்டும் குறைந்தது முப்பது சிறீலங்காப் படையினர், பல்வேறு தாக்குதலில் விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்டுள்ளனர்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியகளப்பு, ஊறணி, எருமைத்தீவு, காத்தான்குடி, மியான்குளம் ஆகிய பகுதிகளிலும் புத்தளம் மாவட்டத்திலும், திருமலை மாவட்டத்தில் பன்குளத்திலும், யாழ்ப்பாணத்திலும் என தமிழீழத்தின் பலபகுதிகளிலும் பலத்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பல சிங்களப் படையினர் அழிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாகவுள்ள மட்டக்களப்பு நகரப்பகுதியில், பெரிய களப்பு என்ற இடத்தில் புலிகள் நடாத்திய தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் 3 பேர் காயப்பட்டனர். 31.12.95 அதிகாலை 3.40 மணியளவில் நடாத்தப்பட்ட இத் தாக்குதல் 10 நிமிடங்களே நீடித்ததாகவும் தெரியவருகின்றது. இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. புலிகள் தாக்குதல் நடாத்தியபோது, கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்: ஏ.கே.எல்.எம்.ஜி–1, அதற்குரிய மகசீன்1, ஏ.கே துப்பாக்கிகள் 3, அதற்குரிய மகசீன் 22, 40 மி.மி. எறிகணை 6, கிளைமோர் 2, கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி 1, கைக்குண்டு 5, இத்துடன் பெருந்தொகையான பல ரக ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கறுவாத்தீவு எனுமிடத்தில் சிறீலங்கா இராணுவம் பதுங்கி இருந்து தாக்கியதில் 2ஆம் லெப். நாவேந்தன் (கயிலாயபிள்ளை தேவன், மட்டு) எனும் போராளி வீரச்சாவடைந்துள்ளார். இச்சம்பவம் 28–12–95 அன்று நடைபெற்றது. புத்தளம் மாவட்டம் பகலப் புலியங்குளம் பொலிஸ் முகாம் மீது தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் இறந்த பொலிசாரின் சரியான

தொடர்ச்சி : 2 ஆம் பக்கம்

# நெருக்கடியிலும் கல்வியில் சாதனை

போர்க்காலச் சூழ்நிலையிலும் கடந்த ஆகஸ்ட் மாதம் நடை–பெற்ற க.பொ.த உயர்தரத் தேர்வில் தமிழீழ மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்கள். குறிப்பாகக் கணிதப்பிரிவில் யாழ் இந்துக்கல்லூரி மாணவன் அகில இலங்கையிலுமே இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் வெளியாகிய மேற்படி பரீட்சை முடிவுகளின்படி, நான்கு பாடங்களிலும் பதினெட்டு மாணவர்கள் அதிவிசேட புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள் அவர்களில் பதின்னான்கு மாணவர்களின் விபரம் வருமாறு:

**யாழ் இந்துக் கல்லூரி:–**

கணிதம்– விவேகானந்தன் சஞ்சீவன் இலங்கை மட்டத்தில் இரண்டாவது இடம், மாவட்ட மட்டத்தில் முதலாவது இடம்.

வின்ஸ் பிரதசர்ப் ஜூட் டெனி

தனபாலசிங்கம் தமிழ்நேசன்

தொடர்ச்சி: 31 ஆம் பக்கம்

# கிழக்கிலா! வடக்கிலா! அடுத்த தாக்குதல்

## – ரத்வத்த அவசர ஆலோசனை

வடக்கில் இரண்டாம் கட்டப் பெருந்தாக்குதல் ஒன்றைத் தொடங்குவதற்கு முன்னதாகக் கிழக்கிற் சில இராணுவ நடவடிக்கைகளை நடாத்துவதற்குப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த தமது தளபதிகளுடன் ஆலோசனையிற் கலந்துள்ளதாகத் தெரிகிறது. நத்தார்ப் பண்டிகைக்கு மறுநாள் அவசரமாக மாநாடொன்றைத் தளபதிகளுடன் ரத்வத்த இது குறித்து நடாத்தியுள்ளார். இம் மாநாட்டிற் சில வெளிநாட்டு ஆலோசகர்களும் கலந்து கொண்டதாகத் தெரியவருகிறது. அண்மையில் மட்டு, அம்பாறைக் காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்ததை அடுத்தே இவ்வாலோசனை கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

தொடர்ச்சி: 09 ஆம் பக்கம்

# நலநோம்பு நிலையங்களில் செஞ்சிலுவைச் சங்கம்

இடம்பெயர்ந்தோர் நலனோம்பு நிலையங்களில் உள்ள மக்களின் அடிப்படை வசதிகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருடன் இணைந்து ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளது.

இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நிலை பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது தலைமையகத்திற்கு அனுப்பவென அண்மையில் இவ் ஆய்வினை மேற்கொண்டது. அடிப்படை நோய்கள் பற்றிய தகவல்களை ஆயிரம் மக்களிடையே ஆய்வு செய்து, பின்வரும் அடிப்படையில் நோய்த் தாக்கம் இருந்ததாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினது அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

100 பேருக்கு ஒரு கிழமைக்கு வயிற்றோட்ட நோய் 10.3, மலேரியா 12, இருமலுடன் காய்ச்சல் 5.7, முகாமில் இருந்து வைத்திய சாலைக்கு அனுப்பியது 4.7, மரணமானது 1.5.

இத் தரவுகள் இடம்பெயர்ந்தோர்

தொடர்ச்சி: 10 ஆம் பக்கம்

# மட்டக்களப்பில் கடும் எறிகணை வீச்சு

சிறீலங்கா இராணுவத்தினர், மட்டக்களப்பிலுள்ள பல கிராமங்கள் மீதும் கண்மூடித்தனமான எறி–கணை வீச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ் எறி–கணை வீச்சுக்கள் இரவு நேரங்களிலேயே கூடுதலாக மேற்கொள்ளப்படுவதாகவும் களுவாங்கேணி, நாவிவாந்தீவு, பேய்த்தலை, கிண்ணியடி ஆகிய கிராமங்களே கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிராமங்கள் எனவும் தென்தமிழீழச் செய்திகள் தெரிவிக்கின்றன.

03–01–96 அன்று மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் களுவாங்கேணிக் கிராமத்தில் 15க்கும்மேற்பட்ட வீடுகளும் கடையும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி : 10 ஆம் பக்கம்

# உடைமைகளை எடுக்கச்சென்றோர் மீது இராணுவம் தாக்குதல்

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி, வன்னி ஆகிய பகுதிகளிற் குடியேறியுள்ள மக்களில் சுமார் நூறுபேர் 07–01–96 அன்று தற்போது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஒன்றான புத்தூர் கிராமத்திற்கு, வாதரவத்தை எனும் கிராமத்திற்கூடாகச் சென்றிருந்தனர்.

வாழ்நாளில் தம்மை வருத்தி, உழைத்துச் சேமித்து வைத்திருந்த உடைமைகளை அவசர அவசரமாக இடம்பெற்ற இடப்பெயர்வால் வீட்டிலேயே விட்டுச் சென்றவற்றை எடுப்பதற்காகவே இம்மக்கள் தமது வீடுகளுக்குச் செல்ல இப்பகுதிக்குள் சென்றிருந்தனர். காலை 11.40 மணியளவில் புத்தூரை அடைந்த அவர்கள், தமது வீடுகளில் படையி–னரால் களவாடப்பட்ட பொருட்கள் போக, மிகுதியாக இருந்த பொருட்களைச் சேகரித்துக் கொண்டிருந்தபோதே, சிறீலங்கா

தொடர்ச்சி : 10 ஆம் பக்கம்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# கிழக்குட்படத் தமிழீழத்தின்...

தொகை தெரியவரவில்லை. 1-1-96 அன்று நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் போராளிகள் 6 பேர் வீரச்சாவடைந்துள்ளனர்.

2லெப். கதிரவன் – மரியாப்பிள்ளை தீபன், அடம்பன், மன்னார்.

வீரவேங்கை சாந்தன் – இராசசிங்கம் இராஜேந்திரன், நீர்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

வீரவேங்கை அம்பன் – பஞ்சாட்சரம் அகிலன், அல்வாய் வடக்கு, அல்வாய்.

வீரவேங்கை கோகிலன் – சிறீபாலசிங்கம் தர்மபாலன், கோண்டாவில் வடக்கு, யாழ்ப்பாணம்.

வீரவேங்கை அமுதரசன் – ஆறுமுகம் சிவகுமார், நவக்கிரி, யாழ்ப்பாணம்.

வீரவேங்கை பொஸ்கோ – அருளம்பலம் விக்னேஸ்வரன், வேலணை, யாழ்ப்பாணம்.

ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர்.

திருமலை மாவட்டம் பன்குளம் 4ஆம் கட்டையில் அமைந்திருந்த சிறீலங்கா விமானப்படை பயிற்சி முகாம் ஒன்று, 3.1.96 அன்று அதிகாலை விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இதில் 4 விமானப்படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட 10 க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவ் வெற்றிகரத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்துள்ளார். அதிகாலை 12.23 மணியளவில் தாக்குதலைத் தொடங்கியதும், சிறிது நேரத்தில் முகாம் விடுதலைப் புலிகளின் கைவசம் முற்றாக வீழ்ச்சியுற்றது. இதைத் தொடர்ந்து சுமார் 2 மணி நேரமாக முகாமைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப் புலிகள், அங்கு இராணுவம் நிலைகொண்டிருந்த இரு கட்டடங்களையும் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர். இத்தாக்குதலில் உதயச்சந்திரன் (யேக்கப் லெனின் ஜுட், யாழ்ப்பாணம்) எனும் போராளியே வீரச்சாவடைந்தார்.

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனையில் 1.1.96 அன்று சிறீலங்காப் படையினருடனான நேரடி மோதலில் லெப். மாவேந்தன் (சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தன், மட்டக்களப்பு) வீரச்சாவடைந்துள்ளார். இதேவேளை, செங்கலடி நகரப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடனான இன்னுமொரு நேரடி மோதலில் 2ஆம் லெப். சொல்வேந்தன் (கிருஸ்ணன் மனோகரன், மட்டக்களப்பு) வீரச்சாவடைந்துள்ளார்.

பெரியகளப்புத் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுத விபரங்கள்: ஆர்.பி.ஜி.-1, ஆர்.பி.ஜி எறிகணை-8, ஆர்.பி.ஜி புறெப்பலர் 3, 60 மி.மி மோட்டார் 1, 60 மி.மி. கொமாண்டோ மோட்டார் 2, 60 மி.மி. எறிகணை35, 60 மி.மி எறிகணை 4, 60 மி.மி பூஸ்ரர் 35, எஸ்.ஓ.ஏ-13 எல்.எம்.ஜி-1, ரி 81 எல்.எம்.ஜி-2, ரி 81 ரவைக்கூடுகள் 204, ரி 81 எல்.எம்.ஜி ரவைக்கூடுகள் 6, ஏ.கே எல்.எம்.ஜி 1, ஏ.கே எல்.எம்.ஜி கோல்சர் 1, ரி56 ரகம் 1 துப்பாக்கி-4, ரி56 ரவைக்கூடுகள் 9, 'இன்ரர்மீடியம்' ரவைகள் 18617, ஐ.எம் ரவைகள் லிங்குடன் 500, நேட்டோ ரவைகள் லிங்குடன் 2500, 50 கலிபர் ரவை 6, 'சிக்னல் பரா' 3, கறுப்புக்குண்டு 23, தொலைத் தொடர்பு சாதனம் -1, வோக்கி-2, தொலைநோக்கி-2

### அதிரடித் தாக்குதல்

மட்டக்களப்பில் மியான்குளம் சந்தியில் 05-01-96 அன்று காலை, புறப்பட்ட சிறீலங்கா இராணுவ அணி மீது, விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் அதிகாரி உட்பட 8 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 7க்கு மேற்பட்ட படையினர் படுகாயமடைந்தனர். இதில் 3 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். மட்டக்களப்பில் உள்ள புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம் மீது, கரும்புலித் தாக்குதல் நடாத்தி வீரச்சாவடைந்த கரும்புலி மேஜர் ரங்கனின் 31 வது நாள் நினைவாக விடுதலைப் புலிகள் இத்திடீர்த் தாக்குதலை நடாத்தினர். காலை 8.30 மணியளவில் 3ஆம் கட்டை முகாமில் இருந்து ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடைபெற்றது.

இத் தாக்குதலில் 2ஆம் லெப். வாகீசன், வீரவேங்கை நிலாந்தினி, வீரவேங்கை ராதீயா ஆகிய மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். இத் வெற்றிகரத் தாக்குதலில் ஏ.கே ரகத் துப்பாக்கி 27, தொலைத் தொடர்பு சாதனங்கள் 4, கைக்குண்டு 1, ஐ.எம் ரவை 65, ஏ.கே. மகசீன் 20 என்பன கைப்பற்றப்பட்டன.

கடந்த 27-12-95 அன்று யாழ். மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற நேரடி மோதலில் 5 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

கப்டன் கமலினி – இரத்தினம் மலர்விழி, குளவிசுட்டான் – நெடுங்கேணி. லெப். துளாசினி – துரைராசா வசந்தகுமாரி, நீர்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். லெப். சாந்தி தேவதர்சன் ராணி, சுதந்திரபுரச்சந்தி, உடையார் கட்டு, கிளிநொச்சி. 2ஆம் லெப். இசையருவி ஆறுமுகம் மோகனராணி, காரைநகர், யாழ்ப்பாணம். 2 ஆம் லெப். வாசுகி – நடராசா ரஞ்சினி, வரணி, யாழ்ப்பாணம். ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்துள்ளனர். விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து விட்ட இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

# இடம்பெயர்ந்துள்ள 115 உள்ளூராட்சி ஊழியர் வன்னிப் பகுதியில் சேவை

வலிகாமப் பகுதியிலிருந்து வன்னிப் பெருநிலப் பரப்பிற்கு இடம்பெயர்ந்த உள்ளூராட்சிச் சேவை ஊழியர்கள் 115 பேர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்குப் பிரதேச சபைகளின் விசேட ஆணையாளரின் பரிந்துரைக்கு அமையப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களது நிலையை ஆராய்ந்த வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், சம்பந்தப்பட்ட அரச அதிபர், விசேட ஆணையாளர் ஆகியோருடன் நடாத்திய மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட பின்பே இதற்கான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

# தென்மராட்சியில் மரணவிசாரணை அறிக்கையைப் பெறமுடியாத நிலை

தென்மராட்சிப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு, மற்றும் எறிகணைத் தாக்குதல்களினாற் கொல்லப்பட்ட பொதுமக்களின் மரணவிசாரணை அறிக்கைகளை உரியவர்களுக்குச் சமர்ப்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகத் தென்மராட்சி மரணவிசாரணை அதிகாரி, நா. தர்மேந்திரன் தெரிவித்துள்ளார். சாவகச்சேரி நீதிமன்ற நீதவான், பணிப்பாளர் ஆகியோர் மரணவிசாரணைகளை அத்தாட்சிப் படுத்த வேண்டும். ஆனால் இருவரும் தற்சமயம் தென்மராட்சியில் இல்லாததினால் மரணவிசாரணை அறிக்கையை உரியவர்களுக்கு வழங்க முடியாது இருப்பதாக அவர் கூறினார். இதேவேளை விமானக் குண்டு வீச்சிற்கு இலக்காகி இறந்தவர்களுக்கு மரணவிசாரணை அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு மக்கள் அலைந்து திரிகின்றனர். கடந்த ஐப்பசி மாதத்திலிருந்து இது வரை 50க்கு மேற்பட்ட மக்கள் விமானக்குண்டு வீச்சினால் இறந்தது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்தின் எண்பது வீதம் விடுதலைப் புலிகளின் வசமே உள்ளது

—அமெரிக்க வானொலி

குடாநாட்டின் ஒரு பகுதியான வலிகாமப் பிரதேசத்தினைக் கைப்பற்றிவிட்டதாகச் சிங்கள அரசு பெருமை பாராட்டும் அதேவேளையில்–

கிழக்கின் பெரும் பகுதி நிலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது என்ற உண்மையை "வொயிஸ் ஒப் அமெரிக்கா" வானொலியும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் போர் அரங்கு நிலைவரம் தொடர்பான அதன் அண்மைய ஆய்வின்போது–

"வடக்கில் சிங்கக்கொடி ஏற்றப்படும் தருணத்தில், கிழக்கின் 80 வீத நிலம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்" எனத் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணச் சமருக்காகக் கிழக்குப் போர்முனையில் இருந்து பெருந்தொகையான படையினர் எடுக்கப்பட்டு வடக்கிற்கு அனுப்பப்பட்டதால் கிழக்கின் 'இராணுவச் சமநிலை' புலிகளுக்குச் சார்பாக மாறியிருந்தது. இந்த நிலையில் இராணுவம் மீது புலிகள், அடுத்தடுத்து வெற்றிகரமான முறையில் அங்கே தாக்குதல்களை நிகழ்த்தி படையினருக்குப் பாரிய உயிரிழப்புக்களை உண்டுபண்ணி இருந்தனர்.

இந்த நிலையில் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காகக் கிழக்கில் இருந்த பல படை முகாம்களை அப்புறப்படுத்திவிட்டு ஆக்கிரமித்த நிலங்களை விட்டுப் பின்வாங்க வேண்டிய தேவை அரச படைகளுக்கு எழுந்தது. இதனால் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த பெரும் பகுதி நிலம் விடுவிக்கப்பட்டது.

ஆனால் கிழக்கில் உள்ள இந்த கள நிலைமையை மறைத்து விட்டு, குடாநாட்டின் ஒரு பகுதி நிலத்தைக் கைப்பற்றிய செயலை இராணுவம் பெரிதுபடுத்துகின்றது என்ற உண்மையை அந்த வானொலி சுட்டிக்காட்டியுள்ளது.

# உங்கள் அரசு தொடங்கியுள்ள போரினால் பொதுமக்களுக்கே பெருமளவு அழிவு

–சர்வதேச கல்வி நிறுவனம் சந்திரிகாவுக்குக் கடிதம்

உங்கள் அரசு மீண்டும் தொடங்கியுள்ள போரினால் பொதுமக்களே பெரியளவில் அழிவுக்குள்ளானதாக அறிகின்றோம் என, பெல்ஜியத்தில் தலைமையகத்தைக் கொண்ட சர்வதேசக் கல்வி நிறுவனம், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

140 நாடுகளைச் சேர்ந்த இரண்டு கோடியே 30 இலட்சம் ஆசிரியர்கள் மற்றும் கல்வி ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தச் சர்வதேச நிறுவனத்தின் பொதுச் செயலாளர் பிரட்வான் லீவேன் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"விமானக்குண்டுவீச்சு, எறிகணை வீச்சுக்கள் பொதுமக்கள் அழிவிற்கே வழிவகுப்பதாக எமது உறுப்பு அமைப்பான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்ததன் பிரகாரம் தெரியவருகின்றது.

உங்கள் அரசின் உணவுத்தடையினால் பட்டினிநிலை ஏற்பட்டுள்ளது. மருந்துப் பொருட்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. போரினால் நூற்றுக்கணக்கானோர் அங்கவீனர்களாயுள்ளனர். பெருமளவிலானோர் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வசிக்கின்றனர். உங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது, போரை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டின் பிரச்சனை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்வு காண்போம் என நீங்கள் கூறியதை நினைவுபடுத்துகிறோம். இவற்றிற்கான ஒழுங்குகளைச் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புனர்வாழ்வு வேலைகள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு வகையிலான உதவிகளை வழங்கி வருகின்றது. இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளவர்க்கு பாவனைப் பொருட்கள், சமைத்த உணவு, போசாக்குணவு போன்றவற்றை வழங்கி வருவதுடன் மலசலகூட வசதி, தொட்டிகள் அமைத்தல் போன்றவற்றிக்கு உதவியும் வருகின்றது. இவற்றைவிட கர்ப்பவதிகள்– பாலூட்டும் தாய்மார்களுக்கான கொடுப்பனவு, குழந்தைகளுக்கான கொடுப்பனவு, பூப்பெய்தியோருக்கான கொடுப்பனவு, சிறுவர்களுக்கான கொடுப்பனவு, மரணக் கொடுப்பனவு, வரவு இழந்தோருக்கான கொடுப்பனவு போன்ற கொடுப்பனவுகளையும் வழங்கி வருகின்றது. அவற்றுடன் முதியோர் பராமரிப்புப் போக்குவரத்துச் சேவை, பிரிந்த குடும்பங்களை ஒன்றிணைத்தல், தொண்டர் சேவை, உடைகள் சேகரித்து வழங்குதல், புள்ளி விபரங்களைத் திரட்டுதல், தகவல் மையம் அமைத்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல், கருத்தரங்குகளை நடாத்துதல் போன்ற பல்வேறு சேவைகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருகின்றது.

இடம்பெயர்ந்து உறவினர், நண்பர் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் குடிசைகள் அமைப்பதற்குத் தேவையான உதவிகளையும் செய்து வருகின்றது. இதில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் வனவளர்ச்சிப் பகுதியினரும் இணைந்து செயற்படுகின்றனர்.

இதேவேளை, இடம்பெயர்ந்த மக்களுக்கெனக் காணிகளையும், பயிர்ச்செய்கை நிலங்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருகின்றது.

விசுவமடுப் பகுதியில் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 300 குடும்பங்களுக்குத் தலா ஒரு ஏக்கர் விவசாயக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதேவேளை, கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகளும், உற்பத்திப்பிரிவு அதிகாரிகளும் விசுவமடுவிற்குச் சென்று மக்களுடன் பேசிக் கலந்துரையாடி, பயிரிடுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு முருங்கன் பகுதியில் 300 வீடுகளை அமைக்கும் குடியேற்றத்திட்டம் ஒன்றைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொடங்கியுள்ளது. இக் குடியமர்வுக்காகக் காணிகளைத் துப்பரவு செய்யும் வேலைகளில் அப்பகுதி மக்களும் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றனர்.

# யாழ் நகரைக் கைப்பற்றியமை சிறீலங்காவின் பெருவெற்றியல்ல

## விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் உரை

இன்று நாம் எமது வரலாற்றுப் பாதையில் ஒரு மிக முக்கியமான, ஒரு நெருக்கடியான காலகட்டத்தை எதிர் கொண்டு நிற்கின்றோம். இந்தச் சூழலில் இன்றைய அரசியல் நிலைமை எப்படி இருக்கின்றது, இராணுவ நிலைமை எப்படி இருக்கின்றது, எதிரியின் எதிர்காலத் திட்டங்கள் எப்படி அமையலாம், விடுதலைப் புலிகள் இயக்கம் எத்தகைய திட்டத்தைச் செயற்படுத்த இருக்கின்றது, தமிழீழ மக்களின் நிலைமை என்ன, எதிர்காலம் என்ன, அந்தச் சவால்களுக்கு, அந்த நெருக்கடிகளுக்கு நாம் எவ்விதம், எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றோம் என்பது பற்றி மிகவும் தெளிவான முறையில் எமது விடுதலை இயக்கத்தின் நிலைப்பாட்டை விளக்கி உங்களுக்கு இந்த உரையை நிகழ்த்த விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணம், அதாவது யாழ்ப்பாண நகர் வீழ்ச்சி அடைந்து விட்டது. அது உங்கள் எல்லோருக்கும் தெரியும். யாழ்ப்பாண நகரம் வீழ்ச்சி அடைந்ததை வெற்றியாகக் கொழும்பிற் சிங்கள இனவாதிகள் கொண்டாடு



கின்றார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். சந்திரிகா அம்மையார் இந்த வெற்றியை ஒரு வித்தியாசமாகக் கொண்டாடி இருக்கின்றார். அதாவது பழைய காலச் சிங்கள மன்னர் காலத்துத் தோரணையில், தான் ஒரு

**தமிழர்களை உங்களது பிரசைகளாக நீங்கள் கணித்திருந்தால், யாழ்ப்பாணத்தை இலங்கையின் ஒரு பகுதியாக நீங்கள் கணித்திருந்தால் ஏன் இந்தப் படையெடுப்பு, வெற்றிக்கொடி நாட்டு விழா? இது எதைக் காட்டுகின்றது என்று சொன்னால், இன்னுமொரு தேசம், அந்நியர் தேசம் அங்கு வந்து ஒரு படையெடுப்பை நிகழ்த்தித் தனது தேசியக் கொடியைச், சிங்களக் கொடியை ஏற்றி இருக்கின்றது. ஆகவே ஒரு தேசம் - இன்னொரு தேசம் மீது நடாத்திய ஆக்கிரமிப்பு யுத்தமாக, ஒரு இனம் ஒரு தேசத்தை அடிமை கொள்ள முயற்சித்த நிகழ்வாகத்தான் நீங்கள் கொழும்பில் அதைக் கொண்டாடினீர்கள்.**

மகாராணி என்ற நினைப்பில், இதனைப் பத்திரிகைகளில் எழுதினார்கள். விகாரமகாதேவி மகாராணியார் என்ற தோரணையில் வெற்றி விழா அரங்கேற்றம் அங்கே கொண்டாடப்பட்டது. ரத்வத்த, அவருடைய சேனாதிபதி ஒரு பேளையில் இந்த வெற்றியை அறிவித்துச் சந்திரிகா மகாராணியிடம் அதைக் கொடுத்திருக்கின்றார். சந்திரிகா ஒரு முடியை அணிந்து கொண்டு, ரத்வத்த இடுப்பில் ஒரு வாளைக் கட்டிக் கொண்டு இப்படியான ஒரு பழைய வரலாற்று நிகழ்ச்சியை நடாத்தி இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். சிங்கள அரசு சொல்கின்றது, வடமாகாணம், யாழ்ப்பாணம் எல்லாம் சிங்கள தேசத்திற்குச் சொந்தமான இடம் என்று. தமிழீழ மக்களும் யாழ்ப்பாண மக்களும் சிங்கள தேசத்துப் பிரசைகள் என்று சொல்கின்றது. இப்படி ஏன் இந்தப் பெரிய நிகழ்வுகள், கொண்டாட்டங்கள், பட்டாசுகள் கொழுத்திக் கொண்டாடினார்கள்.

### ஆக்கிரமிப்பு யுத்தம்

தமிழர்களை உங்களது பிரசைகளாக நீங்கள் கணித்திருந்தால், யாழ்ப்பாணத்தை இலங்கையின் ஒரு பகுதியாக நீங்கள் கணித்திருந்தால் ஏன் இந்தப் படையெடுப்பு, வெற்றிக் கொடி நாட்டு விழா? இது எதைக் காட்டுகின்றது என்று சொன்னால், இன்னுமொரு தேசம், அந்நியர் தேசம் அங்கு வந்து ஒரு படையெடுப்பை நிகழ்த்தித் தனது தேசியக் கொடியைச், சிங்களக் கொடியை ஏற்றி இருக்கின்றது என்பதையே. ஆகவே ஒரு தேசம் இன்னொரு தேசம் மீது நடாத்திய ஆக்கிரமிப்பு யுத்தமாக, ஒரு இனம் ஒரு தேசத்தை அடிமைகொள்ள முயற்சித்த நிகழ்வாகத்தான் நீங்கள் கொழும்பில் அதைக் கொண்டாடினீர்கள். அது எங்களுக்குத் தெரியும். இந்தக் கொடி ஏறும் போது யாரோ ஒரு மந்தி ஒன்று நந்திக் கொடியையும் ஏற்றி இருக்கின்றது. அப்படிப்பட்ட எங்களுடைய ஆட்கள் பலர் இருக்கின்றனர். கொழும்பிலும் நிறையப்பேர் இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் இப்போதும் இருந்து கொண்டு தான் இருக்கின்றனர். அதுபோல ஒன்று நந்திக் கொடியையும் ஏற்றி விழாவைச் சிறப்பித்திருக்கின்றது. சரி, யாழ்ப்பாணத்தைப் பிடித்தா மிற்று. இனியென்ன? இந்த யாழ்ப்பாணப் படையெடுப்புப் பற்றி ஒரு சில முக்கியமான விட யங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டும். இந்தப் படையெடுப்புக்கு நீண்ட காலமாகவே திட்டம் போடப்பட்டு வந்தது. பெரிய அளவிற் படையணிகள் கொண்டு வரப்பட்டுப் பலாலியிற் குவிக்கப்பட்டன. இவ்வாறு 40,000 படையினரைக் கொண்டு வந்து பாலாலியிற் குவித்தார்கள். ஏற்கனவே பலாலியில் 10,000 படையினர் இருந்தனர். ஆனையிறவில் 5,000 படையினர், மண்டைதீவிலும் பூநகரியிலும் 5,000 படையினர் என ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் யாழ் குடாநாட்டிலும் குடாநாட்டைச் சூழவும் கிட்டத்தட்ட 60,000 படைகள் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. இதில் 40,000 படையி-னர் சண்டையில் இறக்கப்பட்டனர்.

### பெரியதொரு வெற்றியல்ல

இந்தப் படையெடுப்பின் பரிமாணத்தைப் புரிந்து கொண்டாற்றான் யாழ்ப்பாணம் ஏன் இப்பொழுது வீழ்ச்சி அடைந்திருக்கின்றது என்பது எங்களுடைய மக்களுக்குப் புரியும். ஏனென்றால், சிங்களத் தேசம் இதுவரை காலமும் நடத்தாத மிகப்பிரம்மாண்டமானதொரு படையெடுப்பாக இது நடந்தது. பெருமளவான ஆயுத வளமும், இராணுவத்திற்குக் கொடுக்கப்பட்டது. உங்களுக்குத் தெரியும், பெரிய நீண்ட தூரம் செல்லுகின்ற பீரங்கிகள், நடுத்தரப் பீரங்கிகள், மோட்டார்கள், டாங்கிகள் இப்படியாகப் பெருமளவிற் படைக்கலச் சக்தியும், ஆயுத சக்தியும் ஒன்றிணைத்துப் படையெடுப்பு நடாத்தப்பட்டது. இந்தப் படையெடுப்புச் சம்பந்தமாக முன்னாள் இந்திய அமைதிப் படைத் தளபதி கல்கட் சில முக்கியமான விமர்சனங்களை வைத்திருக்கின்றார். அதாவது அந்தத் தளபதியின் பார்வையில், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது பெரிய இராணுவ வெற்றியென்று சொல்லமுடியாது. ஏனென்று சொன்னால் பலாலியில் அதாவது, அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாண எல்லை 10 மைல் தூரம் கொண்டது. இந்தப் 10 மைல் தூரத்தை அடைவதற்கு 40,000 படையினர் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். இந்தப் 10 மைல் தூரத்தை அடைவதற்கு 50 நாள் பிடித்தது. மெல்ல மெல்லமாக நகர்ந்து மிகவும் கஷ்டப்பட்டுத்தான் இந்தக் காரியம் செய்யப்பட்டது. இன்னுமொரு முக்கியமான விடயம், இது ஒரு பரந்த அரசப் படை நகர்வு என்று கல்கட் சொல்கின்றார். கல்கட் மேலும் சொல்கின்றார், இந்திய இராணுவம் இப்படியான பெரியதொரு படையெடுப்பை இந்த வழியிற் செய்திருக்கலாம். இந்தப் போர் முறைத் திட்டத்தினைச் செய்திருக்கலாம். ஆனால் பெருமளவு குடியிருப்புக்களை அழித்து, பெருமளவு உடைமைகளை நாசம் செய்து, பெருமளவு மக்களைக் கொன்று இப்படியான ஒரு படையெடுப்பை நாங்கள் செய்யவிரும்பவில்லை என்கின்றார். ஆனாற் சிங்கள இராணுவம் செய்தது. ஆகவே இது போர் முறை விடயத்திற் புதுமையானதொரு விடயமல்ல. இது முழுப்பலத்தையும் வைத்துக் கொண்டு சிறியதொரு இடத்தை அடித்துப் பிடித்ததாகும்.

### வீழ்வதும் எழுவதுமாக

யாழ்ப்பாணம் வீழ்வதும் எழுவதுமாக, வரலாறு ஒரு தொடர்கதை. இது பல நூற்றாண்டு காலமாக நடந்துகொண்டு வருகின்றது. வெளியுலக, மேற்குலகக் காலனித்துவத்திற்கு முன்பிருந்த காலத்திலிருந்து இந்த யாழ்ப்பாணம் வீழ்ச்சி பெறுவதும் எழுவதுமாக வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. சிங்களவர் முன்பும் வந்து யாழ்ப்பாணத்திற் படையெடுப்பை நிகழ்த்தி இருக்கின்றார்கள். யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி இருக்கின்றார்கள். போர்த்துக்கீசர் வந்து யாழ்ப்பாணத்தைப் பிடித்தார்கள். அதற்குப் பிறகு டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர் என்ற ரீதியில் யாழ்ப்பாணம் மாறி மாறி அந்நிய ஆட்சியின் கீழ் வீழ்ந்தது. இந்த 500 ஆண்டுகள் அந்நிய ஆட்சியின் வரலாற்றுக்குப் பிறகு 48ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் சிங்களவரின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணம் வந்தது. சுதந்திரம் என்று சொன்னாலும் யாழ்ப்பாண மண்ணிற் சிங்கள அரசின் இன ஒடுக்கல் ஆட்சி நடந்து வந்தது. 48ம் ஆண்டில் இருந்து படிப்படியாக நாம் ஒடுக்கு முறைகளைச் சந்தித்து வந்துள்ளோம். போராட்டங்கள் நிகழ்ந்தன. அகிம்சை வழிப் போராட்டங்கள் நிகழ்ந்தன. கடைசியாக ஆயுதப் போராட்டம் தோன்றிப் புலிகள் இயக்கம் வளர்ந்து விரிவடைந்தது. 1985ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் மீண்டும் தமிழ் மக்களின் கையில், புலிகளின் ஆட்சியில் வந்தது எமக்குத் தெரியும். ஆனால் மீண்டும் 2 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. 1990ம் ஆண்டு மீண்டும் புலிகள் வசம் யாழ்ப்பாணம் வந்தது. புலிகளின் ஆட்சி நடந்தது. இப்போது பழையபடி சிங்கள இராணுவம் வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி இருக்கின்றது.

### இது இராணுவ, அரசியல் வெற்றியல்ல

ஒரு முக்கியமான விடயம் என்னவென்று சொன்னால் முன்பு இந்த நீண்ட வரலாற்றுக் காலத்திலேயே நிகழாத ஒரு சம்பவம் இந்தச் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் போது நடந்திருக்கிறது. அதாவது இப்போதுதான் இந்த இரண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றில் முதற் தடவையாகச் சனசஞ்சாரம் இல்லாத, இடிபாடுகளுடன் சுடுகாடாகக்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# தமிழக மக்களுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் அனுப்பப்பட்ட கடிதம்:

**தலைமைச் செயலகம்**
**தமிழீழம்**
**28. 12. 1995**

சிங்கள இனவாத ஆட்சியாளரின் கொடுமையால், இன அழிப்பின் விளிம்பில் நின்று, விடுதலைக்காகப் போராடிவரும் ஈழத்தமிழினத்திற்காக உணர்வு பூர்வமாக உரிமைக் குரல் எழுப்பும் தமிழக மக்களுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் எமது மக்களின் சார்பில் அன்பையும், நன்றியையும் தெரிவிக்க விரும்புகின்றேன். ஈழத்தமிழருக்கு இன்னல் நிகழும் பொழுதெல்லாம் தமிழகத்திலிருந்து எழும் அனுதாப உணர்வலைகள், ஈவிரக்கமற்ற எமது எதிரிக்கு ஒரு அச்சுறுத்தலாக அமைவதுடன் நொந்து போயிருக்கும் எமது மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் தருகிறது. அத்துடன் ஈழத்தமிழினம் நிராதரவாகத் தனித்து நிற்கவில்லை என்ற உண்மையையும் உலகத்திற்கு எடுத்து இயம்புகிறது. தமிழீழ மக்களின் இனப்பிரச்சனைபற்றியும், அவர்களது நியாயமான தேசியப் போராட்டம்பற்றியும், அந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் புலிகள் பற்றியும் தவறான கருத்துக்களைத் தமிழக மக்கள் மனதில் விதைத்து விட எத்தனையோ சக்திகள் எத்தனித்த போதும், அரசியலுக்கு அப்பால் நின்று, இன உணர்வின் அடிப்படையில், எமது மக்களுக்காக நீதி கேட்டுத் தமிழகம் ஆர்ப்பரித்து எழுவதைக் காண எமக்கு ஊக்கமும் உறுதியும் ஏற்படுகின்றது.

நீண்ட காலமாக, புலிகள் இயக்கத்தின் பிறப்பிற்கு முன்பிருந்தே, தமிழீழத் தேசம் இரத்தம் சிந்திவருகிறது. நீண்ட காலமாக எமது மண்ணில் இனக்கொலை நடந்து வருகிறது. இந்த நீண்ட, நாற்பது ஆண்டு கால இன ஒழிப்பு வரலாற்றில் எமது மொழி, பண்பாடு, கல்வி, எமது பொருளாதார வாழ்வு என்ற ரீதியில் எமது தேசிய வாழ்விற்கு ஆதாரத் தூண்களாக நிற்கும் அனைத்துமே திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டு வந்துள்ளன. சிங்கள இனவாதப்பூதம் எமது தாயக மண்ணைப் படிப்படியாக ஏப்பம் விட்டு வருகிறது. வரலாற்றுப் புகழ்மிக்க எமது நகரங்களையும், பட்டினங்களையும், சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. பல இலட்சம் மக்கள் தமது சொந்த மண்ணிலிருந்து ஏதிலிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். இரத்தம் படிந்த இந்தச் சோக வரலாற்றில் நாற்பதினாயிரத்திற்கும் மேற் பட்ட தமிழர்கள் சாவைச் சந்தித்திருக்கிறார்கள். இந்தக் கொடூரமான இனக்கொலை வரலாற்றின் தொடர்ச்சியாகவும் பூதாகர விரிவாக்கமுமாகவே இன்றைய போர் நிகழ்ந்து வருகிறது.

> ஈழத்தமிழருக்கு இன்னல் நிகழும் பொழுதெல்லாம் தமிழகத்திலிருந்து எழும் அனுதாப உணர்வலைகள் ஈவிரக்கமற்ற எமது எதிரிக்கு ஒரு அச்சுறுத்தலாக அமைவதுடன் நொந்து போயிருக்கும் எமது மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் தருகிறது. அத்துடன் ஈழத்தமிழினம் நிராதரவாகத் தனித்து நிற்கவில்லை என்ற உண்மையையும் உலகத்திற்கு எடுத்தியம்புகிறது. தமிழீழ மக்களின் இனப்பிரச்சனை பற்றியும், அவர்களது நியாயமான தேசியப் போராட்டம் பற்றியும், அந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் புலிகள் பற்றியும் தவறான கருத்துக்களைத் தமிழக மக்கள் மனதில் விதைத்து விட எத்தனையோ சக்திகள் எத்தனித்த போதும், அரசியலுக்கு அப்பால் நின்று, இன உணர்வின் அடிப்படையில், எமது மக்களுக்காக நீதி கேட்டுத் தமிழகம் ஆர்ப்பரித்து எழுவதைக் காண எமக்கு ஊக்கமும் உறுதியும் ஏற்படுகின்றது.

வரலாற்று ரீதியாக ஈழத்தமிழினம் ஒரு அப்பட்டமான இனஅழிப்பை எதிர் நோக்கி நிற்கிறது. தமிழரின் தேசிய அடையாளத்தைச் சிதைத்து விடும் நோக்கில் மிகவும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டு இந்த இன அழிப்பு நிகழ்கிறது. இதன் உண்மையான முகம் பிரச்சாரப் பொய்களால் மூடி மறைக்கப்பட்டிருக்கிறது. இதனைச் சர்வதேச சமூகம் இன்னும் புரிந்து கொள்ளாதது எமக்கு வேதனையையும் கவலையையும் தருகிறது.

தமிழின அழிப்பை அடிப்படையாகக் கொண்ட சிங்கள இனவாதத்தின் அடக்குமுறைக்கு எதிராகவே தமிழீழ மக்கள் அன்று தொட்டு இன்று வரை போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். எமக்கு முந்திய பரம்பரையினர் அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாகக் காந்தி அடிகளின் அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில் அறவழிப் போராட்டங்களை நிகழ்த்தினர். அறவழிப்போரின் ஆன்மீகப் பண்பியல்பைச் சிங்கள இனவாத அரசு உணர்ந்து கொள்ளவில்லை. அதற்கு மதிப்பும் அளிக்கவில்லை. அகிம்சைப் போராட்டங்களை ஆயுத வன்முறையால் மிருகத்தனமாக நசுக்கியது. அறவழியில், சனநாயக வழியில் தொடுக்கப்பட்ட போராட்டங்கள் ஆயுத வன்முறையால் நசுக்கப்பட்ட நிலையில் இன அழிப்பு மேலும் தீவிரமடைந்தது. தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதம் ஏந்துவதைத்தவிர வேறு வழியில்லை என்ற இக்கட்டான வரலாற்றுக் காலகட்டத்தில்த்தான் விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழரின் ஆயுதப்போராட்டமும் தோற்றம் கண்டது.

தன்னாட்சி உரிமை கோரித் தமிழீழத்தில் தோற்றங் கொண்ட ஆயுதப்போராட்ட வடிவத்தை, 'பயங்கரவாதம்' என்றும் 'பிரிவினைவாதம்' என்றும் சித்தரித்துவிடச் சிங்கள அரசு பகீரத முயற்சி செய்கிறது. இத்தகைய தவறான கருத்து இந்திய மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் பரப்பப்பட்டு வருகிறது. இந்தச் சித்தரிப்பில் எவ்வித உண்மையும் இல்லை. ஈழத்தமிழரின் போராட்ட வடிவத்தைத் திரிபுபடுத்தி, கொச்சைப்படுத்தும் நோக்கில் இவ்விதப் பொய்ப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

நாம் 'பயங்கரவாதிகளும்' அல்லர், 'பிரிவினைவாதிகளும்' அல்லர். அன்றி ஆயுதக் கலாச்சாரத்தை வழிபடும் வன்முறையாளரும் அல்லர். நாம் ஒரு இலட்சியத்திற்காக, ஒரு உயரிய குறிக்கோளுக்காகப் போராடுகிறோம். இன அழிவிலிருந்து எமது இனத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாம் போராடுகிறோம். இனக்கொலை வடிவம் எடுத்துள்ள ஆயுத வன்முறைக்கு எதிராகவே நாம் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். உயிர்வாழும் உரிமைக்காக, உயிரைக்கொடுத்துப் போராடவேண்டிய ஒரு சிக்கலான, நெருக்கடியான வரலாற்றுச் சூழலை நாம் எதிர் கொண்டு நிற்கிறோம். எமது இக்கட்டான நிலைமையை இந்திய மக்கள், குறிப்பாகத் தமிழக மக்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம்.

இலங்கைத்தீவு சுதந்திரம் பெற்றதிலிருந்து மாறி, மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள, பௌத்த பேரினவாத அரசுகள் தமிழரை அரவணைத்து வாழ விரும்பாது, அடிமை கொண்டு ஆள விரும்பியதால் தமிழ்மக்கள் தமது அரசியற் தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக்கொள்ள விரும்பினர். ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்ட இனம் என்ற ரீதியில் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். அதுவும், அரச ஒடுக்குமுறையானது இன அழிப்பு வடிவம் எடுத்த ஆபத்தான சூழ்நிலையில் தான் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்காகப் போராடத் துணிந்தார்கள். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தீவிரமடைவதற்கு முந்திய காலத்திலேயே தன்னாட்சிப் போராட்டத்திற்கான ஆணையை எமது மக்கள் பழைய அரசியற் தலைமைக்கு ஒப்படைத்தனர். எமது மக்களின் இந்த அரசியல் அபிலாசையையே எமது இயக்கம் தனது அரசியல் இலட்சியமாக வரித்துப் போராடி வருகிறது. தமிழீழத்தில், தன்னாட்சி உரிமைப் போராட்டம் தோற்றம் கொண்ட வரலாற்றினையும் அதன் நியாயப்பாட்டையும் புரியாதவர்கள் எம்மைப் 'பிரிவினைவாதிகள்' எனக் கற்பிக்க முனைகிறார்கள். இன அழிவுப் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திர மனிதர்களாக நிம்மதியாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ விரும்பும் எமது மக்களின் நியாயமான போராட்டத்தைப் 'பிரிவினைவாதம்' எனச் சித்தரிப்பதும், அதைச் சில இந்திய மாநிலப் பிரச்சனைகளுடன் ஒப்பு நோக்கிக் குழப்புவதும் தவறானதாகும்.

> தன்னாட்சி உரிமை கோரித் தமிழீழத்தில் தோற்றங் கொண்ட ஆயுதப்போராட்ட வடிவத்தை, "பயங்கரவாதம்" என்றும் "பிரிவினைவாதம்" என்றும் சித்தரித்துவிடச் சிங்கள அரசு பெரு முயற்சி செய்கிறது. இத்தகைய தவறான கருத்து இந்திய மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் பரப்பப்பட்டு வருகிறது. இந்தச் சித்தரிப்பில் எவ்வித உண்மையும் இல்லை. ஈழத்தமிழரின் போராட்ட வடிவத்தைத் திரிபுபடுத்தி, கொச்சைப்படுத்தும் நோக்கில் இவ்வித பொய்ப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

எமது மக்களின் தனியரசுக் கோரிக்கைக்கு மாற்று வழியாக ஒரு உருப்படியான சுயாட்சித் திட்டத்தைச் சிங்களத் தேசம் வழங்க முன்வரலாமெனத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கையும் இப்பொழுது இழந்து போய்விட்டது. வரலாற்று ரீதியாக, பல நூற்றாண்டுகளாகத் தமிழர் வாழ்ந்து வரும் பிரதேசத்தைத் தமிழரின் தாயகமாக ஏற்றுக் கொள்ளச் சிங்களத் தேசம் தயாராக இல்லை. இந்த அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில், காலம் காலமாகத் தமிழினம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறது. இவ்விவகாரத்தில் ஒப்பந்தங்களைச் செய்வதும், ஒப்பந்தங்களை மீறுவதுந்தான் சிங்களவரிடமிருந்து தமிழர் கண்ட வரலாறு. இந்திய – இலங்கை ஒப்பந்தத்திற்கும் இந்தக் கதிதான் நேர்ந்தது.

தமிழர் தாயகத்தின் புவியியல்த் தனித்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்து, தமிழரின் தேசிய வாழ்வைச் சிதறடிப்பதிற் சந்திரிகா அரசு புதிய வரலாற்றுச் சாதனைகளைப் புரிந்து வருகிறது. சமாதானத்திற்கான போர் என்றும், தமிழரை விடுதலை செய்யும் படையெடுப்பு என்றும் உலகத்தின் கண்களில் மண்தூவிவிட்டு எமது வரலாற்றுத் தாயகத்தை ஆக்கிரமித்து வருகிறது. சந்திரிகா அரசின் தீர்வுத் திட்டமும் தமிழர் தாயகத்தின் புவியியற் கட்டமைப்பை மாற்றியமைப்பதையே அடிப்படை அம்சமாகக் கொண்டது.



**அன்று தொட்டு இன்று வரை, பண்டார நாயக்கா யுகத்திலிருந்து சந்திரிகாவின் ஆட்சிவரை, சிங்கள இனவாத அரசுகள், அமைதி வழிக்குப் பதிலாக, இராணுவ அடக்குமுறைக் கொள்கையையே கடைப்பிடித்து வருகின்றன. முந்திய அரசுகளை விடச் சந்திரிகாவின் அணுகுமுறை வித்தியாசமானது. அவர் மிகவும் சாதுரியமான முறையில் உலகத்தை ஏமாற்றிச் சமாதானத்தின் பெயரால் தமிழின ஒழிப்பைத் திட்டமிட்டு நடத்தி வருகிறார்.**

சந்திரிகா அரசுடன் நாம் நடத்திய சமாதானப் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன. இராணுவ அழுத்தங்களையும், பொருளாதார நெருக்குதல்களையும் தளர்த்தி, தமிழர் மாநிலத்தில் இயல்பு நிலையையும் சமாதானச் சூழ்நிலையையும் தோற்றுவிப்பதற்குச் சந்திரிகா அரசு மறுத்தது. சர்வதேசக் கண்காணிப்புடன் நிரந்தரமானதொரு போர் நிறுத்தத்தைச் செய்யவும் அரசு தயங்கியது. பகைமை நிறுத்தம் என்ற தற்காலிக உடன்பாட்டைச் செய்து கொண்டு இராணுவ இயந்திரத்தை வலுப்படுத்துவதிற் கவனம் செலுத்தியது. யாழ்ப்பாண முற்றுகையைத் தளர்த்தி, போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பதற்கு மறுத்தது. சமாதானச் சூழலை உருவாக்குவதற்குப் பதிலாக இராணுவ மேலாதிக்க நலனுக்கே முதன்மை கொடுத்தது.

விடுதலைப் புலிகளுடன் நிகழ்த்திய பேச்சுக்களுக்கு அரசு எவ்வித முக்கியத்துவத்தையும் அளிக்கவில்லை. சாதாரண நிர்வாக அதிகாரிகளையே பேச்சுக்கு

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்



# புத்தாண்டுப் புரளி

தமிழர் தாயகத்தின் புவியியல் தனித்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்து, தமிழரின் தேசிய வாழ்வைச் சிதறடிப்பதில் மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டுச் செயற்பட்டுவரும் சந்திரிகா பண்டாரநாயக்கா, தைப்பொங்கல் தினத்துடன் தான் முன்னர் வெளியிட்ட அரசியல் தீர்வுத் திட்ட ஆலோசனைகளைச் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்போவதாகப் புத்தாண்டுப் புரளியொன்றைச் சர்வதேச சமூகத்திற்குக் கேட்கக்கூடியதாக உரக்கக் கூறியுள்ளார்.

தமிழரைத் தனது நாட்டுப் பிரஜைகள் எனக் கூறிக்கொண்டு, தமிழர் மீது பெரும் இராணுவப் படையெடுப்பை நடாத்தி, அதுவும் ஒரே களத்தில் முழுப்படை வலிமையையும் குவித்து, தமிழரின் வரலாற்றுப் பெருமைமிக்க யாழ்ப்பாண நகரை ஆக்கிரமித்து, அங்கு சிங்களத் தேசியக்கொடியைப் பறக்கவிட்டு, இடம்பெயர்ந்து பாதுகாப்புத்தேடி ஓடிய ஐநூறு ஆயிரம் தமிழ் மக்களின் கண்ணீர் படிந்த துன்பியல் நிகழ்வைச் சிங்களத் தேசத்தின் வெற்றியாகக் கொண்டாடி மகிழும் சந்திரிகா, அழுத பிள்ளைக்குப் பால் கொடுப்பதுபோல், தனது தமிழின அடிமைத்திட்டத்திற்கு அரசியல் தீர்வு எனப் பெயர் சூட்டி, இராணுவ வலிமையைக் கொண்டு அதனைத் தமிழர்கள் மேல் திணித்து விடலாம் எனத் தப்புக்கணக்குப் போட்டுச் செயற்பட்டு வருகிறார்.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தப் பகற்கனவு காண்கிறார் சந்திரிகா. ஒரு புறத்தில் ஆள் நடமாட்டம் இல்லாத சூன்யப் பிரதேசங்களை ஏற்படுத்தி, அங்கு சிங்கக்கொடியை ஏற்றி, வெற்றி என சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வாலை முறுக்கிவிட்டு, இலங்கைத்தீவு முழுவதும் தமிழ் மக்களின் இன உணர்வுகளுக்குத் துன்பங்களை ஏற்படுத்தும் சந்திரிகா, தற்பொழுது தீர்வுத் திட்டத்தையும் திணித்து அந்தச் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வாழ்த்துக்களில் மனங்குளிரத் தவிக்கிறார். மறு புறத்தில், தமிழ் மக்களின் பாரிய இடம்பெயர்வு சர்வதேச சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள எதிரொலிகள் தமிழ் மக்களுக்குச் சாதகமான நடவடிக்கைகளாக உருப்பெறுவதற்கு முன்னர், தான் இராணுவத்தீர்வையல்ல அரசியல் தீர்வையும் சிந்திக்கும் ஒருவர் எனக் காட்டி, சர்வதேச சமூகத்தைத் திசைதிருப்புவதற்கான பிரச்சாரப் பீரங்கியாகவும் விளங்கி, இந்தப் பொங்கலுடன் தமிழருக்கு அரசியல் தீர்வு பொங்கும் கதையினையும் கட்டவிழ்த்து விட்டுள்ளார்.

சமாதானத்திற்கான போர் என்றும் தமிழரை விடுதலை செய்வதற்கான படையெடுப்பு என்றும் கூறி, உலகத்தின் கண்களில் மண்ணைத்தூவி தமிழரின் தாயகமண்ணை ஆக்கிரமித்து, சமாதானத்தின் பெயரால் தமிழின ஒழிப்பை இராணுவ ரீதியாக நடாத்திக்கொண்டிருக்கும் சந்திரிகா, சமாதானத்திற்கான அரசியல் தீர்வு இதோ எனச் சமாதானத்தின் பெயராலேயே உலகின் காதுகளில் பூவைத்து, அரசியலிலும் தமிழருக்கு 'வாய்க்கரிசி' போடலாம் எனப் பகற்கனவு கண்டு பொங்கல் தினத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்.

ஆனால் சந்திரிகாவின் இத்தீர்வுகளுக்குக் கூட, பௌத்த மகாசங்கத் தலைமை-கள் அனுமதிமறுத்து, ஆவேசப் பேச்சுக்களும் எச்சரிப்புக்களும் விடுத்துவருகின்றன. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி சமீபத்தில் தனது 41வது வருடாந்த மகாநாட்டில்கூட, இது குறித்து எதுவுமே பேசாது காலைவாரிவிட்டது. இந்நிலையில் இத்தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினையோ அல்லது குடியொப்பத் தேவையினையோ பூர்த்திசெய்து சட்ட உருப்பெறாது என்பது சந்திரிகாவுக்கு நன்கு தெரியும்.

இருந்த போதிலும், தமிழர்களுக்கு நன்மைக்கு அல்ல விளம்பரத்திற்கே ஒவ்வொன்றையும் பேசிவரும் சந்திரிகா, முன்னர் சமாதானப் பேச்சு என விளம்பரம்செய்து சர்வதேச உலகை ஏமாற்றியதுபோல, இப்பொழுது தீர்வுத்திட்ட விளம்பரஞ்செய்து, தான் இராணுவத்தீர்வில் மட்டுமல்ல அரசியற் தீர்விலும் அக்கறை காட்டுவதாக உலகை ஏமாற்றத் துடிக்கிறார்.

ஆனால், நடைமுறையில் இனக் கொலைகளுக்கும் இனத் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகித் துன்புறும் தமிழ் மக்கள்மேல், சந்திரிகாவுக்குப் பெருகிவரும் பேரன்பினால் அத்தியாவசியத் தேவைகள் சேவைகளுக்கு மட்டுமல்ல, இன்று பணப்புழக்கத்திற்கும் கூடத் தடைகள் தாராளமாகப் பெருகுகின்றன. இந்தப் பாசப்பெருக்கினாலேயே பாராளுமன்றத்தில் அரசியற் தீர்வுப் பொங்கலிட சந்திரிகா தவிக்கிறார். ஆயினும், விடுதலைப் பற்றும் உறுதியும் ஒருமைப்பாடும் உள்ள தமிழீழ மக்கள், சந்திரிகாவின் பொங்கலை எதிர்பார்க்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, ஏமாறவும் மாட்டார்கள்.

# வாழ்த்துகிறோம்

இலண்டன்,
08-01-1996.

விடுதலை வேண்டி நிற்கும் தேசத்தின் ஜீவநாதமாக விளங்குபவை, அத்தேச மக்களின் மத்தியில் முழங்கிக் கொண்டிருக்கும் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் மற்றும் செய்திச் சாதனங்களுமாகும்.

சமர்க்களத்தில் களமாடும் போராளிகளின் பயணம் பல கரடுமுரடான பாதைகள் நிறைந்தவை. எத்தனையோ தடைகள் அவர்கள் முன் மலை மலையாய் விரிந்து கிடக்கும். கொண்ட கொள்கையினை மனதிலே நிறுத்தி, இந்த இன்னல்களையெல்லாம் நெஞ்சிலே எதிர் கொண்டு அவர்கள் தொடர்ந்து முன்னேறு வார்கள். போராடும் தேசத்தின் செய்தித்தாள்களும் இவ்வாறான ஒரு போராட்டத்தினை முழுவதும் வேறுபட்ட முனையில் நடாத்துகின்றன. எதிரியின் பிரச்சாரப் பீரங்கிகள் இடைவிடாது முழங்கிக் கொண்டிருக்கையில் அவற்றை எழுத்தில் எதிர் கொள்ளும் பாரிய சுமையினை இவ் வகையிலான செய்தித்தாள்களே தம் தோள்களிலே சுமக்கின்றன

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் செய்தித்தாட்களம் மிகமிக முக்கியமானது. போராட்டத் திற்கெதிரான, போராட்டத்தைக் கொச்சை ப்படுத்தும் செய்தித்தாள்களின் தாக்கங்களுக்கு எமது மக்கள், குறிப்பாகக் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் உள்ளாவது கவலை தரும் விதத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தச் செய்தித்தாள்களின் பொய் புரட்டல்களிலிருந்து மக்களின் மனங்களைப் பாதுகாப்பதில் "களத்தில்" செய்தித்தாள் கடந்த காலங்களில் ஆற்றிய பங்கு அளப்பரியது.

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி, தாயகத்திலுள்ள படைப்பாளிகளின் படைப்புக்களைப் பெருமளவில் சுமந்து வரும் "களத்தில்" இன்று தனது நூறாவது இதழை விரிப்பது இன்றைய அரசியற் சூழ்நிலையில் மிக முக்கியமானதாக அமைகின்றது. அதாவது எதிரி எமது மண்ணில் அகலக் கால் பதித்திருக்கிறான். அகதிகளாக இடம் பெயர்ந்த மக்கள், எதிரியின் அடக்குமுறையால் அன்றாடம் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் படும் துன்பத்தில் அரசியல் ஆதாயம் தேடப் பல தமிழ் இனத்துரோகிகள் அணி வகுக்கத் தொடங்கியுள்ளனர். இத்துரோகக் கும்பல்களின் பிரதான இலக்காக, புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களே உள்ளனர்.

இந்நிலையில் புலம் பெயர்ந்து வாழும் மக்களிடம் தொடர்ந்தும் அரசியல் விழிப்புணர்ச்சியினைப் பேண வேண்டிய வரலாற்றுக் கடமை, "களத்தில்" செய்தித்தாளுக்கே உண்டு. இந்த வரலாற்றுக் கடமையினை நிறைவேற்ற, "களத்தில்" புதிய உத்வேகத்துடன் தொடர்ந்து முழங்கும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

மேலும், தமிழீழ மக்களின் அரசியல் எதிர்காலத்தினை நிர்ணயிப்பதில் இன்றைய காலகட்டம் மிகமிக முக்கியமானது. விடுதலைப் போராட்டத்தில் இரு வேறு முனைகளில் பங்களிப்புச் செலுத்த வேண்டிய அரசியற் கடமை, புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுக்கு இன்றுண்டு. தமிழீழத்தில் மக்கள் ஆயிரமாயிரமாய், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராளிகளாக மாறிக் கொண்டிருக்கையில் எமது போராளிகளின் கரங்களைப் பலப்படுத்துவதற்கு வேண்டிய நிதித் தேவையினைப் பூர்த்தி செய்யக் கூடிய வசதி, புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுக்கே உண்டு. அடுத்ததாக, எமது விடுதலைப் போராட்டத்திற்கு வேண்டிய சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொடுக்கும் கடமையும் புலம் பெயர்ந்து வாழும் மக்களிடமே உண்டு. இவ்விரு கடமைகளையும் எம்மக்களுக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பினையும் "களத்தில்" செய்தித்தாள் வருங்காலங்களில் நிறைவேற்ற வேண்டியது மிக முக்கியமாகின்றது.

"களத்தில்" செய்தித்தாள், கடந்த காலங்களில் எமது மக்கள் மத்தியில் ஆற்றிய பாரிய சேவையினைப் பாராட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானிய க்கிளை, வருங்காலங்களில் எழும் புதிய சவால்களையெல்லாம் எதிர் கொண்டு, காலத்தின் தேவைகளு க்கேற்ப களமமைத்து, புதிய உத்வேகத்துடன் வெளிவந்து, தனது பணிகளை வெற்றிகரமாகத் தொடரத் தனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரித்தானியக்கிளை.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# வைப்பகத்திற்கும் பணம் எடுத்துவரத் தடை

வடபகுதியில் உள்ள சிறீலங்கா அரசின் வைப்பகங்களின் உடனடித் தேவைக்காக, 100 மில்லியன் ரூபாக்கள் தேவைப்படுவதாக அவசர வேண்டுகோள் ஒன்றை, குறிப்பிட்ட வைப்பக வட்டாரங்கள் சிறீலங்கா அரசிற்கு விடுத்திருந்தன. இந்தப் பணத்தொகை இன்றைய பணப்புழக்கச் சிக்கல்களைத் தீர்க்கவும், அரச ஊழியர்களின் ஊதியங்களை வழங்கவும் அத்தியாவசியமாக இருப்பதாக விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தும், இவ்வே ண்டுகோளை தெற்கிலுள்ள சிறீலங்கா அரச நிர்வாகிகள் உதாசீனம் செய்திருந்தனர். பெரும் முயற்சிகளின் பின், 30 மில்லியன் ரூபாவிற்கான திரவப்பணத்தை அனுப்பச் சம்மதம் தெரிவித்தனர். இது தேவையான 100 மில்லியன் ரூபாவில் ஒரு பகுதி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் சிறீலங்காவில் அரசு எதைத் தெரிவித்திருப்பினும் அரச படைகளின் அனுமதியும் இருந்தாலே காரியம் முற்றுப்பெறும். இவ்வாறே திருகோணமலைத் துறைமுகத்தில் வைத்து கடற்படையினர் இந்த ஒருபகுதி பணத்தைத் தானும் கொண்டு செல்லத் தடைவிதித்துள்ளனர். இவை கடல் மார்க்கமாக பருத்தித்துறைக்குக் கொண்டு செல்லப்பட இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் வேண்டுகோள்

வடக்கில் தற்போது 52,727 அகதிகள் 170 பாடசாலைக-ளில் தங்கியுள்ளனர். இவர்கள் சிறீலங்கா இராணுவத்தின் வலிகாம ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்துள்ளவர்கள். இவர்களுக்கான தற்காலிகத் தங்குமிடத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கியநாடுகளின் அகதிகளுக்கான தூதுவராலயத்தால் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட 2000 கூடாரங்கள் தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்து இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இதனால், மக்களுக்குத் தேவையான தற்காலிகத் தங்குமிடங்களை ஏற்படுத்துவதில் பெருத்த சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதாகத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. இவ் அகதிகளைக் குடியமர்த்த உதவுமாறு பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் இந் நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றம்

இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி வேலைகள் தொடங்கப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வீடமைப்பு, நிர்மாண, பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு முன்னிற்கின்றார். அண்மையில் தென்பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் சிங்கள இளைஞர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர், யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் அபிவிருத்தி வேலைகளில் பங்குகொள்ள யாழ்ப்பாணம் வருமாறு சிங்கள இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அது யாழ்ப்பாணத்தில் அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் சிங்களக் குடியேற்றத்திற்கான அழைப்பாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரை நிலைகொள்ள வைப்பதற்குத் தேவையான ஆட்களைச் சேர்ப்பதற்கான மறைமுக அழைப்பாகவோ கொள்ளலாம்.

இந்த ஆண்டின் முற்பகுதியில் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, இவ் அபிவிருத்தி வேலைகளை முதலில் மேற்கொள்ளுமாறுதான், விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்தனர். அப்போது அதைச் செய்ய முன்வராத அரசின் அமைச்சர் இன்று யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வருமாறு சிங்கள இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றார். தமிழ் இளைஞர்களை கொழும்பிலும், வவுனியாவிலும் அகதி முகாம்களுக்குள் அடைத்து வைத்திருக்கும் அரசு, சிங்கள இளைஞர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கின்றது.

இவ்விடத்தில் இன்னுமொரு விடயமும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியுள்ளது. வவுனியா மாவட்டத்தில் அம்பலாங்கொடல்ல என்றோர் கிராமம் இலங்கையின் தென்பகுதியில் உள்ள அம்பலாங்கொட என்ற கிராமத்திலிருந்து சிங்களத் தொழிலாளர்கள் இங்கு நிரந்தரமாகக் குடியேறி, அவர்கள் தங்கள் சொந்தக் கிராமத்தின் ஞாபகார்த்தமாக இப்பிரதேசத்திற்கு அம்பலாங்கொடல்ல என்ற பெயரைச் சூட்டி இன்றும் நடைமுறையில் உள்ளது. இனி யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காகக் கொண்டுவரப்படவுள்ள சிங்களவர்களினால் யாழ்ப்பாணக் கிராமங்களிலும் எத்தனை, சிங்களக் கிராமங்களாகப் பெயர்மாறப் போகின்றனவோ எனத் தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர்.

# இடம்பெயர்ந்தோருக்கான கடிதத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது

யாழ். குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி, வன்னி பெருநிலப்பரப்பிற்கு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அவர்களுக்கான வெளியூர் தபால்களை அவர்கள் தற்போது தங்கியுள்ள பகுதிகளிலேயே கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுபற்றி விளக்கம் அளித்த யாழ். மாவட்ட பிரதம தபாலதிபர் "மக்கள் தாம் தற்போது தங்கியுள்ள தற்காலிக முகவரியையும், நிரந்தர முகவரியையும் தபாலகத்திற்கு அறிவிக்கும் பட்சத்தில் அவர்களுக்கென வரும் வெளிநாட்டுத் தபால்கள் எவ்வித சிரமுமில்லாமல் கையளிக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தை மாற்ற அரசு சதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தை இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் மாற்றுவதற்கான சதி முயற்சிகளை சிறீலங்கா அரசு மேற்கொண்டு வருகிறது.

சிறீலங்கா இராணுவத்தின் யாழ்ப்பாணம் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் காரணமாக மாணவர்களும், விரிவுரையாளர்களும் இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அலுவலகம் தற்காலிகமாக கிளிநொச்சியில் உள்ள விவசாயபீடத்தில் இயங்குவதுடன், பல்கலைக்கழகத்தின் அலுவலகப் பிரிவுகள் தற்காலிகமாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கிவருகின்றது. இவ் அலுவலகங்களுக்கு உபவேந்தர் குணரட்ணம் அவர்கள் மாதமொரு முறை சென்று வருகின்றார். அத்துடன் விரிவுரைகளைத் தொடங்குவதற்கும் முடிவு செய்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

இது இவ்வாறிருக்க, மருத்துவபீடத்தைத் தமது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கான முயற்சிகளில் இது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழீழ விடுதலைப் பயணத்தில் இலட்சியப் பற்றுடன் முன்செல்வோம்

**—எம்.ஜி.ஆர். நினைவுவிழாவில் குருமுதல்வர்**

தமிழீழத்தின் பல பகுதிகளிலும் முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் எட்டாவது ஆண்டு நிறைவு நாள் 24-12-1995 அன்று நினைவுகூறப்பட்டது. இந் நிகழ்வுகளில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தமிழினம் இன்று விடுதலைப் பயணத்திற்கு அழைக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தில் நாம் ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டு, இலட்சியத்துடன் பற்றுடன் எவ்வாறான கஸ்டங்கள் வந்தாலும் உறுதியுடன் முன் செல்ல வேண்டும். நாம் எவரும் போர்க்களத்திற்கு செல்ல தகுதியற்றவர்கள் அல்ல."

இவ்வாறு 24-12-1995 அன்று தமிழீழத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசு பாடசாலையில் நடைபெற்ற கலாநிதி. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் 8வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி இம்மானுவேல் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் "எங்களை நசுக்கும் சக்திகளுக்கு எதிராகப் போரிட்டுக் கொண்டு இருக்கும் அதேவேளையில் எமக்குள் இருக்கும் வறுமை, அறியாமை மற்றும் எத்தனையோ விடயங்களுக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது. எமது தமிழினத்தின் போராட்டம் ஆயிரம் ஆயிரம் உயிர்த்தியாகத்தினாலும் இரத்தத்தினாலும் பலப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே மக்கள் இந்த இலட்சியப் பயணத்தில் உறுதியாக இருக்க வேண்டும். எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் எவ்வளவுக்கு வலிமை அடைய வேண்டும் என விரும்புகின்றோமோ அவ்வளவுக்கு எமது இலட்சியப் பாதையில் உறுதியாகப் பயணம் செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இந்தக் போராட்டத்திலே எல்லா மக்களும் கலந்து கொள்வது ஒவ்வொருவரது தலையாய கடமையாகும். அது மட்டுமல்ல, தமிழன் என்று சொல்பவன் எங்கிருந்தாலும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். எமது இனத்தை காட்டிக் கொடுக்க முற்படக்கூடாது. உலகத்தில் எல்லா மூலைகளிலும் தமிழன் உரிமைக்குரல் எழுப்ப வேண்டும். இதற்காக வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் உழைக்க வேண்டும்" என்றார்.

பொன். மதிமுகராசா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பைச் சேர்ந்த தமிழ்க்கவி, சு. இரத்தினராசா அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்களுக்குத் தேவையான ஆத்ம பலம் கிடைக்க வேண்டும்

-யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்

"தமிழ் மக்களுக்குத் தேவையான ஆத்மபலம் கிடைக்கவேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் உட்பட அனைத்து தமிழ் மக்களின் அல்லல்களும் ஒழியவேண்டும். இதற்குத் தேவையான ஆன்மீக பலம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். இதற்காகவே இப் பிரார்த்தனை நடாத்தப்படுகிறது." இவ்வாறு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் விடிவு வேண்டி, இந்து சமய அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விசேட பிரார்த்தனை 24-12-1995 அன்று வடதமிழீழத்தில் உள்ள சகல இந்து ஆலயங்களிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது. இப் பிரார்த்தனை நிகழ்வில் பெரும் தொகையான மக்கள் உணர்வுடன் கலந்து கொண்டனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவும், இலட்சக்கணக்கான தமிழீழ மக்கள் சுதந்திர நல்வாழ்விற்கும் என இவ் ஆலயங்களில் உணர்வுபூர்வமாக பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டது.

# வடபகுதியில் இருந்து கொழும்புக்குச் செல்லத் தடை

வடபகுதியிலிருந்து கொழும்புக்கு செல்வதற்காகப் புறப்பட்ட தமிழ்மக்கள் சிறீலங்கா இராணுவத்தின் தாண்டிக்குளம் தடை முகாமில் வைத்துத் தடுத்து நிறுத்தப்பட்டு அங்குள்ள ஒரு தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் 20-12-1995 இலிருந்து நடைபெறுவதாக அறியப்படுகின்றது. இதே தினத்தில் கொழும்பு செல்வதற்காக வவுனியாவுக்கு வந்த மக்களுக்கு இத் தற்காலிக முகாமில் வைத்து அனுமதிப் பத்திரத்தை வழங்க சிறீலங்காப் பொலிசார் தொடங்கிய வேளையில், திடீர் அறிவிப்பு ஒன்று தமது அரசிடம் இருந்து வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டவுடன் பத்திரம் கொடுப்பதை நிறுத்திவிட்டு பொலிசார் திரும்பிவிட்டனர். அத்துடன் இனிமேல் பயணிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதில் புதிய நடைமுறை கொண்டுவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை தற்காலிக முகாமில் தங்கியிருப்போர் தினமும் 2 மணிநேரமே வெளியில் சென்று வர அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் கடந்த 21-12-1995 இவ் அனுமதிகூட நிறுத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

# வன்னி செல்லும் கைத்தொழிலாளருக்கு தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் உதவி

தற்போதைய நெருக்கடிகளால் அனைத்துக் கைத்தொழில்களும் செயலிழந்து முடக்கப்பட்டுள்ள நிலையில், இடம்பெயர்ந்த மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவும், செயலிழந்த கைத்தொழில்களை மீள இயங்க வைக்கவும் 'தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்' அனைத்து உதவிகளையும் செய்ய முன்வந்துள்ளது.

பெருநிலப்பரப்பிற்குச் சென்று கைத்தொழில்களைத் தொடங்க ஆர்வமுள்ளோருக்குக் குறைந்த செலவில் பொருட்களை ஏற்றி இறக்க வசதிகள் செய்து கொடுக்கவும், தொழிற்சாலைக்கான இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் மாங்குளத்திற்கு அண்மையாக ஒட்டிசுட்டான் பகுதியில், கைத்தொழில்களைத் தொடங்குபவர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், பீடித்தொழில், சுருட்டுத் தொழில், தும்புத் தொழில், நல்லெண்ணெய் ஊற்றல் போன்ற குடிசைக் கைத்தொழிலாளர்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, இது தொடர்பான விபரங்களைப் பெறப் பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களையும், புதிதாகக் கைத்தொழில்களைத் தொடங்க ஆர்வமுள்ள முதலீட்டாளர்களையும் கொடிகாமம்- கச்சாய் வீதியிலுள்ள தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு, தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# சிங்கள ஆட்சிக்கும் சிங்கக் கொடிக்கும் தமிழீழத்தில் இடம் இல்லை

இலங்கை ஒரு தீவு. அது இரண்டு நாடுகளைக் கொண்டது. ஒன்று சிறீலங்கா. மற்றது தமிழீழம். இதனை ஒரு சமன்பாடு மூலமும் விளக்கலாம்.

சிறீலங்கா + தமிழீழம் = இலங்கை.

ஆனாற் சிங்கள-பௌத்த இனவாதிகள் இந்த யதார்த்தத்தைக் கிரகித்துக் கொள்ளப் பிடிவாதமாக மறுத்து வருகிறார்கள். இதன் காரணமாகவே ஈழப்போர் I, II, III என்று தமிழீழத்துக்கும் சிங்களச் சிறீலங்காவிற்கும் இடையிற் போர் தொடர்ந்துகொண்டு போகிறது.

கட்டி ஆளவில்லை. அதே போலத்தான் டச்சுக்காரர்களும் முழு இலங்கையையும் ஆளமுடியவில்லை. ஏன் தமிழ்ச் சிற்றரசுகளான வன்னிமைகளையே அவர்களால் வெற்றி கொள்ள முடியவில்லை. ஆங்கிலேயர் மட்டுமே கரையோரச் சிங்களநாடு, கண்டிநாடு, தமிழீழம் இந்த மூன்றையும் ஒரே ஆட்சியின் கீழ் (1833-1948) ஆண்டிருக்கிறார்கள்.

ஆங்கிலேயருக்குப் பின் ஆட்சியைத் தந்திரமாகக் கைப்பற்றிக்கொண்ட சிங்களவர்கள் 1985 வரை முழு இலங்கையையும் ஆண்டிருக்கிறார்கள். அதன்பின் வடதமிழீழம்

**இலங்கைத்தீவு இரு நாடுகளை, இரண்டு அரசுகளைக் கொண்ட ஒரு நாடு என்பதே வரலாற்று ரீதியான உண்மையாகும். இந்த உண்மையை, யாழ்ப்பாணத்திற் சிறீலங்காவின் தேசியக் கொடியான சிங்கக் கொடியைப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த சிங்கள இராணுவ அதிகாரிகள் புடைசூழ ஏற்றி வைத்ததன் மூலம் நிரூபித்துள்ளார்.**

தமிழீழத்திற் பெரும்பான்மையாகத் தமிழர்கள் வாழ்கிறார்கள். அது தமிழர்களது தாயகபூமி. சிறீலங்காவிற் பெரும்பான்மையாகச் சிங்களவர்கள் வாழ்கிறார்கள். அது சிங்களவர்களது தாய்நாடு. சிறீலங்கா சிங்களவர்களுக்குச் சொந்தமான நாடு என்பதை யாரும் மறுக்கவில்லை. தமிழ்த் தேசியம் அதனை யதார்த்தபூர்வமாக ஒத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் தகராறு எங்கே என்றாற்சிங்களத் தேசியம் தமிழர் பூமியான தமிழீழத்தை, அதன் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனை வரை சிறீலங்கா சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானது என்று வாதிக்கிறது. இலங்கைத் தீவின் வரலாற்றைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு முழு இலங்கையையும் ஒரு குடைக்குள் ஆண்ட மன்னர்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம். துட்டகைமுனு சரி, முதலாவது பராக்கிரமபாகு சரி மிகக் குறுகிய காலத்துக்கே இலங்கைத்தீவு முழுதையும் ஆண்டிருக்கிறார்கள். இதிற் பராக்கிரமபாகு அரைத் தமிழன். அவனது பாட்டனார் முழுத் தமிழன்.

இவர்களை விட இராசராசசோழன் (984-1014) அவனது மகன் முதலாவது இராசேந்திர சோழன் (1014-1044) இந்த இருவர்களது ஆட்சிக்காலத்தில் இலங்கை ஒரு குடைக்குள் ஆளப்பட்டு இருந்திருக்கிறது.

கோட்டையை ஆண்ட ஆறாவது புவனேகபாகு (சம்புமால் குமாரய என்று அழைக்கப்பட்ட சேர நாட்டு இளவரசன் செண்பகப் பெருமாள்) காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் (கி.பி. 1450-1467) அவன் ஆட்சிக்குட்பட்டு இருந்தது, ஆனாற் கண்டி இராச்சியம் அவன் ஆட்சிக்குட்பட்டு இருக்கவில்லை. 1619 இல் யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் வெற்றி கொண்டாலும் முழு இலங்கையையும் அவர்கள்

முற்றாகவும், தென் தமிழீழம் முக்கால் வாசியும் சிறீலங்காவின் ஆட்சிப்பிடியிலிருந்து விடுக்கப்பட்டு விடுதலைப் புலிகளது ஆட்சி நிறுவப்பட்டது. எனவே இலங்கைத் தீவு இரு நாடுகளை, இரண்டு அரசுகளைக் கொண்ட ஒருநாடு என்பதே வரலாற்று ரீதியான உண்மையாகும். இந்த உண்மையை யாழ்ப்பாணத்தில் சிறீலங்காவின் தேசியக் கொடியான சிங்கக் கொடியைக் கடந்த டிசெம்பர் 5ம் நாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த சிங்கள இராணுவ அதிகாரிகள் புடைசூழ ஏற்றி வைத்ததன் மூலம் நிரூபித்துள்ளார். அமைச்சர் சிங்கக் கொடியை ஏற்றிய காட்சியை ரூபவாகினியில் நேரடி ஒளிபரப்புச் செய்ததன் மூலம் இலங்கை இருநாடு கொண்ட ஒரு தீவு என்னும் யதார்த்தத்தை உலகு முழுதும் சந்திரிகா அரசு பறையறைந்துள்ளது. வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிப் பார்த்தால் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அந்த நாட்டைக் கைப்பற்றும் போதுதான் வெற்றி கொண்ட நாடு, தோற்ற நாட்டின் தலைநகரிற் தனது கொடியைப் பறக்கவிட்டு விழாக் கொண்டாடியிருக்கிறது.

ஒரு நாடு தனது நாட்டின் எல்லையைக் கடந்து உள்ளே சென்று அதன் ஒரு பகுதியைப் பிடித்து வைத்திருக்கும் எதிரிப் படையுடன் மோதி அந்தப் பகுதியை மீண்டும் விடுவித்துக் கொண்டால் அந்தப் பகுதியில் அதன் தேசியக் கொடியை ஏற்றி விழாக் கொண்டாடுவதில்லை. அதற்கு அவசியமே இல்லை. எனவே ஐம்பது நாட்கள் முக்கித்தக்கி, பலநூறு இராணுவத்தினரைப் பலிகொடுத்து, போர் விமானங்களை இழந்து, ஆயுதங்களைப் பறிகொடுத்து இத்தகைய பாரிய இழப்புக்களின் பின் யாழ்ப்பாணத்தைக்கைப்பற்றி அங்கு சிறீலங்காவின் சிங்கக்கொடியைப் பறக்கவிட்டது ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது படையெடுத்த உண்மையையே எடுத்துக் காட்டுகிறது.

இலங்கை ஒரு நாடு என்றால் கொடியைப் பறக்கவிட வேண்டிய அவசியமோ, அவசரமோ இருக்கவே முடியாது.

1971 ஆம் ஆண்டு ஜாதிக விமுக்தி பெரமுனையின் கிளர்ச்சியை அடுத்து, தென் இலங்கையின் பல பகுதிகள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பல மாதங்கள் கழித்தே அந்தப் பிரதேசம் முற்றாகச் சிறீலங்கா அரச படையினால் விடுவிக்கப்பட்டது. அப்போது யாரும் கொடி ஏற்றவில்லை.

**யாழ்ப்பாணத்திற் சிங்கக் கொடியை ஏற்றி விட்டு கொழும்புக்குப் பறந்தோடிவந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த, சிறீலங்காவின் அரசியார் சந்திரிகாவிற்கு அவரது கட்டளையின் பிரகாரம் யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிட்ட வீர தீர பராக்கிரமத்தை ஓலையில் எழுதிப் பட்டுப் போர்த்திய பேழையில் வைத்துக் கையளித்திருக்கிறார்.**

இதேபோன்று 1987-89 ஆண்டுகளில் தென் இலங்கையின் பல பகுதிகள் மீண்டும் ஜாதிக விமுக்தி பெரமுனையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. பல ஆயிரம் ஜா.வி. பெரமுனையின் உறுப்பினர்களையும் அதன் தலைவர்களையும் கொன்று சிறீலங்கா இராணுவம் அப்பிரதேசத்தை மீளக் கைப்பற்றிய போது சிறீலங்காவின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை அப்போது பலப்பிட்டியாவிலும், மாத்தறையிலும் ஏற்றவில்லை.

அம்பாந்தோட்டை, மாத்தறை, பலப்பிட்டியா இவையெல்லாம் சிறீலங்கா நாட்டின் பகுதிகள் என்ற காரணத்தாலேயே "கொடிகிடி" எதுவும் ஏற்றப்படவில்லை. எனவே யாழ்ப்பாணத்திற் தமிழர்களின் வரலாறு, நாகரிகம், பண்பாடு இவற்றின் உறைவிடத்தில் சிறீலங்கா அரசும், சிறீலங்காவின் சிங்கள இராணுவமும் சிங்கக் கொடியை ஏற்றியதன் மூலம் இலங்கைத் தீவில் இரண்டு நாடுகள், இரண்டு அரசுகள், இரண்டு கொடிகள் இருப்பதைத் தெட்டத் தெளிவாக்கி இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திற் சிங்கக் கொடியை ஏற்றியது, இரு நாட்டு யதார்த்தத்தை மெய்ப்பித்ததென்றால் அடுத்த நாள் சிறீலங்காவின் தலைநகரில் அரசியார் சந்திரிகாவின் தலைமையில் நடந்தேறிய 'யாழ்ப்பாண வெற்றி' விழாக் கொண்டாட்டம் அந்த யதார்த்தத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்திற் சிங்கக் கொடியை ஏற்றி விட்டு கொழும்புக்குப் பறந்தோடிவந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த சிறீலங்காவின் அரசியார் சந்தரிகாவிற்கு அவரது கட்டளையின் பிரகாரம் யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிட்ட வீர தீர பராக்கிரமத்தை ஓலையில் எழுதி, பட்டுப் போர்த்திய பேழையில் வைத்துக் கையளித்திருக்கிறார்.

ஓலையின் வாசகம் இதோ-

"புத்த சகாப்தம் 2939 ஆம் ஆண்டு உதுவப் மாதம் பூரணை நாளில் மாட்சிமை தங்கிய அரசியாரது ஆட்சி மீண்டும் யாப்பபட்டுனாவில் உறுதியாக நிலைநாட்டப்பட்டு விட்டது." சுத்த தமிழ்ச் சொல்லான யாழ்ப்பாணம் சிங்களத்தில் *யாப்பபட்டுனாவா* என மாற்றப்பட்டது கவனிக்கத்தக்கது.

இதன் அர்த்தம் பல நூற்றாண்டுகளுக்கு முன் இரண்டொரு சிங்கள மன்னர்கள் தமிழ்ப் பிரதேசத்தை வெற்றி கொண்டு சில காலம் ஆண்டது போல், மாட்சிமை தங்கிய அரசியாரும் தமிழ்ப் பிரதேசத்தைக் கைப்பற்றி உங்கள் ஆட்சியை நிலைநாட்டி விட்டீர்கள் என்பதாகும்.

இதனை நான் ஏதோ இட்டுக்கட்டிச் சொல்வதாகவோ, கற்பனை செய்வதாகவோ நினைப்பவர்களது சந்தேகத்தைப் போக்கப் பிரபல அமெரிக்க Times (18.12.95) சஞ்சிகையின் நிருபர் Anthony Spaeth எழுதியிருப்பதை அப்படியே தருகிறோம்.

"Cumaratunga's use of Sinhalese Buddhist iconography carried a message. She had conquered Tamil lands and defeated her enemies in much the same manner as Sinhalese kings of centuries gone by"

அண்மைக்கால வரலாற்றில் சிறீலங்காவின் சிங்களத் தலைவர்கள் தங்களை ஆதிகாலச் சிங்கள மன்னர்கள் போலக் கற்பனை செய்து வருவது பிரசித்தமான சங்கதிதான்.

சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா தன்னை சிறீலங்காவின் 2500 ஆண்டுகால வரலாற்றில் 204 வது மன்னராகப் பிரகடனப்படுத்தி இருந்தார். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைப் பின்பற்றியே சனாதிபதி சந்திரிகாவும் தன்னைச் சிறீலங்காவின் அரசியாகப் பிரகடனப்படுத்தி இருக்கிறார். சிறீலங்காவின் மன்னராக ஜே.ஆர். ஜெயவர்த்தனாவோ அரசியாக சந்திரிகா குமாரதுங்காவோ தங்களைப் பிரகடனப்படுத்துவதை யாரும் குறை கூற முடியாது. ஆட்சேபிக்கவும் முடியாது. ஆனால் தமிழீழத்தைப் பிடித்து முடிசூட்டிக் கொள்ளலாம் என்று மட்டும் சனாதிபதி சந்திரிகா கற்பனை பண்ணக் கூடாது. அப்படி ஆசையும் கொள்ளக் கூடாது. யாழ்ப்பாணத்திற் சிங்களக் கொடியேற்றிய சில மணிநேரத்திற் தென் தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் புதுக்குடியிருப்பு இராணுவ முகாமைத் தாக்கி அழித்திருக்கிறார்கள்.

தமிழீழ மண்ணிற் தமிழர்களது தாயக பூமியில் எதிரிப் படை, சிங்களப் படை கால் வைத்த இடம் எல்லாம் குண்டுகள் வெடிக்கும். நிலத்தில் மட்டுமல்ல, நீரிலும் வெடிக்கும். ஆகாய வெளியிலும் வெடிக்கும். இதில் யாருக்கும் சந்தேகம் இருக்கத் தேவையில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாகப் பின்வாங்க நேர்ந்தது. இது முதற் தடவையல்ல. 1987இல் இந்திய அமளிப்படை யாழ்ப்பாணத்தைப் பிடித்தபோது விடுதலைப் புலிகள் வன்னிக்காட்டுப் பகுதிக்குப் பின்வாங்கினார்கள்.

இம்முறை தாங்களும் வெளியேறி மக்களையும் தம்மோடு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளது பலமே மக்கள் அவர்களது பக்கம் இருப்பதுதான். இந்த மக்கள் பலம் விடுதலைப் புலிகள் பக்கம் இருக்குமட்டும் அவர்களை யாருமே அசைக்க முடியாது.

யாழ்ப்பாணத்தின் மீது நடாத்தப்பட்ட சிங்களப் படையெடுப்பு, மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப் போன சிங்களப் படை, மக்கள் இல்லாத வெறும் யாழ்ப்பாணத்தைத்தான் பிடித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தைப் பிடித்து அங்கு சிங்கக் கொடியை ஏற்றி வெற்றிகொண்டாடியதன் மூலம், சிங்களச் சிறீலங்காவும் தமிழீழமும் என்றென்றுமே ஒன்றாக இருக்க முடியாது என்பது நிரூபணமாகிவிட்டது.

மானம், மரியாதை, சூடு-சொரணை எல்லாவற்றையும் எங்கோ தொலைத்து விட்டு நாமமது தமிழரென வாழும் கொழும்புத் தமிழ்க் குழுக்களுக்கே சந்திரிகா அம்மையாரின் "வெற்றி விழா" பிடிக்கவில்லை என்றால், தமிழீழமே தாரக மந்திரமாக நாளும் பொழுதும் செபித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களைப் பற்றிப் பேசத் தேவையில்லை.

சனாதிபதி சந்திரிகா சரி, வேறு எந்த இந்திரிகா சரி, தமிழீழத்தைத் துப்பாக்கி முனையில் அடக்கி ஆளலாம் என்பது பகற்கனவு. அது ஒரு போதும் நடக்காது. தமிழீழ மண்ணிற் தமிழ் மக்கள் ஆட்சி மட்டுமே நடைபெறமுடியும். தமிழ் ஈழக் காற்றிற்புலிக்கொடி மட்டுமே பட்டொளி வீசிப் பறக்க முடியும். சிங்கள ஆட்சிக்கும், சிங்கக் கொடிக்கும் தமிழீழத்தில் இடம் இல்லை.

நக்கீரன்

# கடல் கடந்த பிணைப்பு

"சிங்கள இனவாத ஆட்சியாளர்களின் கொடுமையால், இன அழிப்பின் விழிம்பில் நின்று விடுதலைக்காகப் போராடிவரும் தமிழ் இனத்திற்காக உணர்வு பூர்வமாக உரிமைக் குரல் எழுப்பும், தமிழக மக்களிற்கும், தமிழகத் தலைவர்களிற்கும் எமது மக்களின் சார்பில் அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என தலைவர் பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இவை நொந்துபோயிருக்கும் எமது மக்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகின்றது என்பதையும் சுட்டிக்காட்டி உள்ளார். தமிழீழ மக்களிற்கோ அன்றி ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களிற்கோ இன்னல்கள் நேரும்போது தமிழகத்திலிருந்து அனுதாபக் குரல்களும், ஆதரவுக் குரல்களும் எழுவது தவிர்க்க முடியாததொன்றே. ஏனெனில் உணர்வு பூர்வமாக ஒரே இனம் என்ற ரீதியில் அவர்கள் பிணைக்கப்பட்டுள்ளனர் என்பதே ஆகும்.

அந்த வகையில் தமிழக மக்கள், உலகில் உள்ள ஏனைய தமிழ் மக்களின் நெருக்குதல்கள், அவலங்கள் என்பனவற்றிற்காகக் குரல் கொடுப்பதும், அவர்களிற்கு ஆதரவளிக்க முற்படுவதும், அவர்களின் கடமையும் கூட. ஏனெனில் உலகில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதி தமிழகம் என்பதோடு, முழுமையான சரித்திரத்தைப் பெற்றுவிட்ட ஒரு மாநில ஆட்சி அமைப்பைக் கொண்டுள்ளவர்கள் என்ற ரீதியிலும், ஓரளவு அதிகாரத்தைக் கொண்டவர்கள் என்ற ரீதியிலும், தாக்கமான நடவடிக்கைகளினால் அவர்களால் உதவி செய்ய முடியும் என்பதனாலுமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும், அதற்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் விடுதலைப் புலிகள் குறித்தும் தமிழக மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்புவதற்குப் பல தீய சக்திகள் தீவிரமாகச் செயற்பட்டு வந்தன. இவை, தமிழக மக்கள் மத்தியிலும், தமிழீழ மக்கள் மத்தியிலும் பிரிவினையை ஏற்படுத்தித் தமிழீழ விடுதலைப் போராட்டம் சிங்களப் பேரினவாதச் சக்திகளால் நசுக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு முனைந்தன. இதனைச் சிங்களப் பேரினவாதமும் நன்கு பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்கியது. சிங்களப் பேரினவாதத்திற்கு எப்பொழுதுமே தமிழக மக்களிற்கும், தமிழீழ மக்களிற்கும் இடையிலான உறவு பற்றிப் பெரிய ஐயப்பாடும், பயமும் இருந்துகொண்டே இருந்தது. தமிழீழ மக்களிற்கு இழைக்கப்படும் இன்னல்களால் தமிழகத்தில் ஏற்படும் உணர்வுகள், தமக்கு நெருக்கடிகளை விளைவிப்பதாக அமையும் என்று சிறீலங்கா கருதியது.

சிங்களப் பேரினவாதம் அவ்வாறு கருதினாலும் தவறு இருப்பதாக இல்லை. கடந்த கால வரலாற்றில் ஈழத்தமிழருக்கு எதிரான அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது அது தமிழகத்திலும் எதிரொலித்தது. இதன் பிரதிபலிப்புச் சிறீலங்கா ஆட்சியாளர்களையும் பாதிக்கத்தான் செய்தது. இதற்குத் தமிழகத்தின் குரல் தவிர்க்கப்படமுடியாததொன்றாக இருந்ததே காரணம். ஏனெனில் இந்தியாவிலுள்ள தமிழர்களும் அங்கு சிறுபான்மையினரே ஆயினும், பலம் பொருந்திய சிறுபான்மையினரேயாகும். ஆதலினால் அவர்களின் குரல் இந்தியாவினுள்ளும் வெளியிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவே இருக்கின்றது. இதனை முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா உட்படச் சகலருமே உணர்ந்திருந்தனர். ஒரு முறை இது குறித்துப் பிரஸ்தாபித்த ஜே.ஆர். தமிழர்கள் உலகில் பல பாகங்களிலும் சிறுபான்மையினராக இருப்பினும் உலகில் உள்ள பலம் வாய்ந்த சிறுபான்மையினம் என்பதைப் புறக்கணித்துவிட முடியாது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், கடந்த சில வருடங்களாகத் தமிழீழ மக்களுடன், தமிழக மக்களிற்கு இருந்த உறவைப் பிரிப்பதற்குச் சில சக்திகள் எடுத்த முயற்சி, சிங்களப் பேரினவாதிகளுக்குப் பெரும் ஆறுதலளிக்கும் விடயமாகவே இருந்தது. இது தமிழீழ மக்கள், யாரும் அற்ற அநாதைகள் என்ற உணர்வுடன் தமது அடக்குமுறை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல அவர்களிற்கு வாய்ப்பாகப்போய்விட்டது. ஆனால், இந்த நிலையைத் தற்போது தொடரமுடியாமல் உள்ளது. தமிழகம் விழித்துக்கொண்டு விட்டது. திராவிடர் கழகச் செயலாளர் வீரமணி கூறியிருப்பது போன்று, "ஈழத்தமிழருக்கு ஆதரவான உணர்வு தமிழ் நாட்டில் இதுவரை நீறுபூத்த நெருப்பாகவே இருந்துள்ளது. இது தேவையானபோது வெடித்துக் கிளம்பும் என்பதே உண்மை. ஏனெனில் ஈழத்தமிழருக்கும், தமிழக மக்களிற்குமிடையிலான உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல நூறு ஆண்டுகளாக மொழி, கலை, பண்பாடு ரீதியாக இருந்துவரும் ஒரு வரலாற்றுக்குட்பட்ட உறவு ஆகும். ஆயினும், தமிழக மக்களிற்கும், தமிழீழ மக்களிற்கும் இடையில் இருந்த உறவைப் பிரிப்பதற்கு முற்பட்ட பலமான சக்திகளின் அழுத்தங்களை முறியடித்து, தமிழக மக்களும், தலைவர்களும் தமது ஆற்றலையும் உணர்வையும் வெளிப்படுத்தியதோடு தமது ஆதரவுக்குரலைத் தமிழீழ மக்களிற்காக எழுப்பியதற்குத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் நன்றியையும், அன்பையும் தெரிவித்தார்.

இதேசமயம், தேசியத் தலைவர் பிரபாகரன் கூறியிருப்பதுபோல தமிழக மக்களும், தலைவர்களும், தமிழீழ மக்களிற்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தமது ஆதரவைத் தொடர்ந்தும் அளிக்கவேண்டும். அது சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போரிடும் தமிழீழ மக்களிற்குப் புத்துணர்வையும், உற்சாகத்தையும் வழங்கும் என்பதோடு தாம் தனித்தவர்களல்ல என்ற உணர்வையும், உற்சாகத்தையும் அளிக்கும். இது ஒரு வகையில் உலகின் ஒரு பகுதியில் தமிழினம் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு உதவும் என்பதோடு, மறுவடிவமாகத் தமிழர்களிற்கு என்று உலகில் தனிநாடு ஒன்று உருவாகுவதற்கு வழிவகுப்பதற்கான சக்தியாகவும் இருக்கும்.

# எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன!

பதிப்புரை –

சிங்களப் படைகள் தமிழன் நிலத்தில் விதைத்த ஒரு அவலத்தை இந்த நூல் பதிவு செய்துள்ளது.

'முன்னோக்கிப் பாய்தல்' என்ற பெயரில் 9–7–95 அன்று சிங்களப்படை ஆரம்பித்த படையெடுப்பின்போது, படுகொலை செய்யப்பட்ட 239 பேரில், பலரது கண்ணீர்க் கதைகள் – விவரணவடிவில் – இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. விமானக்குண்டு வீச்சிற்கு இலக்காகி நவாலி தேவாலயச் சுற்றாடலிற் பலியான 141 பேரின் துயரச் சம்பவங்கள் உட்பட, அந்தப் படையெடுப்பின் போது குறித்த நிலப்பகுதியிற் பரவலாக நடந்த படுகொலைகள் பற்றிய நெஞ்சை உலுக்கும் சில கதைகளும் இங்கே ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

"எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன" என்ற பெயரிலான இந்த உண்மை நிகழ்வுகளின் விவரண நூல் ஒரு காலத்தின் பதிவாக நின்று நிலைக்கப்போகின்றது.

இந்த நூலை எழுதிய திரு. நாவண்ணன், இதேபோன்று முன்னரும், உண்மை நிகழ்ச்சிகள் பலவற்றைக் கலாபூர்வமான முறையில் ஆவணப்படுத்தி இலக்கியப்பணி புரிந்துள்ளார்.

புலிப்பாய்ச்சலைத் தொடர்ந்து, முன்னோக்கிப் பாய்ந்த பகுதிகளை விட்டுப் படையினர் பின்வாங்கிச் சென்ற ஓரிரு நாட்களிலேயே அந்த இடங்களுக்கு நேரடியாகச் சென்ற திரு. நாவண்ணன் சம்பந்தப்பட்டோரைச் சந்தித்து, தகவல்களை உறுதிப்படுத்தியபின் இந்த விவரணத்தை எழுதியுள்ளார். இந்த நூலுருவாக்கத்தின் பின்னால் இருந்த அவரது கடும் உழைப்பும் எமது மக்கள் பட்ட அவலத்தை எல்லாரும் அறியும் வகையில் பதிவு செய்ய வேண்டும் என்ற அவரது பேரார்வமும் அந்த நெருக்கடியான நாட்களில், எறிகணைகள் மற்றும் ஆபத்தான இடங்கள் என்பவற்றையெல்லாம் அசட்டை செய்தபடி, தனது எழுத்துப்பணியில் அவர் காட்டிய துணிச்சலும் பாராட்டப்பட வேண்டியவை.

9–7–95 அதிகாலையிலிருந்து 16–7–95 அதிகாலை வரையிலான நாட்களில், வலிகாமம் மேற்குப் பகுதியில் வசித்த மக்கள் சந்தித்த அவலங்களை இந்த விவ ரண நூல் என்றென்றைக்கும் நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.. அதேவேளை, விடுதலை என்ற உன்னத இலட்சியத்திற்காக இப்போதைய சந்ததி கொடுத்துவரும் உயர் விலை பற்றியும் அந்த உயிர் இழப்புக்கள் விட்டுச்செல்லும், சோகக்கதைகள் பற்றியுமான சில அனுபவங்களை இந்த நூல் ஆவணப்படுத்திக்கொடுக்கின்றது.

**சிறீலங்கா அரசின் முன்னோக்கிய பாய்ச்சலின் போது விழைந்த அனர்த்தங்களும், விடுதலைப் புலிகளின் வீரமிகு புலிப் பாய்ச்சல் வரலாறும் இந் நூல் மூலம் வெளிக் கொணரப்படுகிறது. இது அடுத்த களத்தில் இதழிலிருந்து தொடராக வெளிவருமென்பதை வாசகர்கட்கு அறியத்தருகின்றோம்.**

# புதிய தளத்தில் புதிய உத்திகளுடன் புதிய பரிணாமத்தில் போராட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டம் புதிய தளத்தில், புதிய உத்திகளுடன், புதிய பரிணாமத்தில் வேகமும், வலுவும் பெற்று வளர்ந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் ஆலோசனையைக் கேட்டு மக்கள் இடம்பெயர்ந்திருக்காவிட்டால் எண்ணிப்பார்க்க முடியாத இழப்புக்கள் ஏற்பட்டிருக்குமென யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க குருமுதல்வர் அருட்திரு. இம்மானுவல், ஈழநாதம் பத்திரிகைக்குக் கூறியுள்ளார். வெளிநாட்டு நிறுவனங்கள் கூட வியக்கத்தக்க வகையில் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களை விடுதலைப் புலிகள் கவனித்து வருகின்றனர். புலிகளின் இச்செயலை மனதாரப் பாராட்டுகிறோம். இவற்றுக்காக மக்கள் புலிகளுக்கு என்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்" எனவும் அவர் கருத்துரைத்துள்ளார்.

வலிகாமத்திலிருந்து வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கு .உதவும்பொருட்டுத் தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வருகின்றது. பின்னர் இவர்கள் பத்துப் பத்துப் பேர் அடங்கிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் புனர்வாழ்வுப் பணிக்காக வன்னிப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையே வன்னிப்பகுதிக்கு, தாண்டிக்குளம் ஊடாக வருபவர்கள் தம் சொந்தத் தேவைகளுக்கெனக் கொண்டு வரும் மருந்துகளைக்கூடச் சிறீலங்கா இராணுவம் பறிமுதல் செய்து, மருந்துத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய வகையிற் செயற்பட்டு வருகிறது. அவ்வாறே, பணத்தட்டுப்பாட்டையும் வேண்டுமென்றே சிறீலங்கா செயற்படுத்தி வருகிறது. ஆயினும், தமிழீழ வைப்பு நிதியம் தொடர்ந்தும் செவ்வனே செயற்பட்டு வருவதாகத் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், பயிர்ச்செய்கையில் ஈடுபடவிரும்புபவர்களுக்குத் தேவையான பொருட்களைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கி வருகின்றது எனவுங் குறிப்பிட்டார்.

# நாளையும் கட்டுமரமேறி..

பெருமூச்சு விட்டார்.

"மீன் பிடிக்கிறது எங்கட குலத்தொழில். எங்கட தொழிலை என்ரை மகள் செய்யிறதில என்ன இருக்குது? நாதஸ்வரக்காரனின்ரை மகள் நாதஸ்வரம் வாசிக்கிறதையோ, பாட்டு வாத்தியாரின்ரை மகள் பாட்டுப் பாடுறதையோ ஆரும் பிழை எண்டு சொல்லேல்லையே. மீன்பிடிகாரனின்ரை மகள் மீன் பிடிக்கிறதில மட்டும் என்ன பிழை? குலத்தொழில்தானே? ஏன் என்ரை மகளுக்கு ஒண்டும் சரிவருகுதில்லை. முப்பத்தொரு வயதாகியும் அவள் என்னோடை தானே இருக்கிறாள்?"

பதில் சொல்லத்தெரியவில்லை எங்களுக்கு. எங்கள் சமூகம் இன்னமும் சில பழமைவாதங்களைப் பேணிக் கடைப்பிடிப்பது எமக்கு மிகுந்த வேதனையைத்தான் தருகிறது.

அக்காவின் முகத்தைப் பார்த்தோம். அவர் அப்போதும் சிரித்துக்கொண்டே இருந்தார். எதையும் தாங்கும் இதயம் கரையோர மக்களுக்குப் புதிதல்ல. இந்தக் கரையோர மீனவக் குடிமக்கள்தான், தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலந்தொடக்கம் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சிக்காலம் வரை, நாட்டின் கரையோரப் பாதுகாப்புக்குப் பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றவர்கள். தமிழர், கடற்படைகளுக்குரிய அடிக்கட்டுமான வேலைகளில் முழுமையாக ஈடுபடுகின்றவர்கள். நாடு எதிரிகளின் தாக்குதலுக்கு இலக்காகின்றபோது, முதலில் தாக்கப்படுகின்றவர்கள் கரையோர மக்களே. தமிழீழ மீனவர்குடிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. கொடுத்தால், கடலன்னை வாரிக்கொட்டிக் கொடுப்பாள். கோபம் எல்லை மீறும் சமயங்களில் குமுறிக் கொந்தளித்துத் தன் பிள்ளைகளையே படகுகளுடனும், வலைகளுடனும் வாரிக்கொண்டு போவாள். இன்பத்தையும், துன்பத்தையும் தம் வாழ்வில் அடிக்கடி சந்திப்பவர்கள் இவர்கள். அதனால் இறுகி இரும்பாகிப் போனார்கள். அக்காவும் கடலன்னையின் குழந்தைதானே? அவர் மட்டுமேன் சோரப்போகிறார்? இவர் நாளைக்கும் கட்டுமரத்திலேறி துடுப்பை வலிப்பார். எதிர் நீரோட்டம் எதுவும் அக்காவைத் தடுக்காது.

# சிந்திக்கப் பிந்தியவர்களுக்கு எங்கள் தாயகத்தின் அழைப்பு

## இளையோரே! எழுவீர் இல்லாவிடில்.... அழுவீர்!

தமிழீழ விடுதலைப் புலிகள்

**என் அன்புக்குரிய பிள்ளைகளே!**

குரல்வைத்து உங்களைக் கூப்பிட்டழைக்கும் காலமொன்று வருமென்று நான் காத்திருக்க வில்லை.என்றோ ஒருநாள் இப்படி அழைப்பொன்றை விடுவேன் என்று கருதியிருக்கவுமில்லை. நான் அழைக்காமலே நீங்கள் எழுந்து வருவீர்களென்றே எதிர்பார்த்திருந்தேன். என் மடிதவழ்ந்த மழலைகள் தம் தாயவளுக்குத் துன்பம் வந்துற்றபோது, பொங்கியெழுந்து, பெருங்கடலெனத் திரண்டு, எதிரியுடன் போரிடு வார்களென்றே நம்பியிருந்தேன். வீரத்தின் விளைநிலம், மானத்தின் மடிநிலம், பகைமுடிக்க ஆர்த்தெழும் என்று அச்சமின்றி இருந்தேன். ஆனால் இன்று அழைப்பு விடுவது அவசியமென்றானதால்.உங்களைத் தனித்தனி பெயர் சொல்லி தட்டி எழுப்புகின்றேன்.

**என் மடிதவழ்ந்த மாதவங்களே!**

போருக்கு வாரீர் என்று நான் அழைப்பது, சாவுக்கு என்று அர்த்தப்படாது. உயிரிலும் மானம் பெரிது என்ற உணர்வின் வெளிப்பாடாக இதை எடுத்துக்கொள்ளுங்கள். பயந்தொழிக்கும் பரம்பரையல்லவே நீங்கள். கைகட்டி, வாய்பொத்தி, மண்டியிட்டு வாழும் மரபில் வந்தவர்க ளல்லவே நீங்கள்! மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமான் உங்கள் உடன்பிறப்புக்கள். நோயுற்று மடிந்திருப்பினும், நெஞ்சில் வேல்குத்திய பின்னர் எரியூட்டிய வீரப் பரம்பரையல்லவா நீங்கள்? போர்க்களத்துக்கு அனுப்ப இனிப் பெரியவர்கள் இல்லை என்றதும் சின்னப் பிள்ளைக்கு வேல் கொடுத்தனுப்பிய பெண்ணின் பரம்பரையல்லவா நீங்கள்?

நீங்கள் பிந்திவிட்டீர்கள். சிங்கள அரசு முந்திவிட்டது. சாந்த சொரூபியாகத் தன்னைக் காட்டிக்கொண்ட சந்திரிகா, மறைமுகமாகப் போருக்குத் தயாராகிக்கொண்டிருந்ததை, நீங்கள் கவனிக்கவில்லை. பேச்சுவார்த்தை மேசையிற் பேசிக்கொண்டிருந்தபோதே, யுத்தத்துக்கான கத்தியைத் தீட்டிக் களப்பலிக்காகச் சந்திரிகா காத்திருந்ததை, நீங்கள் அவதானிக்க மறந்துவிட்டீர்கள். சமாதானச் சந்தர்ப்பத்தை இல்லாதழித்தவர் என்ற பழியைப் புலிகள் மீது போட்டு விட்டு, போரைத் தொடங்கச் சந்திரிகா நாள் பார்த்திருப்பதை நீங்கள் நம்பமறுத்தீர்கள். இன்று சிங்கள அரசு முந்திவிட்டது. என் பிள்ளைகளே! நீங்கள் பிந்தி விட்டீர்கள். என்றாலும் பாதகமில்லை. இன்றுணர்ந்தாலும் நீங்களே வென்று வருவீர்கள் என்று, நான் திடமாக நம்புகின்றேன்.

**என் உதிரிப்பூக்களே! இளைய கண் மணிகளே!**

"தமிழர்கள் எல்லாரையும் கடலில் தள்ளிவிட்டு. கடைசித் தமிழனின் தோலில் செருப்புத் தைத்துப் போடுவேன்" என்றான் ஒரு சிங்கள வெறியன்.

"பெரும்பான்மைச் சிங்களவர் அனுபவிக்கும் சகலதையும் சிறுபான்மைத் தமிழர் எதிர்பார்ப்பது நியாயமற்றது" என்றான், இன்னொரு சிங்கள வெறியன்.

தமிழரைப் பார்த்து, "போர் என்றால், –போர்" என்றான் இன்னொரு நரியன்.

இன்று சந்திரிகா புதிதாக போர்க்கோலம் பூண்டு களத்திற்கு வந்துள்ளார். பக்கத்தில்–ரத்வத்தையும், ஜெரி சில்வாவும் கவசமணிந்து காட்சி தருகின்றனர்.

தமிழச்சி ஒருத்தியின் மானமேறிய முலைப்பால் குடித்தெழுந்த மறக்குலக் கொழுந்துகளே! நீங்கள் என்ன செய்யும் உத்தேசம்?

உலகமெங்கும் சென்று, பல்லாயிரம் கோடி ரூபாவுக்கு நவீன போர்க்கருவிகள் வாங்கி வந்ததையும், பத்தா யிரத்துக்கு மேலாகப் புதிய இராணுவத்தினரைப் படையணிகளிற் சேர்த்துக்கொள்ளத் துடிப்பதும், பிரான்ஸ் நாட்டிலிருந்தும், இஸ்ரேலிடமிருந்தும் இராணுவத் தந்திரோபாயங்களைப் பெற்றுக்கொள்வதும், இந்தியவிடம் 'ஏதேனும் தாருங்கள்' என்று கையேந்துவதும் எதற்கென்று எண்ணியுள்ளீர்கள்? தமிழனை அவன் தாயகத்திலிருந்து முற்றாகத் துடைத்தெறிந்துவிட்டு, முழு இலங்கையையும் தனிச்சிங்கள நாடாக்குவதே இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு என்று, சந்திரிகா அரசு நம்புகி ன்றது. படைநடத்தினால்த் தன்பக்கம் வெற்றிவரும் என்று சிங்கள அரசு திடமாக முடிவெடுத்துவிட்டது. பிஞ்சென்றும், பூவென்றும், காயென்றும், பழமென்றும் பாராது முழுமரத்தையும் உலுப்பிக் கொட்டுவதே உரிய வழி என்று சிங்கள அரசு கங்கணம் கட்டிவிட்டது. அதற்குத் தேதியும் குறித்துவிட்டுப் படையெடுக்கக் காத்திருக்கின்றது.

சிங்கள அரசு நடத்தவிருக்கும் அந்தப் பெரும் போர் எங்கே நடக்கும்? எவர்மீது நடக்கும்? எப்போது நடக்கும்? எப்படி நடக்கும்? என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

**என்மேனியிற் தவழும் வீரக்கொழுந்துகளே!**

எதிரி இனி நடத்தும் பெரிய போர் உங்கள் முற்றத்தில் நடக்கும். உங்கள் வீட்டுக் கூரையின் மேல் நடக்கும். நீங்கள் கைகூப்பித் தொழும் தெய்வத் திருச்சபையில் நடக்கும். பள்ளிக் கூடங்களிலும், பரந்து விளையும் வயல்வெளிகளிலும் நடக்கும். நோயால் நொடிந்தோர் கிடக்கும் மருத்துவமனைகளில் நடக்கும். அங்கிங்கென– ாதபடி எங்கும் நடக்கும்.

கூவிவரும் எறிகணையும், ஓடிவரும் பீரங்கி வண்டிகளும் எங்கள் இருப்பிடங்களை இல்லாதழிக்கும். உள்ளே நுழையும் காமவெறிபிடித்த காலாட்படைகள் உன் தாயைப் பிடிக்கும், தங்கையைக் கெடுக்கும், அப்பன் முன்னாலே ஆத்தாளைச் சீரழிக்கும். பள்ளிக்கூடங்கள் எதிரியின் பாசறைகளாகும். கோயில் கூடங்கள் பகைவனின் சிறைக்கூடங்களாக மாறும். கண்மூடித்தனமாகத் தமிழர்கள் சுசுக்கியெறியப்படுவார்கள். இதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? அல்லது பார்த்துக்கொண்டிருப்பீர்களா?

தமிழரின் இளைய தலைமுறையை விளையவிடக்கூடாது என்று பள்ளிப்பருவத்தினர் எல்லாருக்கும் எதிரி கொள்ளிவிடுவான். புத்திஜீவிகளை விட்டால் மீண்டும் போராட்டத்தீயைப் பற்றவைப்பார்களென்று அறிஞர்க ளெல்லாரையும் அழித்தொழிப்பான். ஈழத்தமிழினத்தைப் பூண்டோடு சங்கரிக்க எண்ணி எங்கள் பெண்கள் எல்லாரையும் பாலியல் வல்லுறவில் வதைப்பான். பின்னர் சிதைப்பான். வீதியெங்கும் தமிழர்கள் விழுந்து கிடப்பதைப் பார்க்க ஒரு நாயுமிருக்காமல் துடைத்தழிப்பான். இது வெறும் கற்பனை என்று கருதிவிடாதீர்!

அதிகார மமதை பிடித்த அரசுகளின் படைகள் எல்லா நாடுகளிலும் அதையே செய்கின்றன. சொல்லும் போது இவை மிகையாகத் தெரிந்தாலும், செய்யும்போது இது நடைமுறைச் சாத்தியமென்றே தெரியும். தினசரி பத்திரிகை பாரக்கின்றீரே... எத்தனை நாடுகளில் இன்றும் இது நடக்கிறது! நாளை இந்த நடப்பு, ஏன் என் தாயகத்துக்கு வரமாட்டாது? நினைத்துப்பாருங்கள்.

சரி இது வராமல் தடுக்க வழியென்ன என்று கேட்கின்றீர்களா? உண்டு. எல்லாரும் சேர்ந்து போராடுவோம். எங்கள் வாசலுக்கு வரவிருக்கும் பகைவனை அவனின் பாசறை வாசலுக்குச் சென்று நாமே எதிர்கொள்வோம். ஊருக்குள் நுழைந்துவிட்டால் எதிரிபடை பல்லாயிரக்கணக்கில் எம்மவரைக் கொல்லும். ஆனால் நாங்கள் ஒருசில நூறுபேர் அவனின் பாசறைக்குள் நுழைவோமானால், ஆயிரக்கணக்கான பகை வரை அழித்துவிடலாம். பரந்த நம் தாயகப்பரப்பை, சில ஆயிரம் எதிரிப் படைகள் தங்கள் கையகப்படுத்தி யிருக்கின்றன. இதை முற்றாக இல்லாதழிக்க முடியும். வேங்கைப்படை வீரர்களின் தொகையை அதிகரிக்கச் செய்வதே, வெற்றியை விரைவுபடுத்துவதற்கு ஒரேயொரு வழி. எங்கள் தாயக பூமியின் மேனியைத் தொட்டுக் கீறும் பகைவனைச் சுட்டுத்தொலைக்க, இன்னும் கூடுதலான தொகையினர் புலிகளாக வேண்டும். அவர்களில் ஒருவராக ஏன் நீங்கள் இருக்கக் கூடாது?

எங்கள் வீடென்று நீங்கள் வாழ்ந்தது போதும். இனி இது என் நாடென்று எழுந்துகொள்ளுங்கள்.

விட்டு விடுதலையாகி ஒரு சிட்டுக் குருவிபோல நாமும் எம் தாயகத்திற் சிறகடிப்போம்.

வெறும் சோற்றுப்பிண்டமாக, பயனற்ற ஒரு வாழ்வாக நீண்ட நாட்கள் வாழும் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் இருக்கிறது? ஆனால், சங்கை பெறும் ஒரு சாவுக்குச் சரித்திரம் இருக்கும். தொட்டாற்சுருங்கி என, சுரணையற்ற எருமையெனப் பார்க்கும் பொருளுக்கெல்லாம் பயம் கொண்டு, கும்பிட்டு வாழும் வாழ்க்கைக்கு என்ன குறிக்கோள் இருக்கிறது.

உண்டு, உடுத்து, உறங்கி, விழிக்கும் சராசரி வாழ்வில் எந்தச் சாரமும் இல்லை. ஆனால் வீரத்தோடு நிமிர்ந்து, நாளை நடுகல்லாகி நிற்கும் அந்தத் தியாகத்தின் வாழ்வு கோடிபெறும்.

பயம் நீங்கி எழுவீர்! உலகம் வியக்கும் தலைவன் பிரபா– கரனின் கரங்களை வலுப்படுத்துவோம். நானும் உன்னோடு வருகின்றேன் என்று அவன் பாத வழிச் சுவட்டில் நடப்போம். ஒன்று பத்தாகிப் பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி எங்கள் வேங்கைப் படையை விரிவு படுத்துவோம். எதிரியைத் தடுத்து நிறுத்துவோம். இந்தத் திசையிற் சாவு வந்து எம்மைச் சந்தித்தாலும் மகிழ்ச்சி யுடன் எதிர்கொள்வோம்.

தமிழன் வாழ்ந்தான் என்று வரலாறு இருக்க வேண்டும். அல்லது விடுதலைக்காக வீழ்ந்தான் என்று வரலாறு சொல்ல வேண்டும்.

எல்லாரும் ஒன்றாகி, எதிரி வரும் திசையில் எதிர் பார்த்திருப்போம்!

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப் புலிகள்

## கிழக்கிலா! வடக்கிலா!...

இது இவ்வாறிருக்கையில் தென்தமிழீழத்திற் சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதியில் தமக்கு ஏற்படும் தோல்வியினைத் தமிழ் மக்கள் மீதான இனப்பழிவாங்கல் நடவடிக்கைகளாக மாற்றுவதிற் சிங்களப் படைகள் உசாராகி வருகின்றன.

சந்திவெளித் தோல்வியை அடுத்துப் பொதுமக்கள் மீது வன்முறைகளைக் கட்டவி ழ்த்துவிட்ட சிறிலங்காப் படைகள் 23 வயதுடைய இராசலிங்கம் சுப்பிரமணியம் என்பவரைக் கொலை செய்ததுடன் செஞ்சிலுவைச் சங் கச் சாரதி ஒருவர் உட்பட மூவரைக் காயப்படுத்தி உள் ளனர்.

காத்தான்குடியில் விடுதலைப் புலிகளின் எதிர்பாராத அதிர்ச் சித் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு மணி நேரமாக நடை– பெற்ற சண்டையைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்கள் மீது நடாத்திய வெறித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தால் மூன்று முசுலிம்கள் உட்பட ஐந்து பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்புக் கதிரவெளிப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீசப்பட்ட குண்டுகளால் வீடுகள் சேதமடைந்ததுடன் ஒரு பொதுமகன் படுகாயம் அடைந்துள்ளார்.

மாவடிவேம்புக் கிராமத்தின் மீது சிறிலங்காப் படைகள் நடாத்திய எறிகணை வீச்சுக்கள் ஒருவரின் உயிரைப் பலி கொண்டது. 65 வயதுடைய வீரக்குட்டி சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு அநியாயமாக உயிரிழந்தவராவார். 25 வயதுடைய கே. தங்கமணி, 12 வயதுடைய கே. ரஞ்சிதமலர், 48 வயதுடைய எம். கணபதிப்பிள்ளை, 38 வயதுடைய கே. ராஜரட்ணம் ஆகியோர் காயமுற்று ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இன்ஸ்பெக்டர் ஏற்றப் பகுதியிற் பொதுமக்களைச் சுற்றி வளைத்துக் கைது செய்த பொலிசார் ஒருவர் அண்மையில் திருமணம் செய்த இளம்பெண் ஒருவரைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்க முயற்சித்துள்ளார்.

மேலும் மட்டக்களப்பு மகுடதீவுப் பிரதேசச் செயலகத்தில் அமைந்துள்ள தாண்டியடி முகாமிலிருந்து சிறிலங்காப் படைகள் நடாத்திய எறிகணை வீச்சுக்கு மூன்று வயதுப் பாலகன் உட்பட அம்பிகா வைரமுத்து, மயில்வாகனம் சசீகரன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். வேறு மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

சிறிலங்கா ஆயுதப்படைகளின் மற்றுமொரு மனிதவதைக் கட்டமாகப் பொதுமக்களைக் கடத்திச் செல்லும் செயல்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்கிறது. கோப்பாய்வெளிக் காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

தமிழீழத்திலிருந்து வெளியாகும் ஈழநாதம் பத்திரிகை இப்படியானதோர் தலையங்கத்தை வரைந்துள்ளதிலிருந்து புலம்பெயர்ந்து வாழ் தமிழ் மக்களின் முக்கியத்துவம் தமிழீழத்தில் நன்கு உணரப்பட்டுள்ளது தெரிகிறது. புலம் பெயர்ந்து வாழ் தமிழ் மக்கள் அதற்கான பிரதிபலிப்பையும் பங்களிப்பையும் செய்ய வேண்டிய நேரமிது.

# நாட்டிற்கு ஒரு ஆட்டிலறி ஆளுக்கு ஒரு எறிகணை

அண்மைக்காலங்களில், தமிழீழ மக்களின் துயர்துடைக்கக் கோரி தமிழகத்தில் நடைபெற்ற கதவடைப்பு, ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், 'ஈழத்தமிழர் படுகொலை கண்டன மாநாடு', பொதுக்கூட்டங்கள் என்பன தமிழக மக்கள் மத்தியில் பெரும் இன உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. தமிழீழ மக்களுக்கு ஆதரவாக தி.மு.க. தலைமையிலான எட்டு எதிர்க்கட்சிகள் இணைந்து நடாத்திய 'மாபெரும் கதவடைப்புப் போராட்டத்திற்கு தமிழக ஆளுங்கட்சியும் ஆதரவு அளித்திருந்தமை நிச்சயம் உலகத் தமிழர்களுக்கு மகிழ்ச்சியையும் பெரும் உற்சாகத்தையும் கொடுத்திருக்கும்.

அதேவேளை, தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் ஈழத்தமிழர்பால் காட்டும் கரிசனையில் இனஉணர்வு எத்தனைவீதம் – வாக்குவேட்டைத் தந்திரம் எத்தனை வீதம் என்ற கேள்வியை எழுப்ப வேண்டிய துரதிஸ்டம் உள்ளதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

ஆயினும் தமிழ்நாட்டு மக்களின் இனஉணர்விற்கும் – அவர்கள் ஈழத்தமிழர்கள்பால் காட்டும் சோதரஉணர்விற்கும் எந்த ஒரு சுயநல நோக்கமும் கிடையாது. தமிழினப் பற்றையும், தமிழீழப் போராட்டத்தின்பால் உள்ள ஆதரவினையும், ஈழத்தமிழர்களுக்கு நடக்கும் கொடுமையினையும் கண்டு பொறுக்க முடியாமற் தனக்குத் தானே தீ மூட்டி உயிர்த்தியாகம் செய்த தமிழக இளைஞனது உணர்வுகள் இதற்குச் சான்றாகவுள்ளன. அது "தானாடாவிட்டாலும் தன் தசையாடும்" என்ற சகோதர உணர்வின் வெளிப்பாடு.

எது எப்படி இருந்தாலும் தற்போது தமிழகத்தில் எழுந்துள்ள இவ் ஆதரவு உணர்வலைகளிலிருந்து ஒன்றை மட்டும் உணர முடிகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டம், தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் இனஉணர்வைத் தூண்டி வருகின்றது என்பதே அதுவாகும். தமிழ் நாட்டு மக்கள் எமது மக்கள் மீது காட்டும் சோதர உணர்விற்கு எமது மக்கள் என்றென்றும் மதிப்பளிப்பார்கள். அங்கே, ஐந்து கோடி மக்கள் எமக்காக ஆதரவுக்குரல் எழுப்பும்போது, இங்கே, 18 இலட்சம் மக்களும் போராட்டப்பணியில் மேலும் செயலூக்கம் பெறுவார்கள் என்பது திண்ணம்.

வலிகாமச் சமரில் தமிழர்படை சந்தித்துள்ள பின்னடைவுக்குப் பிரதான காரணம், எதிரி பயன்படுத்திய மிகை ஆட்பலமும் – மிகை ஆயுதபலமும் ஆகும். 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை தொடங்க முன்னர் எழுபதாயிரம் எறிகணைகள், கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. அதற்கு முன்னர் பலாலி ஆயுதக்கிடங்கில் எத்தனை ஆயிரம் எறிகணைகள் இருந்ததோ! எமக்குத் தெரியாது. அதேபோல் 'முன்னோக்கிப் பாய்தலிற்குப்' பின்னரும் எத்தனை ஆயிரம் எறிகணைகள் பலாலிக்கு அனுப்பப்பட்டதோ! அதுவும் எமக்குத் தெரியாது.

ஆனால், தமிழர் படையின் படைக்கல சக்தியோ மிகமிகக் குறைவு. அப்படி இருந்தும் யாழ்ப்பாணச் சமரில் சிறீலங்கா பெரியளவு இழப்புகளைச் சந்தித்தது. புலிகளிடமிருந்த குறைந்தளவு படைக்கல சக்தியே, படையினருக்கு இத்தகைய ஒரு பாரிய 'சேதத்தை உண்டுபண்ணியிருக்கின்றது என்றால், புலிகளிடம் படைக்கல சக்தியும் அதிகமாக இருந்தால் சிங்களப் படையின் ஆள், ஆயுத தளபாட இழப்பைப் பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

இந்தப் படைக்கல சக்தியைப் (எறிகணைகள்–ரவைகள்–குண்டுகள்–ஆயுதங்கள்) பணம் கொடுத்து, வெளிநாடுகளில் இருந்தே பெற முடியும். இந்தத் தேவைக்கான பெருந்தொகைப் பணத்தைத் தமிழீழத்தில் வசிக்கும் மக்களிடமிருந்து–இனியும்–சேகரிக்க முடியாது. தமிழீழத்தில் வசிக்கும் மக்கள் கொடுக்கப் போகும் பணம் போராட்டத்தின் வேறு தேவைகளுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். எனவே, இந்தப் பெருந்தொகைப் பணத்தை வெளிநாடுகளில் வசிக்கும் ஈழத்தமிழர்களாற்றான் வழங்க முடியும். அவர்கள் மனது வைத்தால் இந்தப் பணத்தேவை ஒரு சிறிய விடயமாகிவிடும். வெளிநாடொன்றில் இருந்து அண்மையில் தமிழீழம் வந்து சென்ற தேசபக்தர் ஒருவர் கூறியதுபோல, "வெளிநாடுகளில் எமது இளைஞர்கள் புகைத்தலுக்கும்–குடிவகைகளுக்கும் மாதம் ஒன்றிக்குச் செலவிடும் பணமளவு தொகையை மாதந்தோறும் போராட்டத்திற்கு வழங்கினால் தமிழர் படையின் படைக்கல சக்திப் பற்றாக்குறை தீர்ந்துவிடும்.

வெளிநாட்டில் வசிக்கும் ஈழத்தமிழர் ஒருவர் ஒரு எறிகணையைக் கொள்வனவு செய்யக்கூடிய பணத்தைப் போராட்டத்திற்கு வழங்குபவராக இருந்தால் பல இலட்சம் எறிகணைகள் புலிகளின் ஆயுதக் கிடங்கிற்கு வந்துசேரும். அத்தகையதொரு எறிகணைப் பலம் தமிழர் படைக்கு இருக்குமானால், அந்தப் படைக்கலச் சக்தியைப் பயன்படுத்தியே எதிரியை அழித்துப் போரை வெல்லலாம்.

உலகில் ஈழத்தமிழர்கள் வசிக்கின்ற 50 நாடுகளில் புலிகளின் அலுவலகம் இயங்கும் அளவுக்கு, அங்கெல்லாம், கணிசமான தொகையில் தமிழர்கள் வசிக்கின்றனர். இவர்கள், தாம் வசிக்கும் நாடுகளின் சார்பில் நாட்டிற்கு ஒரு ஆட்டிலறி ஏவுகருவி என்ற வீதத்தில், அதைக் கொள்வனவு செய்து, அல்லது அதற்குரிய பணத்தை வழங்கி தமிழர் படையின் படைக்கல சக்திப் பலத்தை உயர்த்த முடியும்.

50 ஆட்டிலறி ஏவுகருவிகளும், சில இலட்சம் எறிகணைகளும் ஒரு சில மாதங்களில் தமிழர் படைக்கு வந்து சேருமானால், தமிழீழம் மலர்ந்ததற்கு ஒப்பான மகிழ்ச்சியை எமது மக்கள் அடைவர்.

ஆளுக்கொரு எறிகணை! நாட்டுக்கொரு ஆட்டிலறி ஏவுகருவி வாங்குவதற்குதவுவது வெளிநாட்டில் வாழும் எமது சோதரர்களுக்குக் கடினமான காரியமா? மனம் வைத்தால் மலையையும் புரட்டலாம்.

எது எப்படியோ எமது மக்களின் மனதில் ஒரு நம்பிக்கை பிறந்துவிட்டது. அதாவது, உலகத் தமிழர்களின் ஆதரவையும் – உதவியையும் கோரி மாவீரர் நாள் உரையில் தலைவர் விடுத்த வேண்டுகோள், நிச்சயம், நல்ல பலனைத் தரத்தான் போகின்றது.

*வெளிநாடொன்றில் இருந்து அண்மையில் தமிழீழம் வந்து சென்ற தேசபக்தர் ஒருவர் கூறியதுபோல. "வெளிநாடுகளில் எமது இளைஞர்கள் புகைத்தலுக்கும்—குடிவகைகளுக்கும் மாதம் ஒன்றுக்குச் செலவிடும் பணமளவு தொகையை மாதந்தோறும் போராட்டத்திற்கு வழங்கினால் தமிழர் படையின் படைக்கல சக்திப் பற்றாக்குறை தீர்ந்துவிடும்.*

*வெளிநாட்டில் வசிக்கும் ஈழத்தமிழர் ஒருவர் ஒரு எறிகணையைக் கொள்வனவு செய்யக்கூடிய பணத்தைப் போராட்டத்திற்கு வழங்குபவராக இருந்தால் பல இலட்சம் எறிகணைகள் புலிகளின் ஆயுதக் கிடங்கிற்கு வந்துசேரும். அத்தகையதொரு எறிகணைப் பலம் தமிழர் படைக்கு இருக்குமானால். அந்தப் படைக்கலச் சக்தியைப் பயன்படுத்தியே எதிரியை அழித்துப் போரை வெல்லலாம்.*

## உடைமைகளை....

இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாகினர்.

இதனையடுத்து, ஒரு பகுதி மக்கள் அவ்விடத்திலிருந்து தப்பிவர, இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதலால் ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். அதே வேளை, சுமார் 50க்கு மேற்பட்ட மக்கள் அப்பகுதிக்குள் சிக்கி இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

படுகாயமடைந்த பொதுமக்கள் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலைக் கட்டிலிலிருந்து இச்சம்பவம் பற்றித் தெரிவித்த வயோதிபர் ஒருவர், "இராணுவம் கண்மூடித்தனமாகத் தாக்கியதாகவும், அது ஒரு நரகத்தின் வாழ்வு போலிருந்ததாகவும்" கூறினார். "சத்தம் கேட்டவுடன் உயிரைக் கையில் பிடித்தவண்ணம் தப்பிவந்ததாகவும், அங்கு மனிதர்கள் அல்ல, தற்போது பேய்களே வாழ்கின்றன" என்று காயமடைந்த இன்னொருவர் கூறினார்.

இராணுவத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்ட பொதுமக்கள் சிலரின் விபரங்கள் பின்வருமாறு:

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம், சோமு செல்லம்மா வயது 49, சின்னத்தம்பி பொன்னுத்துரை வயது 50, அச்சுவேலியைச் சேர்ந்த மகாதேவன் கருணாதேவி வயது 39.

காயமடைந்தவர்களின் விபரங்கள் வருமாறு:

சரஸ்வதி வயது 46, செல்லையா வயது 50, கணேசலிங்கம் வயது 56, வாமகுலசிங்கம் வயது 43, நாகமுத்து நல்லம்மா வயது 41. இவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மட்டக்களப்பில்...

பெரும்பாலான பொதுமக்கள், எறிகணைத் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

04–01–96 அன்று நாவிலந்தீவிலுள்ள அகதி முகாமிற்கு அருகில் விழுந்த எறிகணை வெடித்ததினால் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அதேதினம் செங்கலடி மேற்குப் பக்கமாக உள்ள காட்டுப் பகுதி மீது கடும் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் கல்குடாவில் கே. இரவீந்திரன் என்பவர் இராணுவத்தால் சுடப்பட்டு படுகாயமடைந்து, வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நலநோம்பு நிலையங்களில்....

தொண்டர் நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டது.

இதேபோன்று போசாக்கு ஆய்வினை மேற்கொண்டபோது, 7 வலயங்களிலும் 1555 குழந்தைகளை 57 முகாம்களில் ஆய்வுக்குட்படுத்திய போது சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் உள்ள 777 குழந்தைகளில் 62 வீதமான குழந்தைகள் சாதாரண நிலையிலும் 36 வீதத்தினர் மத்திய போசாக்கு நிலையிலும் 2 வீதத்தினர் மிகவும் குறைந்த போசாக்கு நிலையிலும் இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

இதேபோல் கைதடி, மட்டுவில், பளை, வரணி, வடமராட்சிப் பகுதிகளில் உள்ள 581 குழந்தைகளை ஆய்வு செய்தபோது, 76 வீதத்தினர் சாதாரண போசாக்கு நிலையிலும் 24 வீதத்தினர் மத்திம போசாக்கு நிலையிலும் மிகவும் குறைந்த போசாக்கு நிலை இல்லாதிருந்ததாகவும் அவ்ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

இவ் இடம்பெயர்ந்த நலன்புரி நிலையங்களின் போசாக்கினை கருத்தில் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குழந்தைகள், கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள் போன்றவர்களுக்குப் போசாக்கு உணவுகளை வழங்கும் சத்துணவுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மருந்துத் தட்டுப்பாடு

பிரான்ஸ் வைத்தியர்களின் குழுவிற்குப் பொறுப்பாக இருந்து கடமையாற்றிய மருத்துவர் மேரி "தமிழ் மக்கள் மிகவும் அன்பானவர்கள், பண்பானவர்கள், இங்குள்ள பாதிப்புற்ற மக்களுக்கு மருந்துத் தட்டுப்பாடு காரணமாகத் திருப்தியான சேவையை வழங்க முடியாமல் போய் விட்டது" என்று தெரிவித்தார். "நோயாளருக்கு உதவுவதற்கு மருந்துத் தட்டுப்பாடே தடையாக உள்ளது. புத்தாண்டில் தமிழ் மக்களுக்கு ஒரு சந்தோசமான வாழ்வு கிடைக்க வேண்டுமென விரும்புகின்றேன்." இவ்வாறு பருத்தித்துறை மத்திய வைத்தியசாலையில் பிரான்ஸ் வைத்தியர்களின் குழுவிற்குப் பொறுப்பாக இருந்து கடமையாற்றிய மருத்துவர் மேரி தெரிவிதுள்ளார்.

# எல்லாளன் துட்டகைமுனு போர்

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் போது கிடைக்கும் வெற்றியினைக் கொண்டாடும் உரிமை மக்களுக்கு உண்டு என்று சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிற் கூறியுள்ளார். இவ்வழைப்புச் சிங்கள மக்களுக்கு விடப்பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

**யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் போரிற் பெறப்படும் வெற்றியைச் சிங்கள அரசானது–இராணுவத்தின் வெற்றியாகவும் புலிகளின் தோல்வியாகவும் காட்டாமல், சிங்கள இனத்தின் வெற்றியாகவும், தமிழினத்தின் தோல்வியாகவுமே காட்ட முனைகின்றது**

இரண்டு மன்னர்களுக்கிடையில் நடைபெற்ற எல்லாளன் – துட்டகைமுனு போரினைத் தமிழர்களுக்கும் சிங்களர்களுக்குமிடையே நடைபெற்ற ஒரு இனப்போராகவே சிங்கள வரலாற்று நூலான மகாவம்சம் எடுத்துக் காட்டியது. எல்லாளனின் தோல்வியினை ஒரு மன்னனின் தோல்வியாகக் காட்டாமல் அதனைத் தமிழ் மக்களின் தோல்வியாகவும் துட்டகைமுனுவின் வெற்றியை ஒரு மன்னனின் வெற்றியாகக் கருதாமற் சிங்கள மக்களின் வெற்றியாகவும் சித்திரித்தார்கள் சிங்கள, பௌத்த பேரினவாதிகள். தமிழினத்தின் மீது போர் தொடுத்துச் சிங்கள, பௌத்த பேரினவாதம் பெற்ற வெற்றியின் குறியீடாகவே துட்டகைமுனுவின் வெற்றியினைந் சிங்கள வரலாற்றாசிரியர்கள் காட்டியுள்ளனர். இவ்வினவெறியின் ஒரு வடிவமே 1977இல் ஜே. ஆர் ஜெயவர்த்தனா போர் என்றால் போர் என தமிழினத்தின் மீது போர்ப் பிரகடனம் செய்தமையாகும். "சிங்கள இனம் ஒரு பெரும் ஆலமரம், அதில் பற்றிப் படரும் சிறு கொடியே தமிழினம்" என்ற டி.பி. விஜேதுங்காவின் கூற்றுச் சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் மற்றுமொரு வடிவமாகும். இவ்வடிச் சுவட்டில் வந்த சந்திரிகாவும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் போது கிடைக்கும் வெற்றியைக் கொண்டாடும்படி தனது (சிங்கள) மக்களுக்கு அழைப்புவிட்டமை வியப்பிற்குரியதல்ல.

எனவே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்போது பெறப்படும் வெற்றி, இராணுவத்தின் வெற்றியாகவும் விடுதலைப் புலிகளின் தோல்வியாகவும் காட்டப்படாமல் சிங்கள இனத்தின் வெற்றியாகவும் தமிழினத்தின் தோல்வியாகவுமே காட்டப்பட முனைந்தது. இந்நிலையில் வீரமிகு தமிழினம் குறிப்பாக தமிழிளைஞர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? சிங்கள, பௌத்த பேரினவாதம் விடுகின்ற சவாலை ஏற்று எம் மண்ணை ஆக்கிரமித்திருக்கின்ற சிங்கள இராணுவத்தினை அடித்துத் துரத்தப் போகின்றோமா? அல்லது சிங்கள இராணுவத்தின் துரத்தலுக்கு அடிபணிந்து ஓடோடிப் பல தேசத்திற்கும் அலைந்து இறுதியில் மாளப் போகின்றோமா? வீரமிகு தமிழிளைஞர்களே! ஒரு கணம் சிந்தியுங்கள்! தமிழினத்தின் எதிர்கால வாழ்வு உங்கள் கைகளில்! வரலாற்றுத் தா உங்கள் மீது சுமத்தியுள்ள பொறுப்பினை நீங்கள் தாங்கி அடக்கு முறைகளிலிருந்து தமிழினத்தை விடுவிக்கப் போகின்றீர்களா? அல்லது ஆண்டாண்டு காலமாகத் தமிழினத்தை அடிமையாகவே வாழவிடப் போகின்றீர்களா? ஒன்றே முடிவு, அது நன்றாக அமையட்டும், அதனை இன்றே எடுங்கள், வரலாறு உங்களை வாழ்த்தும்.

–சி.வரதராசன்

# கிழக்கிலா! வடக்கிலா!...

விநாயகமூர்த்தி காராளசிங்கம், தியாகராசா ஜெயசங்கர், பொன்னம்பலம் கோணேஸ்வரன், பெரியதம்பி வேலக்கடி ஆகிய நான்கு அப்பாவிப் பொதுமக்களைக் கடத்திச் சென்ற படையினர் இவர்கள் பற்றிய விபரங்களை வெளியிட மறுக்கின்றனர்.

கற்குடாப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து மேற்கொள்ளப்படும் எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் உலங்குவானூர்திகளில் இருந்து 'பரல்'களில் செய்யப்பட்ட குண்டுகளை வீசியும் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது தாக்குதல்கள் நடத்திவருகின்றனர். இரவு நேரங்களிலேயே இத்தாக்குதல்கள் கூடுதலாக நடைபெறுகின்றன. இத்தகைய சம்பவங்களினால் மக்கள் பீதி கொண்ட் நிலையிலேயே உள்ளனர். இவ்வாறான தாக்குதல்களினாற் சிறுத்தையங்கால் கிராமப் பகுதியிற் கடந்த 8–11–95 அன்று நல்லதம்பி சின்னராசா, சின்னராசா குமுதினி ஆகியோர் பலியாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிந்தனைக்கு!

## 1956 முதல் 1995 வரை...?

யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைவது யாழ்ப்பாணத்தமிழருக்கு நல்ல பாடமாக அமையும்போது கொழும்பிற் குடியிருக்கும் தமிழருக்குத் தனியாகத் தக்க பாடம் படிப்பிக்க வேண்டும் என்கிற முனைப்புக்கள் சிங்களத்தில் தோன்றுவதாகச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். தமிழருக்கு அடி, உதை கொடுத்துப் பாடம் படிப்பித்தால்தான் வழிக்கு வருவார்கள் சொல்வழி கேட்பார்கள் என்கிற எண்ணம் இன்று நேற்றுச் சிங்களவனுக்குத் தோன்றியதல்ல. இடையில் 1983இன் பின் சிங்களவன் பாடம் படிக்க நேர்ந்ததால், தமிழருக்குப் பாடம் படிப்பிக்கும் முயற்சிகளைக் கைவிட்டிருந்தான். ஆனால் இப்போது மீண்டும் அந்த எண்ணம் துளிர்விட என்ன காரணம்?

**தங்களுடைய உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்கும் சக்தி வாய்ந்த தேசிய இராணுவத்தின் உதவியுடன், சுதந்திர தமிழீழ நாடு நிறுவப்பட்டாலே தவிர, ஒரு போதும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்கப் போவதில்லை.**

**–தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

அதுவும் முன்னர் தமிழர்கள் தமது உரிமைகள் பற்றி இரண்டு வரி பேசினாலே அமைதி வழியில் ஏதாவது முயற்சிகள் செய்தாலே பொறுக்காத சிங்களம், இனக்கலவரம் என்கிற பெயரில் தனது பழிவாங்கலை மேற்கொண்டது. ஆனால் இம்முறையோ தனது இராணுவம் மூலம் பாரிய அழிவுகளை, கொலைகளைச் செய்து அவ்வெற்றியைக் கொண்டாடும் முக மாகக் கொழும்புத் தமிழர்க்குப் பாடம் படிப்பிக்கும் எண்ணம் தோன்றுவது சிங்களத்தின் விசித்திரமான குரூர மனநிலையைக் காட்டுவதன்றி வேறென்ன?
இவ்வாறாக எவ்வளவு பாடங்களைத் தான் எம் மக்கள் சிங்களவரிடமிருந்து கற்பது? 1956 ஆம் ஆண்டு யூன் 5ஆம் திகதி அன்றொரு பாடம் சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து 300 தமிழர் தந்தை செல்வா தலைமையில் காலிமுகத்திடலில் இருந்தபோது பிக்குகள் தலைமையிற் காடையர் கூட்டம் அவர்களை அடித்து உதைத்துப் போதாக்குறைக்கு அவர்கள் மேல் சிறுநீரும் கழித்து, காதையும் கடித்துச் சப்பி, நாற்றம் பிடிக்கும் 'பேரை' ஆற்றுக்குள் தள்ளிக் கொழும்பு வாழ் தமிழரைக் கண்ட இடத்தில் துரத்திப் பிடித்து அடித்துச் சொத்துக்களைக் கொள்ளையடித்து எல்லாவற்றிக்கும் மேலாக அம்பாறையில் ஆண்டாண்டு காலம் வாழ்ந்த 150க்கு மேற்பட்ட தமிழரைக் கொன்ற கணக்கின் போது ஒருபாடம்.

1958ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி பண்டாரநாயக்கா – செல்வநாயகத்தோடு செய்த ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்க விட்டபோது வவுனியாவில் மாநாட்டைக் கூட்டி அறவழியில் எதிர்ப்புக்காட்ட எம்மவர் முயன்றபோது அடுத்த பாடம் பொலநறுவைச் சந்தியில் தமிழ்ப் பயணிகட்குச் சமாதி கட்டப்பட்டது. கொழும்புத் தமிழர் தேடிய சொத்துக்களைக் கவர்வதற்கு அருமையான வழியொன்றைச் சிங்களம் கண்டுபிடித்தது. தெற்கில் 10 ஆயிரம் தமிழர் தமது தாயகம் நோக்கிய பயணத்தை மேற்கொண்டனர். கருவடைந்த தாய்மார், பச்சிளம் பிள்ளைகள் கொன்று குவிக்கப்பட்டனர். பாலியல் வன்முறைகள் எங்கும் பரவின. பாணந்துறைக் கந்தசுவாமி கோவிலில் பூசை வேளையின் போது குருக்களைத் துரத்திப் பிடித்துக் கொதிக்கும் தாரை ஊற்றி அபிசேகம் செய்தனர். இது 1958 ஆம் ஆண்டுப் பாடம்.

1977 ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி இரு கிழமைக்கு மேலாக இப்பாடம் தொடர்ந்தது. தமிழீழக் கோரிக்கையை முன் வைத்ததால் இரண்டாவது பெரிய கட்சியாக மட்டுமன்றி எதிர்க்கட்சியாகவும் தமிழர் கூட்டணி வந்ததால் எல்லாவற்றிக்கும் பாடம் கற்பிக்க வேண்டிய தேவை சிங்களவனுக்கு இருந்தது. பெரும் கொடுமை யே.ஆர். தலைமையில் கட்டவிழ்த்து விடப்பட்டது, மலையகத் தமிழர் பெரும் இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தமை முற்கூட்டியே மலையகத் தமிழர்க்கும் பாடம் படிப்பிற்கும் முயற்சிதான். இது வழமை போல் கொழும்பு வாழ் தமிழர் தேடிய தேட்டங்கள் பறிபோக இனக்கலவரங்கள் என்பது சிங்களவனுக்குச் சொத்து சேர்த்துக் கொடுக்கும் தமிழனுக்கு நன்றி சொல்வதாக அமைந்தது. இதுவும் ஒரு வகைப்பாடம்.

1981ஆம் ஆண்டு ஆடி, ஆவணி அடுத்த பாடமும் மிக விரைவிலேயே தொடங்கியது. தமிழர் தாயகத்திலே இம்முறை பாடம் தொடங்கியது. போராட்ட அணியாக தமிழர் திரளத் தொடங்குவதை தண்டிக்கவே இம்முறை கலவரம் 3 மாதத்திற்கு மேலாக எங்கும் இக்கலவரம் தொடர்ந்தது.
எல்லாவற்றிக்கும் மேலான பெரும் கலவரம் 1983 ஆடி வெடித்தது. அதன் பாடங்கள் பற்றி இங்கு சொல்லத் தேவையில்லை. இதன் பின்னர் தமிழர்க்கு பாடம் கற்பிக்கும் முயற்சிகள் மந்தமடைந்தன. அது ஏன் என்பது எல்லார்க்கும் தெரிந்ததுதான். 1991 ஆம் ஆண்டு மலையகத்தில் முற்றிலும் சிங்களவர் கிராமமொன்றில் சிறு பலசரக்கு கடை வைத்திருந்த தமிழரை, "என்ன நம்பிக்கையில் இங்கு கடை வைத்திருக்கின்றீர்?" என தமிழ் நாட்டுச் செய்தியாளர் கேட்டபோது அவர் சொன்ன பதில் புலிகளின் நம்பிக்கையால் தான் என்பதாகும். இந்தியாவில் ஓர் மூலையில் மணிப்பூர் மாநிலத்தில் வெற்றிலைக் கடை வைத்திருக்கும் தமிழகத் தமிழரும் இதே பதிலையே கூறுகின்றார்.

எனவே இப்போது விடயம் தெளிவாகின்றது. புலிகளின் பலம் குறைவடைவதாக சிங்களம் எண்ணத் தொடங்குகின்றது என்பதன் பொருளே எமக்கு பாடம் படிப்பித்தல் என்பதாகின்றது. எனவே பாடம் படிப்பதிலே கைதேர்ந்த எம்மக்கள் இம் முறையாவது சிங்களவனுக்குப் பாடம் படிப்பிக்கப் புலிகளின் போரிடும் திறன், அதன் ஆற்றல் குறைவடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை ஏற்க வேண்டுமல்லவா?

**எனவே இப்போது விடயம் தெளிவாகின்றது. புலிகளின் பலம் குறைவடைவதாகச் சிங்களம் எண்ணத் தொடங்குகின்றது என்பதன் பொருளே எமக்கு பாடம் படிப்பித்தல் என்பதாகின்றது. எனவே பாடம் படிப்பதிலே கைதேர்ந்த எம்மக்கள் இம்முறையாவது சிங்களவனுக்குப் பாடம் படிப்பிக்கப் புலிகளின் போரிடும் திறன், அதன் ஆற்றல் குறைவடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை ஏற்க வேண்டுமல்லவா?**

# தெளிவு

கணபதியார் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டுப் பத்து வருடமிருக்கும். ஓடியாடித் திரிந்தவர். அதன் பிறகு தேங்கிப்போய் விட்டார். குடும்பப்பாரம் மூத்தவன் சுரேஷின் தலையில் வீழ்ந்தது.
எவ்வளவு முயன்றும் நிமிரவிடாது அடித்து வீழ்த்தியது யுத்தம்.
"புலிகளிடமிருந்து மக்களை விடுவிக்கும்' போரில் எல்லோரையும் போலவே அந்தக் குடும்பமும் படைகளின் மூச்சுக்காற்றிலிருந்து தம்மை விடுவித்து இடம்பெயர நேரிட்டது.
"புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்கப் போகிறோம். யாழ்நகரை மீட்டு அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப் போகிறோம்." இலங்கை வானொலி பாதுகாப்பு அமைச்சர் கூறியதாக நீட்டி முழக்கியது.
"ஆருக்கு விடுகிறான் இந்த விடுகையெல்லாம். இஞ்சை இருக்கிற எங்களுக்கெல்லோ தெரியும் உண்மைநிலை. முழுக்க முழுக்கப் பொய்யும் புரளியும்"
ஆத்திரத்தில் வானொலியை நிறுத்தி விட்டார் அவர்.

வாசலிற் குந்தியிருந்த சுரேஷ் சிந்தித்தான், தமிழரை அழிக்கிற இந்தப் போருக்காகச் சிங்களவங்கள் எல்லாரும் ஆதரவு போலை காட்டிக் கொள்கினை. உரத்துக் குரல் கொடுக்கினை.
ஒருத்தர்கூட இதைக் கண்டிக்கேலை. ஆனா, எங்களில சிலபேர் சிங்களவரோடை சேர்ந்து வாழவும், அரசாங்கத்துக்குக் கீழை பல்லிளிச்சுக் கொண்டிருக்கவும் ஆசைப்படுகினை. சிங்களவருக்கு இருக்கிற உணர்வு ஏன் இவையளுக்குத் தன்ர இனத்தின் மீது ஏற்படேல்லை.
"இஞ்சையும் இருக்கச் சரிவராது. ஆமியின்ர கையில பிடிபடாமல் எங்கையாச்சும் போற வழியைத்தான் யோசிக்க வேணும்."
இவனது சிந்தனையைக் குழப்பினார் கணபதியார்.
"எங்கை போறது?
"வேறை எங்கை, வன்னிக்குத்தான்."
"அப்பா நீங்களும் அம்மாவும் தங்கைச்சியளுமாய் போட்டிலை வன்னிக்குப் போங்கோ. நான் பாத்து வாறன்."
சுரேஷ் தீர்க்கமாய் கூறினான்.

# யாழ் நகரை...

கிடக்கும் ஒரு வனாந்தரப்பிரதேசமாகக் காட்சியளிக்கும் யாழ்ப்பாணத்தைச் சிங்களவர் பிடித்துள்ளனர். ஒரு மக்கள் இல்லாத பிரதேசத்தைக் கைப்பற்றுவதனால் அதனை எந்த வகையிலேனும் ஒரு இராணுவ வெற்றியாகவோ, அரசியல் வெற்றியாகவோ கருதமுடியாது. யாழ்ப்பாணம் கைப்பற்றப்படுவதற்கு முன்னர், சிங்கள அரசாங்கம் உலகத்திற்கு என்ன சொல்லிக்கொண்டிருந்தது என்று சொன்னால், 'யாழ்ப்பாண மக்களை விடுதலை செய்யப் போகின்றோம். யாழ்ப்பாண மக்கள் புலிகளின் பயங்கரவாதத்தின் கீழ் இருந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு ஒரு விமோசனம் அளிக்கப் போகின்றோம். அவர்களுக்கு வாழ்வு அளிக்கப் போகின்றோம்" என்று. இப்படியான பிரச்சாரத்தை முன் வைத்துத்தான் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பு நடாத்தப்பட்டது. அப்பொழுது உலகமும் பார்த்துக் கொண்டு இருந்தது, என்ன நடக்கப் போகின்றது என்று. ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்தும் வலிகாமத்தில் இருந்தும் ஒட்டு மொத்தமாக ஐந்தரை இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்த நிகழ்வானது, சிங்கள அரசின் அரசியற் தந்திரோபாயத்திற்கும், நோக்கத்திற்கும் கிடைத்த தோல்வியென்பதை இன்று உலகமே ஒப்புக் கொள்கின்றது. பெரிய அளவிற் படைகளைக் குவித்துப் படையெடுப்பைச் சிறீலங்கா அரசு நிகழ்த்தியிருந்தாலும் அந்த மக்கள் எவரும் அவற்றை வரவேற்கவில்லை. யாழ்ப்பாணத்திற்குள் படையினர் காலடி எடுத்து வைப்பதை மக்கள் விரும்பவில்லையென்பதை உலகம் உணர்ந்திருக்கின்றது.

## இது சாதாரண இடப் பெயர்வல்ல

யாழ்ப்பாணம் தமிழீழ மக்களின் ஒரு சமூக, கலாச்சார, பொருளாதார மையம். ஒரு தமிழறிஞர் எழுதியது போல, யாழ்ப்பாணம் தமிழரின் நாகரீக மையம். அப்படியான ஒரு இடத்தை நீங்கள் பிடிக்கவரும் போது, அங்கே இருந்த மக்களை இடம் பெயர்த்து அதாவது காலம் காலமாக வாழ்ந்த மண்ணில் இருந்து சொத்துக்களை விட்டு, நிலங்களை விட்டு, தங்கள் சமூக பொருளாதார வாழ்வைவிட்டு, கலாச்சார வாழ்வை விட்டு, வரலாற்றையும் துறந்து வந்துள்ளனர். அப்படிப்பட்ட இந்த இடம் பெயர்வு ஒரு சாதாரண இடப் பெயர்வு அல்ல. அது சிங்களவர்க்குத் தெரியும். உலகத்திற்கும் தெரியும்.

## மக்களின் உயர்ந்தபட்சப் பங்களிப்பு

எல்லோரையும் இடம் பெயரச் சொல்ல மக்கள் அவசரப்பட்டு இடம் பெயர்ந்தனர். அது நல்லது. மக்கள் பெருத்த கஷ்டப்பட்டு உடுத்த உடுப்போடு பெரிய அல்லற்பட்டு வந்த நிகழ்வு ஒரு பெரிய சோகமான நிகழ்வு. தலைவர் அதைப்பற்றிச் சொல்லும் பொழுது, "இது எமது மக்கள் அளித்த ஒரு உயர்ந்தபட்சப் பங்களிப்பு. அது எங்களின் வரலாற்றிற் பதியப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக 5 இலட்சம் மக்கள் செய்த ஒரு பெரிய பங்களிப்பு" என்றார். ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்க வேண்டியதொரு அவலநிலை தவிர்க்கப்பட்டுள்ளது. இதிற் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் ஒரு சில மக்கள் இறந்தார்கள். இது எமக்குத் தெரியும். ஆனாலும் யாழ்ப்பாணத்திற்குள் மக்களைத் தங்க விட்டிருந்தால் அவர்களைப் போக வேண்டாமென்று ஒரு பொய் நம்பிக்கை கொடுத்து வைத்திருந்தால் யாழ்ப்பாண யுத்தத்திற் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்க வேண்டி நேர்ந்திருக்கும். சிங்களவர் மக்கள் அழிப்பைப் பற்றிப் பெரிதாகக் கருதவில்லை. மக்களோடு சேர்த்து யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வேண்டும். அதுதான் அவர்களது தந்திரோபாயம். ஆனால் நாங்கள் அந்த அறிவிப்பைச் சொன்னதும் மக்கள் இடம் பெயர்ந்து வந்தார்கள். இந்த இடப் பெயர்வு இராணுவ, அரசியல் ரீதியில் அரசுக்கு ஒரு பெரிய தோல்வி. அடுத்ததாக உடைமைதான் போனாலும் மக்கள் உயிரோடு வந்து சேர்ந்தார்கள். புலிகளையும் மக்களையும் பிரிக்க முடியாது. தமிழீழ மக்கள் புலிகளோடுதான் இணைந்து இருக்கின்றார்கள். புலிகளை ஓரங்கட்டி, அந்நியப்படுத்திப் புலிகளை அழிக்க முடியும் என்ற தந்திரோபாயமும் மக்கள் இடம் பெயர்வோடு அடிபட்டுப்போனது.

## இரகசியமாகப் பேசினால் என்ன

யாழ்ப்பாணம் பறிபோய்விட்டது. 40,000 துருப்புக்கள் அங்கு நிலைகொண்டுள்ளனர். இப்படியான நிலையில்

தொடர்ச்சி 28 ஆம் பக்கம்

# தலைவர் எழுதிய கடிதத் தொடர்ச்சி...

அனுப்பியது. உயர் மட்ட அரசியற் தலைவர்கள் எவரும் பேச்சுக்களிற் கலந்து கொள்ளவில்லை. புலிகளுடன் பேச்சுக்களை நடத்திய போது தனது தீர்வுத்திட்ட யோசனைகளை அரசு தெரியப்படுத்தவில்லை.

தமிழர் தாயகத்தை அங்கீகரித்து, ஒரு திண்ணியமான முழுமையான சுயாட்சித் திட்டத்தை முன்வைத்தால் நாம் அதனைப் பரிசீலனை செய்வதாக கூறியிருந்தும் சந்திரிகா ஆட்சிபீடம் அதனைப் பொருட்படுத்தவில்லை. போர்க் கைதிகள் பலரை விடுவித்து நாம் எமது நல்லெண்ணத்தைக் காண்பித்தோம். ஆனால் சந்திரிகா அரசு தமிழ் மக்களின் சாதாரண வாழ்க்கைப் பிரச்சனைகளைக்கூடத் தீர்த்து வைக்க முன்வரவில்லை. இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது சமாதான வழியில் புலிகளுடன் பேசித் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் அரசுக்கு எவ்வித அக்கறையும் இருக்கவில்லை என்பதையே நாம் உணரமுடிந்தது. தமிழரின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு உருப்படியான தீர்வுத்திட்டத்தை முன்வைக்க அரசு தயாராக இல்லை என்பதையும் நாம் உணரமுடிந்தது. இப்படியான சூழ்நிலையில் பேச்சுக்கள் அர்த்தமற்றதாக இழுபட்டபொழுது, நாம் காலக் கெடுக்களைக் கொடுத்து எச்சரித்தும் அரசு அவற்றைப் பொருட்படுத்தவில்லை. இதனாற் பேச்சு முறிந்தது. பேச்சுக்கள் முறிந்து போவதற்கான புறநிலைகளையும் நிர்ப்பந்தங்களையும் சந்திரிகா அரசு உருவாக்கி விட்டு, புலிகள் மீது பழியைச் சுமத்தியது. புலிகள் சமாதானப் பாதையை விரும்பவில்லையென உலகத்திற்குப் பொய்களைக் கூறியது. ஆனால் உண்மையில் சந்திரிகா அரசுதான் சமாதானப் பாதையை விரும்பவில்லை.

தமிழரைத் தனது நாட்டுப் பிரசைகள் எனக்கூறிக்கொண்டு, தமிழர் மீது பெரும் படையெடுப்பு ஒன்றைச் சந்திரிகா அரசு நடத்தி வருகிறது. ஒரே களத்தில் முழுப்படைப் பலத்தையும் குவித்து, தமிழரின் வரலாற்றுப் பெருமை மிக்க யாழ்ப்பாண நகரை ஆக்கிரமித்து அங்கு சிங்களத் தேசியக் கொடியைப் பறக்கவிட்டிருக்கிறது. இடம்பெயர்ந்து ஓடிய ஐந்து இலட்சம் தமிழ் மக்களின் கண்ணீர் படிந்த இந்த துன்பியல் நிகழ்வைச் சிங்களதேசம் கொண்டாடிவருகிறது. போரில், தமிழினம் தோற்கடிக்கப்பட்டது போல கொழும்பில் வெற்றி விழாக்கள் நிகழ்கிறது. தமிழரின் இனவுணர்வை இவ்விதம் புண்படுத்திவரும் சிங்களப் பேரினவாதிகள் தமிழருக்கு நீதி வழங்குவார்கள் என நாம் கருதவில்லை.

நீண்ட காலமாக வீரம் செறிந்த ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்தி வரும் தமிழினம் சமர்களில் பின்னடைவுகளைக்கண்டு சளைத்துப் போவதில்லை. சாவும், அழிவும், இடம் பெயர்வும், அகதிவாழ்வுமாக பெரும் துன்பப்பளுக்களைச் சுமந்து நின்ற போதும் எமது மக்கள் உறுதி தளரவில்லை. நாம் விடுதலையில் பற்றுக் கொண்டு, ஒன்று பட்டு உறுதிகொண்டு நிற்கிறோம். இன்றைய பின்னடைவுகளை நாளைய வெற்றிகளாக மாற்றிவிட நாம் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறோம். இன்று, இரத்தம் வழிந்தோடும் எமது மண், நாளை, ஒரு சுதந்திர பூமியாக மாறும் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

வெளியுலகத்திலிருந்து, உலகத்தமிழினத்திலிருந்து, எமது மூலவேர் ஆழவேரோடியிருக்கும் தமிழகத்திலிருந்து எமது மக்களை அந்நியப்படுத்தி அழித்துவிட எமது எதிரி சதி செய்த போதும், தமிழகம் எமது மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவும், அனுதாபமும் காட்டிவருவது எமக்குப் பெரும் தார்மீகத் தெம்பையும் மனவுறுதியையும் தருகிறது.

தமிழகத்திற் கிளர்ந்த உணர்வெழுச்சியின் தீவிர வெளிப்பாடாக அண்மையில், திருச்சியில், எமது போராட்டத்திற்கு ஆதரவாக, ஒரு இளைஞன் தனக்குத்தானே தீ மூட்டி எரித்து உயிர்நீத்துக்கொண்ட சம்பவத்தை அறிந்து நாம் மிகவும் கவலையும், வேதனையும் அடைந்தோம். அந்த இளைஞனின் தமிழினப்பற்றிற்கும் விடுதலை உணர்விற்கும் நாம் மதிப்பளிக்கும் அதேவேளை, இத்தகைய உயிர்த்தியாகங்கள் அவசியமற்றவை என்பதால் அதனைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழீழத்தில் தமிழின அழிப்புப் போரை தொடர்ந்து நடத்தச் சிங்கள இனவாத அரசு வெறிகொண்டு நிற்கிறது. இந்தச் சூழ்நிலையில், தமிழகம் எமக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும், எமது மக்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும். இன்றைய இக்கட்டான நிலையில், ஈழத்தமிழினம் இதனையே தமிழக மக்களிடமிருந்தும், தமிழகத் தலைவர்களிடமிருந்தும் எதிர்பார்த்து நிற்கிறது.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

வே. பிரபாகரன்

தலைவர்,

தமிழீழ விடுதலைப் புலிகள்.

# மீளமுடியாத நெருக்கடியில்

யாழ் மீதான படை எடுப்புத் தனியாக இனப் பிரச்சனைக்கான தீர்வாகச் சந்திரிகா அரசால் முன்னெடுக்கப்படவில்லை. சந்திரிகா அரசின் சகலவிதமான பிரச்சினைகளுக்குமான தீர்வாக இப்படையெடுப்பு நடாத்தப்பட்டது. ஏனெனில் யாழ் மீதான படையெடுப்பு வெற்றி அடைந்தாலும் சரி, தோல்வி அடைந்தாலும் சரி இனப்பிரச்சினை தீரப்போவதில்லை என்பது பெரும்பாலோரால் உணரப்பட்டதொன்றே. இதனைச் சந்திரிகா குமாரதுங்காவும் உணராமல் இருக்க அவர் அந்தளவு மந்த புத்தி உள்ளவராக இருக்கமாட்டார் என்றே கருதலாம்.

சந்திரிகா குமாரதுங்கா தேர்தலிற் சும்மா வெற்றி பெறவில்லை. பஞ்சமின்றி, தேர்தல் வாக்குறுதிகளை, பெருமளவில் அள்ளி வீசியதனாலேயே அவரால் வெற்றி பெற முடிந்தது. ஆனால் அத்தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படக் கூடியவையா எனச் சந்திரிகா குமாரதுங்காவும் சிந்திக்கவில்லை, சிங்கள மக்களும் சிந்திக்கவில்லை. ஏற்கனவே ஒரு தசாப்தத்திற்கு மேலாகப் போரில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா அரசு பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருந்தது. திறைசேரி வெறுமையாக இருந்ததோடு, பொருட்களின் விலையும் கணிசமான அளவு உயர்ந்தும் இருந்தது. ஆனால் சந்திரியா குமாரதுங்காவாற் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதிகளோ மலையாக இருந்தன. பாணின் விலை சரி அரைவாசியாகக் குறைக்கப்படும் என்றும், வேலை அற்றவர்களுக்கு வேலை அல்லது உடன் நிவாரணம் அளிக்கப்படுமென்றும், இவை போன்ற வேறுபல வாக்குறுதிகளையும் அள்ளிவீசி அதிகாரத்துக்கு வந்த சந்திரிகா பின் அவற்றைக் காற்றில் பறக்க விட்டது நாடறிந்ததே. இந்த நிலையில்த்தான், தேர்தல் வாக்குறுதிகள் எதையும் பேணாது, சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலம் ஓர் அரசியற்தீர்வு என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடும் மாற்றப்பட்டு அல்லது கைவிடப்பட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. மக்களின் கவனமும் இப்பிரச்சனையிற்திருப்பப்பட்டது. ஆனால் ஆரம்பிக்கப்பட்ட போரிற் கண்ணுக்குப் புலப்படக்கூடியதான ஒரு இராணுவ வெற்றியை வெளியிற் காட்ட வேண்டிய தேவையும் சந்திரிகா அரசிற்கு இருந்தது. ஏனெனிற் கடந்த கால அரசு போரிற் சாதிக்க முடியாததைத் தமது அரசு சாதித்ததாகக் காட்ட வேண்டிய தேவை இருந்தது. இதில் இராணுவ வெற்றி என்ற குறிக்கோளைத் தவிர வேறு அரசியல், பொருளாதார அம்சம் எதுவுமே சந்திரிகா அரசாற் கருத்திற் கொள்ளப்படவில்லை. அதன் அடிப்படையிற்தான் பாதுகாப்புச் செலவீனம் என்றுமே இல்லாதவாறு உயர்த்தப்பட்டது. சுமார் 3800 கோடி ரூபா யுத்தத்திற்கென ஒதுக்கப்பட்டது. ஏற்கனவே வங்குரோத்து நிலையில் இருந்த திறைசேரி மேலும், யுத்தத்திற்கெனப் பணத்தை வாரி இறைக்க வேண்டிய நிலைக்கு வந்தது. இதனால் அரசின் உள்நாட்டு வெளிநாட்டுச் சேமிப்புக்கள் பெருமளவிற் கரைந்து போகும் அவலநிலை உருவானது. அத்தோடு சந்திரிகா அரசு எதிர்பார்த்ததற்கு மாறாக யுத்தச் சூழ்நிலையானது சிறீலங்காவின் தலைநகரிலும் பெரும் பாதிப்புக்களை விளைவித்தது. இதன் விளைவாகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கொழும்பு நகரை நெருக்கடிமிக்க ஒரு நகரமாக்கியது. BBC செய்தியாளர் குறிப்பிட்டது போன்று மாலையானதும் கொழும்பு நகர் முற்றுகைக்குள்ளாகிய ஒரு நகரமாகிறது. இந்த நிலையானது ஏற்கனவே தளம்பல் நிலையில் இருந்த வெளிநாட்டு முதலீடு, பங்குச் சந்தை போன்றவற்றை மேலும் மேலும் மோசமாக்கியது.

சந்திரிகா அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்திற் பங்குச் சந்தை ஒரு போதும் உறுதியான நிலையில் இருக்கவில்லை. வளர்ச்சிப் போக்கைக் காட்டவுமில்லை. வெளிநாட்டுக் கைத்தொழில் முதலீட்டாளர்களின் முதலீடும், கடந்த ஆண்டளவில் 120 கோடி ரூபாவால் வீழ்ச்சி கண்டது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17% வீழ்ச்சியாகும். அத்தோடு உல்லாசப் பயணத்துறையும் வீழ்ச்சி கண்டதனாற் பெரும் வருமான வீழ்ச்சியும் ஏற்பட்டது. இவ்வாறாக, தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலை ஒரு புறமும், பொருளாதாரம் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பது மறுபுறமுமாகப் பெரும் நெருக்கடிக்குட் சந்திரிகா அரசு இன்றுள்ளது. இவை யாவற்றிற்கும் பிரதியீடாக வெளிநாட்டிற் காட்ட முனைவது அரசியல் நோக்கங்கள் எவையும் வெற்றி கொள்ளப்படாத யாழ் நகரப் படை எடுப்பேயாகும். ஆனால் இது சந்திரிகா அரசிற்கு நீண்ட காலத்திற்குக் கை கொடுக்கப்போவதில்லை. ஏற்கனவே சரிந்துவிட்ட பொருளாதாரத்துடன் நடாத்தி முடித்த யாழ் மீதான படை எடுப்பின் பெரும் சுமையையும் சிங்கள தேச மக்கள் சுமக்க முடியாது திணறுகின்றனர். இதனால் யாழ் வெற்றியை மறந்து, அதனைச் சந்திரிகா அரசின் மீது வெறுப்பாக வெளிக்காட்டப் போவதும் தவிர்க்க முடியாத நிகழ்வாகவே இருக்கும்.

# சென்னை - பெரியார் திடலில் ஈழத் தமிழர் படுகொலையை

# கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன மாநாடு

சூரியக்கதிர் நடவடிக்கை மூலம் ஈழத்தமிழினத்தை அழித்தொழிக்க முயன்ற சந்திரிகா அரசின் இழி செயலைக் கண்டித்து தமிழகம் முழுதும் திரண்டெழுந்தது. ஈழத் தமிழினம் தனித்தவொரு இனமல்ல நினைத்த படி அதனை சுலபமாக அழித்தொழித்து விடமுடியாது என தமிழகக் குரல் ஓங்கி இன்னொருமுறை ஒலித்திருக்கிறது. ஓ... தமிழகமே உனது இந்த வரலாற்றுக் கடமைக்காக ஈழத்தமிழினம் தனது நன்றியையும் நேசத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. தமிழகமே! உன்னுடைய எழுச்சியில் ஆதிக்க சக்திகள் கதிகலங்கிப்போய் உள்ளார்கள். யானைக்கு தனது பலம் முற்றாகத் தெரியாதிருக்குமாம் அதுபோல நீயும் உனது பலம் தெரியாதிருந்தாய் என்ற வரலாற்றுப் பழிச்சொல்லுக்காளாகாமல் நீ துடித்தெழுந்ததை நாம் இங்கே நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

30–12–1995 – சென்னை – பெரியார் திடல்

தீர்மானம்

1995ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் நாள் சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற ஈழத் தமிழர் படுகொலைக் கண்டன மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்துக்கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பேராளர்கள் ஒருமித்து நிறைவேற்றிய தீர்மானம்,

தமிழ்நாட்டிற் பல்வேறு அரசியற் கட்சிகள் மற்றும் தமிழர் அமைப்புகள் ஆகியவற்றின் பேராளர்களாகிய நாங்கள் ஒருமித்து இந்த ஆவணத்திற் கையெழுத்திட்டுள்ளோம்.

ஐ. நா. பேரவை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் (1966) தேசிய இனத்திற்குக் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்திற்கு ஏற்ப அமைந்த தனித்துவமுடைய தேசிய இனமான ஈழத் தமிழினம் கடந்த 40 ஆண்டுகாலமாகச் சுய நிர்ணய உரிமையைப் பெறுவதற்காக 1966ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஐ. நா. பேரவைப்பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள பொருளாதார, சமூக, கலாச்சார, குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான முதலாவது விதியின் அடிப்படையிலேயே போராடி வருகிறது.

தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சிறீலங்கா அரசுகளின் இடைமீடற்ற கடுமையான அடக்குமுறைகள், அநீதி, இனப்பாகுபாடு ஆகியவற்றை எதிர்த்து ஈழத்தமிழர்கள் முதலில் அறவழியிற் போராடினார்கள். அதனாற் சிறீலங்கா அரசுகளின் போக்கில் மாற்றம் எதுவும் ஏற்படாததாலும், வேறு வழியில்லாததாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் கடைசி நடவடிக்கையாக ஏற்றுக் கொள்ளப் பெற்ற ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈழத் தமிழர்கள் ஈடுபட்டனர்.

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் இந்தப் போராட்டம் நெருக்கடியான காலகட்டத்தை அடைந்துள்ளது. அவர்களுடைய மரபுவழித் தாயகத்திலேயே அவர்களின் உயிர், உடைமை, பாதுகாப்பு ஆகிய வாழ்வுரிமைகளை முழுமையாக இழந்து அவர்களின் பாதுகாப்பே பெரும் கேள்விக்குறியாகி அழிவின் எல்லையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழர்களின் மரபு வழித் தாயகத்திற்கு எதிராக, பொருளாதாரத் தடையை விதித்து உணவு, மருந்து மற்றும் அடிப்படைத் தேவைக்கான பொருள்களைப் போகவிடாமல் தடுத்து, தமிழ் மக்களைப் பட்டினி போட்டுப் பணியச் செய்வதற்கான முயற்சிகளில் சிறீலங்கா அரசு ஈடுபட்டு, போர்பற்றிய ஜெனிவா மாநாடு வகுத்த விதிமுறைகளை மீறி வருகிறது.

ஐ. நா. நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் மூலம் ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டும் என ஐ. நா. செயலாளர் நாயகம் டாக்டர் புட்ரோஸ் காலி விடுத்த வேண்டுகோளைக்கூட ஏற்க மறுத்துச் சிறீலங்கா அரசு செயற்படுகிறது.

ஐ. நா. மனித உரிமைப் பட்டயத்தின் 6,7,9,17.1 மற்றும் 19 ஆம் பிரிவுகளையும் அரசியல் உரிமைகள் சம்பந்தமான அனைத்துலகக் கோட்பாடு 6.1 விதியையும் அப்பட்டமாக மீறி, ஈழத் தமிழர்களுக்கெதிராகக் கேள்வி முறையற்று, காவலில் வைத்தல், விசாரணையின்றிச் சிறையில் தள்ளுதல், பாலியல் வன்முறை, படுகொலை போன்ற கொடுமைகளைத் தனது இராணுவத்தின் மூலம் சிறீலங்கா அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

சிறீலங்கா விமானப்படை குண்டு வீசி நவாலி, நாகர்கோவில் ஆகிய இடங்களிற் பள்ளிக் குழந்தைகள் உட்பட 300 க்கு மேற்பட்ட மக்களைக் கொன்று குவித்த நிகழ்ச்சிகள், ஜெனிவா மாநாட்டின் 50(4) விதிமுறை அப்பட்டமாக மீறப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது.

தமிழினத்தை அடியோடு கருவறுப்பதையே நோக்கமாகக் கொண்டு தமிழீழ மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகள் மீது விமானக் குண்டு வீச்சு, கடலிலிருந்தும், தரையிலிருந்தும் பீரங்கித் தாக்குதல் ஆகிய மும்முனைகளிலும் சிறீலங்கா ராணுவம் தொடர்ந்து மேற்கொண்டு வருவதன் மூலம் பல லட்சக்கணக்கான தமிழர்கள் அகதிகளாகி இடம் பெயரும் நிலை உருவாகியுள்ளது. இனப் படுகொலை செய்வதன்மூலம் ஈழத் தமிழர்களை அடியோடு ஒழித்துக் கட்டுவது தான் சிங்கள இன வெறி மிகுந்த சிறீலங்கா அரசின் நோக்கமாகும்.

பாக்கு நீரிணைக்கு மறுபுறம் உள்ள நமது ஈழத் தமிழ்ச் சகோரதரர்களையும் அவர்களுடைய குறிக்கோளையும் அவர்களுடைய இந்த இருண்ட காலகட்டத்தில் கைவிடாமல் இருக்குமாறு இந்திய அரசை வேண்டுகிறோம்.

இராணுவத் தீர்வை முன்வைத்து ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வரும் சிறீலங்கா அரசுக்குத் தார்மீக ஆதரவு, கடல் வசதிக் காப்பு, ஆயுத உதவி ஆகியவற்றைச் செய்வதை இந்திய அரசு நிறுத்தி, ஈழத் தமிழர்களுக்கு உதவ ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுகிறோம்.

ஈழத்தமிழர்களுக்கு ஏற்புடைய ஒரு அரசியற் தீர்விற்குச் சிறீலங்கா அரசைச் சம்மதிக்க வைக்க இந்திய அரசு தனது ஆற்றலுக்குட்பட்ட, சாத்தியமான அனைத்தையும் செய்யவேண்டும் என உண்மையான ஆர்வத்தோடு நாங்கள் வேண்டுகிறோம்.

இந்த வேளையில் இந்தியப் பிரதமருக்கும் இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் கீழ்க்கண்ட சிறப்பான வேண்டுகோளை விடுக்கிறோம்.

ஈழத்தமிழர்கள் சார்பில் தலையிட்டு இந்த இனப் பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வுக்கான பொருள் பொதிந்த செயல் முறையைத் தொடங்குமாறு வேண்டுகிறோம்.

இருள்சூழ்ந்த இந்த நெருக்கடியான வேளையில் தாங்கொணாத் துயரங்களிலிருந்து ஈழத்தமிழர்களை மீட்க இந்திய அரசு முன்வரத் தயங்குமானால், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாங்கள் ஈழத்தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக உலகத் தமிழர்களை ஓரணியில் திரட்டி அவர்களின் மூலம் உலக அமைப்புக்களையும், ஈழத் தமிழர்களின் இலக்கிற்குப் பரிவு காட்டுகிற அரசுகளையும் அணுகி அவர்களின் ஆதரவை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதை இத்தீர்மானத்தின் மூலம் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## திரு. மு. கருணாநிதி அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி

மு. கருணாநிதி
சென்னை
நாள் 30–12–1995

அன்பு இளவல் தளபதி வீரமணி அவர்களுக்கும்,
அருமை நண்பர் பழ. நெடுமாறன் அவர்களுக்கும்,
வாழ்த்தும் வணக்கமும் உரியதாகுக.

தாங்கள் இருவரும் முன்னின்று நடத்தும் மாநாடு ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து நடைபெறுவது குறித்து என்னைச் சந்தித்துப் பேசிய போது மாநாட்டில் நான் கலந்துகொள்ள இயலாமைக்கான விளக்கத்தை அளித்துள்ளேன். மாநாடு எழுச்சியுடன் நடைபெற என் இதயமார்ந்த வாழ்த்தினை வழங்குகிறேன்.

ஈழத்தமிழர்கள், தமது மரபு வழித்தாய் நாட்டிலேயே வாழ முடியாதபடி அவர்களது உடல், உயிர், பொருள் போன்றவை முற்றாக அழிக்கப்படுகின்ற சூழ்நிலை தமிழ் ஈழத்தில் இன்று உருவாகியுள்ளது. போர் நெறிமுறை பற்றிய ஜெனிவா ஒப்பந்தத்தை வெளிப்படையாகவே மீறிப் போருக்குத் தொடர்பற்ற தமிழர்களுக்குக் கூட உணவு, மருந்து மற்றும் இன்றியமையாத பொருள்களை அனுப்பமுடியாதபடி சிங்கள அரசு முற்றுகையிட்டு என்னருந் தமிழ் மக்களைக் குழந்தை குட்டிகளுடன் பட்டினி போட்டிருக்கிறது. ஐ. நா. வின் மனித உரிமைகள் பற்றிய பிரிவுகள் அனைத்துக்கும் எதிராகவும் பன்னாட்டுக் குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகள் சாசனத்துக்கு முரணாகவும் இராணுவ பலத்தைக் கொண்டு ஈழத்தமிழ் மக்களை எல்லா வகையிலும் சிங்கள அரசு கொடுமைக்கு ஆளாக்கிவருகிறது.

ஈழத்தமிழ் இனமக்களைப் பூண்டோடு அழித்திடப் போர்க்கோலம் பூண்டுள்ள சிங்கள அரசுக்கு எவ்விதமான உதவியும் இந்திய அரசு செய்திடலாகாது என்ற வேண்டுகோளைப் பல முனைகளில் இருந்தும் பல வழிகளிலும் எடுத்துச் சொல்லியும் கூட, ஈழத் தமிழர் பிரச்சினைக்கு அவர்கள் ஏற்கின்ற வகையில் ஓர் அரசியல் தீர்வை அளித்திட அந்நிய அரசு தனது ஆற்றலைப் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தியும் அவையனைத்தும் செவிடன் காதுச் சங்காகவே ஆகிவிட்டது. தமிழனாகப் பிறந்ததால் ஏற்பட்ட சாபக்கேடு போலும். ஈழத்தமிழர்களை இத்தகைய படுகொலை, சித்திரவதை, சீரழிவுகளில் இருந்து காத்திட இந்திய அரசு முன்வருவதற்கான சூழ்நிலையைத் தாங்கள் நடத்தும் மாநாடு உருவாக்குமென்றும் – உருவாக்க வேண்டுமென்றும் – என் விழைவினைத் தெரிவித்து, மாநாட்டு வெற்றிக்கு மீண்டும் ஒரு முறை வாழ்த்துக் கூறுகிறேன்.

அன்புள்ள
மு. கருணாநிதி

## முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் அனுப்பிய செய்தி

இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மனித உரிமைகளை அந்த மக்களுக்கு மீட்டுத்தர வேண்டும். மருத்துவ உதவிகளும் அத்தியாவசியத் தேவைகளும் கூட தமிழ் மக்களைச் சென்று அடைவது இல்லை. அடிப்படைத் தேவைப் பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் வேட்கைகளை மதிக்கவேண்டும். அரசியற் தீர்வை ஏதுவாக்கும் வகையில், இலங்கையில் அமைதி ஏற்பட இந்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


வி. பி. சிங்.
30–12–95

# நீங்கா நினைவில்....

## மூன்றாம் ஆண்டு



கடற்புலி லெப். அமுதன்







கடற்புலி லெப். நல்லவன்



கடற்புலி லெப். தூயவன்



லெப்.கேணல் குட்டி சிறீ



மேஜர் வேலன் (மலரவன்)



கடற்புலிக் கப்டன் குணசீலன்



கடற்புலிக் கப்டன் நாயகன்



கடற்புலிக் கப்டன் ஜீவா



கடற்புலிக் கப்டன் றோசான்

# இராசதந்திரி கிட்டு

## பழ.நெடுமாறன் அவர்கள் குறிப்புக்களிலிருந்து........

சிறந்த இராணுவத் தளபதியாக விளங்கிய கிட்டு, மறுபக்கத்தில் சிறந்த இராசதந்திரி யாகவும் திகழ்ந்தார். தமது நாடு சுதந்திரம் பெறுவதற்கு, ஆயுதம் தாங்கிய போராட்டம் எவ்வளவு இன்றியமையாததோ அதைப் போலவே, இராசதந்திரக் களங்களில் நடத்தப்படும் போராட்டங்களும் இன்றியமை யாதவை என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். எனவேதான் அவரு டைய ஒவ்வொரு நடவடிக்கையும் பகைவர்களைக் கூட அவர்பால் ஈர்ந்தது.



சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்கா நேசக்கரம் நீட்டிவந்தவேளையில் தளபதி கிட்டு அவர்களுடனும் விடுவிக்க வந்த போர்க் கைதிகளுடனும்

விடுதலைப் புலிகள் போர்வெறி கொண்ட வர்கள் அல்ல. மனித நேயம் மிக்கவர்கள். அடிமைத் தளையிலிருந்து தம் மக்களை விடுவிப்பதற்காகப் போராடுகிறார்களே தவிர, சிங்கள மக்கள் மீதோ, வேறெந்த இன மக்கள் மீதோ அவர்களுக்கு எந்தவிதமான பகை உணர்ச்சியும் கிடையாது என்ப தைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கிட்டு வெளிப்படுத்தினார்.

யாழ். மாவட்டத் தளபதியாகக் கிட்டு இருந்தபொழுது, யாழ். கோட்டையை முற்றுகையிட்டுக் கோட்டைக்குள் இருந்த சிங்கள இராணுவத்தை வெளியே வரவ-விடாமல் பல மாதகாலம் தடுத்து வைத்திருந்தார். கோட்டைக்குள் சிக்கிக் கொண்ட இராணுவத்திற்கு யாழ். நகரிலிருந்துதான் குடிநீர் செல்லவேண்டி யிருந்தது. மனிதாபிமான அடிப்படையில் குடிநீர் செல்வதைக் கிட்டு தடுக்கவில்லை. அதை அனுமதித்தார். அதைப் போல கோட்டைக்குள் சிக்கிக்கொண்ட சிங்களச் சிப்பாய்களுக்கு ஒரு முறை விறகுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. சிங்கள இராணுவத் தளபதி 'வயர்லெஸ்' மூலம் விறகு அனுப்பி உதவும்படி வேண்டிக்கொண்டார். அந்த வேண்டுகோளை ஏற்று, இரண்டு 'லாரிகளில் விறகுகளை அனுப்பி வைத்த கிட்டு, தனது அன்பின் அடையாளமாக ஒரு கூடை மாம்பழங்களையும் சிங்களத் தளபதிக்கு அனுப்பி வைத்தார்.

சிங்கள இராணுவ வீரர்கள் சிலரை, விடுதலைப் புலிகள் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர். இலங்கை மக்கள் கட்சியின் தலைவரான விஜயகுமாரண துங்கா என்னும் சிங்களத் தலைவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவும் சிங்கள இராணுவக் கைதிகளைப் பார்வையிடவும் அனுமதி கேட்டபொழுது, தளபதி கிட்டு, அவரை வரவேற்கத் தயாராக இருப்பதாகப் பதில் செய்தி அனுப்பினார். விஜயகுமாரண துங்கா முன்னாள் பிரதமர் திருமதி. பண்டாரநாயக்காவின் மகளை(சந்திரிகா) மணந்த மருமகன். புகழ்பெற்ற சிங்கள நடிகர். அவரையும் அவருடன் வந்தவர்களையும் யாழ்ப்பாணத்தில் தளபதி கிட்டு அன்போடு வரவேற்றார். சிங்களக் கைதிகளுடன் பேசுவதற்குத் தாராளமாக அனுமதித்தார். அவரை மீண்டும் பாதுகாப்பாக யாழ். கோட்டையில் ஒப்படை க்கவும் ஏற்பாடு செய்தார். விஜயகுமார ணதுங்காவின் இந்த வருகை இலங்கை முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணப் பகுதிக்கு சிங்களத் தலைவர் ஒருவர் சென்றுவிட்டுத் திரும்புவது இதுதான் முதல் முறை யாகும்.

கொழும்பு திரும்பிச் சென்ற விஜயகுமார ணதுங்கா மீண்டும் ஒரு முறை யாழ்ப்பாணம் வர விரும்பினார். 25க்கு மேற்பட்ட புத்த பிக்குகளையும், 40 க்கும் மேற்பட்ட சிங்களப் பத்திரிகையாளர்கள் மற்றும் பொதுமக்களையும் தம்முடன் அழைத்துக் கொண்டு அவர் யாழ்ப்பாணம் வரவிரும்பிய பொழுது, சிறீலங்கா அதிபர் ஜெயவர்த்தனா அதற்கு அனுமதி வழங்க மறுத்தார். அவ்வளவு பெரும் தொகையா-கச் சிங்களர்கள் யாழ்ப்பாணம் சென்று திரும்புவார்களேயானால் உண்மை நிலை-வரங்களை அவர்கள் தெரிந்து கொள்ள க்கூடும் என்ற அச்சமே ஜெயவர்த்தனாவ-ரின் மறுப்புக்குக் காரணமாக இருந்தது. ஆனாலும் தளபதி கிட்டு, அவர்களை வரவேற்க மகிழ்ச்சியோடு காத்திருப்பதாகக் கூறினார். 1983ஆம் ஆண்டு யூலையில் நடைபெற்ற மிக மோசமான இனக்கல வரத்திற்குப் பின்பு, இவ்வளவு பெரும் தொகையான சிங்களர்கள் யாழ்ப்பாணம் இருப்பது இதுவே முதல் முறையாகும். ஆனாலும் மனித நேயம் மிக்க தளபதி கிட்டு, அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்று யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்க்க அனுமதித்தார். சிறைப்பட்டிருந்த இரண்டு சிங்களச் சிப்பாய்களைப் பார்க்க வரும் சிங்களவர்களை வரவேற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசும் பொழுது கிட்டு பின்வருமாறு குறிப்பிட்டார்-

"நாம் எமது உரிமைக்காகவே போராடுகி ன்றோம். நாம் சிங்கள மக்களையோ சிங்களப் பிரதேசங்களையோ ஆக்கிரமிக்க வில்லை. சிங்கள இனவாத அரசின் அடக்குமுறையை எதிர்ப்பதற்காகவே ஆயு தம் ஏந்திப் போராடுகின்றோம். சிங்கள இனவாத அரசினால் பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். அந்த அடக்கு முறையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். சிறப்பாகப் பிக்குமார்களின் இந்தப் பயணம் தமிழர் மத்தியிலும் சிங்களவர் மத்தியிலும் ஒரு பெரிய மாற்ற த்தை ஏற்படுத்தும். எமது இயக்க வீரர்கள் தன்னிச்சையாக, தாமாக முன் வந்து உயிரைத் தியாகம் செய்கிறார்கள். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவோர் சம்பளத்திற்காகச் சேருவதில்லை. ஆனால் இலங்கை அரசின் இராணுவத்தில் சேருபவ ர்கள் சம்பளத்திற்காகவே சேருகிறார்கள். போராட்ட வரலாற்றில் போராளிகளும், இரா ணுவமும் கைது செய்யப்படுவதும், விடுவிக்கப்படுவதும் வழமை. நாமும் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் காவல் நிலையங்களின் தாக்குதலின் பொழுது கைதுசெய்யப்பட்ட இராணுவம், மற்றும் காவற் துறையினரை எவ்வித நிபந்தனையும் இன்றி விடுவித்தோம்.

இன்று நாம் போராடுகிறபடியால் ஒவ்வொரு பெற்றோரின் நிலைமையையும் புரிந்து கொள்ள முடிகிறது. அதனால்தான் ஒன்பது சடலங்களையும் கோட்டை இராணுவ த்திடம் ஒப்படைத்தோம். எமது உறுப்பினர்கள் பத்தொன்பது பேர் உட்பட, பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் இன்று சிறையில் வாடுகிறார்கள். ஆனால் நாம் அவற்றைவிட்டு எமது வீரர்கள் இருவரை விடும்படியே கேட்கிறோம். உலகப் போராட்டங்களிலும் யுத்தக் கைதிகள் பரி-மாற்றம் செய்யப்படுவது நடைமுறை. பிற இடங்களில் பெரும் தொகையான பணமும் கேட்டு விடுதலை செய்யப்படுகிறார்கள். ஆனால் நாம் அப்படி ஒன்றும் கேட்க வில்லை. இந்த இராணுவச் சிப்பாய்களைப் பற்றி அரசிடம் எவ்வித கரிசனையும் ஏற்படவில்லை. இந்த இராணுவத்தினர் சாதாரண சிப்பாய்கள் என்பதாலேயே அரசும் அமைதியாக இருக்கிறது. இவர்கள் இராணுவ உயர் அதிகாரிகளானால் எப்படியும் விடுவிக்க அரசு முயன்றிரு க்கும். சாதாரண இராணுவ வீரர்களுக்கு இந்த அரசு எவ்வளவு மதிப்பளிக்கிறது என்பதை இதில் இருந்து நீங்கள் அறியு ங்கள். இதனால் இராணுவத்தில் உள்ள ஒவ்வொரு வீரரும் அரசிடம் மதிப்பை



இழக்கின்றனர். ஒன்றரை மாதமாக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாம் இதனைத் தெற்கிலுள்ள அரசியல்வாதிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்ததால், வடக்கே வர அச்சமாக இருந்தும் விஜயகுமாரண துங்கா இங்கு முதலில் வந்து எம்முடன் பேசினார். அவர் வராவிடில் இந்தச் சிக்கல் உலகுக்கும், தெற்கேயும் தெரியவராது. அவருடைய வருகையால் அவர் அரசை நிர்ப்பந்தித்து நாம் இராணுவத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடிந்தது. நாம் குருமாரையும், உங்களையும் கேட்பது என்னவென்றால், மீண்டும் அரசை நிர்ப்பந்தித்து எமது நிபந்தனைக-ளைக் கூறி இவ்விருவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள். நாம் ஒருபோதும் இவர்களைக் கொலை செய்யமாட்டோம். அப்படியான மனிதாபிமானமற்ற செயல்க ளைச் செய்யமாட்டோம்."

கிட்டுவின் இந்தப் பேச்சுக்குப் பதில் அளிக்கும்பொழுது திரு. விஜயகுமார ணதுங்கா பின்வருமாறு கூறினார்:

"இன்று நாட்டின் வடபகுதியில் நடக்கும் போராட்டம் உயிர்வாழ்வதற்கான போரா ட்டமே. தமது உயிர்களைப் பாதுகாக்க வடக்கிலுள்ள மக்கள் நடத்திவரும் போராட்டத்தை வறுமையின் பொருட்டு அரசு ஆயுதப்படையில் சேரும் சிங்கள வாலிபர்களின் வயிற்றுப்பாட்டுடன் ஒப்பிட லாம். தெற்கில் பொருளாதார வசதிபடைத்த எந்தவொரு குடும்பத்திலிருந்தும் எவரும் இந்த அவசர இராணுவசேவையில் சேர்ந்ததாக நான் அறியவில்லை. இன்று நாம் மீட்டுச்செல்ல வந்துள்ள அஜித் சந்திரசிறியும், பண்டாராவும் கூட வயிற்று ப்பாட்டுக்காக இராணுவத்தில் சேர்ந்தவ ர்கள்தான்" எனக்கூறிய விஜயகுமாரண துங்கா மேலும் பேசுகையில், "தானோ அல்லது தன்னுடன் வந்தவர்களோ எந்தவொரு அரசியற் கட்சி அல்லது நிறுவனத்தின் பிரதிநிதிகளாக யாழ்ப்பாணப் பயணத்தை மேற்கொள்ளவில்லை. தமிழ்ப் போராளிகளின் மேல் வைத்துள்ள உறுதி யான நம்பிக்கையின் பேரில் வடக்கிலும், தெற்கிலும் இருக்கக்கூடிய உரிமை மறுக்கப்பட்ட மக்களின் பொதுப் போராட்டத்தில் வடக்கு-தெற்குப் பாலம் ஒன்றை அமைப்பதே எமது பிரதான நோக்கம்" எனக் கூறினார்.

இரு சிங்களக் கைதிகளையும் விடுதலைப் புலிகள் விடுவித்தனர். பதிலுக்கு மேஜர் அருணாவும் இன்னொரு விடுதலைப் புலியும் விடுவிக்கப்பட்டனர். விடுவிக்க ப்பட்ட சிங்களக் கைதிகளை நேரில் அழைத்துச் செல்ல, சிங்களப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயகுமாரணதுங்காவின் யாழ்ப்பாண வருகை குறித்து தளபதி கிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள், தலைவர் பிரபாகரன் அவர்களின் ஒப்புதலுடனேயே நடைபெற்றன. இதைப்பற்றி பிரபாகரன் அவர்கள் ஒரு பேட்டியில் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்



# யாழாண்ட கிட்டு

கிட்டண்ணையின் வீரத்தைப் போலத்தான் கோபமும் பிரசித்தமானது. ஒரு தாயின் கோபத்தைப் போல இரசித்து ஏற்றுக் கொள்ளும் கோபம். மறுகணம் எங்கென்று தெரியாது மறைந்துவிடும் கோபம்.

தோழர்களுக்கு அடியும் விழும். ஆனாலும், ஒருவரும் கோபிப்பதில்லை. கிட்டண்ணையில் உயிரையே வைத்திருக்கும் தன்மையைக் குறைப்பதுமில்லை. ஏனெனில் அவரின் கோபத்தினுள் இருக்கும் கனிவான இதயத்தை அவர்கள் அறிவார்கள்.

சண்டைகளின் பொழுது யாராவது ஒரு தோழன் காயமடைய நேரிட்டால் அந்த மனிதர் துடிக்கும் துடிப்பையும், யாராவது தோழனை இழந்துவிட்டால் முகம் கறுத்துத் தவித்து அழும் அழுகையையும் அவர்கள் கண்டவர்கள். அதனால்தான் கிட்டண்ணையை யாரும் கோபிப்பதில்லை. அவரின் கோபம் தேவையானதே. இயக்கத்தின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு அவசியமானது.

கோபத்தைவிட, அவரின் உள்ளே இருந்த கனிவும் திறமையும்தான் மனிதர்களை வென்றன.

குறிபார்த்துச் சுடுவதில் கிட்டண்ணை வல்லவர். இலக்கு பொதுவாகத் தவறுவதில்லை. அது அவருடைய எதிரிகளுக்குக் கூடத் தெரிந்த விடயம். எங்களூர்ப் பெரியவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பெருமை. ஆபத்தான வேளைகளில்கூட பதற்றமற்று, நிதானமாகத் துப்பாக்கியைக் கையாள்வார். சண்டைகளின் போது தேவையற்ற துப்பாக்கி இயக்கத்தை அவர் ஒரு போதும் செய்ததில்லை.

இதெல்லாவற்றிக்கும் அவருடைய முதலாவது தாக்குதலே சான்றாக நிற்கின்றது.

உமையாள்புரம். நிலக்கண்ணிகளைப் பொருத்தி விட்டு இராணுவத்தினரின் வருகைக்காக அவர்கள் பத்துப்பேர் காத்திருந்தார்கள். எல்லாம் சரி. இராணுவ வண்டிகள் வருவது தெரிந்தது.

கண்ணிவெடிகளைக் கையாளும் தொழில்நுட்ப அறிவைப் பெறாத காலம். இராணுவ வண்டிகளைப் பார்த்து மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் பாய்ச்சலுக்குக் கண்ணிகள் வெடித்தன.

புலிகள் வெவ்வேறு திசைகளால் பின் வாங்கினார்கள். அல்லது தப்பி ஓடினார்கள்.

வீதிக்கு அருகாகத் தண்டவாளம் இருந்தது. அதன் இரு பக்கமும் வெட்டை.

கவச வாகனங்கள் இரண்டு, துப்பாக்கி ரவைகளை அள்ளி வீசிக் கொண்டு நெருங்கி வந்தன.

ஒரு சிலர் விழலாம் என்ற நிலை. கிட்டண்ணை தண்டவாளத்தில் நின்று திரும்பி தனது ஜி.3 துப்பாக்கியால் கவசவாகனத்தை நோக்கிச் சுட்டார். தவறாத குறி. கவசவாகனத்தின் சாரதி காயப்பட்டான். அவ்வாகனம் துரத்தி வந்த வேகத்திற்குச் சரிந்து புரண்டது.

அவரது முதலாவது களமும் சாதனை—தான்.

அதன் பின்பு, கிட்டண்ணை கண்ட ஒவ்வொரு களமும் அவரது வீரத்தை வெளிப்படுத்தி நின்றது. பகைவர்களைக் கலங்கடித்தது.

கிட்டண்ணை சிறந்தொரு வீரன். அதைப் போன்றுதான், 'கமரா'வைத் தூக்கினால் சிறந்ததொரு படப்பிடிப்பாளன். அது தொலைக்காட்சிக் 'கமரா'வாக இருந்தாலும் சரி.....

சிறந்ததொரு இலக்கியவாதி - எழுத்தாளன். போராளிகள் தொடர்பாக, போர் முனையில் அவர்களின் வாழ்க்கை தொடர்பாக உள்ளத்தைத் தொட்டுவிடும் உணர்வோடு அவரின் எழுத்துக்கள் வெளிப்படும்.

போராட்ட வாழ்வின் தத்துவமும் நிதர்சன தரிசனமும் அவர் எழுத்துக்களில் இருக்கும். எல்லாவற்றிக்கும் மேலாக அவரின் உயிர் போன்ற மக்கள் மீதான நேசம் அவர் எழுத்துக்களில் பரிணமிக்கும்.

∴ ∴ ∴

சரி, இதெல்லாம் போக கிட்டண்ணையை நாங்கள் இழந்துதான் போனோமா? உண்மைதான். ஏற்றுக் கொள்ள முடியாத தெளிவான உண்மை.

"நாம் ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம். தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் எமக்குப் பரிச்சயமானது. சாவைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்றுதான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்தபோது எம் இதயம் உருக்குலைந்து, தளர்ந்து..... எம் உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்?" - மேஜர் அல்பேட்டின் இழப்பையடுத்து, அவரைப்பற்றிய நினைவுக் குறிப்பில் கிட்டண்ணை இதை எழுதினார்.

நாங்கள் கூட, ஒவ்வொரு போராளியின் இழப்பின் பின்பும் அழுது முடிய இதைத்தான் சொன்னோம். கிட்டண்ணை இதை எழுதுகையில் எம்மில் சில நூறு பேரைத்தான் நாம் இழந்திருந்தோம். இன்று ஆயிரக்கணக்கில் தோழர்களை நாம் இழந்துவிட்டோம். எங்கள் இதயங்கள் பலமுறை வெந்து தணிந்து விட்டன. ஆனாலும் இன்றுகூட எம்மால் இழப்புக்களைத் தாங்க முடிவதில்லையே! அதிலும் கிட்டண்ணையை.....!

"கிட்டண்ணையும் அவர் தோழர்களும் வந்த கப்பலை இந்தியர்கள் வழிமறித்துவிட்டார்களாம்."— நெஞ்சில் அடித்தது போன்ற செய்தி. "இந்தியர்கள் விடமாட்டார்கள். அதுவும் கிட்டண்ணையை நிச்சயமாக விடமாட்டார்கள்."

"அணு அணுவாகத் திலீபன் சாகும்வரை பார்த்துக் கொண்டிருந்த இந்தியா, தமிழர்கள் துடிக்கைமிலும் புலேந்தி அம்மானையும், குமரப்பாவையும் சாகடித்த இந்தியா! தன் மரணவலைக்குள் சிக்கிவிட்ட கிட்டண்ணையை நிச்சயமாக விடாது." தெரிந்த செய்திதான். ஒவ்வொருவரின் மனமும் சொன்ன செய்தி.

அவர்களுக்குத் தேவையெல்லாம் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் எதுவும் அமுக்கப்படவேண்டும். அழிக்கப்பட வேண்டும். அதற்காக அவர்கள் என்னவும் செய்வார்கள்.

சர்வதேசச் சட்டங்களும் நடைமுறைகளும் இந்திய அரசிற்குத் தேவையற்றன. அதை மாற்றவும் திரிக்கவும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நேர்மையும் மனச்சான்றும் அந்தத் தேசத்தின் ஆளும் வர்க்கத்திற்கு இயல்பாகவே இல்லை.

சரணடைவதா! அது புலிகளின் மரபில்லை.

அதுவும் கிட்டண்ணை! தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதி—தமிழர்களின் மானச்சின்னம்— அவர்களின் மாபெரும் தளபதிகளில் ஒருவன் - தலைகுனிவது..... சித்திரவதைப்பட்டு, அவமானப்பட்டுச் சாவது.....

"கிட்டண்ணை காப்பாற்றப்பட வேண்டும்." தேசத்தின் இதயம் துடித்தது. தமிழீழக் கரையெங்கும் ஆயிரமாயிரம் தோழர்கள் நின்று தவித்தார்கள்.

நாங்கள் கூட, ஒவ்வொரு போராளியின் இழப்பின் பின்பும் அழுது முடிய இதைத்தான் சொன்னோம். கிட்டண்ணை இதை எழுதுகையில் எம்மில் சில நூறு பேரைத்தான் நாம் இழந்திருந்தோம். இன்று ஆயிரக்கணக்கில் தோழர்களை நாம் இழந்துவிட்டோம். எங்கள் இதயங்கள் பலமுறை வெந்து தணிந்து விட்டன. ஆனாலும் இன்றுகூட எம்மால் இழப்புக்களைத் தாங்க முடியுதில்லையே! அதிலும் கிட்டண்ணையை.....!

எமது சிறிய படகு அலைகளால் தூக்கி மேலே மேலே வீசப்பட வேகம் தடைப்படுகிறது. ஆனால், பாரிய நேவிப்படகுகள் கடல் அலைகளை வெட்டிக் கிழித்துக் கொண்டு பாய்ந்து வருகின்றன.



அவற்றிலிருந்து சிவப்பு நிறமாகச் சீறிக்கொண்டு குண்டுகள் வரத் தொடங்கின.

ஓட்டம், ஓட்டம், ஜீவ மரண ஓட்டம்.

நேவிப்படகிலிருந்து பாய்ந்து வந்த 'ரேசர் ரவுண்ஸ்' ஒன்று எமது படகின் எரிபொருள் தாங்கியைத் துளைக்க.....படகு தீப்பற்றி, பின்பு வெடிக்கச் சிதறுகிறது.

பருத்தித்துறையிலே இன்பருட்டிக்கு நேரே எம்படகு துரத்தப்படுவதை அறிந்து, எம் வீரர்களின் படகு தப்பி வரும் என்று பார்த்துக் கொண்டிருக்க, எம்படகு எம் கண் முன்பே வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டோம்.

ஆனால், செல்லமுடியாது. ஏன்! அது தரையில்லை, கடல்.

பல ஆண்டுகளுக்கு முன்பு சிறிலங்காக் கடற்படையால் எமது தோழர்கள் வந்த படகு மூழ்கடிக்கப்பட்டபொழுது, "திரைகடல் ஓடினோம் - திரவியம் தேடி அல்ல" என்ற தலைப்பில், கிட்டண்ணை இப்படித்தான் எழுதினார். ஆனால் இன்று.....நீண்ட தொலைவில், இந்திய வல்லாதிக்கப்பிடிக்குள் கிட்டண்ணை..... நாங்கள் செல்லமுடியாது. ஏன்?

கடலில் புலிகளின் கப்பலைச் சுற்றி இந்தியப் போர்க் கப்பல்கள். சரணடைய வேண்டும். அல்லது அந்தப் பாரிய போர்க் கப்பல்கள் சமதான நோக்கத்தோடு, ஆயுதங்களற்று வந்த புலிகளின் கப்பலை மூழ்கடிக்கும். பின்பு, தங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து தமது போர்க் கப்பலைத் தாக்க வந்த புலிகளின் கப்பலை மூழ்கடித்ததாகக் கதையினை உருவாக்கும்.

இந்திய அதிகாரிகளும் செய்தி நிறுவனங்களும் பொய் சொல்வதில் வல்லவர்கள். புலிகளின் மீது இலகுவாகப் பழி சுமத்தப்படும்.

"சரணடையப் போவதில்லை." சாவு நிச்சயமாகிப் போனது. ஆனால், அந்தச் சாவு எதிரிகள் தலைகுனியும் சாவாக இருக்க வேண்டும். சரித்திரம் படைக்க வேண்டும். தாய் நிலத்தைத் தலைநிமிரச் செய்ய வேண்டும்.

சண்டைக்களங்களில் எல்லாம் கிட்டண்ணையைக் காப்பாற்ற நூற்றுக் கணக்கான தோழர்கள் நின்றார்கள். ஆனால், அன்று.....

குட்டிசிறி அருகில் நின்றான். அவன் சின்ன வயதில் இயக்கத்தினுள் வந்தவன். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர். அவன் பெரிய ஆளாக வளர்ந்தபின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை.

அவன் அழுதிருப்பான். தனக்காக அல்ல, கிட்டண்ணைக்காக. அவரில் அவன் உயிரையே வைத்திருந்தான். தன் சாவுக்காக அந்த உறுதி மிக்கவன் ஒருபோதும் கலங்கியவனில்லை.

இப்போது கலங்கி இருப்பான்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# அலைகடலில் அமரகாவியம்

தளபதி கிட்டு அவர்களும், மற்றும் ஒன்பது போராளிகளும் இந்தியச் சதியில் சிக்கி வீரச் சாவடைந்தபின் இந்தியாவைக் கண்டித்து இலண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் இசைக்கப்பட்ட புலவர் சிவநாதன் அவர்கள் யாத்த பாடலின் சில பகுதிகள்:

சிரித்து வரவேற்ற செந்தளித்த முகமெங்கே?
சிந்தித்து உரையாற்றிச் சிறப்புற்ற நாவெங்கே?
அணைத்துக் கரம்போட்டு.....ஆதரித்த மனமெங்கே?
அன்னை தமிழ் வாழ வந்துதித்த மகனெங்கே?

ஈர்ப்புச் சக்தியென இழுத்திருந்த கண்ணெங்கே?
இதயத்தை ஊடுருவி எழுச்சி தந்த குரலெங்கே?
பார்ப்போரைப் பலப்படுத்திடும் பரிணாமத் தோற்றமெங்கே?
பாய்கின்ற கேள்விகட்குப் பதில் கூறும் புருவமெங்கே?

தேசப்படங்கீறித்.....தேசியத்தின் வளங்கூறி.....
மானப்பரம்பரையின் மறவர் உரங்கூறி.....
மக்கள் பலங்கூறி.....மனிதத்தின் நலங்கூறி.....
பாடங்கள் பல சொல்லித் தந்த சுடரெங்கே?

∴ ∴ ∴

கிட்டு என்ற பெயரோடு கிழக்கிருந்து வந்தவனே!
கட்டியணைத்தெம்மைக் கழுவி எடுத்தவனே!
சத்தியத்தின் தூதனெனக் கண்ணெதிரே நின்றவனே!

பகிர்ந்துண்டு களிக்கையிலே.....பாலகனாய் வடிவெடுப்பாய்!
பசித்த முகம் கண்டால்..... பதைத்து விருந்திடுவாய்!
தகுந்த முறை சொல்லித் தட்டிக் கொடுத்திடுவாய்!
தம்பியென்பாய்! அண்ணையென்பாய்! மச்சான் வா என்றிடுவாய்!
தங்கச்சி..... அக்கா அம்மா வென்றன்போடு.....
இங்கிதமாய் உறவாடி.....உள்வீட்டு உறவானாய்!
எங்கள் இதயத்தில் உட்கார்ந்து நிலையானாய்!

∴ ∴ ∴

'ஈழத்தில் கிட்டு' என்ற தலைப்பையல்லோ பார்த்திருந்தோம்
எங்கள் தலைவனை..... இறுக அணைத்தபடி.....
நின்று சிரிக்கும் புகைப்படத்தைப் பார்த்திருந்தோம்
யாழ்ப்பாணம் மட்டுநகர் திருமலையில் மன்னாரில்.....
வன்னியிலே..... ஊர்காவற்றுறையினிலே.....உன்முழக்கம்
கேட்கும் நாளன்றோ.....காத்திருந்தோம் ராசாவே!

நெஞ்சில் அடித்து நிலத்திற் புரண்டழவும்
அஞ்சிக் கிடக்கும் அந்நிய மண் வாழ்வினையே
தஞ்சமென நினைக்கும் தாழ்வுற்ற எமக்கெல்லாம்.....
என்றுதான் நிம்மதியோ? ஆற இடமறியோமே!
எம் நெஞ்சில் என்றென்றும் ஒளிகொடுத்து நிற்குமையா!
ஓய்ந்துவிடமாட்டோம் நாம்! உன் பாதை வழி நடப்போம்!
வேங்கையரின் போர்க்குரலை.....விண்வரையும்
கேட்கவைப்போம்!

## என் இனியவளுக்கு...

24-07-1992

என் அன்பு டாலிக்கு,

பரீட்சை முடிந்தபின், எப்போது மறுபடியும் படிப்புத் தொடங்கும்? படிப்பு இல்லாமல் இருந்தாலும் எப்படியாவது உன்னால் முடிந்தவரை சனங்களுக்கு உதவிசெய்ய முற்படவும். ஏதோ எப்படியோ உன் நேரத்தைச் சனங்களுக்குச் சேவை செய்வதிலேயே செலவிடவும்.

எப்போதும் ஏழைகளுக்கு உதவுவதிலும், சனங்களுக்கு உதவுவதிலும் உள்ள இன்பத்தை அறிந்துகொண்டால் அதைவிட உன்னதமானது எதுவும் இருக்கமுடியாது.

உன் படிப்பினதும், தொழிலினதும் தத்துவத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு மனிதன் படித்து, முன்னேறுவது ஏனையவர்களுக்குச் சேவை செய்யும் பொருட்டுத்தான். ஆனால், துரதிஷ்டவசமாகப் படித்தவர்கள் யாரும் அப்படியாக நினைப்பதில்லை. தமது படிப்பால், பதவியால், அந்தஸ்தால் மற்றவர்களையும், ஏழை எளியவர்களையும் தாழ்வாகவே பார்க்கும் பழக்கமே நிலவி வருகின்றது. உண்மையில் ஒரு மக்கள் சமுதாயம் தனது தேவைக்காகவே கல்விமான்களையும், அறிஞர்களையும் உருவாக்குகின்றது. மக்களின் பணத்திற் படித்து முன்னேறும் இவர்கள், படித்தபின் அம்மக்களை விட்டு ஓடிவிடும் கல்மனம் மிக்கவர்களாகவும், சுயநலக்காரர்களாகவும் இருப்பதுதான் எனக்குப் புரியவில்லை. எனவே படிக்கும் போது அதன் நோக்கத்தையும் சரியாகப் படிக்க வேண்டும். எனது நண்பர்களைப் பற்றியும் எழுதவும். நிலைமைகள் எப்படி உள்ளன?

கஸ்ரோவைப் போய்ப் பார்க்கவும். அவருடைய உடல் நலம் எப்படி உள்ளது என்றும் எழுதவும்.

மேலும், சனங்களுடைய மனநிலைகள், படித்தவர்களின் மனநிலைகள் எப்படியுள்ளன என்பது பற்றியும் எழுதவும்.

உன் கடிதங்களைக் கண்டு தொடர்கிறேன்.

அன்புடன்,

ச. கிட்டு.

# கடமையின் மறுபெயர் தளபதி கேணல் கிட்டு

தமிழின விடுதலைபற்றிப் பேசுவதும், மக்களை உணர்வு கொள்ளச் செய்வதும், உணர்வு பெற்ற மக்களின் எழுச்சியை மூலதனமாகக் கொண்டு இலாபமீட்டிப் பகட்டு வாழ்க்கை வாழ்வதும் அன்றைய தமிழ்த் தலைவர்களின் மிகச்சிறந்த வியாபாரமாக இருந்தது. தொண்டனின் தியாகமும், எழுச்சியும் அதன் தன்மைக்கேற்பப் பெறுமதியான முதலீடாகித் தலைவனுக்கு இலாபத்தை ஈட்டத் தமிழினம் அடிமையாக்கப்பட்ட நாட்கள் அவை.

மக்களின் சுதந்திர வாழ்வை நோக்கிய உண்மைப் பார்வையோடு எமது அமைப்பு உருவானபோது, பழைய அரசியல்வாதிகளின் தன்மைகளையும் - போலி வாக்குறுதிகளையும் கற்பனாவாதப் பேச்சுக்களையும் - குழிபறிப்புக்களையும் - தலைமைத்துவப் போட்டிகளையும் சந்தித்து ஏமாந்து சலித்த மக்களுக்கு, எம்மை இனம் காட்ட நாம் வெறும் எழுத்தையும் பேச்சையும் பயன்படுத்தவில்லை.

தூய குறிக்கோளுக்கான திடமான செயற்பாட்டினால் நாம் மக்களுக்கு நம்பிக்கையூட்டினோம்.

சாவின் விளிம்பில் நின்று தமிழின வாழ்வுக்கான போரை நாம் முன்னெடுத்தபோது, போலித்தலைமைகள் ஓடி ஒளிந்தன.

முற்றிலும் மாறான புதிய வடிவமான புரட்சிகர நடைமுறையை - மக்கள் முன் எடுத்து மக்களை உணரச்செய்து மக்களை இணையச் செய்த முன்னோடிகளில் முக்கியமானவர் எங்கள் கேணல் கிட்டு அவர்கள்.

அமைப்பு அவருக்குக் கொடுத்த கடமைகளை, அயராது உழைத்து- முழுமையாக நிறைவேற்றிய மனிதர் அவர்.

ஆரவாரங்களோடும் - கனரக ஆயுதங்களோடும் அதிர்ந்து, வெடித்து, ஆக்கிரமித்துப் படை நடாத்திய எதிரியைக் குண்டு வலைப் பின்னல்களுக்கிடையில் நின்று வென்று போராடிய வீரன் அவர். மரணபயத்தைத் தமிழ் மக்களின் அடிமனதில் இருந்து விரட்டித் துணிவை வளர்க்கத் தன்னை உதாரணமாகக் காட்டி நின்றவர் எங்கள் கேணல் கிட்டு.

மக்கள் மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்புடனும் - விடுதலைக்கான பரந்த நோக்குடனும் - வெற்றியே குறியாய்க் கொண்ட அரசியற் பார்வையுடனும் - இராணுவ மதிநுட்பத்துடன் படைநடாத்தும் லாவகத்துடனும் எமது இதயங்களில் நிலைத்த ஒரு உன்னத மனிதர் கேணல் கிட்டு.

காலை இழந்தபின்னும் உறுதியாக விடுதலைப் போரில் நடைபோட்ட தன்னம்பிக்கை அவருடையது.

அமைப்பின் தேவைகருதி அவர் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தபோது உலகளாவிய செயற்பாட்டைப் பரந்துபடச் செய்தார். எமது அமைப்பு, அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைவான வெளிநாட்டுக் கொள்கையை வரையறுத்துச் செயற்பட ஆவன செய்தார். உலகம், எமது மக்களின் மீதும் - அந்த மக்களைக் காப்பாற்றும் எமது அமைப்பின் மீதும் சரியான பார்வையைக் கொள்ள அயராது உழைத்தார். அரசு என்ற அங்கீகாரத்துடன் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, அநீதி இழைத்த சிங்கள அரசை உலகுக்கு இனம்காட்டிப் புலிகள் அமைப்பின் நியாயமான போரை உலகம் உணரச் செய்தார்.

போர்க்களத்திற் பம்பரமாய்ச் சுழன்று சாதனை படைத்த அவர் அனைத்துலகப் பொறுப்பை ஏற்றபோது அதன் ஆழத்தையும், அகலத்தையும் கணக்கிட்டுச் சரியான நேரத்திற் சரியான முடிவுகளை எடுத்து எம்மையெல்லாம் வழி நடாத்தினார்.

அமைப்பின் வெளிநாட்டுப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் மேற்பார்வையிட்டு - ஆலோசனை வழங்கி - மாற்றங்களை உண்டுபண்ணிச் செயற்பாட்டைப் பன்மடங்கு பெருக்கினார்.

அமைப்பின் யேர்மனிப் பிரிவின் சிக்கல்களைச் சரிவர ஆராய்ந்து, திறம்படச் செயற்பாடுகள் அமைக்கத் தீர்வுகள் தந்தார். இன்று பலமடங்கு எமது செயற்பாடுகள் பெருகி அனைத்து வழிகளிலும் விரிவாக்கம் பெற்று நாம் மக்களை அணிதிரட்டியுள்ளோம்.

இந்த வகையிலே நாம் மனநிறைவு கொள்ளும் நேரங்களிலெல்லாம் கேணல் கிட்டு என்ற மாபெரும் சக்தி எம் மனக்கண்ணிற் தோன்றி மறைகின்றது.

கடமையை முழுமையாக அனைத்து நிலைகளிலும் நிறைவேற்றிய அந்த உன்னத மனிதரை வணங்குகின்றோம்.

நன்றி

தமிழீழ விடுதலைப் புலிகள்
யேர்மனிக் கிளை

# குட்டிசிறீ மற்றும் தியாகமணிகள்

1990ஆம் ஆண்டு பெப்ரவரி - மார்ச் திங்கள்களில் ஏறத்தாழ 25 நாட்கள் தமிழீழத்தில் சுற்றுப்பயணம்



செய்தபொழுது, லெப்.கேர்ணல் குட்டிசிறீ எனது வாகனத்தின் ஓட்டுநராக அமர்ந்து சிரிக்கச் சிரிக்கப் பேசி மகிழ்வித்தான். 25 வயதுக்கு உட்பட்ட இளைஞனான குட்டிசிறீயை நீண்டகாலமாக நான் அறிவேன். 1988இல் கிட்டு சென்னையில் இருந்தபொழுது அவரின் மெய்க்காவலனாக அவருடனேயே இருந்தான். அவர் சிறைப்பட்ட பொழுது அவனும் சிறைப்பட்டான். கிட்டுவையும் மற்றத் தோழர்களையும் இந்திய அரசு யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து கிட்டுவை மட்டும் விடுதலை செய்துவிட்டு, குட்டிசிறீ உள்ளிட்ட மற்றவர்களை இராணுவச் சிறையில் அடைத்தது.

தமிழீழத்திலிருந்து இந்திய இராணுவம் வெளியேறத் தொடங்கியபொழுதுதான் குட்டிசிறீ விடுதலை செய்யப்பட்டான். நான் அங்கு சென்றதற்குச் சில நாட்கள் முன்புதான் அவன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபா--கரன் அவர்களின் முகாமுக்கு வந்து சேர்ந்திருந்தான். கிட்டுவுக்கு மட்டுமல்லாமல், தலைவர் பிரபாகரனுக்கும் அவன் ஒரு செல்லப்பிள்ளையாவான். தலைவரின் மெய்க்காவல் படையில் ஒருவனாக இருந்த பொழுதிலும் அந்த முகாமில் சுறுசுறுப்பாய் பல்வேறு வேலைகளில் ஈடுபடுவது, அவன் வழக்கமாக இருந்தது. குறிப்பாக வெடிமருந்துத் தொழில்நுட்பத்தில் அவன் கைதேர்ந்தவனாக இருந்தான். மிகச் சிறிய வயதிலேயே இயக்கத்தில் சேர்ந்த அவனை எல்லோரும் குட்டிசிறீ என்று அன்புடன் அழைத்தார்கள். அவனுக்கு முதலில் தோட்டா கட்டும் வேலைதான் கொடுக்கப்பட்டது. பயன்படுத்தப்பட்ட தோட்டாக்களின் வெற்றுக்களை எடுத்து, அவற்றில் மருந்து நிரப்பிப் புதிதாக உருவாக்கும் வேலையை அவன் விருப்பமுடன் செய்தான். அந்த நாளிலிருந்து அவனுடைய சிந்தனை முழுவதும் வெடி மருந்து தொடர்பானதாகவே இருந்தது. புலிகளின் முதலாவது கண்டுபிடிப்பான 5 அங்குல மோட்டார் தயாரிக்கப்பட்டபொழுது அதில் அவனுடைய பங்களிப்பு பெருமளவில் இருந்தது. முதன் முதலாகத் தான் செய்த எறிகணையை வெற்றிகரமாக ஏவியபொழுது அவன் மகிழ்ச்சியில் திளைத்தான். புலிகளின் வரலாற்றில் இன்று நவீன தொழில்நுட்பங்களில் பல்வேறு வகையான எறிகணைகள், எறிகணை செலுத்திகள், கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் ஆரம்பப் புள்ளி குட்டிசிறீயின் 6 அங்குல மோட்டாரில் இருந்துதான் வெளிப்பட்டது. அந்த மோட்டாருக்குக் குட்டிசிறீ என்ற பெயர் சூட்டப்பட்டது. யாழ். கோட்டை இராணுவ முகாமை நோக்கி முதன் முதலாக எறிகணைகளைச் செலுத்தத் தொடங்கியபொழுது குட்டிசிறீ அருகில் ஆர்வமுடன் பார்த்தவாறு நின்றான். முதலாவது எறி-கணை முற்றவெளிக்குள் பயனற்று விழுந்து வெடித்தது. இரண்டாவது எறிகணை சற்று முன்னேறி அகழிக்குள் விழுந்தது. மூன்றாவது எறிகணை கோட்டையின் மதிற்சுவரைத் தாண்டி உள்ளே விழுந்து அதிர்ந்தது. மதிலுக்குப் பின்னேயிருந்த இரண்டு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். அந்த எறிகணைதான் கோட்டையிலிருந்த சிங்கள இராணுவத்தின் நிம்மதியான உறக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

குட்டிசிறீ வெடிமருந்து இயக்கம் தொடர்பாக நிறைந்த அறிவு பெற்றிருந்தான். அனுபவங்களிலிருந்துதான் அவன் கற்றுக் கொண்டான். 10வது வகுப்பில் இடைநிறுத்திவிட்டு இயக்கத்திற்குள் வந்த இவனுடைய தொண்டு வியக்கத்தக்கது. கிட்டுவின் முழுமையான அன்புக்கு உரியவனாகத் திகழ்ந்தான். கிட்டுவின் மீது அவனும் உயிரையே வைத்திருந்தான்.

ஒவ்வொரு களத்திலும் கிட்டுவுக்கு அருகில் நிழல்போல் நின்று அவருக்கு உறுதுணையாக இருந்தான். துரோகிகளின் குண்டுவீச்சில் கால் ஒன்றைக் கிட்டு இழந்தபொழுது அவன் வேதனையில் துடித்தான்.

1990 இல் எனது தமிழீழச் சுற்றுப் பயணத்தின் போது, ஒருமுறை சுதுமலையிலுள்ள அவனுடைய வீட்டுக்கு



அழைத்துச் சென்றான். அவன் வீட்டிற்குச் சென்றபொழுது அவனுடைய தாயும் மூத்த சகோதரிகளும் குட்டிசிறீயைக் கட்டிப்பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதனர். பல ஆண்டுகளுக்குப் பின்பு முதல் முறையாக அவன் தன் குடும்பத்தினரைச் சந்திக்கிறான் என்பதை அருகில் இருந்த நடேசன் எனக்குக் கூறினார். குட்டிசிறீயின் குடும்பம் சற்று வசதியான குடும்பமாகும். குடும்பத்தின் கடைக்குட்டி அவன். இராசையா சிறீ கணேசன் என்பது அவனுக்கு அவன் பெற்றோர் இட்ட பெயராகும். அவனுடைய குடும்பத்தினர் என்னை அன்புடன் வரவேற்று விருந்து அளித்து உபசரித்தனர். நான் புறப்படும் வேளை வந்தபொழுது அவனும் எங்களுடன் புறப்பட்டு நின்றான். நாங்கள், "வேண்டுமானால் சில நாட்கள் இருந்துவிட்டு வா" என்று சொன்னபொழுது அவன் கேட்கவில்லை.

"நீங்கள் இங்கு இருக்கும்வரை உங்களுக்குக் கார் ஓட்டும் வேலையைத் தலைவர் எனக்குக் கொடுத்திருக்கிறார். ஆகவே நான் உங்களுடனேதான் இருப்பேன்" என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டு எங்களுடனேயே புறப்பட்டு விட்டான். வழிமுழுவதும் எனது சிந்தனை அவனைப் பற்றியே இருந்தது. வசதிமிக்க குடும்பத்தில் பிறந்து வசதியான வாழ்க்கையையும், குடும்பப் பாசத்தையும் துறந்து காடு மேடுகளில் அலைந்து, உயிரைப் பயணம் வைத்து நாட்டிற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குட்டிசிறீயை நினைத்தபொழுது என் உள்ளம் அவனுக்காக உருகியது. இயக்கத்தின் மீதும் அதன் தலைமை மீதும் அவன் கொண்டிருந்த நம்பிக்கை அளவிடமுடியாததாகும்.

அதிலும் தளபதி கிட்டுவை அவன் தன் பெற்றோரைவிடக் கூடுதலாக நேசித்தான். அவர் வாழ்ந்தபொழுதிலும் அவருடைய நிழலாய் நின்றான். சாவின் விளிம்பில் அவர் நின்றபொழுதும் அவருக்கு அருகிலேயே நின்றான். பல்வேறு போர்க்களங்களில் மரணதேவதை கிட்டுவை நெருங்கி வந்தபொழுது கொஞ்சமும் அஞ்சாமல் அவருக்கு அருகில் நின்றான். 16 வயதில் விபரமறியாப் பருவத்தில் கிட்டுவுடன் சேர்ந்து நின்ற குட்டிசிறீ, எட்டாண்டுப் போராட்ட வாழ்க்கைக்குப் பின்பும் கிட்டுவின் அருகிலேயே நின்றான். கொந்தளிக்கும் கடலில் குமுறும் உள்ளத்தோடு நின்ற தளபதி கிட்டுவை, இந்திய வல்லாதிக்கத்தின் கடற்படை சுற்றி வளைத்தபொழுது, கிட்டு இட்ட ஆணையை ஏற்றுக் குட்டிசிறீ தன் தலைவனுடனேயே வீரச்சாவை அணைத்துக்கொண்டான்.

வாழ்ந்தபொழுதும் தளபதி கிட்டுவுடனேயே வாழ்ந்தான். சாவின் பொழுதும் அவருடனேயே மறைந்தான். லெப். கேர்ணல் குட்டிசிறீயின் வாழ்க்கை, தியாகங்கள் நிறைந்த வாழ்க்கையாகும்.

தளபதி கிட்டுவுடன் கடலில் மறைந்தவர்களில் கீழ்க்கண்ட வீரவேங்கைகளும் அடங்குவர்.

கடற்புலி கப்டன் ஜீவா. யாழ்ப்பாணம் பாசையூரைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் நடராசா மார்க் ஜெயராஜா என்பதாகும்.

கடற்புலி கப்டன் குணசீலன். இவர் யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் சேகன் குரூஸ் மைக்கேல் ஜீவா என்பதாகும்.

மேஜர் மலரவன். இவரை இயக்கத்தில் வேலன் என்று அழைப்பதும் உண்டு. பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் சுந்தரலிங்கம் சுந்தரவேல் என்பதாகும்.

கடற்புலி கப்டன் ரோசான்—யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் இரத்தினலிங்கம் அருணராஜா என்பதாகும்.

கடற்புலி கப்டன் நாயகன். இவர் வல்வெட்டித்துறை பொலிகண்டியைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் சிவலிங்கம் சேகரன் என்பதாகும்.

கடற்புலி லெப். தூயவன். யாழ்ப்பாணம் கண்டி வீதியைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் மகாலிங்கம் ஜெயலிங்கம் என்பதாகும்.

கடற்புலி லெப். அமுதன். யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் அலோசியஸ் ஜான்சன் என்பதாகும்.

கடற்புலி லெப். நல்லரசன். யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் சிவஞானசுந்தரம் இரமேஷ் என்பதாகும்.

தளபதி கிட்டுவுடன் உயிர்த்தியாகம் செய்த இந்த ஒன்பது விடுதலைப் புலிகளும் வரலாற்றில் என்றும் அழியாத முத்திரையைப் பொறித்து மறைந்தனர்.

- பழ.நெடுமாறன்

## இராஜதந்திரி...

1986 ஆம் ஆண்டு செப்டெம்பர் 4-5 நாட்களில் 'இந்து' நாளிதழுக்கு அளித்த செவ்வியில் அவர் பின்வருமாறு கூறினார்:

"மிக அண்மையில் நிகழ்ந்த ஒரு நிகழ்வை எடுத்துக் காட்டலாம். எஸ்.எல்.எம்.பி. தலைவர் விஜயகுமாரணதுங்கா சிங்கள மக்கள் மத்தியில் மேடையில் பேசமுடியாமல் போயிற்று. தமிழருக்கு ஆதரவு தெரிவிக்கும் எந்தச் சிங்கள அரசியல் கட்சியும் அங்கு இயங்க முடியாது என்பதை இது காட்டுகின்றது. இதனால்தான், எந்தக் காலத்திலும் சிங்கள அரசியல்வாதி-களை நாங்கள் நம்ப முடியவில்லை என்கிறோம். முற்போக்குக் குரல் அங்கே ஒலித்தால் அஃது உடனே அடக்கப்பட்டுவிடும்."

பிரபாகரன் இவ்வாறு கூறிய இரண்டு ஆண்டு காலத்திற்குள் விஜயகுமாரணதுங்கா சிங்கள இனவெற-யர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழாண்ட......

மற்றத் தோழர்களும் கிட்டண்ணையைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே எனத் தவித்திருப்பார்கள். ஆனால் சிக்கல் எல்லாரின் கைகளுக்கும் மேலே சென்றிருந்தது.

இந்திய வல்லாதிக்கப் பேய்கள் இறங்கி வரப்போவதில்லை.

எங்கள் தொலைத் தொடர்புக் கருவி கப்பலிலிருந்து வரும் செய்திக்காகக் காத்திருந்தது. தேசம் துடித்தது. தலைவர் தவித்துக் கொண்டிருந்தார். அவர் வளர்த்தெடுத்த தளபதி—கடினமான காலங்கள் எல்லாம் தோளோடு தோள் கொடுத்துழைத்த தோழன்—

சாவின் விளிம்பில்......

முடிவு உறுதியாகியது. ஒரு கணத்தில் கப்பல் சிதறும், காணாமற் போகும்.

கப்பற் சிப்பந்திகள் வெளியேறினார்கள்.

தேசம், அம்மா, அண்ணன், அன்பான மனைவி, தன்னில் உயிரை வைத்திருக்கும் தலைவன் எல்லோருமே கிட்டண்ணையின் நெஞ்சில் ஒருகணம் வந்துவிட்டுச் சென்றிருக்கலாம். ஆனால் வெளித்தெரியாது. விடைபெற்றிருப்பார்கள் - தேசத் திடமிருந்து, தோழர்களிடமிருந்து, தலைவனிடமிருந்து......

கடற்கரைக் கிராமத்து வீடொன்றில் கப்பலுடன் தொடர்பில் இருந்த தொலைத்தொடர்புக்கருவி நீண்ட நேரம் காத்திருந்தது. ஏதாவது செய்தி வராதா?..... வருகிறதா?......என்று.

"கிட்டண்ணையை இழந்து விட்டோம்"

கடல் ஆர்ப்பரித்தது. அலைகள் எழுந்து இதயத்தில் அடித்தன. தேசத்தின் நெஞ்சு துடித்தது, தவித்தது, கதறி அழுதது, ஒரு கணம் தயங்கி நின்றது. தாங்க முடியாத இழப்பு. எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்கமுடியாத இழப்புக்கள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் "தலைவன் இருக்கின்றான்" எனத் தொடர்ந்து செல்லும். அது கிட்டண்ணை சொல்லித் தந்த பாடம்.


தமிழீழக் கடலோடு கலந்திட்ட அடலேறு

# மாற்றான் வளவில் மரணத்தை விதைப்பவர்கள்

வே.பாலகுமாரன்

எதிர்பார்க்கப்பட்டது போலவே பிரான்சு தனது அடுத்த அணுகுண்டு வெடிப்பினையும் நிகழ்த்தி விட்டது. முன்னைய வெடிப்பின் போது உலகமே திரண்டு எதிர்த்த போதும் கல்லுளி மங்கன் போல பிரான்சிய சனாதிபதி சற்றும் அசையவில்லை. வலதுசாரியான யாக்குவிஸ் சிராக் சென்ற மே மாதம் பிரான்சிய சனாதிபதியான போதே இவ்வாறு இசகு பிசகாக ஏதாவது செய்வார் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஏனென்றால் சர்வதேச அரங்கிலே பிரான்சு தனது மீள் வருகையை நிகழ்த்த வேண்டுமாயின் தனது அணுவாற்றல் வலிமையை நிரூபிப்பதன் மூலமே முடியும் என்பது இவரது எண்ணம். இத்தகைய நிலைப்பாட்டிலே 1960களில் செயற்பட்ட பிரான்சின் முன்னைய சனாதிபதியான சார்ஸ் டி கோலையே தனது குருவாக சிராக் கொள்கின்றார். (1960 ஆண்டு பிரான்சு தனது முதல் அணுகுண்டு வெடிப்பினை சகாராவில் நடத்திற்று.) கலைந்து போன

கலைந்து போன ஏகாதிபத்தியக் கனவிலிருந்து இன்னமும் விடுபடாத பிரான்சின் ஆட்சியாளர் ஐரோப்பாவில் தமது தனித்துவத்தை நிலை நாட்ட பலவழிகளிலும் முயல்கின்றனர். இவ்விடயத்தில் அமெரிக்காவோடு போட்டிபோட முரண்டு பிடிக்க தமக்கு அணுவெடிப்பு ஆய்வுகள் அவசியமென இவர்கள் கருதுகின்றனர்.

ஏகாதிபத்தியக் கனவிலிருந்து இன்னமும் விடுபடாத பிரான்சின் ஆட்சியாளர் ஐரோப்பாவில் தமது தனித்துவத்தை நிலை நாட்ட பலவழிகளிலும் முயல்கின்றனர். இவ்விடயத்தில் அமெரிக்காவோடு போட்டிபோட முரண்டு பிடிக்கத் தமக்கு அணுவெடிப்பு ஆய்வுகள் அவசியம் என இவர்கள் கருதுகின்றனர். அண்மையில் வெளியான புள்ளி விபரமொன்றின்படி வளர்முக நாடுகட்கு ஆயுதம் விற்பதில் கூட பிரான்சே இப்போது முதலிடம் வகிப்பதாக தெரிகின்றது.

1993-ம் ஆண்டு இத்தகைய வணிகத்தில் 60 விழுக்காட்டினை வகித்த அமெரிக்காவோ சென்ற வருடம் 24 விழுக்காட்டு வணிகத்தையே நடத்தியது என்றும் பிரான்சோ 1993-ம் ஆண்டு 3.8 பில்லியன் டொலரிலிருந்து சென்ற வருடம் 11.8 பில்லியன் டொலராக தனது ஆயுத ஒப்பந்தங்களை அதிகரித்தது என்றும் தெரிய வருகின்றது. குறிப்பாக அல்ஜீரியா, றுவாண்டா போன்ற நாடுகட்கு ஆயுத விற்பனையை மேற்கொண்ட பிரான்சின் கொலைகாரப்புத்தி றுவாண்டாவில் 10 இலட்சம் பேர் படுகொலைக்கு வழிவகுத்த போது உலகிற்கு புரிந்தது. எனவே இப்போது பிரான்சைப்பொறுத்தவரை தனது அணுவாயுதங்களை நவீனப்படுத்துவதன் மூலம் மேலாண்மையை நிலை நாட்ட அணுகுண்டு வெடிப்பு ஆய்வுகள் அவசியமாகின்றன.

## குண்டு வெடிப்பின் கதை

எனவே பதவியேற்றவுடன் சிராக் அறிவித்த முதல் அறிவிப்பே இது பற்றியதாகியது. 1992-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நிறுத்திவைக்கப்பட்ட வெடிப்புக்களை மீண்டும் தொடரப்போவதாகவும், இவ்வருடம் செப்டெம்பர் தொட்டு அடுத்த வருடம் மே மாதத்திற்குள் 11.2 இலட்சம் தொன் ரி என் ரி (T.N.T.) வெடிப்பொருள் ஆற்றலுக்கு சமமான எட்டு வெடிப்புக்கள் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. இவ்வெடிப்புக்களை பசுபிக் பகுதியில் அமைந்துள்ள தனது குடியேற்றப் பகுதியான பொலினிசியன் தீவிலுள்ள இரு வெடிப்பு மையங்களான முரரோவா, பங்கட்டபுவா கற்பார்தளங்களில் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மோதிர வடிவிலமைந்த இவ்விரு (Mururoa atoll Fangatefua atoll) தளமுமே இன்று உலகின் கவனத்தை ஈர்க்கும் பகுதிகளாகி விட்டன. இதுவரை இரண்டு வெடிப்புக்கள் ஒவ்வொரு வெடிப்பு மையத்தில் ஒவ்வொன்றாக நிகழ்த்தப்பட்டுவிட்டன. இரண்டாவது வெடிப்பு பாரிய அளவிலானது. 100 கிலோ ரன்னுக்கு சற்றுக்கூடுதலான வெடியாற்றல் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (1kilo ton= 1000தொன் TNT)

முதல் வெடிப்பானது முரரோவா மையத்தில் நிகழ்ந்தது, இது 20 கிலோ ரன் வெடிப்பொருள் ஆற்றலுக்கு சமமானது.

இவ்வெடிப்புக்கள் நிகழ்த்தப்படும் விதம் கவனிக்கத்தக்கது. முரரோவாதளத்தின் அடிப்பகுதியிலமைந்துள்ள இறுகிய எரிமலைக்கரும்பாறையினுள் முதலில் 800 மீற்றர் ஆழத்திற்கு துளைபோடப்பட்டுள்ளது. இச் சுரங்கக் குழிக்குள் 20மீற்றர் நீளமும் 1.5மீற்றர் அகலமும் கொண்ட உலோகக் குழாயொன்று இறக்கப்படும். இதனுள் அணு வெடிப்பு முனையும் (Nuclear War head) கணிப்பு பதிவு கருவிகளும் கண்ணாடி இழை நாரிலான கேபிள்களும் இருக்கும். தொலை இயக்கு மையத்தோடு தொடர்பு கொண்டவை இக் கேபிள்கள். பின்னர் இத்துளை மண், பாறைச்சிதைவுகள் சீமேந்துக் கலவை மூலம் இறுக மூடப்படும். இதன் பின்னர் தொலை இயக்கு முறையால் இயக்கப்பட்டு அணுகுண்டு வெடிப்பு நிகழ்த்தப்படும். இவ் வெடிப்பு நிகழ எடுக்கும் நேரம் எம்மால் கருத்தில் கொள்ள முடியாத மிகக் குறுகிய நேரமாகும். ஒரு செக்கனில் மிகச் சிறிய கூறான நானோ செக்கண்ட் (Nano Second-One billionth of a Second) எனப்படும் கணிப்பிற்குள்ளே எல்லாம் நடந்து முடிந்து விடும். இதற்குள்ளே வெப்பநிலை அமுக்கம் என்பன பல மில்லியன் பாகை அளவிற்கு உயரும். பதிவுக் கருவிகளும் இதற்குள்ளே அவற்றை பதிவாக்கும் ஒரு சில நிமிடநேரத்திற்குள் உலகெங்குமுள்ள புவியதிர்வினை பதிவாக்கும் கருவிகள் தமது ( Seismo graph) றிச்டர் அளவில் (Richter Scale) 5.05 புள்ளி அதிர்வை முதல் வெடிப்பின் போது பதிவாக்கின. இவையெல்லாம் கண்ணால் காண முடியா அதிர்வலைகள். வெடிப்பு நடந்ததற்கு ஆதாரமாக மனிதன் புறக்கண்ணால் காணக்கூடியது முரரோவா தளத்தை சூழவுள்ள பச்சை கலந்த நீலக் கடல் தயிர் கடையும்போது கலங்கி திரிந்து நுரை தள்ளுவதைப் போன்று கடல் நுரை தள்ளி உயர்வதைத்தான். இத்தோடு வெடிப்பின் கதை முடிந்துவிடும். கதிர் வீச்சு எச்சமும் வெடிப்பொருளும் உருகி திரவமாகி பாறையோடு பாறையாக வைப்பாகிவிடும்.

## உள்நோக்கம்:

பிரான்சே எதிர்பார்க்காத சருவதேச எதிர்ப்பு: சொந்த மக்களில் 60 விழுக்காட்டினர் எதிர்ப்பு என்பனவற்றிற்கு மத்தியிலும் பிரான்சு வெடிப்புக்களை தொடர்வதன் மருமம் என்ன? பிரான்சு எத்தகைய காரணங்களைக் கூறினாலும் அதன் அடுத்த புதிய தலைமுறை வகை நீர்மூழ்கிகளில் பொருத்தப்படவிருக்கும் TN 75 என அழைக்கப்படும் அணுவெடிப்பு முனைகளைச் சீராக்கி செம்மைப்படுத்தவும் ஏனைய தனது வெடிப்பு முனைகளின் தரங்களைப் பரிசீலிக்கவும் புதியவகை தோற்றங்களைக் கணணிகளுக்கு அளிப்பதற்குமாக இவ்வெடிப்புக்கள் நிகழ்த்தப்படுகின்றன என்பதே உண்மை. பரிசில் இயங்கும் ஆய்வு மையமொன்றின் இயக்குனரோ குறைந்த கதிர்வீச்சுள்ள நியுட்ரோன் அணுகுண்டினைத் தயாரிக்கவே இவ் வெடிப்புக்கள் என அபாயச் சங்கு ஊதுகின்றார். எது எப்படியிருந்தபோதும் பிரான்சு கூறும் அல்லது கூறாது மறைத்து வைக்கும் சகல காரணங்கட்கும் இன்று மேற்குலகமே தகுந்த பதிலைக்கூறி பிரான்சை முழுமையாக அம்பலப்படுத்துகின்றன. ஏற்கனவே 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவெடிப்பு முனைகள் உள்ள நிலையில் அவற்றைக் குறைப்பது பற்றி உலகம் ஆராய்கையில் கிரோசிமா-நாகசாகியின் அழிவின் 50வது ஆண்டு நினைவின் நிழலசைகையில் இவ்வாறு தனது அணுவெடிப்பு முனைகளை நவீன மாக்க பிரான்சு எடுக்கும் முயற்சி முழு அபத்தம் என்றே இவை கூறுகின்றன. முன்னர் பனிப்போர் நிலவிய போது சோவியத் அச்சம் காரணமாக தன் ஏவுகணைகள் தொடர்பில் பிரான்சு காட்டிய அக்கறை பனிப்போர் முடிவடைந்த நிலையில் ஏன் என்றும் இன்று பிரான்சின் எதிரி யார்? என்றும் இவை கேள்வி எழுப்புகின்றன. பிரான்சுக்கு நவீன தொழில்நுட்பம் ஏதும் தேவையாயிருந்தால் அதனைத் தாம் வழங்கத் தயார் என்றும் கூறுகின்றன. ஆனால் பிரான்சோ பனிப்போர் முடிவடையவில்லை என்றும் புதுப்புது சக்திகள் உலக அரங்கில் தோற்றம் பெறுவதால் தனது பாதுகாப்புக்குப் பங்கம் உண்டு என்கின்றது. அத்தோடு மேற்குலக



எது எப்படியிருந்தபோதும் பிரான்சு கூறும் அல்லது கூறாது மறைத்து வைக்கும் சகல காரணங்கட்கும் இன்று மேற்குலகமே தகுந்த பதிலைக்கூறிப் பிரான்சை முழுமையாக அம்பலப்படுத்துகின்றன. ஏற்கனவே 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவெடிப்பு முனைகள் உள்ள நிலையில் அவற்றைக் குறைப்பது பற்றி உலகம் ஆராய்கையில் கிரோசிமா-நாகசாகியின் அழிவின் 50வது ஆண்டு நினைவின் நிழலசைகையில் இவ்வாறு தனது அணுவெடிப்பு முனைகளை நவீனமாக்க பிரான்சு எடுக்கும் முயற்சி முழு அபத்தம் என்றே இவை கூறுகின்றன.

அணுவாயுதப் பரம்பல் தடை உடன்பாடு (C.T.B.T. Comprehensive Test Ban Treaty) நடைமுறைக்கு வரமுன்னர் தனது வெடிப்புகளை நிகழ்த்தவும் முனைகின்றது. எனவே பிரான்சின் இத்தகைய போக்கு மேற்குலக நாடுகட்கே பெருத்த அவமானத்தை ஏற்படுத்திவிட்டது. இதற்கிடையில் சீனாவோ தானும் வெடிப்புக்களை நிகழ்த்துகின்றது. அது தனது பிரதேசத்திலே இவற்றை நடத்துவதால் பிரான்சின் அடுத்தவன் வளவில் ஆய்வு வெடிப்பு நடத்தும் செயல் சீனாவிற்குச் சாதகமாகிவிட்டது.

அடிமடியில் நெருப்பும் அதனால் எதிர்ப்பும் இவையெல்லாம் ஒருபுறமிருக்க பிரான்சின் இத்தகைய அடாவடித்தனத்தால் தென் பசுபிக் நாடுகள் தமது அடிமடியில் நெருப்பைக் கட்டியவன் நிலையில் உள்ளன. அணு வெடிப்புக்களால் உடனடியாக கதிர் வீச்சு அபாயமில்லையெனக் கூறப்பட்டாலும் அடுத்த நூற்றாண்டு தொடக்கத்தில் அணுக்கதிர் வீச்சு கழிவுப் பொருட்கள் படிந்துள்ள எரிமலைப் பாறைகள் பிளந்து கதிர்வீச்சினைத் தரும் அணுக்கசிவுப் பொருட்களைக் கடலுக்குள் தள்ளாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை என்பதால் சில ஆயிரம் கிலோ மீற்றர் தள்ளியிருந்தாலும் நியுசிலாந்து, அவுஸ்திரேலியா அலறுகின்றன. பிரான்சோடான தமது வணிக உறவுகளை முறித்தல், பிரான்சியப் பொருட்களை வேண்டாது புறம்தள்ளல், பெரும் எதிர்ப்புப் பேரணிகளை நடத்தல் என இங்கெல்லாம் பெரும் எடுப்பில் எதிர்ப்புக்கள் காட்டப்படுவது பிரான்சே எதிர்பார்க்காத சங்கதியாகிவிட்டது. அது மட்டுமன்றி பிரித்தானியா தவிர்ந்த சகல உலக நாடுகளும் மிகக் கடுமையான கண்டனங்களைத் தெரிவிக்கின்றன. அத்தோடு பிரான்சே எதிர்பார்க்காத அளவில் தனது அணுவெடிப்புக்களை நடத்தும் பொலினிசியன் மக்களே (இவர்களில் பலர் இவ்வெடிப்பு மையங்களில் பணிபுரிபவர்கள்) பெரும் வன்முறை நிரம்பிய எதிர்ப்புக்களை நாள்தோறும் பொலினிசியத் தலை நகரான தைகிற்றியில் (Tihiti) காட்டி வருகின்றனர். இத்தகைய மக்கள் எதிர்ப்புக்கு அணு வெடிப்பின் அபாயம் மட்டுமன்றி தமது அடிமை நிலைக்கு முடிவு வராதா என்கிற விடுதலை உணர்வுமே காரணம் எனத் தெரிகின்றது. முதல் வெடிப்பின் பின்னர் தைகிற்றியின் மக்கள் ஆவேச வன்முறை நிகழ்வுகளை பிரான்சியர்க்கு எதிராக நடத்தினர்.

தைகிற்றியின் சருவதேச விமான நிலையம் மிக மோசமாகத் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. பிரான்சுக்குச் சொந்த மான பல கட்டடங்கள் தீக்கிரையாகின. கடுமையாக பிரெஞ்சுப் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கைகள் எடுக்க நேரிட்டது. பொலினிசியாவிற்குச் சுதந்திரம் கோரும் தலைவரொருவர் "சிராக்" ஒரு மோசமான குற்றவாளி என்கின்றார்.

ருஷ்யாவின் செர்னோபில் அணுவாலை அனர்த்தத்தை பிரான்சு மறந்ததேன் எனக் கண்டிக்கும் நியுசிலாந்து மக்கள் இது

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

# இட்சாக் ராபின் படுகொலை

# அமெரிக்க நலனுக்குக் கிடைத்த பதிலடி!

இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ராபின் அவர்கள் சிகால் அமீர் என்ற யூத இளைஞர் ஒருவரால் சுட்டுக் கொல்லப் பட்டதானது, மேற்காசியாவையும் உலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ராபினின் கொலை எதிர்பார்க்கப்பட்ட அமைதியைக் குலைத்து ள்ளதா? என்ற சந்தேகத்தை எல்லோர் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறாயின் ராபின் சமாதான விரும்பியா? அல்லது சமாதான வாதியாக மாற்றப்பட்டாரா? இஸ்ரேலிலும் மேற்காசியாவிலும் அடுத்த கட்டம் என்ன? என்பதே எல்லோர் மத்தியிலுமுள்ள கேள்வி.



## ராபினின் சமாதானம்?

ராபின் 18 வயதிற் படையிற் சேர்ந்தவர். 1967ஆம் ஆண்டு அரபு உலகத்துக்கு எதிராக நடந்த பெரும் போரை வழி நடத்தியவர். இவரது திட்டங்களித்தான் பாலஸ்த்தீனியரின் இருப்பி டங்கள் பறிக்கப்பட்டதுடன் கோலான் குன்று, காஸா, சினாய், ஜெருஸஸ், மேற்குக்கரை என்பவற்றை இஸ்ரேல் கைப்பற்றியது. பாலஸ்த்தீ னியருக்கு எதிராக பெரும் இன அழிப்பையும், ஆக்கிரமிப்பையும் மேற்கொண்ட படைக்கு இவர் தளபதியாக இருந்தவர். 1968 ஆம் ஆண்டு இராணுவத்திலிருந்து விலகியவர். அதன் பின் இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தவர். பின்னர் 1992ம் ஆண்டு லிக்குட் கட்சியில் போட்டியிட்டு பிரதமராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர். ஆனால், அவரது அரசியல் வாழ்வை விட 27 ஆண்டு கால இராணுவப் பதவியே அவரை இஸ்ரேலிலும், உலகத்திலும் முதன்மையானவராக மாற்றியது.



ராபினின் மரணத்தைப் பாலஸ்தின மக்கள் துயரத்துடன் வரவேற்கவே விரும்பினர். காரணம் ராபின் தளபதியாக இருந்த போதே பாலஸ்தீன மக்கள் குடியேற்றப் பகுதியிலிருந்து விரட்டப்பட்டனர். இவ்வாறு அசல் இராணுவவாதியாக இருந்த ராபின் நிச்சயமாகச் சமாதான விரும்பியாக இருந்திருக்க மாட்டார். இதனைப் புரிந்து கொள்ள உலக அரசியலை சற்று அவதானிப்போம்.

மேற்காசிய சமாதானத்துக்கு முக்கிய தடையாக இருந்த இஸ்ரேல் ஓரளவுக்கு ராபினின் வரவால் மாற்றப்பட்டது. ஆனால் ராபின், ஆட்சியைக் கைப்பற்ற மட்டுமே அமெரிக்காவைப் பயன்படுத்தலா மென நினைத்தார். ஆனால் அது எல்லையை மீறி ராபினைக் கைதியாக்கியது. அமெரிக்கா தொடர்ந்தும் நெருக்கடியைக் கொடுத்து வந்தது. ராபின் யூத தேசியத்தை பாதுகாப்பதா அமெரிக்காவின் கோரிக்கையைப் பாதுகாப்பதா என்ற போரா ட்டத்தில் அமெரிக்கா பக்கம் சாய்ந்தார். ஏனெனில் அமெ ரிக்காவை மீறி அவரால் ஆட்சி நடத்த முடியாத இக்கட்டான நிலையேற்பட்டது.

புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு ஏற்பட்ட பின்னர், அமெரிக்கா மட்டுமே உலக அரசி யலைத் தீர்மானிக்கும் சக்தி ஆகும். சோவியத்தின் வீழ்ச்சி பாலஸ்த்தீன விடுதலையைத் தனிமையாக்கியதுடன் முழுமையாக முடமாக்கியுமிருந்தது. இதனாலும் உலக ஒழுங்கில் ஒவ்வொரு பிராந்தியத்தையும் அமெரிக்கா தமது நலனுக்காக வளைத்துப் பிடிக்க வேண்டிய தேவை ஏனைய பிராந்தியம் போல மேற்காசியாவிலும் உருவாகியது. ஈராக் மீதான அமெரிக்கக் கூட்டுப் படை யுத்தத்தின் பின்னான அமைதியைத் தொடர்ந்தும் பேணவேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. இத்துடன் ஈராக் மீதான யுத்தத்தின் பின்னர்தான், தன்னிடம் இல்லாத சில ஆயுதங்களையும், தொழில்நுட்பப் பலத்தையும் இஸ்ரேலும் கொண்டிருக்கிறது என்று அமெரிக்காவுக்குத் தெரிந்தது. இதனை அமெரிக்க ராஜதந்திரி கென்றி கீசிங்கரே ஒரு தடவை கூறியிருந்தார். இதனால் அமெரிக்கா, ஈராக் தனக்கு ஏற்படுத்திய நெருக்கடியை விட இஸ்ரேலினால் நீண்ட காலத்துக்குப் பின்னர் ஆபத்து ஏற்படலாமென அச்சமடைந்திருந்தது. இதனால் இஸ்ரேலுக்கு இராணுவப் பொருளாதார ரீதியில் நெருக்கடியைக் கொடுத்தது. அத்தகைய நெருக்கடி இரு அரசுகளையும் முரண்பாடுள்ளவர்களாக மாற்றியது.

ஆனால் இச்சம்பவம் அரங்கேறியிருந்த போதே, இஸ்ரேலிற் பொதுத் தேர்தல் நடந்தது. அதில் அமெரிக்கா, லிக்குட் கட்சியைத் தோற்கடித்து தொழிற் கட்சியை ஆட்சியில் அமர்த்தப் பல முயற்சிகள் எடுத்து வெற்றி பெற்றது.

ராபின் அமெரிக்காவில் இஸ்ரேலியத் தூதுவராக நீண்ட காலம் இருந்தார் என்பதைக் குறிப்பிடுதல் பொருத்தமாக அமையும். தொழிற் கட்சி வெற்றி பெறுமாயின் 10 பில்லியன் அமெரிக்க டொலர் இஸ்ரேலுக்கு வழங்குவதாக இஸ்ரேலுக்கு ஜோர்ச் புஸ் நிர்வாகம் உத்தரவாதம் வழங்கியிருந்தது.

மேற்காசிய சமாதானத்துக்கு முக்கிய தடையாக இருந்த இஸ்ரேல், ஓரளவுக்கு ராபினின் வரவால் மாற்றப்பட்டது. ஆனால் ராபின், ஆட்சியைக் கைப்பற்ற மட்டுமே அமெரிக்காவைப் பயன்படுத்தலாமென நினைத்தார். ஆனால் அது எல்லையை மீறி

அரபு இஸ்ரேல் பிணக்கு 1993இல் செய்யப்பட்ட உடன்படிக்கையின் பின்பு அமைதியானத் தீர்வை நோக்கி நகர்ந்தது. ஆனால் ஹமாஸ் அமைப்பின் திடீர் வளர்ச்சி அதாவது இஸ்லாமிய அடிப்படைவாதப் பிரிவின் வளர்ச்சி பாலஸ்தீனரின் அமைதி வாழ்வைக் குலைவடையவே செய்தது.

ராபினைக் கைதியாக்கியது. அமெரிக்கா தொடர்ந்தும் நெருக்கடியைக் கொடுத்து வந்தது. ராபின் யூத தேசியத்தை பாதுகாப்பதா அமெரிக்காவின் கோரிக்கையைப் பாதுகாப்பதா என்ற போராட்டத்தில் அமெரிக்கா பக்கம் சாய்ந்தார். ஏனெனில் அமெரிக்காவை மீறி அவரால் ஆட்சி நடத்த முடியாத இக்கட்டான நிலையேற்பட்டது. ஆனால் ராபின் முழுக்க முழுக்க அமெரிக்காவிடம் சரணடையவில்லை. தனது இராணுவ, அரசியல் இராஜதந்திரத்தை நாசுக்காகப் பயன்படுத்தினார். மேற்காசிய நிலைமையை உள்வாங்கிக் கொண்டு தமது நாட்டை அமெரிக்கா பக்கம் தனித்து தங்கி நிற்க விடாது சீனா, இந்தியா, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளுடன் இராணுவ, பொருளாதார உறவுகளை உருவாக்கினார். அரபு உலகத்துடனான சமாதானமும் அத்தகையதே. தற்காலிகமாக அமெரிக்காவின் நலனுக்கு விட்டுக் கொடுப்பதுடன் இஸ்ரேலை ஸ்திரப்படுத்தினார். மறுபக்கமாகப் பார்த்தால் பாலஸ்தீனப் போராட்டம் முன்வைத்த அடிப்படைத் திட்டங்களைக் கைவிட்டதுடன் இஸ்ரேல் வழங்கும் பிச்சைக்காக காத்திருக்கும் நிலைக்கு பாலஸ்தீனப் போராட்டத்தை மாற்றினார். ராபின் பாலஸ்தீனியருக்கு விட்டுக் கொடுப்பதாக உடன்பட்ட பகுதிகள் (காஸா, ஜெரிக்கோ) நிர்வாக ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் பாலஸ்தீனியருக்கு அச்சுறுத்தலானதே.

## யூதர்கள்

ராபினைச் சுட்ட இளைஞன் யூதனே. அதுவும் மேற்கு குடியேற்ற வாசி. யூதர்களில் பலர் ராபினை ஒரு துரோகியாகவே நினைக்கின்றார்கள். இஸ்ரேலிய மண்ணை விற்றவர் என ராபினை விமர்சித்தார் சுட்ட இளைஞன். யூதர்களின் மன உணர்வுகள் 1948, 1967, 1978 ஆண்டுகளைப் போலவே இப்போதும் இருக்கின்றன. அடிப்படையிலிருந்த உணர்வுகளை அப்படியே பிரதிபலிக்குமளவுக்குத் தற்போதுமுள்ளனர்.



மேலும், யூத அடிப்படைத் தேசிய உணர்வு தற்போது உருவாகியி ருக்கிறது. ராபினின் தந்திரம் யூதர்களை இரு கூறுகளாகப் பிரித்துள்ளது என்பது மட்டும் உறுதியானது. யூதர்கள் 10 லட்சம் பேர் ராபினுக்கு அஞ்சலி செலுத் தினார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் அதில் அனேகமானோர் ராபின் 1967 இல் பெற்றுத்தந்த வெற்றிக்காகவே அந்த அஞ்சலி யைச் செலுத்தினர்.

யூதர்களின் அடிப்படை உணர்வு கள் என்றுமே சமாதானத்துக்கான பக்கத்தைத் தரிசிக்க மறுக்கின்றது. அமீர் தனது செயலை நினைத்துப் பெருமிதமடைவதாக அவரது கருத்துக்கள் இருக்கின்றது. இது ஒவ்வொரு யூத இளைஞனையும் யூத அடிப்படைவாதத்தின்பால் இழுக்கின்ற செயலாகவே முடியும்.

## அரபு-இஸ்ரேல் பிணக்கு

அரபு இஸ்ரேல் பிணக்கு 1993 இல் செய்யப்பட்ட உடன்படிக்கையின் பின்பு அமைதியான தீர்வை நோக்கி நகர்ந்தது. ஆனால் ஹமாஸ் அமைப்பின் திடீர் வளர்ச்சி அதாவது இஸ்லாமிய அடிப்படைவாதப் பிரிவின் வளர்ச்சி பாலஸ்தீனரின் அமைதி வாழ்வைக் குலைவடையவே செய்து வருகிறது. ஏனெனில் யூதர்களும், பாலஸ்தீனியரும் அருகருகே இருப்பதுடன் யூதரும் பாலஸ்தீனியரும் ஒரே நாட்டுக்குள்ளே வாழ்ந்தும் வருகின்றனர். இது தொடர்ந்து வரும் பிணக்காகவே அமையும். தொழிற் கட்சியின் ஆயுள் மிகவும் குறைந்துள்ளது. அடுத்த தேர்தலில் யூதர்கள் மாற்றுக்கட்சியை ஆட்சிக்கு கொண்டுவருவார்களாயின் நிலமைகள் சற்று நெருக்கடிக்குள்ளாகும். இதுவே அரபு-இஸ்ரேல் பிரச்சினையைத் தீர்மானிக்கும் நடைமுறையாகும்.

தொடர்ச்சி 26 ஆம் பக்கம்

# இன்னொரு பங்களாதேஷ் பாக்கிஸ்த்தானில் உருவாகிறது?

பாக்கிஸ்தானின், கராச்சி இப்பொழுது தினமும் கலகங்களும், சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் நடக்கும் நகராகிவிட்டது.

நாளாந்தம் பொதுமக்கள் கொல்லப்படு வதோடு, அங்கு வசிக்கும் வெளிநாட்ட வர்கள் கூட வன்செயல்களிற் தாக்கப்படும் அளவுக்கு நிலமை கட்டுக் கடங்காமல் மாறி வருகிறது.

கராச்சி நகரின் இன்றைய நிலை பெனரசிர் பூட்டோவின் அரசாங்கத்திற்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இந்த வகையில், பாக்கிஸ்தானில் மீண்டும் ஒரு பங்களாதேஷ் உருவாகிவிடும் என மோதல்களில் ஈடுபடும் ஒரு தரப்பான முகா ஜிர்களின் தலைவர் அல்ராப் ஹூசைமின் கூறுவது ஒரு கட்டத்தில் உண்மையாகி விடுமோ எனவும் அரசியல் ஆய்வாளர்கள் சந்தேகப்படவும் ஆரம்பித்துள்ளனர்.

1947 இல் இந்திய உபகண்டம் பிரிந்து பாக்கிஸ்தான், இந்தியா என இருநாடு களாகியது. தமக்கு ஒரு நாடு கிடைத்து விட்டது என்ற பெருமகிழ்ச்சியுடன் உப கண்டத்தில் இருந்த முஸ்லீம்கள் பாக்கிஸ் தானுக்கு ஓடினார்கள். பீகாரில் இருந்த முகாஜிர்களும் அவ்வாறு ஓடியவர்களில் ஒரு பிரிவினர் ஆவர்.

இவர்கள் சிந்து மாகானத்தின் புறநகரப் பகுதியிற் குடியேறினார்கள். பாக்கிஸ்தான் அரசை முழுமூச்சுடன் ஆதரித்த இவர்கள் அரசிற்கும் இராணுவத்திற்கும் பெரும் விசுவாசத்துடன் நடந்து கொண்டார்கள்.

காலப் போக்கில் இவர்களின் விசுவாசத்தில் வெடிப்பு ஏற்பட்டது. தாங்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவதாக உணர்ந்தனர்.

இவர்கள் உரிமை கேட்டபோது தாக்கப் பட்டார்கள். அப்பாவிகள் கொலையுண்டனர். மனக்கசப்பு உரிமைப்போராக உருவெடு த்தது. அல்ராவ் ஹூசெயின் இளைஞர் உரிமைப் போருக்குத் தலைமை தாங்க முன்வந்தார். இவர் 1980 இல் அகில பாக்கிஸ்தான் மாணவரமைப்பைத் தோற்று வித்தார். அது அதிக வரவேற்பைப் பெறவ- ில்லை. பின்னர் முகாஜிர் குவாமி இயக்கத்தை (அகதிகள் தேசிய முன்னணி) அமைத்தார். 1986–1987 இல் கூட்டங்கள் நடத்த முற்பட்ட ஆதரவாளர்களுக்கும் காவற் துறையினருக்கும் இடையிற் கை கலப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து முகாஜிர்கள் வாழ்ந்த கிராமங்கள் தாக்கப்பட்டன. பாதன் (Pathan) என்ற இனத்தவரே இவர்களைத் துப்பாக்கியாற் தாக்கினார்கள். பலர் ஸ்தலத்திலேயே கொல்ல ப்பட்டனர். அடுத்த நாள் இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகப் பல பாதன் இனத்தவர் கொல்லப்பட்டனர். இதனை யடுத்து MQM முனைப்புப் பெற ஆரம்பித்தது.

1987 இல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடை பெற்றது. அதிற் போட்டியிட்ட இம்முன்னணி கராச்சியிலும் ஹைதராபாத்திலும் பெரு வெற்றியீட்டியது. அந்த மாகாணத்தின் மற்ற இனக் குழுவான சிற்றிகளுக்கு இது கசப் பூட்டியது. சிற்றிகள் தாக்கினர். 300 க்கும் அதிகமான முகாஜிர்கள் கொல்லப்பட்டனர்.

அரசியல் வாதிகள் தங்கள் சுயனலத்திற்காக முகாஜிர்களைப் பயன்படுத்தத் தவறவில்லை. 1988 ல் பெனாசீர் பூட்டோவின் கட்சி கராச்சியில் பெரு வெற்றியீட்டியது. அதற்கு முன்னணியுடன் செய்து கொண்ட ஒப்ப ந்தமே காரணம். பின்னர் பெனாசீர் வாக்கு றுதிகளைக் காற்றில் பறக்க விட்டார். ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட முன்னணி நவாப் ஷெரீப் தலமையின் கீழுள்ள எதிர்க்கட்சியுடன் இணைந்தது.

அடுத்த தேர்தலில் ஷெரீப் கராச்சியிற் பெரு வெற்றியீட்டினார். இது முகாஜிர்களுக்கு அவர்களின் அரசியற் பலத்தை உணர் த்தியது.

ஆயினும் இருகட்சிகளும் அவர்களைப் பயன் படுத்தினார்களே தவிர அவர்களுக்கு உதவவில்லை. எஞ்சியது இராணுவத்தின ரின் உதைகளும் தாக்குதல்களுமேயாகும். ஹூசெயின் இப்போது இலண்டனிற் தலைமறைவாக வாழ்கிறார். கைதுகளுக் கோ சிறைவாசத்திற்கோ அஞ்சித்தான் இங்கே வரவில்லை என்றும் தனது மக்களின் அன்புக் கட்டளையை ஏற்றேதான் லண்டனுக்கு வந்ததாகவும் கூறுகிறார். தொலைபேசிப் பேச்சுகள் மூலம் ஹூசெயின் தனது மக்களை வழிநடத்துகிறார்.

அவர் லண்டனில் இருந்து தெலைசேியிற் பேசும் பேச்சுக்கள் ஒரே நேரத்திற் பல இடங்களிற் செலூலர் தொலைபேசியின் மூலம் கேட்கப்படுகின்றன.

இதேவேளை இந்திய அரசினதும் உளவுத்துறையினரதும் பின்பலம் முகாஜிர் களுக்குக் கிடைத்திருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பெனாசீர், முன்னணியை நசுக்கப் பல முயற்சிகளை மேற் கொண்டுள்ளார். துப்பா க்கி ஏந்திய எலிகள் என அவர்களை அழைக்கிறார்கள்.

பெனாசீர் சர்வதிகாரிபோல் நடக்கிறார். மனம் குளம்பிப் போயிருக்கிறார் எனக் ஹூசெயின் கூறுகிறார். வெளி நாடுகளுக்கு நேர்மை யானவராகவும், உள்நாட்டிற் தங்களை நசுக்குபவராகவும் இருக்கிறார் எனக் கூறுகிறார். கிளர்ச்சிகள் தொடர்கின்றன, கராச்சி கொலைக்களமாகி வருகின்றது. சென்ற மாதங்களில் பலர் கொல்லப்பட்டனர். கொலைப்பட்டியல் நீள்கின்றது. கொலை களுக்கு முன்னணி மட்டும் பொறுப்பல்ல என்பது பத்திரிகையாளர்களின் கருத்தாகும்.

எங்களை அதிகம் சீண்டவேண்டாம், சீண்டினாற் பங்களாதேஷ் போல் நாங்களும் பிரிந்து போக நேரிடும். என எச்சரிக்கிறார் ஹூசெயின். வன்முறையை அதைவிட வன்முறையால் முறியடிக்க பெனாசீர் அரசு முயற்சிக்கிறது. இது தொடர்ந்தால் இன்னும் 5 அல்லது 10 வருடங்களில் 70களில் இருந்தது போன்ற பெய்ரூட் இங்கேயும் உருவாகி விடும்மெனக் கூறுகிறார் ஓர் உயர் பொலிஸ் அதிகாரி.

# மாற்றான் வளவில்...

பிரான்சின் நெப்போலியடிகோவிய திமிர் என்றும் ஏன் பிரான்சு தனது கொல்லைப் புறத்தில் இவ்வெடிப்புக்களை நிகழ்த்தக் கூடாது என்றும் கேள்வி எழுப்புகின்றனர். அவுஸ்த்திரேலியப் பிரதமர் போல் கிட்டிங்கோ பசுபிக் பகுதியில் பிரான்சின் தொடர்பே இப்போது சட்டரீதியான கேள்விக்குள்ளாகிவிட்டது என்கின்றார். இப்போது இறுதியாகக் கிடைத்த செய்தி களின்படி அவுஸ்த்திரேலியா, நியுசிலாந்து, பபுவாநியுகினி உட்பட 16 தென் பசுபிக் நாடுகளின் ஒன்றியம் பிரான்சுடனான தமது உறவுகளைத் துண்டிக்கப்போவதாக அறி வித்துவிட்டன.

## கிறின் பீஸ் (Green peace)

1970களிலிருந்தே பிரான்சின் அணுவெடிப்பு முயற்சிகட்கு எதிர்ப்பு தெரிவிப்பது மட்டுமன்றி அதனை தடுக்கவும் முயலும் கிறின்பீஸ் என்ற சூழல் காப்பு இயக்கம் இம்முறையும் தனது பிராதான கப்பல்களான றெயின்போ வொரியர் ஐஐ(Rainbow worrier II)– றெயின்போ வொரியர் நியுசிலாந்தின் ஒல்லாந்து துறையில் 1985ஆம் ஆண்டு பிரான்சிய உளவு அமைப்பால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதன் 10ம் ஆண்டு நினைவு கூரப்படுகின்றது. ஆஏ கிறின்பீஸ் உள்ளடங்கிய 25 சிறிய கப்பலணியொன்றை வெடிப்பு மையங்கள் நோக்கி செலுத்த முற் பட்டன. கறுப்புடை தரித்த பிரான்சிய கொமாண்டோக்கள் விசைப்படகுகளில் சென்று இவ்விரு கப்பல்களையும் தடுத்து வைத்து தமது அடாவடித்தனத்தை நிரூபித்துள்ளனர். பிரான்சின் இத்தகைய நடவடிக்கைகள் பெரும் எதிர்ப்பை உலகெங்கும் ஏற்படுத்தியுள்ளன. எவ்வளவுதான் பிரான்சு வெளித்தோற்றத்திற்கு பிடிவாதமாகவிருந்தாலும் உலக எரிர்ப்புகண்டு திகைத்துப் போயிருப்பதாகவும் தனது வெடிப்புக்களை இதனால் குறைக்கக்கூடும் என்று கருதப்படு கின்றது.

எது எப்படியிருந்தாலும் பிரான்சின் செயற்பாடானது அழிவின் ஆரம்பமென்றே பலரும் கருதுகின்றனர். ஏற்கனவே ஓசோன் மண்டலத்தில் ஓட்டை விழுந்து சூரியபுற ஊதாக்கதிர்கள் உள்வரும் கரியமில வாயுவெளியேற்றத்தால் காற்று மண்டல வெப்பம் அதிகரித்து கடல் நீர் மட்டம் மெலிதாக உயரப் போகும் ஆபத்து, இவற்றோடு பிரான்சின் இத்தகைய போக்கின் ஆபத்தும் சேர்ந்தால் என்னவாகும் என உலகம் கணக்குப் போடுகின்றது. எனவே தனது மேலாண்மைக்காக மாற்றான் வளவில் நஞ்சை விதைப்பவர்கள் இன்னொரு கிரோசிமா நாகசாகியை உருவாக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? என்ற கேள்வியே இப்போது மிஞ்சியுள்ளது.


சுவிட்சலாந்தில்,

தமிழர் புனர்வாழ்வு நிதிக்காக

கண்ணதாசன் கலைமன்றமும், LYSS இள நட்சத்திர விளையாட்டுக் கழகமும், LENGNAU துடுப்பாட்டக் கழகமும் இணைந்து நடாத்தும்

கலைவிழா!

நிகழ்ச்சி:-

1. வரவேற்புரை
2. தலைமையுரை
3. பரதநாட்டியம்
4. கவி அரங்கம்
5. அபிநயம்
6. சிறப்புரை
7. பாட்டுக்குப் பாட்டு
8. நாடகம்
9. இசை நிகழ்ச்சி

சிறப்பு நிகழ்ச்சி:– பார்வையாளர்களை நடுவர்களாக நியமித்து, சிறந்த பாடகரைத் தெரிவு செய்து பரிசு வழங்கல் (பரிசு: தங்கச் சங்கிலி)

இடம்: BULUMENRAIN . 24, 2503, BIEL

காலம்: 20–01–1996

சனிக்கிழமை மாலை 2.00 மணி.

அன்பளிப்பு: இந்துப் பணம் தமிழீழத்தில் அல்லலுறுகின்ற எமது உடன்பிறப்புக்களுக்காக என்பதை மனதில் கொண்டு உங்கள் மனக்கதவுகளைத் திறவுங்கள்.

# இருள் சூழ்ந்த போது ஒளியைப் பிறப்பித்தவர்கள்

"எந்தத் துயர் வந்தாலும் கலங்காதீர். பேரிடி விழுந்தாலும் மனம் தளராதீர். கொண்ட இலக்கில் குறி வைத்துச் செயற்படும் தலைமை இருக்கும் வரை எதற்கும் அஞ்சாதீர் எனத் தமிழீழ மக்களை நோக்கி ஆறுதல் சொல்கின்றார்கள் றுவாண்டாவின் 'துட்சி' இன மக்கள். அவர்கள் பட்ட துயரம், இழந்த இழப்புக்கள் போல் எவருக்கும் ஏற்பட்டதாக வரலாறு இதுவரை சொல்லவில்லை. 10 வாரத்திற்குள் 7–10 இலட்சத்திற்கும் இடைப்பட்ட மக்களைப் பறிகொடுத்தவர்கள் அம்மக்கள். உலகின் நரகம், கொலைக்களம், சுடுகாடு, பிணக்கிடங்கு என வருணிக்கப்பட்டது அவர்கள் தாயகம். இம்மக்கள் தலைவிதி முடிந்தது என உலகம் எண்ணும் போதே கிளர்ந்தெழுந்த அவர்கள் விடுதலை அமைப்பு, துண்டம் துண்டமாகக் கண்டங்கோடரியால் கொத்திக் குதறப்பட்ட தம் மக்களின் சதைக்குவியல் மேல் நடந்துசென்று விடுதலையை தம் மக்கட்குப் பெற்றுக்கொடுத்தது. 5 வருடங்கட்கு முன் கரந்தடிப்படையாக றுவாண்டாவில் போராடத்தொடங்கிய றுவாண்டா தேசப்பற்றாளர் முன்னணியும் அதன் தளபதி போல் ககாமேயும் இன்று றுவாண்டாவின் ஆட்சியாளர்கள். இது வரை காலமும் அழுதவர்கள் இப்போது சிரிக்கின்றார்கள். அழவைத்தவர்களோ இப்போது அழுகின்றார்கள். இத்தனைக்கும் றுவாண்டா நாட்டின் 15 விழுக்காட்டு தொகையையே கொண்டவர்கள் 'துட்சி' மக்கள். அதேவேளை, 85 விழுக்காட்டு பெரும்பான்மைக் கூட்டு இன இராணுவத்தைத் தோற்கடித்து எவ்வாறு வெற்றிவாகை சூடினர் துட்சி மக்கள் என்பதை அறிவதே எமக்கான இன்னொரு பாடமாகின்றது. ஏனென்றால், கதை முடிந்தது என்ற போது அவர்கள் புதிய கதையை எழுதினார்கள். இருள் சூழ்ந்தது என்ற போது அவர்கள் ஒளியைப் பிறப்பித்தார்கள். தோற்றார்கள் என்ற போது அவர்கள் வென்றார்கள். இது எவ்விதம் நிகழ்ந்தது? எமக்கும் அவ்விதமே நிகழப்போகின்றது. ஐரோப்பிய ஏகாதிபத்திய காலகட்டத்திலே எங்கும் நடந்தது போலவே றுவாண்டாவிலும் நடந்தது. முதலில் ஜேர்மனியின், பின்னர் பெல்ஜியத்தின் கைகளிலும் றுவாண்டா சிக்கிய போது பெரும்பான்மை கூட்டு இனத்தார்க்கும் சிறுபான்மை துட்சி இனத்தார்க்குமிடையே பிரித்தாளும் உத்தி பயன்படுத்தப்பட்டு பகைமையின் நச்சு விதைகள் ஊன்றப்பட்டன. அவை வளர்ந்து பெரு நச்சு விருட்சமாகிய போது உலகம் என்றுமறியா படுகொலைகள் நடந்தேறின. 1950 களில் ஒரு இலட்சம் பேர், 1970 களில் ஒன்றரை இலட்சம் பேர் எனப் படுகொலைகள் தொடர்கதையான போது துட்சி இன மக்கள் அருகிலிருந்த ஆதரவு நாடான உகண்டாவிற்கு இலட்சக்கணக்கில் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். பல்லாண்டு கால அகதி வாழ்க்கை அவர்களைச் செயலற்றவர்களாக்கவில்லை. பதிலாகத் தாயகத்தை மீட்க அகதி முகாம்களிலிருந்தே ஆயிரக் கணக்கில் போராளிகள் தோன்றினர். பயிற்சிகள் பெற்றனர். சிக என அழைக்கப்படும் றுவாண்டா தேசப்பற்றாளர் முன்னணி என்கிற பெயரினர் போராட்ட அணியாகினர். 1990–ம் ஆண்டளவில் போராளி இயக்கம் றுவாண்டா திரும்பித் தனது விடுதலைப் போரைத் தொடங்கியது. தொடக்கத்தில் தளர் நடை போட்ட இயக்கம் மெல்ல மெல்ல வளர்ந்தது. 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட கூட்டு இராணுவத்திற்கும் அதற்கு பிரான்சு, அமெரிக்கா போன்றவை வழங்கிய நவீன கனரக ஆயுத தளபாடங்கட்கும் எதிராக, ஒரு சில ஆயிரம் இளம் போராளிகள் தமது உயிரை விலையாக்கிப் போராடினர். இப்படியானதொரு கட்டத்திலே அப்போதைய தளபதி சண்டையொன்றில் இறக்கவே போல் ககாமே அவ்விடத்திற்கு நியமிக்கப்படு கின்றார்.

**கதை முடிந்தது என்ற போது அவர்கள் புதிய கதை எழுதினார்கள். இருள் சூழ்ந்தது என்ற போது அவர்கள் ஒளியைப் பிறப்பித்தார்கள். தோற்றார்கள் என்ற போது அவர்கள் வென்றார்கள்.**

போல் ககாமே தலைமை தாங்கிய பின் கதை மாறியது. இரண்டு வயதிலே அகதியாகச் சென்று அகதி முகாமிலே வளர்ந்தவர் ககாமே. தனது சொந்த வாழ்விலும் படையணியிலும் மிக இறுக்கமான கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கடைப்பிடிப்பவர். அதேவேளை எல்லாவர்க்கும் இடமளிக்கும் தன்மையும் பொறுமையும் கொண்டவர். உலகிலே நீண்ட நாட்களுக்குத் தூங்காமலும் உணவு உண்ணாமலும் கொண்ட இலட்சியத்திற்காக உழைத்தவர் எனப் பெயர் பெற்றவர் ககாமே. தொடக்கத்தில் பலவீன நிலையிலிருந்த சிக இயக்கத்தைப் பொறுப்பேற்ற போது அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். "யார் என்னோடு வரப் போகின்றீர்கள்? போரிடுதல் என்பது துப்பாக்கிகளையோ அல்லது பிரதேசங்களையோ பொறுத்ததல்ல. அது மனங்களையே பொறுத்தது. நாங்கள் கம்புகளால் ஏன் கற்களாற் கூடப் போராட முடியும்." பின்னர் சிக பெரு வெற்றிகளைக் கண்டு நாட்டின் மூன்றிலொரு பகுதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த போதே சென்ற வருடத்தைய உலகத்தையே உலுக்கிய படுகொலைகள் நடந்தன.

**போரிடுதல் என்பது துப்பாக்கிகளையோ அல்லது பிரதேசங்களையோ பொறுத்ததல்ல. அது மனங்களையே பொறுத்தது. நாங்கள் கம்புகளால் ஏன் கற்களாற் கூடப் போராட முடியும்.**

இதுவரை நடந்த படுகொலைகளின் உச்சமாக பல இலட்சம் பேர் சில வாரங்கட்குள்ளே பெரும்பான்மை கூட்டு இன கொலைக் குழுக்களால் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். தலைநகரான கிகாலியே பிணக்கிடங்காகியது. அச்சத்தினால் வதிவிடம் விட்டு வெளியே வராத மக்கள் சில வாரங்களின் பின் பட்டினியாலும், நோயாலும் வீடுகட்குள்ளே மாண்டனர். தெருவெங்கும் கைக்கோடாரிகளாலும் கத்திகளாலும் கை கால்கள் சீவப்பட்டுக் கண்ட துண்டமாக்கப்பட்ட தலையற்ற முண்டங்கள் நிரம்பிவழிந்தன. பிணவாடையே எங்கும் மேலெழுந்தது. ஆனால் இவ்வளவு படுகொலைகள் நிகழ்ந்த போதும் சற்றேனும் நிதானம் இழக்கவில்லை. தடுமாறவில்லை. கொண்ட இலக்கினது வழி தவறவில்லை ககாமே. இவற்றிற்கெல்லாம் முடிவுகட்ட வேண்டுமாயின், முன்னரைவிடத் தீவிரமாகப் போராடி தாயக மண்ணை மீட்பதே ஒரே வழி, இறுதி வழி என உரைத்த ககாமே இதன் பின்னரே கூட்டு இராணுவத்திற்கு மரண அடியைக் கொடுக்கத் தொடங்கினார். பல்லாயிரம் படைகட்கு புதை குழிகள் தோண்டப்பட்டன. மிகுதிப் படைகள் சிதறி தலை தெறிக்க அயல் நாடுகட்கு ஓடினர். ஓடியோரை தேடிப் பழிவாங்கினர் சிக போராளிகள். இப்போது றுவாண்டாவின் ஆட்சியாளர் அவர்கள். கூட்டு இனத் தோரில் நல்லோரையும் இணைத்து ககாமே செய்யும் ஆட்சியின் ஒழுங்கையும் சிறப்பையும் உலகம் இன்று அங்கீகரிக்கின்றது.

**படுகொலைகள் நிகழ்ந்த போதும் சற்றேனும் நிதானம் இழக்கவில்லை. தடுமாறவில்லை. கொண்ட இலக்கினது வழி தவறவில்லை ககாமே. இவற்றிற்கெல்லாம் முடிவுகட்ட வேண்டுமாயின் முன்னரைவிடத் தீவிரமாகப் போராடித் தாயக மண்ணை மீட்பதே ஒரே வழி, இறுதி வழி என உரைத்த ககாமே இதன் பின்னரே கூட்டு இராணுவத்திற்கு மரண அடியைக் கொடுக்கத் தொடங்கினார்.**

எனவேதான் 'துட்சி' மக்கள் தமிழீழ மக்களை நோக்கி அஞ்ச வேண்டாம் என ஆறுதல் கூறுவதாக முன் சொன்னோம். 50 ஆயிரம் இராணுவத்திற்கு சென்ற வருடம் புதைகுழிகள் தோண்டப்பட்டது அங்கே. இன்னொரு நாற்பதாயிரம் சிங்கள இராணுவத்திற்கு புதைகுழிகள் தோண்டப்படப்போவது இங்கே. அகதி முகாம்களினது ஆயிரக்கணக்கான போராளிகள் இணைந்தமையே இத்தனைக்கும் காரணம் என்பது தெளிவான நிலையில் எமைப் பார்த்து அவர்கள் சொல்கின்றார்கள். 'ஆற்றல்மிகு கரங்களிலே ஆயுதங்கள் ஏந்துவதே மாற்றத்திற்கான வழி' இதை மனதிற் கொள்ளுங்கள்.

**வே.பாலகுமாரன்**

இந்திய வல்லரசின் நயவஞ்சகத்தால் உயிர் நீத்த கேணல் கிட்டு அவர்களினதும் சக ஒன்பது போராளிகளினதும் 3ம் ஆண்டு நினைவு

தமிழ் பொங்கல் திருநாள்

காலம் : 14.01.1996, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 4.00 மணிக்கு
இடம் : Villa Torino-Corsamedeo di Savoia

நிகழ்ச்சிகள்

* மங்கள விளக்கேற்றல்
* மாவீரரின் நினைவாக அஞ்சலிப் பாடல்
* சிறப்புரை * கவிதை

மாலதி கலைப்பள்ளி மாணவிகள் - கலைபண்பாட்டுக் கழக நடன கலைஞர்கள் (பலேர்மோ) இணைந்து வழங்கும் :
* 'ஈழம் எங்கள் தாயகம்' * 'பரணி பாடுவோம்'
* 'உன்னத விடுதலை உச்சாங்களே'
* "ரணசுறு ரணசுறு சூரையா" பாடல்களுக்கு அபிநயம்
* நாடகம்
"அவர்கள் வழியில்"
* கீர்த்தனாஸ் இசைக்குழுவினர் வழங்கும்
"புரட்சிக் கானங்கள்"
* நன்றியுரை

முக்கிய குறிப்பு :-
மக்களும், கலைஞர்களும் இத்தாலியின் பலபகுதிகளில் இருந்து வருகை தரவிருப்பதினால் குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகளை ஆரம்பிக்க உள்ளோம்.
மண்டபத்தினுள் வீடியோ, புகைப்படக் கருவிகள் அனுமதிக்கப்படமாட்டது

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - நாப்போலி கிளை

# விழிப்பு

ரமணனுக்குக் குழப்பமாகவிருந்தது. ராஜன் தப்பிவிட்டான். அவன் ஜேர்மனியில். கரன் கொழும்பில்.

"சீ...நான் எவ்வளவு பிழை விட்டிட்டன். பேசாமல் வெளிநாடு போயிருக்கலாம், அல்லது கொழும்பிலாவது இருந்திருக்கலாம். இப்ப ஒண்டுமில்லாமல் நடுத்தெருவில் நிற்கிறன்"–கவலை அவனைச் சூழ்ந்தது.

அவனது சொத்தெல்லாம் அழிந்துவிட்டது. மிஞ்சியது இரண்டு உரப்பைகள்தான். ஒன்றில் சமையல் சாமான்கள், மற்றதில் உடுப்புகள்.

தற்காலிகமாகத் தங்குவதற்கு இடங்கிடைத்தது, ஓரளவுக்கு ஆறுதல் என்றாலும் துயரம் அவனை இருளாக மூடியிருந்தது.

மத்தியானச் சமையலுக்கு கறி வாங்கச் சாவகச்சேரி சந்தைக்குப் போனவன் கரனைக் கண்டான்.

"என்ன மச்சான் இந்த நேரம் பார்த்து இஞ்ச வந்திருக்கிறாய்.....இஞ்ச நான் படுகிறபாடு....." கரனைக் கேட்டான் ரமணன்.

"உனக்கென்ன தெரியும்? நீ இஞ்ச சுதந்திரமாய் திரியுறாய். இப்ப நினைச்சால் பளைக்கும் போவாய், பருத்தித்துறைக்கும் போவாய். அங்க 'லொட்ஜ்'க்கு வெளியில இறங்கேலாது. 'லொட்ஜ்'க்கையே வந்து பிடிக்கிறதும், அடிக்கிறதும். போனமாதம் ஏழுதடவை என்னைப் பிடிச்சிருக்கிறாங்கள். தமிழனிட்டை, காசு கறக்கிறதிலையும் அடிமைப்படுத்திறதிலையும் சிங்களவன் ருசி கண்டிட்டான் மச்சான். இனி அங்கை இருக்கேலாதெண்டு திரும்பி வந்திட்டன்"

கரனின் பதிலில் ரமணன் உறைந்து போனான். இனிக் கொழும்புக்குப் போகேலாது என்பது சூனியமாகவே தெரிந்தது.

"நான் வன்னிக்குப் போக யோசிக்கிறேன். அங்கை சித்தப்பாவின்ரை காணி கிடக்குது. இருக்கிற காசு செலவழியிறதுக்குள்ளை அங்கினை போய் தோட்டமாவது செய்யலாம்"

கரனது பேச்சுக்கு அவன் எதுவும் சொல்லவில்லை. அவனது சித்தப்பாவின் முகவரியைக் கேட்டுக் குறித்துக்கொண்டான். கடையொன்றில் தேநீர் குடித்தார்கள்.

"ராஜன்தான் கெட்டிக்காரன். ஜேர்மனிக்குப் போயிட்டான்"–இது ரமணன். அவனிடம் ஆதங்கம் தெரிந்தது.

"ராஜன் செத்திட்டான் மச்சான்"

"என்ன"

"ஜேர்மனியிலை 'நவநாஸி'களின்ரை எரிகுண்டுத் தாக்குதலிலை ராஜனும் இரண்டு குழந்தைகளும் செத்துப் போச்சினம். பேப்பரிலை கூட வந்தது. மிஞ்சினது பொஞ்சாதியும் ஒரு பிள்ளையுந்தான்...பாவமடா அவன்"

ரமணனுக்குத் திசையெல்லாம் சுற்றியது.

கடையில் அமர்ந்திருந்தவனுக்கு நேரே, சுவரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி வாசகமே நெஞ்சிலடித்தது.

"எமக்கென்றொரு நாடு கிடைக்கும் வரை நாம் எங்குமே நிம்மதியாக வாழ முடியாது".

**–ஞானமுத்து**

# நம்பிக்கைகள்

1. மூட்டை முடிச்சுகள் கட்டப்பட்டிருந்தன.
"என்ன வன்னிக்குப் பயணமோ?"
"ஓம்....இப்ப அதைவிட வேறுவழியில்லை...."
"வேற வேலையில்லை...எத்தினை தரம் இடம்பெயருறதாம்...?"
"சொந்த இடத்திற்குப் போய் நிலை கொள்ளும் வரை இப்பிடித்தான் இருக்கும்...."
"எத்தனை காலத்திற்கு அலையிறதாம்.....?"
"சும்மா சலிக்காதை.....எரிச்சலாயிருக்கு......."
"இனி வன்னி....அதுக்குப் பிறகு....?"
இவன் முறைப்புடன் அவனைப் பார்த்தான். பின் 'நறுக்'கென சொல்லிய வார்த்தையில் தெறித்த உறுதி அவனை வாயடைக்க வைத்தது....
"அதுக்குப்பிறகோ.....? அதுக்குப்பிறகு யாழ்ப்பாணத்திற்கு.....என்ரை மண்ணுக்கு...."

❖❖❖

2. "யாழ்ப்பாணத்திலை" ஆமித்தொல்லை..... தென்மராட்சியிலை இலையான் தொல்லை.....வன்னிக்குப் போனா நுளம்புத் தொல்லை... மனுசனுக்கு எங்கை போனாலும் ஏதோ கரைச்சல் இருக்கத்தான் செய்யுது...." அப்பா அலுத்துக் கொண்டார்.

"இலையானையும், நுளம்பையும் கூட அடிச்சோ, மருந்தடிச்சோ கலைக்கலாம்.....இந்த ஆமிச்சனியங்களை என்ன செய்யிறதாம்....." அம்மா விசனப்பட்டாள்.....

ஆமியையும் அடிச்சுத் துரத்தலாம் தானே......நிறைய ஆக்கள் சேர்ந்தா..... முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சின்ன மகனின் வார்த்தைகளினூடே ஒரு மகத்தான உண்மையின் கீற்றுத் தெரிந்ததைப் பெற்றோர்கள் உணர்ந்து கொண்டனர்.

❖❖❖

3. "எல்லாவற்றையும் விட்டிட்டும் வந்தாச்சு.....இருந்ததை வித்தும் திண்டாச்சு இனி என்ன செய்யிறது....? அவள் ஏக்கத்துடன் கேட்டாள்.
"ஏதாவது சின்னதா.....விறகு யாவாரமாவது செய்வம்..."–இது அவன்.
"உங்களாலை ஏலுமே...? நெஞ்சு வருத்தம் ஒரு பக்கம்..."
"ஏதாவது செய்தாத்தானே வாழ முடியும்?"
–அவள் நெடுமூச்சு சுடுமூச்சாகியது. அவன் தொடர்ந்தான்.
"எல்லாத்தையும் விட்டிட்டம்தான். ஆனால் வாழ வேண்டும் என்ற நம்பிக்கையை விடக்கூடாது.....நம்மை நாமே கைவிடக் கூடாதெல்லே"
–அவன் உறுதியுடன் எழுந்தான்.

**–மாதங்கி–**

# கவலையின் இருப்பிடம்

"ஏன் இப்படி இடி விழுந்தவன் மாதிரி இருக்கின்றாய்?" கொண்டல்மரத்தடிக்கு வந்துவிட்ட பயம், கவலையிடம் கேட்டது.

"தமிழீழ மண்ணில் நான் வாழ்வதற்கு இடங்கிடைக்கவில்லை. எனினும் ஆங்காங்கே சில மூலைகளிற் குந்தியிருக்க முடிந்துள்ளது" கவலை, பதிலளித்தது.

"அதுக்கு இப்ப என்ன நடந்து விட்டது?"

"அழிவும், குழப்பமும் பேராசையுடன் புறப்பட்டுவிட்டதால் குந்தியிருந்த இடமும் பறிபோய்விட்டது" கவலை பதிலளித்தது.

"இதற்கு முன்பாக எங்கே குடியிருந்தாய்?"

பயத்தின் கேள்வி இது. தன்னிலை மறந்து சிரித்தது கவலை. யாழ்ப்பாணத்தின் "காங்கேசன்துறை வீதியில் ஒரு இருமாடி வீடு. வீட்டுச் சொந்தக்காரர்களின் பிள்ளைகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாட்டில். தாங்களும் போனால் வீட்டைப் பார்க்க ஆளில்லாமற் போய்விடும் என்பது வயது முதிர்ந்த அப் பெற்றோரின் எண்ணம். எனக்கும் அங்கேதான் குடியிருப்பு வாய்த்தது" கவலை பதில் கூறியது.

"அதுக்கு ஏன் முப்பத்திரண்டு பல்லையும் காட்டிச் சிரிச்சனி?" பயத்தின் குரல் கோபத்தின் வாடை.

"எனக்கு முன்னுக்கு நீ அந்த வீட்டுக்குப் போயிருந்தாய், அதாலைதான் அந்த இளம் பிள்ளையள் பெத்தவர்களையும் விட்டிட்டுப் போனதுகள். அதை நினைச்சன் சிரிப்பு வந்திட்டுது" கவலை தெரிவித்தது.

"பிள்ளையள் வெளியில போனதோட எனக்கு அங்க வேலையில்லாமற் போச்சு. அப்ப நான் வெளிக்கிட்டிட்டன்" பயம் தனது நியாயத்தை எடுத்துக் கூறியது.

"மெய்தான். ஆனா அதுக்குப் பிறகு எனக்கு அங்க ஒவ்வொரு நாளும் நிறைய வேலை. கடிதக்காரனைக் காணயில்லை எண்டா–கடிதம் வரேல்லையெண்டா–வருகிற கடிதங்களில் ஆருக்கும் தடிமன், காய்ச்சல் எண்டு ஏதாவது துக்கச் செய்தியெண்டா–உடன என்னைத்தான் கூப்பிடுவினம். கதிரையில இருந்து இரண்டு பேரும் காலமை கதைக்கத் தொடங்கினா இரவு படுக்கப் போகும் வரையும் என்னை அங்கால, இங்கால அசும்ப விடாயினம்" கவலையின் குரலில் ஒரு வித பெருமிதம்.

"அடி சக்கை... அப்ப உன் பாடு கொண்டாட்டம் எண்டு சொல்லன்" பயம் கேலி பேசியது.

"அழிவிற்கும் குழப்பத்திற்கும் பேராசை பிடிக்கச் சதியும் கூட்டுச் சேர்ந்தது. நாங்கள் ஓடி வர வேண்டியதாய்ப் போச்சு" கவலை கூறியது.

"ஆனா நாங்கள் இங்கையும் இருக்கேலாது கண்டியோ" பயம் எச்சரிக்கை செய்தது.

ஏன் என்று கேட்டது கவலை.

"அங்க பார்... என்னைத்தூக்கி எறிஞ்சுபோட்டு சனமெல்லாம் துணிவின்ரை பக்கம் கோகுது. நான் குந்தியிருக்க ஒரு இடமும் இல்லாமல் தனிச்சுக் கொண்டெல்லே இந்தப்பக்கம் வந்தனான்" பயம் சுட்டிக் காட்டிய திசையில் கவலையின் பார்வை விரிந்தது.

தன்னம்பிக்கையும், துணிவும் கூட்டுச் சேர்ந்து ஆயுதங்களைச் சரிசெய்து கொண்டிருந்தன. ஏராளமான பேர்கள் பற்றைக் காடுகளையும், சதுப்பு நிலங்களையும் நீர்நிலைகளையும் கடந்து துணிவையும் தன்னம்பிக்கையையும் தேடிப் போய்க் கொண்டிருந்தனர். "பேராசை பிடித்த அழிவும், குழப்பமும் மட்டுமல்ல, சதியும் நல்லா வாங்கிக் கட்டப் போகுது" கவலை தெரிவித்தது. பயமும் தலையாட்டியது, 'ஆம்' என்ற அர்த்தம் தொனிக்க.....

**கரு: மங்கேஷ்**


தளபதி கேணல் கிட்டுவினதும் ஒன்பது வீரவேங்கைகளினதும்

## வீரவணக்க நிகழ்வு

இடம்: GRURUD SAMFUNNSHUSSET
GARDS VEJEN - 6

காலம்: 21.01.1996 மாலை 6.00 மணி

நோர்வேயில்

நடனம்

அஞ்சலிப் பாடல்கள்

பேச்சு: தமிழகத்திலிருந்து வருகைதந்துள்ள அருட்தந்தை சேவியர் அருள்ராஜ்

இடப்பெயர்வு விபரணம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# அறிவு சமிக்கட்டும்

-முருகையன்-

'அறிஞரின் இதய ஓடை ஆழ நீர் தன்னை மொண்டு' தருவது பத்திரிகைகளின் பணிகளுள்ளே தலையாயது என்று பாவேந்தர் பாரதிதாசன் தமது பாட்டொன்றில் உணர்த்தியுள்ளார். அறிஞர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மக்களுக்குமே 'இதய ஓடை' உண்டு. இதய ஓடை என்பது தான் என்ன?

'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் எண்பது கோடி நினைந்து எண்ணுவான்' என்பது பழம் பாட்டொன்றின் பகுதி. மனிதர் யாவரின் உள்ளந்தோறும் எண்ணங்களும் எழுச்சிகளும் உணர்வுகளும் இடையறாது ஓடிக் கொண்டிருக்கின்றன. இடைவிடாத திரைப்படம் ஒன்று நமக்குள்ளே நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. விழிப்பு நிலையில் இந்தத் திரைப்படம் தெளிவாய்த் தெரிகிறது. கனவு நிலையிலே படம் மங்கலாகின்றது.ஆழ்ந்த உறக்கத்தில், படத்தின் 'இடைவேளை' விடப்படுகின்றது.

இந்த மனத் திரைப்படம் வெறும் ஊமைப் படமல்ல.

வசனங்களும் பாட்டுக்களும்கூட இதிலுண்டு. இந்த மனத்திரைப்பட ஓட்டத்தை நாம் 'இதய ஓடை' என்று சொல்லலாம். அதை 'நனவோடை' என்று குறிப்பிடுவது மேலும் பொருத்தமாகும். நனவோடையில் வரும் வசனங்களும் பாட்டுக்களும் பெரும்பாலும் ஒலிக்கப்படாமல் உள்ளடங்கி மவுனமாய் உள்ளன. அவை பேசாத பேச்சுக்கள், பாடாத பாட்டுக்கள், அவைதான் நனவோடையின் மொழி சார்ந்த கூறுகள்.

> சிந்தனையாளரோ, அறிஞரோ, கலைஞரோ, எழுத்தாளரோ-எவராயிருந்தாலும், தமது மொழியைப் பேசும் அல்லது பயன்படுத்தும் மக்களுடன் தாய் மொழியிற் பேசுவதும் எழுதுவதும் தான் இயல்பாகும். அதுவே நயமும் பயனும் தரும். அதுவே விளைதிறன் மிக்க செயலாயும் இருக்கும்.

(2)

நனவோடையின் மொழி சார்ந்த கூறுகளிற் பெரும் பகுதி, ஒருவரின் தாய் மொழியில் அமைவதுதான் வழமையாகும். ஒருவரின் பிறப்புத் தொடக்கம் வளர்ச்சிக் காலத்தின் ஊடாக, வாழ்க்கைக்காலமெல்லாம் மிக நெருக்கமாகப் பழகிப் பயிலப்படும் மொழியினையே நாம் தாய் மொழி என்கிறோம்.

நாம் தமிழர். நமது தாய் மொழி தமிழ். தமிழர்களின் நனவோடையில் மிகப்பெரும் பகுதி தமிழில் அமைகிறது. தமிழர்களின் நனவோடையும் அவ்வாறு அமைவதுதான் இயல்பாகும்.

ஆனால், இன்று நம்மிடையே வாழும் தமிழறிஞர் எனப்படுவோரில் சிலர் பன்மொழிப் புலமையாளராய் உள்ளனர். வேறும் பலர் தமிழுடன் ஆங்கிலத்தையேனும் பயன்படுத்தும் இரு மொழியாளராய் உள்ளனர். இவர்களின் பேச்சும் எழுத்தும் சிலவேளைகளில் தமிழாயும் சில வேளைகளில் ஆங்கிலமாயும் அமையும். சில வேளைகளில் இரண்டும் கலந்தும் அமையும். அவ்வாறே, இவர்களின் நனவோடையும் சில வேளைகளிலே தமிழ் மயமாகவும், சில வேளைகளிலே ஆங்கில மயமாகவும், சில வேளைகளிலே இரண்டும் கலந்தும் அமையும்.

என்றாலும், ஒருவரது தாய் மொழி நனவோடையே அவருக்கு மிக நெருக்கமானதாக, அந்தரங்க உறவு பூண்ட ஒன்றாக இருக்கிறது. இது ஒருவரது பண்பாட்டுத் திளைப்பின் 'உயிரியற்கை' என்று கூறலாம்.

எனவே சிந்தனையாளரோ, அறிஞரோ, கலைஞரோ, எழுத்தாளரோ – எவராயிருந்தாலும், தமது மொழியைப் பேசும் அல்லது பயன்படுத்தும் மக்களுடன் தாய் மொழியிற் பேசுவதும் எழுதுவதும்தான் இயல்பாகும். அதுவே நயமும் பயனும் தரும். அதுவே விளைதிறன் மிக்க செயலாயும் இருக்கும்.

இதே வேளை, இன்றைய சூழ்நிலையில் எங்கள் 'தமிழறிஞரிற்' சிலர், தமிழை விட ஆங்கிலத்தில் அதிகம் பேசுவோராயும் எழுதுவோராயும் படிப்போராயும் இருப்பதைக் காண்கிறோம். இதனால் இவர்களின் இதய ஓடை அல்லது நனவோடை ஆங்கிலமயமாக மாறிப்போய்விட்டது என்று கருத இடமுண்டு. இவர்களிற் சிலர் தம் ஆங்கிலப் புலமைக்கு அதிக முக்கியத்துவம் தருவதனால், தமிழ் மொழி மூலம் சிந்திக்கும் பழக்கத்தைக் கடுமையாகக் குறைத்துக் கொண்டு விட்டனரோ என்று கருதவும் இடம் இருக்கிறது. அப்படிப் பட்டவர்கள் ஆங்கிலத்தில்(அல்லது பிற மொழியில்) சிந்தித்துத் தமிழில் எழுதியும் பேசியும் வருகின்றனர்.

இவ்வாறு செய்வது சில சிக்கல்களுக்கும் சிரமங்களுக்கும் காலாகின்றது. அந்தச் சிக்கல்களையும் சிரமங்களையும் விரிவாக எடுத்து நோக்குவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல.

மாறாக, தமிழ் எழுத்துலகிலே, பிறமொழிகளின் வாயிலாகப் புதுமையான புறவுலகத்துக் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு, தமிழில் அவற்றைத் திறம்பட விளக்கிப் பயன்செய்த முன்னோடிகள் சிலரைச் சற்றே நினைவு கூர்வோம்.

(3)

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து ஐம்பதுகளின் ஊடாக, தொண்ணூறுகளுக்கு நாம் வரும் வழியிலே, பிற நாட்டு நல்லறிஞர் சிந்தனைகளைக் கற்றறிந்த தமிழறிஞர் பலரை நாம் சந்திக்கின்றோம். இவர்களிற் பலர், பரந்து பட்ட மக்களின் பால் பரிவும் அக்கறையும் பூண்டு உழைத்தமையையும் நாம் காண்கின்றோம். தமது அறிவையும் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் தம்மைச் சூழவுள்ள மக்களிடையிற் பரப்பும் வேட்கை அவர்களிடம் காணப்பட்டது. இவ்வாறு பரப்ப முற்பட்டபொழுது, இரண்டு விதமான பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியோராய் அவர்கள் இருந்தனர்.

ஒன்று மொழி மாற்றம். ஆங்கிலம் வாயிலாக இவர்கள் கற்றுக் கொண்ட கருத்துக்கள், எண்ணக் கருத்துக்கள், சிந்தனைகள் தமிழ் மொழிக்குப் புதியவை. எனவே அவற்றுக்கு ஈடான சொற்களையும் சொல் வழக்குகளையும் அவர்கள் படைத்துக் கொள்ள வேண்டியோர் ஆயினர். அந்தச் சொல் வழக்குகள் புதியன ஆகையால், அவற்றை விளங்கப்படுத்த வேண்டிய பொறுப்பும் அவர்களையே பெரிதும் சார்ந்தது.

அடுத்த சிக்கல், விடயங்களை எளிமைப் படுத்திக் கொடுத்தல் பற்றியது. புதிய விடயங்களை இலகுவாய் விளங்கவைக்கும் துணைக் குறிப்புக்களும், உதாரண விளக்கங்களும், உவமைகளுங் கூட அவசியமாயின. கல்வியறிவு குறைந்தவர்களுக்கு ஏற்றவிதத்திலே சிற்சில பகுதிகளை விரித்துரைப்பதும் தேவையாயிற்று.

சில தருணங்களிலே, படிப்போரும் கேட்போரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவண்ணம் அடிப்படைக் கோட்பாடுகளில் இருந்து எண்ணங்களை வளர்த்தெடுத்துக் கொடுக்க வேண்டிய தேவையும் இருந்தது. கணிசமான படைப்பாற்றலையும் வேண்டி நிற்கும் ஒரு பணி ஆயிற்று. இத்தகைய மொழி மாற்றத்தை 'மறு படைப்பு' என்று நாம் கூறலாம். இப்படிப்பட்ட 'மறு படைப்பு' நடைபெறவில்லை என்றால், எந்தவொரு பேச்சும் எழுத்தும் எந்த விதமான கருத்துக்களையும் பயவாமல் வீணாய் ஒழியும்.

ஆங்கில மொழி வெளியுலகுடன் தொடர்பினையுண்டாக்கும் 'மூன்றாவது கண்' என்று விதந்து பேசுவது, நம்மவரின் வழக்கமாகும். ஆனால் அந்தக் கண் தரும் பார்வை செப்பமாக இருக்க வேண்டுமானால், மக்கள் வழங்கும் மொழியிலும் நமது கருத்துலகத் தலைவர்களுக்குச் சிறந்த புலமையும் ஆற்றலும் இருத்தல் வேண்டும்.

இந்த விதமான திறமையுடைய எழுத்தாளர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குவோர், திரு வி.க.வும் இராஜாஜியும் எனலாம். திரு. வி.க எனப்பட்ட திருவாரூர் வி.கல்யாணசுந்தர முதலியார், பழந்தமிழ்ப் புலமை வாய்ந்த தொல்லறிஞர், ஈழத்தவரான மேலைப்புலோலி நா.கதிரவேற் பிள்ளையின் நன் மாணாக்கர். அடிப்படையில் இவர் இலக்கண நெறிப்பட்டு அருஞ்சொற்கள் விரவிய செந்தமிழிலேயே எழுதியும் பேசியும் வந்த புலமையாளர். ஆயினும் அவர் இந்திய நாட்டு விடுதலை இயக்கத்திலும் தொழிற்சங்க வேலைகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளத் தொடங்கிய பின்னர், பரந்துபட்ட மக்களைச் சென்றடையத்தக்க மொழித்திறனை மிக விரைவிலே ஈட்டிக் கொண்டார். அவர் மேற்கொண்ட பணிகள் மக்கள் மன்றத்துடன் இறுகப் பிணைந்திருந்தமையால், இவ்வாறன எளிமையும் தெளிவும் அவருக்கு இலகுவிற் கைகூடிற்று. மக்களுடன் நேரில் உரையாடும் திறன்படைத்த செந்தமிழ் வகையொன்றை உருவாக்குவதில் வெற்றி கண்டார்.

சக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரியார், சத்தியமூர்த்தி முதலியோரும் இதே வழியிலே தமது கருத்துக்களையும் மொழிநடைகளையும் மக்களுக்கு ஏற்ற விதத்திலே பதப்படுத்திக் காட்டினர்.

இதனால், தமிழ் மொழி புது விதமான நலன்களையும் வளங்களையும் ஈட்டிக் கொண்டது. ஒரு காலத்திற் புராண இதிகாசங்களையும், காப்பியங்களையும், சமய சாத்திரங்களையும், தோத்திரங்களையும் மாத்திரம் கையாளும் ஆற்றலைப் பெற்றிருந்த தமிழ் மொழி, இப்போது நாட்டு விடுதலை, தொழிற்சங்க முயற்சிகள் உட்பட, 'பண்பாட்டு அரசியலின்' பல்வேறு புலங்களையும், துறைகளையும் தழுவி நிற்கும் துடிப்பும் துணிவும் பெற்று விரிவடைந்து, 'கல்கி' முதலான சனரஞ்சக எழுத்தாளர்கள் தோற்றம் பெற வழி வகுத்தது. மொழி பெயர்ப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்ட வெ.சாமிநாத சர்மாவின் எழுத்துக்கள், ஐரோப்பிய அறிஞர்களின் நவீன சிந்தனைகளைத் தமிழாக்கம் செய்து வழங்கின. இவ்வாறான முயற்சிகள் தமிழ் மொழிக்குப் புதிய வலுவும் வளமும் சேர்த்தன. புதுப்புது மொழி வழக்காறுகளும் தோன்றி நிலை பெறல் ஆயின. ம.ப.பெரியசாமித் தூரன், தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் என்போரின் பெருமுயற்சியினால் முதலாவது கலைக்களஞ்சியம் தமிழில் உருவாயிற்று. இந்தப்பணிகளெல்லாம் தமிழ் மொழியின் நுட்பத்திறனையும், பயன்பாட்டையும்விரிவு செய்தன. உயர் கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் புறக்கணிக்கப்பட்டதொரு காலத்திலே தமிழ் மொழி வீறும் விளைதிறனும் பெறுவதற்கு இந்த முன்னோடிகள் பெரிதும் உதவினர்.

இங்கு நாம் இதுவரை பார்த்தது சமூக–அரசியல் தேவைகளின் அடியாக எழுந்த, மக்கள் மயப்படுத்தப்பட்ட சில முயற்சிகளையே. இவை முறை நெறிப்பட்டவை அல்ல எனலாம். கலை இலக்கிய உலகில் ஈடுபாடு கொண்ட கற்றறிவாளர்களோ, தமது மொழித்திறனைக் கூர்மைப்படுத்தும் முயற்சியிலே பின்தங்கி நின்றார்கள் என்பது வேடிக்கையானதோர் உண்மையாகும். இலக்கியத் திறனாய்வாளர்கள் முற்போக்கான சில அலுவல்களைச் செய்திருக்கலாம். ஆனால் அவர்களிடையே அசமந்தமும் தயக்கமும் அலட்சியமுமே காணப்பட்டன. சி.சு.செல்லப்பா நடத்திய 'எழுத்து', இலக்கிய விமர்சனத்திற்கென்றே அர்ப்பணிக்கப்பட்டது. ஆனால் அதில் எழுதியவர்கள் ஆங்கிலச் சொல்வழக்கின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட முடியாதவர்களாய், ஒரு வகையான கலப்புத் தமிழைக் கையாண்டனர். தமிழ்ப்படுத்திய கூற்றுக்களிலும் கடுமையான சொற்பஞ்சம் தாண்டவமாடிற்று. 'எழுத்து' வட்டத்தினரிடம் ஆர்வம் நிறைந்திருந்த அளவுக்கு, ஆற்றல் இருக்கவில்லை. தம் கருத்துக்களைச் சரி சுத்தமாகச் சொல்ல இயலாமல் அவர்கள் திண்டாடினார்கள். அவர்கள் தாம் எழுதியவற்றைத் தாம் மாத்திரமே படிக்குமளவிற்குக் குறுகியதொரு வட்டத்தினுள் அடங்கியமைந்தனர் என்று சொன்னால், அதில் அதிகம் பிழை இருக்காது.

இந்த நிலைமைக்குப் புறநடையாகவும் சிலர் இருந்தனர் என்பது உண்மையே. இவர்களுள் சி. கனகசபாபதி விதந்து குறிப்பிடத்தக்கவர். இவர் போன்று பண்டைத் தமிழ்ப் பரிச்சயமும் பெற்ற சில திறனாய்வாளர்கள், தமிழின் சொல்வளத்தைப் பெருக்கி, அந்தப் புதிய வழக்குகளைப் புழக்கத்திற்குக் கொண்டுவர உதவினர். இதனால், பல்வேறு நுண்மைத்தரங்களினூடே சரளமாக ஊடாடும் வலு தமிழ்மொழிக்குக் கிட்டிற்று. படிமம், நடப்பியல், புனைவியல் போன்ற பதங்கள் பல இந்தக் காலகட்டத்திலே அறிமுகமாயின என்பது மனங்கொள்ளத்தக்கது. பல்கலைக்கழக ஆசிரியர்களும், பேராசிரியர்களும் கூட, மேலே சொன்னவாறான புதுமையாக்கங்கள் சிலவற்றை மேற்கொண்டனர். பல்வேறு கற்கை நெறிகளையும் தமிழ் வாயிலாக நடத்த வேண்டிய தேவை இந்த முயற்சிக்கு ஊக்கம் தந்தது. ஆரம்ப காலகட்டங்களில், இந்தியத் தமிழர்களை விட ஈழத்தவர்களாகிய நாம் இந்த அலுவலில் முன்னேடிகளாய்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

# அறிவு சமைக்கட்டும்....

இருந்தோம் என்று சொல்ல வேண்டும். இந்தியர்களை விட, முன்கூட்டியே நாம் தமிழ் மொழி மூலம் உயர் கல்வியூட்டத் தொடங்கியபடியால், ஈழத்தவராகிய நாம்

**ஆங்கில மொழி வெளியுலகுடன் தொடர்பினை உண்டாக்கும் 'மூன்றாவது கண்' என்று விதந்து பேசுவது, நம்மவரின் வழக்கமாகும். ஆனால் அந்தக் கண் தரும் பார்வை செப்பமாக இருக்க வேண்டுமானால், மக்கள் வழங்கும் மொழியிலும் நமது கருத்துலகத் தலைவர்களுக்குச் சிறந்த புலமையும் ஆற்றலும் இருத்தல் வேண்டும்.**

வழங்கிய மொழி சில விதங்களிலே விடயங்களின் அடியாழம் வரை நுழைந்து செல்லும் ஆற்றல் பெற்றதாக விளங்கிற்று எனலாம். இங்கு தனித்த மரபுவழிப்பட்ட தமிழ் வாயிலாகக் கிடைக்கக் கூடிய ஆற்றலைப் பிறமொழிகளின் சந்திப்பினாலே தமிழ் பெற்றுக்கொண்டது. இந்தச் சாத்தியப்பாடு முன்னர் இருக்கவில்லை என்பதல்ல, இதன் கருத்து. புதிதாகக் கண்டறியப்பட்ட சாத்தியப்பாட்டை நன்கு பயன்படுத்தக் கருதிய புதுவேட்கையும் ஊக்க எழுச்சியுந்தான், மேற் சொன்ன ஆற்றல் வளர்ச்சிக்கு ஏதுவாயின.

ஆனால், இலங்கைக் கல்விமான்கள் சிலரிடையே மொழிபெயர்ப்பின் பெறுமதிபற்றித் தவறான சில நம்பிக்கைகள் உருவாயின. மொழிபெயர்ப்புக்களைப் படிப்பதனால் மூலமொழிப் பாடமொன்றின் தேவை முற்றாகவே அற்றுப்போகிறது என்று நம்மிற் பலர் நம்புகிறோம். மூல பாடங்களை மொழி பெயர்ப்புக்களால் பதிலிட்டு விட முடியாது. மூலத்தின் சிறியதொரு பகுதியே மொழிபெயர்ப்பில் வெளிக்கொணரப்படும். இந்தப் பகுதியின் அளவுகள் மூலபாடத்தின் தன்மைகளுக்கு ஏற்ப வேறுபடும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம் சார்ந்த விடயங்கள் மொழிபெயர்ப்புக்கு நன்கு இடங்கொடுக்கும். ஆனால் ஆக்க இலக்கியங்களின் பக்கமாக நாம் போகப்போக மொழி பெயர்ப்பின்போது இழக்கப்படாது எஞ்சும் பங்கு, குறைந்து குறைந்து செல்கிறது. உண்மையில் கவிதையின் இன்றியமையாப் பண்புகளில் ஒன்று, அது மொழி பெயர்க்கப்பட முடியாததாய் இருப்பதுதான் என்று, 'இலூஷன் அன்ட் ரியாலிற்றி' என்னும் நூல் அடித்துக் கூறுகிறது. இது மிகவும் கடுமுனைப்பான கூற்று என்று சிலர் கருதலாம். ஆனால் சில மொழிபெயர்ப்புக்களை மாத்திரம் படித்த அளவில் உலக இலக்கியம் நமது உள்ளங்கைகளில் அடக்கம் என்று நம்மிற் பலர் எண்ணிக்கொள்கிறோம். இது எவ்வளவு அறியாமை!

சில இலக்கியப் படைப்புக்கள் மொழிபெயர்ப்புக்கு ஓரளவு திருப்திகரமாக இருக்கும் என்பது உண்மையே. அவை உடனயற் சூழலில் அதிகம் அழுந்தி நில்லாமலும் மொழிமரபு விசித்திரங்களில் அதிகம் தோயாமலும் உள்ள படைப்புக்களாகும்.

(4)

படைப்பிலக்கியம் பற்றிய பரிசீலனையைச் சற்றே நிறுத்திவிட்டு, பொருள்விளக்கப் போக்குடைய சொல்லாடல்பற்றி ஒரு கணம் சிந்திப்போம். முன்னணிச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் பெரும்பாலும், புதுமையான சொற்களிலும் சொல் வழக்குகளிலும் பொதிந்தவையாய் இருக்கும். சில வேளைகளில் அந்தச் சொற்கள் கூட, அந்தத் தருணத்திற்கென்றே படைக்கப்பட்டவையாயும் இருக்கும். அந்த நுண்சொற்களுக்கு ஏற்ற தோதான சொற்களை நமது மொழியிலே ஆக்கி, அவற்றுக்கு விளக்கம் தந்தாலொழிய எழுந்தமானமாக அல்லது கண்டபாட்டிலே செய்யப்படும் மொழிபெயர்ப்புக்கள் பொருளற்று வெறிதே ஒழியும். இப்படித்தான் நமது அறிஞர் பெருமக்கள் சிலர் அள்ளி வீசும் எதேச்சையான சொற் சேர்க்கைகளும் செயற்கையான திடீர் விநோத மொழிவுகளும் இருக்கின்றன. இந்தத் திடீர் மொழிகளில் ஈடுபடுவோர் அவற்றின் பொருத்தப்பாடு பற்றியோ பொருள்பயக்கும் தன்மை பற்றியோ அதிகம் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

எண்ணக்கருக்களைக் கற்றுக் கொள்வதற்குத் தூலமான மாதிரியுருக்களும் 'இது இத்தகையது' என்றும் 'இது இத்தகையது அல்ல' என்றும் தெளிவாக்கும் எடுத்துக் காட்டுகளும் அவசியம் என்பர். இதனையிட்டு கவனஞ் செலுத்துவோர் மிகக் குறைவு.

இவ்வகையான உதாசீனப் போக்கு, எங்கு போய்முடிகிறது? ஆவியமயமான ஆசாட்டமான வெறுமைகளையும் குழம்பல்களையும் நுண்ணிய கருத்துக்களென எண்ணி மயங்கும் நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம். இந்த ஆசாட்டங்கள் உள்ளீடான பெறுமதி வாய்ந்தவை என்றும் புனிதமானவை என்றுங்கூட பயபக்தியுடன் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இங்கு அறிஞர் எனப்படுவோர் சிலர் தாமும் குழம்பிப் பிறரையும் குழப்புகின்றனர். தாமும் மிரண்டு பிறரையும் மிரட்டுகின்றனர்.

(5)

பாக்கு நீரிணைக்கு அப்புறத்திலும் இப்புறத்திலும் இந்தப் பரிதாப நிலையை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். நமக்கு இப்போது வேண்டியது சமிபாடு. அறிவுத்தன்மை பூண்டோரின் சிந்தனையூட்டங்கள் நன்கு சமிபாடு அடைய வேண்டும். நம்மை நோக்கிப் பேச முன்வருகிறவர்கள் தாம் என்ன பேசுகிறோம் என்பதைத் தெளிவாகத்தெளிந்து கொள்ளட்டும். நமக்காக எழுதுவதற்குப் பேனாவை எடுப்பவர்கள் என்ன எழுதப்போகிறோம் என்பதைத் திட்டவட்டமாகத் தெளிந்து கொள்ளட்டும். தெரிந்து, தெளிந்து கொண்டு பேசத் தொடங்கட்டும்.எழுதத் தொடங்கட்டும். 'உணவிலும் உண்ட(து) அறல் இனிது' என்றார் வள்ளுவர். வயிற்றுச் சாப்பாட்டுக்கு மட்டும் செல்லு படியாவதல்ல அந்தக் கூற்று. சிந்தனைக்கு உணவாக ஊட்டப்படும் கருத்துக்களும் கூட, நன்கு சமிபாடு அடைய வேண்டும். அறிவுச் சாப்பாடு உளநலத்திற்கு இன்றியமையாதது. அதுதான் தெளிவுக்கு நம்மை இட்டுச் செல்லும். 'தெளிவே தெய்வம்' என்றவர் பாரதியார். ஆனபடியால் நினைவில் வைத்துக் கொள்வோம்–அறிவு சமிக்கட்டும். அத்துடன் தமிழர்களை நோக்கிச் சொல்லாடும் அறிஞர்களின் இதய ஓடை, அவர்களின் நனவோடை தமிழ் மயமாக இருக்கட்டும்

# பாதசாரியின் பார்வையில்

–அவர் என் இலக்கிய நண்பர் – கவிஞர்.

–நான் அவரை வழியிற் சந்திக்க நேரிட்டது.

–நீண்டகாலத்தின் பின்னரான சந்திப்பு அது. சொந்த இடமே அவருக்குத் தென்மராட்சி தான். நானோ இடம் பெயர்ந்தவன்.

–சம்பிரதாய பூர்வமான விசாரிப்புக்களுக்குப் பின் நான் இப்போது இருக்கும் இடம் குறித்தும், வசதிகள் குறித்தும் வினாவினார்.

–பதிலுக்கு அவரின் வாழ்நிலை பற்றிக் கேட்டேன். அவர் சிரித்துவிட்டுச் சொன்னார்.

–"நான் இப்போது எழுபத்தொருபேரில் ஒருவனாக என் வீட்டில்....சங்கத்தானையில் தான் இருக்கின்றேன்".

–அந்த வார்த்தையில் தொனித்த சமநோக்கு நிலையின் உணர்வில் ஒரு கவிஞனின் மனித நேய ஆத்மாவே தென்பட்டது.

–'அவர் சொல்லியிருக்கலாம்' என் வீட்டில் இப்போது எழுபத்தொரு பேர் இருக்கிறார்கள் என்று இடம்பெயர்ந்து வந்தவர்களையும் தன்னையும் வேறுபடுத்தாத அந்த உணர்வே ஒரு உயர்ந்த கவிதையாக எனக்குப்பட்டது.

–போர் மனிதனைப் புண்படுத்துவது மட்டுமல்ல...புடம் போட்டும் விடுகிறது.

–துவாரகன்

# காற்றும் நிலவும்...

'உயிரினங்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பவனே, ஒளிபரப்பி மகிழ்வூட்டுபவனே, நீயும் நானும் இந்த மண்ணின் குழந்தைகளோடு வாழ்வதையிட்டு மகிழ்வோம்.'

நிலவு கரும்புகையை விலக்கி காற்றின் சொல்லுக்குச் செவிசாய்ப்பதுபோல எட்டிப்பார்த்தது. தன் முழு உருவத்தையும் காட்டி ஒளிர்ந்தது. என்றாலும் காற்று தினமும் வீசுவதுபோலத் தன் நிலை இல்லையே என்ற கவலை நிலவுக்கு. அது தன் தேய்பிறை நிலையையும் அமாவாசை நாளையும் நினைத்துக் கவலைகொண்டது. இந்த மண்ணின் குழந்தைகள் எதிரியோடு களமாடும் நிலையைத் தன்னால் பார்க்க முடிவதில்லையே! அது காற்றுடன் தன் கவலைகளைப் பகிர்ந்துகொண்டது.

காற்று ஒருமுறை புல்நுனிகளைத் தடவிவந்து மெல்லிய சலனத்தோடு அங்குமிங்கும் அசைந்தது் நிலவுக்கு ஆறுதல் கூறிற்று.

திடுமென வானத்து நிலவை விழுங்கியபடி, நெருப்பைக் கக்கியபடி இராட்சதக் குண்டுகள் வெடித்தன. பொறுமையோடு இருந்த பூமி அதிர்ந்தது. அலறியது. கந்தக நெடியின் மணம் எங்கும் பரவ காற்றுத் திக்கித் திணறியது. வளமான மண்ணின் மடியில் பெரிய குழிகள் தோண்டப்பட்ட சிதைவு. பூமி அழுதது, தன்மேனியெங்கும் இத்தனை பள்ளங்களா? தென்றல்பட்ட புல்நுனிகள் கருகி பொலக்கென்று தீ பரவிக்கொண்டது.

'எப்படி வாழ்ந்தோம்? எப்படிப் போனோம்?' மண் ஆற்றாமையோடு அழுதது. மேனி புண்பட்டு வலியால் துடித்தது. வாழ்ந்த நிலையையும், வீழ்ந்த கதையையும் கூறி விம்மி அழுதது.

'என்னைப் போர்த்திய பச்சை ஆடை எங்கே?' தன்மீது எப்போதும் குளிர் பரப்பி குண்டுபட்டுச் சேதப்பட்ட முறிந்த மரங்களைக் கேட்டது, 'என்னைக் கண்போலப் காத்து நாளும் பண்படுத்திய அந்தக் கமக்காரன் எங்கே?' அரைகுறையாய் கருகிய விழுதெறிந்த ஆலமரம் அவலத்தோடு பார்த்தது. காற்று வன்மத்தோடு வீரியங் கொண்டது. அருகே அலைகடல் ஆர்ப்பரித்துப் பொங்கியது.

நிலவுமட்டும் அமைதியாய் நம்பிக்கையோடு ஒளியெறிந்து அவற்றுக்கு ஆறுதல் கூறியது. கல்லறைகளில் மோதிய காற்று கனவுகளோடு நிமிர்ந்தது. மண்ணின் மடிமீது உறங்கிவிட்ட குழந்தைகளை இதயம் பூரிக்கப் பார்த்தது. தன்னைக்காத்து, தனக்காகவே தன்மீது உறங்கிவிட்ட அவர்களை நினைத்துப் பெருமை கொண்டது. திசை கடந்த காற்று சின்னச் சின்னப் பூக்களையெல்லாம் தன்னோடு அணைத்து வந்து நினைவுக் கோயில்கள்மீது மண்டியிட்டது.

அங்கே என்ன? புதியவேகத்தோடு நிலவும் ஒளி... அணி வகுப்பு மரியாதையின் கட்டளைப் பிறப்பு... புதிதாய் ஒரு வித்துடல் வருகிறதே! காற்றும் நிலவும் மண்ணும் தம்மைத் தயார்ப்படுத்தின. பார்த்த விழி எடுக்காது உற்றுப் பார்த்தன. அங்கே புதிய விடியலின் பிறப்புக்காகப் புதைகுழிகள் காத்திருந்தன.

நிலவு அவற்றை ஆதங்கத்தோடு தொட்டுச் சென்றது. காற்று புதிய மலர்களையெல்லாம் கொண்டுவந்து குவித்தது. அந்த வித்துடலின் அருகே தாழ்ந்து அமைதியாகத் தடவிச் சென்றது.

# இட்சாக் ராபின் படுகொலை........

## அமெரிக்காவின் நலன்

அமெரிக்கா மேற்காசியாவில் தொடர்ந்து சமாதானத்தை விரும்புகிறது என்பது கிளின்டனின் அஞ்சலி உரையில் தெளிவாகத் தெரிகிறது. அதைவிட அமெரிக்காவின் மூன்று முன்னாள் ஜனாதிபதிகள் ராபினின் மரணச் சடங்கில் கலந்து கொண்டார்கள் என்பதிலிருந்து இது தெளிவாகிறது. ராபினின் கொலையுடன் சி.ஐ.ஏ தொடர்புபட்டிருக்கலாமென சிலர் சந்தேகிக்கின்றனர். ஆனால் நிச்சயமாக சி.ஐ.ஏ செய்திருந்தால் அதில் அமீர் என்ற இளைஞனும் கொல்லப்பட்டிருப்பார். எந்தவித தடயமும் அறியப்படாது கொலை நடந்து முடிந்திருக்கும். பாலஸ்தீனியர்கள் பழிவாங்கப்பட்டிருப்பார்கள். சமாதானம் முழுமையாகக் குலைந்திருக்கும். அமெரிக்காவின் நலன்கள் பாதிப்படைந்திருக்கும்.

"சமாதானத்துக்கு அல்லும் பகலும் உழைத்த ராபினுக்கு நாங்கள் செய்யும் பெரும் நன்றி அவரின் சமாதானப் பணியைத் தொடர்வதாகும்" என்றார் கிளிங்டன். இது அமெரிக்காவின் நலனில் முழுமையான பக்கம். இதனை உறுதிப்படுத்துவதாகவே இடைக்காலப் பிரதமர் சிமென்பெரிசின் சமாதானப் பயணம் தொடருமென உறுதியளித்துள்ளார். மேற்குக் கரையிலிருந்து இஸ்ரேலியப் படைகளின் வாபஸ் தொடர்ந்து நிகழ்கின்றது.

மேற்காசியாவில் சமாதானம் மட்டுமல்ல பிராந்திய வலுவில் இஸ்ரேல் அமெரிக்காவுக்குட்பட்ட அரசாக இருத்தல் வேண்டும், என்பதுடன் உலகம் முழுதும் அமெரிக்க நலன் பேணப்படவேண்டுமென்பதே அமெரிக்காவின் தேவை.

எதைத்தடுக்க யூத இளைஞன் அமீர் விரும்பினாரோ அது தொடர்கிறது. ஆனால் பெரஸ் சமாதானத்தைத் தொடர்ந்தாலும் விரைவில் நடக்கவிருக்கும் தேர்தல் மாற்றுவழியை யூதர் மத்தியில் உருவாக்கும். அப்போது அமெரிக்க நிர்வாகம் மேற்காசியாவில் பெரும் சிக்கலடைய வேண்டிவரும் அல்லது மாற்று வழியைக் கையாளவேண்டிவரும்.

ஆனால் ராபினின் கொலையானது யூதர்களின் உணர்வை வெளிப்படுத்தியதோடல்லாமல் அமெரிக்க நலனுக்கும் ஆப்பு வைத்துள்ளதாகவும் கருதப்படுகின்றது.

# உணவின்றி உணர்வோடு ஒரு படைநகர்வு

முட்புதர்கள் முகத்தில் முத்தம் பதிக்க....
இரத்தம் வரும்....ஆனால் சத்தம் வராது.
பற்றைகள் பற்றி இழுக்கும்,
கொப்புகள் தலையில் இடிக்கும்.
முதுகில் தட்டும்
எனினும் சத்தமின்றிப் படையணி நகரும்.
அப்படி நகர்ந்த படையணியில் பங்கேற்ற போராளி ஒருவரின் உணர்வலைகள்

அது அடர்ந்த காடு!
சூரியனும் உள்ளே பார்க்க முடியாது. சூரியனை உள்ளிருந்தும் பார்க்க முடியாது. நட்சத்திரமொன்று தவறிவிழுந்தாற் கூடக் கீழே விழுவதற்கிடையில் இடையிற் சிக்கிவிடும்.
அது அடர்ந்த அடர்ந்த காடு!
அந்தக் காட்டுக்குள் அந்த உருவங்கள் அசைந்து கொண்டிருந்தன. நகர்வு பல பரிமாணங்களில்.....புகுந்தனர்.....தவழ்ந்தனர்...... நடந்தனர்......புகுந்தனர்.....வேகமாக நகர்ந்தனர். புல்லுக்கும் நோகாமல் நகர்ந்தனர்.

பறவைகளின் பேச்சொலிகளும் இல்லை. பதினான்கு பேரின் பேச்சொலிகளும் இல்லை.

முட்புதர்கள் முகத்தில் முத்தம் பதிக்கப் பதிக்க நகர்ந்தார்கள். இரத்தம் வரும். சத்தம் வராது. பற்றைகள் பற்றி இழுக்கும். கொப்புகள் தலையில் முதுகில் இடிக்கும். சத்தமின்றி நகர்ந்து கொண்டேயிருப்பார்கள்.
அது அபாயமான காடு!
எதிரியின் எல்லைக்குள் இருக்கும் காடு. எதிரியின் கொல்லைக்குள் வந்த பணியை முடித்துக் கொண்டு ஈழ எல்லைக்குள் நுழைவதற்காக நகர்ந்து கொண்டிருந்தனர்.

பாதைகள் பல இருப்பினும் பாதுகாப்பில்லை. அவை சிங்கள வேட்டை நாய்களின் பாதைகள். உபாதைகள் விடாது தொடரும். ஆயினும் பாதையில்லா அந்தக்காடு தான் பாதுகாப்பு. அவர்கள் முக்கியம். அவர்களது வேலை முக்கியம்.

ஏழாவது நாளாகத் தொடர் நகர்வு. எட்டிப்பார்க்கவில்லைச் சோர்வு.

மூன்று நாளாக எல்லையை நோக்கிய உலா முதுகில் ...... விலா இறுக இறுக முப்பது கிலோ.
'ஆயுத நிலை' ஆயத்த 'நிலை'. எதிரி எந்நேரமும் எதிர் கொள்ளக்கூடும். அடிக்கடி விரல் 'சேப்ரீயைத் தடவும். ஏனெனில் விரல்களின் வேலையைக் கிளைகள் செய்து விடும். 'சேப்ரீயையும் தட்டி 'ரிகரை'யும் அழுத்திவிடும். அடுத்தகணம் நடக்கப் போவதையும் கற்பனை பண்ண முடியாது.

எதிரியின் எல்லையில் இருந்தது அந்தக் காடு!

அந்தப் பாரமேந்திய தோளுக்கும் பலதூரம் தாண்டிய காலுக்கும் போட்டியாக இன்னொன்று மூன்றுநாளாக சோடி சேர்ந்தது. அதன் பயணம் வேகமானது. அதனால் காலும் தோளும் வேகமானது.
சோடி சேர்ந்தது பசியின் பிடி!

அந்த ஏழுநாளில் மூன்று நாள் உணவைக் கனவிலும் காணவில்லை. நித்திரைக்கான நேரமே குறைவு. அந்த நிலையிலும் அந்த நடை மந்தமடையவில்லை. உணவில்லை... உணர்வுகள் உடையவில்லை.

பார–தூர–நடையின் களைப்பு. விழிகள்.....செவிகள்.....உணர்வுகள்.....எல்லாவற்றிலும் விழிப்பு.
அது அடர்ந்த காடு!
அது அபாயமான காடு!
எதிரியின் எல்லையில் இருந்த காடு!
நாலு 'செக்கன்' கால்கள் தாமதித்தால் முன்னாற் சென்றவனைக் காடு மறைத்து விடும். பின்னால் வந்தவன் காட்டின் பின்னலிற் சிக்கிக் கொண்டால் சுற்றிச் சுற்றி எதிரியின் எல்லைக்குள்தான் திரும்பத் திரும்ப நடக்க வேண்டிய நிலை.
நகர்ந்து கொண்டே இருந்தார்கள். உணவின்றிய உணர்வுடன் ஊர்ந்து கொண்டேயிருந்தார்கள். வேகத்திற் பின்னடைவில்லை. பசியுணர்வு சிலரை முன்னோக்கித் துரத்தியது. சிலரை முன்னோக்கி இழுத்தது.

அந்தநேரம் அந்தப் புலிகளின் விழிகளில் பிரகாசமான ஒளி. ஆறு ஒன்று பாதையிற் குறுக்கிடுவதற்கான அறிகுறி. உணவு பத்திரப்படுத்திய இடம்பக்கத்தில் தான் இனி.

உணர்வுகளில் மையங்கொண்டது ஆறுதல். அந்த ஆறு மிக அண்மையில். அந்த அரைமைல் குறைந்த நீரைக் கடந்தால் அவர்களது பதுக்கிய இரை. பதினான்கு முகங்களிலும் பரவசம். ஆற்றைக் கடக்க உணவு கைவசம். அந்த நிலையில் வந்த நிலையில் அது பெருங்கவசம்.

ஆறுக்கும் காலுக்கும் நூறு யார் இடைவெளி. அப்போது உணர்வுகளில் எழுந்தது பல நூறு 'வோல்டேச்' மின்னதிர்வு. நெஞ்சளவு தண்ணீரைக் கடக்க வந்தவர்களுக்கு நெஞ்சுக்குள் தண்ணீர் கனத்தது.

எப்பொழுதும் அமைதியாயிருக்கும் அந்த ஆறு, இப்பொழுது ஆவேசமாய்ப் பாயத் தொடங்கியது. ஆற்றை அவர்கள் கடக்க முன் ஆறு அவர்களைக் கடத்திவிடும். எங்கெங்கோ அடித்துச் சென்று கிடத்தி விடும்.

வந்த இடத்தில் குந்தினர். ஒருவர் முகத்தை மற்றவர் முகம் நோக்கியது. நடைக் களைப்பும் பசியழைப்பும் ஒருமித்துத் தாக்கியது.

எதிரியின் வளவுக்குள்ளேயே பசியாறிப் படுத்துறங்கி வந்தவர்களுக்கு எதிரில்.....எட்டும் தொலைவில்......வைத்தபொருள் இருந்த வாசலில் இயற்கை எதிரி.

எதிரியின் எல்லைக்குள் நகர்ந்தபோது நாக்கை நனைக்கக்கூட சிறுதுளி நீர் இல்லை. நடை தவித்தது. இந்த நகர்வில் உடம்பையே நனைக்கக் கூடிய நீர் பாய்ந்தது. இது நடையைத் தைத்தது.
அப்போது முதுகிலிருந்த உணவின் அழுத்தம் உடம்பிற் கனத்தது. இப்போது உணவே இல்லாமல் உணர்வு கனத்தது.
ஆற்றங்கரை படுக்கையறையானது. ஆற்றின் நிலையறிய இருவர் காவல். ஆற்றின் வேகம் குறைவது போலிருந்தது. காவல் இரண்டும் ஆவலாய் நீருக்குள் உடனே ஒரு தாவல்.

நீரோட்டந்தான் குறைந்திருந்தது. நீர் ஏற்றம் குறையவில்லை. ஆறடி தடியொன்றை ஆற்றில் குத்தினான் ஒரு காவற்புலி. ஆறங்குலத்தை வெளிக்காட்டியது அந்தத் தடி.

படுத்தவர்களை மற்றைய காவல்புலி எழுப்பியது. எழுப்பிவிட்டுப் பார்த்த பொழுது அந்த ஆறங்குலம் காணாமல் போயிருந்தது. நீர்மட்டம் கூடியிருந்தது.

இயற்கையின் இரக்கமில்லா இறுக்கம்.
அந்த முதல் மூன்று நாளும் நினைவில் ஆடியது.
அன்று சிறுதுளி தண்ணீர் இல்லாததால் பெட்டி பெட்டியாய் 'பிஸ்கற்' இருந்தும் 'பிஸ்கற்'றைக் கைதொடவில்லை.
இன்று தண்ணீர் பெருகிக் கிடப்பதால் எட்டும் தொலைவில் வைத்த உணவு இருந்தும் கைதொடமுடியவில்லை.
நீந்திக் கடக்க நீரோட்டம் சாதகநிலை. ஆனால் மூன்று நாளாய் முளைத்த களை அதற்குச் சவால் நிலை.
அந்தக் களைப்பிலும் இருவர் ஆற்றுக்குள் இறங்கினர். உணவுக்காய் உணர்வு வேகமாய் உதைத்தது. களைப்பைக் கலைத்துக் கலைத்து நீந்திக் கரையடைந்தனர்.
அரை மணியில் அரிசி கொஞ்சம் கரையடைந்தது. அடுத்த அரைமணியில் அந்தக் கொஞ்ச அரிசி கஞ்சியானது. களைப்பு அஞ்சி அகன்றது. உற்சாகம் மறுபடி உற்பத்தியானது.
ஒரு மணி நேர ஓய்வு.
உற்சாகம்....உதித்த புதுவேகம் தாங்கிய அந்தப் பார்வைகள் ஆற்றின் மீது படையெடுத்தன. அந்தப் பார்வையின் பாய்ச்சல் தாங்காததாலோ என்னவோ ஆற்றின் முற்றுகை தளர்ந்தது. ஆறடி தடி இரண்டி பார்த்தது.
இருந்த புலிகள் இறுதிக்கட்டம் நோக்கி எழுந்தனர். முதலாவது புலி ஆற்றில் இறங்கியிருந்தான். பன்னிருநாள் உணவு நீரின்றி உண்மைக்காய் உதிர்ந்த புலி உணர்வுகளில் ஏறியிருந்தான்.

# இன்றைய நாட்களில்...

## கிளாலி-

இது ஒரு ஊரின் பெயராகத்தான் முன்னர் அறியப்பட்டிருந்தது. எனினும் இந்த மூன்று எழுத்துக்களும் உள்ளடக்கியிருக்கும் செய்திகள் இன்று அநேகம்.

இதனாற் கிளாலி என்பது நீண்டு விரிந்து கிடக்கும் கடல் நீரேரியை மட்டும் குறிப்பதாக இல்லை. இரண்டாம் ஈழப்போரின் உச்சக் காலத்திலிருந்து இன்றுவரை குடாநாட்டையும் பெருநிலப்பரப்பையும் இணைக்கும் தொப்புள் கொடி....

போத்தல் வாய் ஒன்றுக்குள் புலிகளை அடைக்கப்போவதாய் புறப்பட்ட படையினருக்குச் சவாலாகப் புலிகளின் தலைமையில் தமிழ்மக்கள் கண்டுபிடித்த புதியவழித் தடம்.... கடலேறி வந்து படையினர் படுகொலைகளைச் செய்தபோது அதனைத் தடுத்து நிறுத்தி, கடற்புலிகள் சேனை வளர்ந்த தாய்மடி.....

கடற்புலிகளும், கரும்புலிகளும் இரத்தம் சொரிந்து வழிசமைத்த பாதை...

இப்படி எண்ணிறந்த செய்திகளின் மையமாக உறையும் கிளாலி கடற்பரப்புக்கு இப்போது முக்கியத்துவம் இன்னும் அதிகம்.

'சூரியக்கதிரென' சுட்டு எரித்துவிட படையினர் மூர்க்கத்துடன் முயலும் வேளையில், உயிர் காப்பதற்காக வன்னிப் பெருநிலப்பரப்புக்கு மக்கள் நகரும் ஒரேயொரு மார்க்கம். இந்தப் பாதையையும் அடைத்து விடுவதாக அலரி மாளிகையிலிருந்து அறிவித்தல் விடப்பட்டாயிற்று.

வழமைபோலவே அலரி மாளிகையின் அறிவித்தல்களை உதாசீனம் செய்தபடி, மக்கள் கிளாலிக்கு ஊடாகத் தமது பயணத்தைத் தொடர்கின்றனர். பயணம் செய்யும் மக்களின் மனவுணர்வுகளை நோட்டம் பார்க்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளான பபீயோ வரோலியும், கிறேசி புக்கென் மேஜரும் கிளாலிக்கரைக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

படகுகளின் வருகைக்காக மக்கள், கூட்டம் கூட்டமாகக் காத்திருந்ததைக் கண்டனர். பயணிகளிடம் மெல்ல நெருங்கிச் சென்றனர்.

கிளாலிக்கடலின் நீரைத் தொட்டுப்பார்க்கவும்– அதற்கு ஊடாகப் பயணம் செய்யவும் கொழும்பு அரசு தடை செய்துள்ளதே..... கடற்படைத் தளபதியிடம் அல்லது காரைநகரிலுள்ள கடற்படை அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டுமென அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளதே.....

அப்படியெல்லாம் இருக்கும்போதும் இந்தப் பாதையில் ஏன் பயணம் செய்கின்றீர்கள்?

அவர்களது வினாவில் ஆச்சரியம் தொக்கி நின்றது.

ஆனால் அங்கிருந்த மக்கள் ஏகோபித்த குரலில் அளித்த பதில் அவர்களுக்கு ஆச்சரியத்தை மட்டுமல்ல, அதிர்ச்சியையும் அளித்துவிட்டது என்பது அவர்களின் முகபாவ மாற்றத்தின் மூலம் தெற்றெனப் புலப்பட்டது.

"விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு இருக்கிறது. அதனை நம்பி இந்தக் கடலைத் தாண்ட நாம் முடிவு செய்தோம்"

இதுதான் மக்களின் குரல்.

"தமிழ் மக்களின் பாதுகாப்பு அரண் விடுதலைப் புலிகள்தான்" என்பதைச் செயல்மூலம் உணர்த்துவதாக......

கிளாலிக் கடலை மட்டுமல்ல நெருப்பாற்றையும் நீந்திக்கடக்க மக்கள் தயாராகவே உள்ளனர் என்பதுதான் இன்றைய நாளில் எங்கடை மண், உலகிற்குத் தெரிவிக்கும் செய்தி.

# யாழ்நகரை...

எப்படி திரும்பிப் போகப் போகிறீர்கள்? சிங்கள இராணுவத்தை விரட்ட உங்களால் முடியுமா? நீங்கள் இரகசியமாக, சூசகமாகப் பேசினால் என்னவென்று சில மக்கள் கேட்கின்றார்கள். புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு வந்தால் மாத்திரமே பேசலாமென்று சந்திரிகா சொல்கின்றார். இப்படித்தான் பேச்சு வார்த்தைக்கான பிற்கதவைக் கூட அவர் அடைத்து வைத்திருக்கின்றார். சந்திரிகா அம்மையாரிடம் தீர்வுப் பெட்டகம் இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதற்குள் என்ன இருக்கின்றது என்பதைப் பார்ப்பதற்குச் சிதம்பரம் ஐயா ஓடித்திரிகின்றார். சந்திரிகாவும் அதைக் காட்டுகிறார் இல்லை. தைப்பொங்கலுக்குத்தான் அதைக் காட்டப்போகிறாராம். இந்தத் தீர்வுத் திட்ட யோசனைகளில் முற்போக்கான அம்சம் இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். சில நல்ல அம்சங்கள் இருக்கின்றது, அதனை நாமும் பார்த்து இருக்கின்றோம். அவையென்ன? ஒரு பிரதேச சபை. சரி நாங்களும் பிரதேச சபையைத்தான் கேட்டுக்கொண்டு இருக்கின்றோம். வடக்கு- கிழக்கு இணைந்த ஒரு மாதிரியான அதாவது தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டமாகத்தான் அது இருக்க வேண்டும். அத்திட்டத்திற்கு ஒரு சுயாட்சி தோரணமான உருப்படியான சுயாட்சி இருக்க வேண்டுமென்று நாம் கேட்கின்றோம். அவர்கள் பிதேச சபை என்று கூறுகின்றார்கள். ஆனால் அது வடக்கு- கிழக்கு முழுமையாக இணைந்த பிரதேச சபையா என்பது அதிற் தெட்டத் தெளிவாக இல்லை. அது பூடகமாகவே வைக்கப்பட்டுள்ளது. அதில் என்ன சொல்லப்பட்டு இருக்கின்றதென்றால், வடக்கு- கிழக்கில் சில பூகோள ரீதியான மாற்றங்கள் செய்யப்பட இருக்கின்றதாம். பூகோள மாற்றங்கள் என்றால், அம்பாறையை எடுத்து, மட்டக்களப்பிற் பெரிய பகுதியை எடுத்து, திருகோணமலையில் ஒரு பெரிய துண்டை எடுத்து வவுனியாவில் ஒரு பகுதியையும், மணலாற்றையும் எடுத்து மன்னார்ப் பகுதியையும் எடுத்து, திருகோணமலைத்துறைமுகத்தைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டு, இப்படியாக தமிழரின் மாநிலத்தில் இருந்து பெரிய, பெரிய துண்டுளாக வெட்டி எடுத்து ஒரு எலும்புக் கூடாக ஒரு பிரதேச சபை ஒன்றை உருவாக்கும் திட்டமாக இது இருக்கலாம்.

## அற்றுப் போகும் நல்ல அம்சங்கள்

அந்தப் பிரதேச சபையைச் சிங்கள ஜனாதிபதி கலைக்க முடியாது. அதாவது பிரதேச சபையின் ஒப்புதலின்றிக் கலைக்க முடியாது. அது நல்ல அம்சம் என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் சிங்களப் பேரினவாதம் அதைத் தூக்கி வைத்துக் கொண்டு அந்த அம்சத்தை எடு என்று இவ்வளவு காலமும் சண்டை பிடித்தது. இப்போது அந்த அம்சம் நீக்கப்பட்டு விட்டதாக நாங்கள் கேள்விப்பட்டிருக்கின்றோம். அடுத்த முற்போக்கான அம்சம் என்ன? தமிழர் பிரதேசத்திற் சுயாட்சி என்று சொல்லி அந்த சுயாட்சி வெளிநாடுகளில் இருந்து நேரடியாக உதவிகளைப் பெறலாம் என்று ஒரு அம்சம் இருக்கின்றது. இது நல்ல அம்சம். ஆனால் அந்த அம்சத்தையும் எடுக்க வேண்டுமென அங்கு சிங்கள இனவாதிகள் கடந்த மாதங்களாகக் கத்தி அடித்து வந்து அந்த அம்சமும் நீக்கப்பட்டுவிட்டது. சரி அதுதான் போகட்டும் என்று சொன்னால், அது தற்போது பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த விவாதம் எவ்வளவு காலம் நடக்கும் என்று சொல்லமுடியாது. அது மாத்திரமில்லை. இதிற் பெரிய திருத்தங்களையும் கொண்டு வரலாமென அரசு சொல்கின்றது. அப்படி இதிற் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, முக்கியமான அம்சங்கள் களையப்பட்டு ஒரு வெறுங்கோதுபோல் அது பாராளுமன்றத்திற்குப் போகப் போகின்றது. பாராளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பெறவேண்டும். அங்கும் சிக்கல் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இது சம்பந்தமாக ஒரு கருத்தையும் சொல்லாமல் மௌனமாக இருக்கின்றது. சிங்களவர் மத்தியில் ஒற்றுமையில்லை. சரி பாராளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று வைத்துக் கொண்டால், அதற்குப் பிறகு என்ன நடக்கும்? அதற்குப் பிறகு சிங்கள மக்களிடையே வாக்கெடுப்புக்கு விடப்படும். இனவாதம் பிடித்த சிங்கள மக்கள் தமிழருக்கு உருப்படியான தீர்வுத் திட்டம் என்றால் அவர்கள் அதனை ஆதரிப்பார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இப்பொழுதே யாழ்ப்பாணம் வீழ்ந்துவிட்டது, தமிழ் மக்களுக்கு ஒன்றும் கொடுக்கத் தேவையில்லை, சிங்கள நிருவாகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. இன்னும் ஒரு சிலர் சிங்களவரை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற வேண்டும் என்றும் சொல்கின்றார்கள். இப்படியான இனவாதம்படைத்த சிங்களச் சமூகத்தினால் தீர்வுத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்படும் என நாம் நினைப்பது முட்டாள்த்தனம். சரி அப்படித்தான் சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டாலும் பின்பு இங்கு வரவேண்டும். இங்கு நாங்கள் புலிகள் இருக்கின்றோம்.

## புலிகளின் ஒப்புதலின்றி அமுலாகாது

புலிகளோடு பேச்சுவார்த்தை நடாத்தாமல், புலிகளின் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் இங்கு அமுலாக்க நாங்கள் விடமாட்டோம். இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுவாக ஒரு கேள்வி எழலாம். 'இந்தப் பேச்சு வார்த்தைக்கு எல்லாம் புலிகள் போயிருக்கிறார்கள். பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டு நீங்கள் தானே சண்டையை ஆரம்பித்தீர்கள். ஏன் இதனைச் செய்தீர்கள்? நீங்கள் பேச்சுவார்த்தையை முறிக்காமற் சண்டையை ஆரம்பிக்காமலிருந்தால் இந்தப் பிரச்சனை வந்திருக்குமா?' என்ற கேள்விகள் எங்களின் மக்களிடம் இருக்கின்றது. சந்திரிகா அரசோடு, பேச்சுக்கள் நடந்தது உங்களிற்குத் தெரியும். இந்தப் பேச்சுவார்த்தைகளில் அமைச்சர்கள் வந்து அல்லது சந்திரிகா அம்மையார் வந்து எங்களுடைய தலைவரைச் சந்தித்துத் தீர்மானம் எடுக்கக் கூடிய பெரிய மட்டத்தில் பேச்சுக்கள் நடக்கவில்லை. அங்குள்ள நிருவாக அதிகாரிகள் கொஞ்சப் பேரை அனுப்பினார்கள். நாங்களும் அவர்களிற்கு மதிப்பளித்துப் பேசினோம். இந்தப் பேச்சுக்களில் முக்கியமாக மையம் பெற்ற விடயம் என்னவெனில், யுத்த நிறுத்தமாகும். தயவுசெய்து கேட்டுக்கொள்ளுங்கள். இது உண்மையான விடயம். பிரபாகரன் சொன்னார், "பாலா அண்ணை எப்படியாவது ஒரு உறுதியான நிரந்தரமான யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும். அதிலும் வெளிநாட்டு நிபுணர்களின் கண்காணிப்போடு யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு இருந்து ஆறுதலாகப் பேசுவோம்" என்று. இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில், சிங்கள அரசு எங்கள் மீது இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்துக் கொண்டு, பொருண்மிய நெருக்கடிகளைப் போட்டுக் கொண்டு பேச முனைந்தது. அப்போதும் நாங்கள் பேசுவோம் என்று சொன்னோம். நாங்கள் பேச்சுவார்த்தையைத் தீவிரமாகக் கவனத்தில் எடுத்துக் கொண்டுதான் சென்றோம். நல்லெண்ண சமிக்ஞைகளைச் செய்தோம். நாங்கள் பேச்சுவார்த்தையைத் தீவிரமாக எடுத்துக் கொண்டதற்கு அத்தாட்சியாக, தலைவர் பிரபாகரன் எங்களிடம் இருந்த சிறீலங்காப் பொலிசாரையும் போர்க் கைதிகளையும் விடுதலை செய்தார்.

ஆனால், அவர்கள் அங்கேயிருந்து எங்களின் போராளிகள் ஒருவரைக் கூட விடவில்லை.

நாங்கள் நல்லெண்ணச் சமிக்ஞையாக இதைச் செய்தோம். சந்திரிகா நேசக்கரம் நீட்டுகின்றார். நாங்களும் பற்றிக் கொள்ளப் போகின்றோம் என்பதைக் காட்டினோம். பெரிய நெருக்கடி நிலைமை, பெரிய பொருள்த் தட்டுப்பாட்டு, பொருண்மிய நெருக்கடி, இராணுவ அழுத்தம் இப்படியான நிலைமைகள் இல்லாமல் நிரந்தரப் போர் நிறுத்தத்தைச் செய்து அதனை வெளிநாட்டு நிபுணர்கள் மூலம் கண்காணிக்க வைத்து, முதலில் மக்களின் அன்றாடச் சிக்கல்களைத் தீர்த்து, பேசுவோம் என்று கூறினோம். ஆனால் இந்தப் போர் நிறுத்தத்தின் பரிமாணங்களை உங்களிற்கு நாங்கள் பகிரங்கமாகச் சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், அதில் சிக்கலான சில வார்த்தைப் பிரயோகங்கள் இருந்தன. உதாரணத்திற்குச் சொன்னால் நிரந்தரமான போர் நிறுத்தங்கள் (Cease Fire) கேட்டு பிரபாகரன் அவர்கள் சந்திரிகாவிற்குக் கடிதம் எழுதினார். ஆனால் அதற்குச் சந்திரிகா பதில் தரவில்லை. தான் பதில் தருவதாக ரத்வத்த பதில் எழுதினார். இக்கடிதங்கள் எல்லாம் எங்களிடம் இருக்கின்றன. வெகுவிரைவில் இதனை நாங்கள் வெளியிடுவோம். ரத்வத்த சொன்னார், "போர்நிறுத்தம் செய்ய முடியாது. பகைமை ஒழிப்பு நடவடிக்கை என்றுகூறி ஒரு தற்காலிகப் போர் ஓய்வைச் செய்வோம். அதைத்தான் இப்போது செய்ய முடியும்" என்றார். அதிற் சிக்கல் இருந்தது. பகைமை ஒழிப்பு நடவடிக்கை அதாவது முழுமையான, உறுதியான நிரந்தரமான போர் நிறுத்தத்திற்குப் பதிலாக ரத்வத்த சொன்னார், "அது முடியாது. தற்காலிகமாகப் பகைமையைக் கொஞ்சம் நிறுத்திக் கொள்ளுவோம்" என்று. பிரச்சனை இருப்பதை நாங்கள் விளங்கிக் கொண்டோம். அதாவது இராணுவத்தை யுத்தத் தயாரிப்புக்களில் இருந்து நிறுத்தி, போர் என்ற கதையை எடுக்காமல் நிரந்தர சமாதானத்தோடு பேசுவோம் என்று விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கைக்கு முடியாது என்று பதில் கிடைத்தது. பகைமையை நிறுத்துவோம் என்றே பதில் கிடைத்தது.

சரி, பகைமையை நிறுத்துவோம் என்று சொல்கின்றார்கள். நாங்கள் அதை வேண்டாம் என்று சொல்லக்கூடாது. பிரபாகரன் அவர்கள் பகைமையை நிறுத்துவோம் என்று சொன்னார்.

## பகைமை நிறுத்த ஒப்பந்தம்

இதனால் சந்திரிகாவும் பிரபாகரனும் கைச்சாத்திட்ட பகைமை நிறுத்த ஒப்பந்தம் ஒன்று வந்தது. இதை நீங்கள் அறிவீர்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையில் சர்வதேச நிறுவனங்கள், சர்வதேச நாடுகளின் கண்காணிப்பு இருக்க வேண்டும் என நாங்கள் விரும்பினோம். ஆனால் சர்வதேச கண்காணிப்பு வேண்டும் என்றதற்குச் சில நாடுகளை ரத்வத்த தானே குறிப்பிட்டார். அது எந்த நாடுகள் என்றால், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் என்ற 'சார்க்' அமைப்பில் உள்ள நாடுகளை மத்தியஸ்தத்துக்கு அழைப்போம் என ரத்வத்த கேட்டார். நாங்கள் இதனை வேண்டாம் என்றோம். மேற்கத்திய நாடுகளை அழைப்போம், அதுவும் நடுநிலைமை பேணக்கூடிய மேற்கத்திய நாடுகளை அழைப்போம் என்று நாம் கூறினோம். அதனை அவர் விரும்பவில்லை. சில நாடுகளின் பிரதிநிதிகளைக் கொழும்பிற்கு அழைத்து அவர்களிற்கு நியமனம் கொடுக்க முடியாத அளவில் சிக்கல் எழுந்தது.

பகைமை நிறுத்த ஒப்பந்த நகலிற் சில சிக்கல்கள் இருப்பதை நாம் சுட்டிக்காட்டினோம். இந்தப் பிரச்சனைக்குக் காரணம் என்னவென்றால், ஒரு நிரந்தரமான உறுதியான சர்வதேசக் கண்காணிப்புடனான போர் நிறுத்தத்தைச் சந்திரிகா விரும்பவில்லை என்பதே. வேறு சிலர் கேட்கின்றார்கள், "நீங்கள் ஏன் 72 மணித்தியாலம் கொடுக்கவில்லை" என்று. ஐயா, நாங்கள் 21 நாட்கள் கொடுத்தோம். 2 காலக்கெடுக்கள் கொடுத்தோம். காலக்கெடு முடிந்தால் நாங்கள் போர் தொடங்குவோம் என்றும் அறிவித்தோம். முதலாம், இரண்டாம் உலகப் போர்களிலும் இந்த நடைமுறைதான் இருந்து வந்தது. ஏன் நாங்கள் காலக்கெடு கொடுத்தோம்? ஆறு மாதகாலமாகப் பேச்சுக்கள் இழுபட்டது. ஒன்றும் நடக்கவில்லை. உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை.

கடைசி, பூநகரிப் பாதையாவது திறந்து விடு என்றோம். பொருளாதாரத் தடையை இறுக்கி வைத்துக் கொண்டு 6 மாதகாலமாகப் பேசினார்கள். மக்கள் கஸ்ரப்படுகின்றார்கள்– புலம்பெயர்ந்து இருக்கின்றார்கள்– மக்களின் அன்றாடத் தேவையையாவது பூர்த்தி செய் என்றோம்.

மக்களை அவர்களது சொந்த ஊரிலாவது இருக்க விடு, வேறொன்றும் தேவை இல்லை. எங்களிற்கு உங்களுடைய சமஸ்டியும் வேண்டாம். மக்களை அவர்களின் இடங்களில் இருக்கவிடு என்றோம். ஒன்றுமே நடக்கவில்லை. இப்படியான சூழ்நிலையில் எப்படிப் பேசுவது? பேச்சுக்கள் அர்த்தமில்லாமற் போகின்றது. இரண்டு வாரங்கள் தருகின்றோம். இதற்கிடையிலாவது ஏதாவது செய் என்று காலக்கெடு விதித்தோம். பிறகு ஒரு வாரக் காலக்கெடு கொடுத்தோம். மூன்று வாரங்கள் கொடுத்த பின் சந்திரிகா பிரபாகரனிற்கு ஒரு கடிதம் எழுதினார். நீங்கள் ஒரு அரசிற்குக் காலக்கெடு கொடுப்பதற்கு உங்களிற்கு உரிமை இல்லை. அதிகாரமும் இல்லை என்று கோபமூட்டும் வகையில் கடிதம் எழுதினார். அதற்குப் பிறகும் சந்திரிகாவோடு பேச்சுவார்த்தை நடாத்துவதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்தோம். சரி, இவை எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டாலும், பூடகமான பெட்டகத்தைக் காலம் காலமாக வைத்திருப்பதாகச் சந்திரிகா சொல்கின்றார். புலிகளோடு பேசும்போது அதனை விளக்கிக் காட்டியிருக்கலாமே. ஏன் அதனைச் சந்திரிகா ஒழித்து வைத்தார். அப்படியானால், சந்திரிகாவின் நோக்கம் என்ன? புலிகளோடு பேசக்கூடாது என்பதுதானே அந்த நோக்கம்.

## புலிகளோடு பேசத் தயக்கம் ஏன்?

எங்களோடு பேசுவதற்கு ஏன் விரும்பவில்லை என்றால், விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் தேசிய நலனில் உறுதியான பற்றுக் கொண்டவர்கள். இலட்சியம் கொண்டவர்கள். இலகுவில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். புலிகளோடு கதைத்தால் ஏதாவது உருப்படியாகக் கொடுக்கவேண்டும் என்பதுதான் அவர்களது பிரச்சனை. கல்கட் சொல்கின்றார், மாகாணசபைத் திட்டத்தைப் புலிகளிடம் நாம் கொடுத்தபோது, பிரபாகரன் அதைத் தூக்கி எறிந்துவிட்டுப் போனார்.

அப்படி இருக்கும்போது நீங்கள் அத்திட்டத்தை வைத்துக்கொண்டு பிரபாகரனைப் பேச்சிற்குக் கூப்பிடலாம் என நினைப்பது முட்டாள்த்தனம் என்று. காலம் காலமாக நாம் ஒன்றைத் தெளிவாகக் கூறுகின்றோம். தமிழீழத்திற்கு மாற்றுத் திட்டமாகத் தீர்வு யோசனைகள் வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலிக்கத் தயார் என்று சொல்கின்றோம். இதனைத் தலைவர் பகிரங்கமாக பி.பி.சி. நேர்காணலிற் கூடச் சொல்லியிருக்கின்றார். தமிழரின் தாயகம் முக்கியம். வடக்கும் கிழக்கும் இணைந்த தாயகத்தில் முசுலிம்களுக்கு நாம் சுயாட்சி கொடுக்கலாம். கிழக்கில் இருக்கின்ற சிங்களவருக்குச் சமஉரிமை கொடுக்கலாம். ஆனால் வடக்கும், கிழக்கும் இணைந்ததாகத் தமிழர் தாயகம் வேண்டும். அதில் எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக வாழ்வதற்கான சுயாட்சித் திட்டமாவது வேண்டும். அப்படியான ஒரு தீர்வுத் திட்டத்தைத் தந்தால் அதை நாம் சாதகமாகப் பரிசீலனை செய்வோம் எனத் தலைவரே சொல்லி இருக்கின்றார். ஆகவே, புலிகளோடு பேச்சுவார்த்தை என்றால் அவர்கள் சில விடயங்களில் உறுதியாக இருப்பார்கள். தமிழர் தாயகக் கோட்பாட்டை இலகுவில் கைவிட மாட்டார்கள். புலிகளை அழித்தோ, இராணுவ ரீதியாகப் பலவீனம் ஆக்கியோ, ஒழித்தோ விட்டபின் இராணுவ மேலாதிக்கத்திலிருந்து, மற்றைய துரோகக் குழுக்களோடு பேசுவோம் என்ற நோக்கிற்றான் சந்திரிகா அரசு செயற்படுகின்றது. இந்த நோக்கம் அந்த நேரத்திலேயே இருந்தது. எங்களுடன் பேசும் போதே அது இருந்தது.

உலகத்தை ஏமாற்றுவதற்காக, உலகத்தின் கண்ணில்

தொடர்ச்சி 31ஆம் பக்கம்

# நாளையும் கட்டுமரமேறி..

"கொடுத்தால் கடலன்னை வாரிக் கொட்டிக் கொடுப்பாள். கோபம் எல்லை மீறும் சமயங்களில் குமுறிக் கொந்தளித்து, தன் பிள்ளைகளையே படகுகளுடனும் வலைகளுடனும் வாரிக் கொண்டு போவாள். இன்பத்தையும் துன்பத்தையும் தம் வாழ்வில் அடிக்கடி சந்திப்பவர்கள் இவர்கள். அதனால் இறுகி இரும்பாகிப் போனார்கள். அக்காவும் கடலன்னையின் குழந்தைதானே?"

"கேட்டியே விசயத்தை. ஒரு பொம்பிளை கடல்த் தொழிலுக்குப் போய் வருகுதாமே"

"இதுவும் ஒரு கதையோ அண்ணை?

ஆம்பிளையள் கடலுக்குப் போறதே எவ்வளவு கஸ்ரம். ஒரு பொம்பிளை போகுதெண்டால், உது நம்பக்கூடிய கதையே, ஆ....?" "நம்பாட்டிவிடன். உங்கை எல்லாரும்தான் இதைப்பற்றிக் கதைக்கிறாங்கள்"

இப்படிப் பலபேரின் விமரிசனத்துக்கும் வியப்புக்கும் ஆளாகிக் கொண்டிருப்பவர் வேறுயாருமல்ல. வடமராட்சியிலுள்ள திக்கம் என்னுமிடத்தைச் சேர்ந்த செபமாலைநாயகி என்ற பெண்தான்.

தனது ஆறு வயதிலிருந்தே இவர் தந்தையுடன் கடலுக்குத் தொழில் செய்யப் போய்வருகின்றார்.

**'காலையில கடலுக்குப் போய் வந்தாப்பிறகு, நான்தான் கடைக்குப் போய் சாமான் வாங்கி வந்து சமைப்பன். பின்னேரம் வலைபொத்துவன். பிறகு இரவு சமைச்சுச் சாப்பிட்டுட்டுப் படுத்தா, பிறகு வெள்ளாப்போடை எழும்பிக் கடலுக்குப் போயிடுவன். நானும் அப்பாவுந்தானே தனிய. எல்லா வேலையளையும் நானே செய்யிறதால நேரமே இல்லை. வீட்டுக்கு முன்னாலை கடலிருந்தாலும் நேரம் கிடைக்குதில்லையே?''**

இப்பொழுது இவருக்கு முப்பத்தொரு வயது. இப்போது இவர் ஒரு கைதேர்ந்த கடற்றொழிலாளி.

இவரைச் சந்திப்பதற்காக நாம் போயிருந்த போது, வீட்டிலே சமைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தார். இப்பொழுது எப்படிக் கடற்றொழில் போகிறது என்று கேட்டதற்கு, "இப்ப கொஞ்ச நாளாத்தான் போய்வாறம். வழமையா கார்த்திகை விளக்கீட்டோடை தொடங்கி தைப்பொங்கலோடை முடியிற மாரி, இந்த முறைசரியாப் பிந்திப் போச்சுது. நாலு மாசமா கட்டுமரத்தைக் கரையிலை இழுத்துவிட்டிட்டு இருந்தம்.



இப்பதான் பழையபடி போகத் தொடங்கியிருக்கிறம்"

என்றார்.

"எப்படி நீங்கள் இந்தத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினீர்கள்?"

"அப்பா, கடலுக்குத் தனக்கு உதவியா என்னைக் கூட்டிப்போகத் தொடங்கினார். வேறு ஒரு ஆளைக் கூட்டிக்கொண்டு போனா, அந்தாளுக்குச் சம்பளம் குடுக்க வேணும். வாற வருமானத்தில இன்னொரு ஆளுக்கும் குடுத்து நாங்களும் சாப்பிடக் காணாது. ஆனபடியாத்தான் நான் போகத் தொடங்கினன். இப்ப அதே பழக்கமாப் போச்சு.

இப்ப கிட்டத்தட்ட இருபத்தைஞ்சு வருசமாப் போய்வாறன். ஆழக்கடலுக்குப் போறேல்லை. ஒரு ரெண்டு மைல்வரை போய்வருவம். மற்ற மீன்பிடிகாரர்போல பெரியளவு அனுபவம் இல்லாட்டியும், ஓரளவுக்குக் கடலைப்பற்றித் தெரியும்"



"கடலின் நீரோட்டங்கள் மாறுவது, கடலின் எழுச்சி, வற்றுவது பற்றியெல்லாம் தெரியுமா உங்களுக்கு?"

"ஓரளவு தெரியும். கடலில் காற்று மாறுவது, பருவம் மாறுவது, நீரோட்டங்கள் மாறுவது, எல்லாவற்றையும் என் அனுபவமூலம் தெரிந்து கொண்டிருக்கிறன்"

"கடலில் நீங்கள் நின்ற நேரங்களில் உங்களுக்கு ஏற்பட்ட வித்தியாசமான அனுபவங்கள் சிலவற்றைச் சொல்லமுடியுமா?"

"ஆழக்கடலுக்குப் போகாததால, காலநிலை மாற்றத்தால ஒரு சிக்கலும் வரேல்லை, ஆனா நேவியால (சிறீலங்காக்கடற்படை) கரைச்சல் வந்திருக்குது. ஒருநாள் மீன் நல்லாப்பட்டுது. அப்ப நாங்கள் வலையை இழுத்து மீனை எடுத்திட்டு, திரும்பவும் வலையைப்போட்டு இழுத்து மீனை எடுத்துக் கொண்டிருந்தம், அந்தநேரம் எங்களிட்டை போட் (படகு) இருந்தது. அதுக்குக் 'கடலரசி' எண்டுபெயர். தமிழிலையும், இங்கிலிசிலையும் பெரிசா எழுதியிருந்தது. நாங்க கடலுக்கை நிக்கேக்க நல்லா விடிஞ்சுட்டுது. நேவிக்காரன் வந்திட்டான். அவனைக் கண்டிட்டு ஓடவும் ஏலாது. பேசாம நிண்டம். அவங்கள் என்னைக் கண்டிட்டு, "நங்கி, நங்கி" என்று கூப்பிட்டாங்கள். ஏன் இன்னும் கரைக்குப் போகாம நிக்கிறம் எண்டதையும் கேட்டான்.

பின்ன அப்பா, சொன்னார், "நாங்க இப்ப ரெண்டாந்தரம் வந்து பிடிக்கிறம். மீன் கூடுதலாயிருக்குது. அதுதான் வந்தனாங்கள். தங்கச்சி தானும் வரப்போகுது எண்டு கேட்டபடியாக் கூட்டிவந்தனாங்கள்" எண்டு. அவங்கள் பேசாமப் போட்டாங்கள். இது நடந்து ஒரு பத்து வருசமாவது இருக்கும். இப்ப அவங்கள் என்னைக் கடலுக்கை கண்டாங்கள் எண்டா 'கடற்புலி' எண்டு நினைச்சுப் பிடிச்சுப் போடுவாங்கள்"

என்று சிரித்தார். தொடர்ந்து, "அதுக்குப் பிறகு கொஞ்சநாளா, மற்ற வள்ளக்காரரை மறிச்சு, கடலரசி எங்கே எண்டு விசாரிப்பாங்கள், ஒருநாள் நான் கடலுக்குப் போகேல்லை, அண்டைக்குக் கடலரசியைக் கண்டிட்டாங்கள். "நங்கி, நங்கி" எண்டு கேட்டாங்களாம். அதுக்குப்பிறகு நான் போனா, நேவி தூரத்தில தெரியவே விலத்திவிடுவம்"

"நீங்கள் கடலிலே என்னென்ன வேலைகள் செய்வீர்கள்?"

"வலைபோடுவன். சவள் வலிப்பன். மீன்பட்ட வலையை இழுப்பன். கம்பு ஊண்டுவன்."

"கம்பு ஊன்றுதல் என்றால்?"

"சில சமயங்களில் முருகைக்கு இஞ்சாலை இருக்கிற தண்ணி ஆழக்கடலுக்கை போய்க்கொண்டிருக்கும். அதை வடு எண்டு சொல்லுவம். சிலநேரம் ஆழக்கடல் தண்ணி இஞ்சாலை வந்துகொண்டிருக்கும். அதை வெள்ளம் எண்டு சொல்லுவம். வடுநேரம் மரங்கள் உள்ள வாறதும், வெள்ளம் நேரம் வெளியே போறதும் கஸ்ரம். தண்ணியோட்டம் மரத்தைப் பிரட்டிப்போடும். முருகையை உடைச்சு, உள்ளுக்கும் வெளியவும் போய்வர ஒருபாதை வச்சிருக்கிறம். அந்தப் பாதையால வாறநேரம் தண்ணீ எங்களுக்கு எதிர்ப்பக்கமா வந்துகொண்டிருந்தா, கட்டுமரத்தில முழங்காலில் இருந்துகொண்டு, ஒருநீளமான தடியை தண்ணீருக்குள்ள தரையில ஊண்டிக்கொண்டு கட்டுமரத்தை அசையவிடாம வச்சிருப்பம். கொஞ்ச நேரத்துக்கு ஒருக்கா தண்ணீ சமமா நிக்கும். அந்த நேரத்தில கோலை எடுத்திட்டு சவளாலை வலிச்சுக்கொண்டு உள்ள வருவம்"

"அப்பா வராத நாட்களில் நீங்கள் தனியாகக் கடலுக்குப் போவதில்லையா?"

"போயிருக்கிறேன். அப்பா வந்தா, அவர் வலையைப் போட, நான் மெல்ல மெல்லச் சவளைப் போடுவன், பிறகு ரெண்டு பேருமே வலையை இழுப்பம். நான் தனியப் போறநாளிலை நானே ஒரு கையாலை சவளை வலிச்சு வலிச்சு ஒரு கையால வலையைப் போடுவன் பிறகு தனியவே வலையை இழுப்பன்."

என்றார். வலையை இழுப்பதாலும் துடுப்பு வலிப்பதாலும் காய்த்து இறுகிப்போயிருந்த தனது உள்ளங்கைகளை எமக்குக் காட்டியவாறு,

"என்ரை அக்கான்ரை பிள்ளையளைச் செல்லமா முதுகில தட்டினாலே, "அன்ரி உங்கடை கைபட்டு நோகுது", என்று சிணுங்குவாங்கள்."

"உங்களுக்கு நீந்தத் தெரியுமா?"

"பெரியளவில் இல்லை. ஒரு பத்து மீற்றர் வரை நீந்துவன்."

"கடலில உங்களுக்கு அபாயம் ஏற்பட்டால் எப்படித் தப்பிவருவீர்கள்? ஏன் தொடர்ந்து நீந்திப் பழகாமல் விட்டீர்கள்?"

"காலையில கடலுக்குப் போய் வந்தாப்பிறகு, நான்தான் கடைக்குப் போய் சாமான் வாங்கி வந்து சமைப்பன். பின்னேரம் வலைபொத்துவன். பிறகு இரவு சமைச்சுச் சாப்பிட்டுட்டுப் படுத்தா, பிறகு வெள்ளாப்போடை எழும்பிக் கடலுக்குப் போயிடுவன். நானும் அப்பாவுந்தானே தனிய. எல்ல வேலையளையும் நானே செய்யிறதால நேரமே இல்லை. வீட்டுக்கு முன்னாலை கடலிருந்தாலும் நேரம் கிடைக்குதில்லையே?"

என்று ஆதங்கப்பட்டார்.

"போனவருசம் கடற்புலியள் நடாத்தின போட்டியில நானும் விளையாடினன். கழுத்தளவு தண்ணீருக்குள்ள நிண்டு கயிறிழுக்கிற போட்டியில நாங்கதான் வெண்டம். எங்கடை அணியில இருந்த ஏழு பேருக்குமே கடற்புலிகள் பரிசு தந்தினம். சங்கீதக்கதிரை மாதிரி கடலுக்குள்ள போசாவை

**''மீன் பிடிக்கிறது எங்கட குலத்தொழில். எங்கட தொழில என்ரை மகள் செய்யிறதில என்ன இருக்குது? நாதஸ்வரக்காரனின்ரை மகள் நாதஸ்வரம் வாசிக்கிறதையோ, பாட்டு வாத்தியாரின்ரை மகள் பாட்டுப் பாடுறதையோ ஆரும் பிழை எண்டு சொல்லேல்லையே. மீன்பிடிகாரனின்ரை மகள் மீன் பிடிக்கிறதில மட்டும் என்ன பிழை? குலத்தொழில் தானே? ஏன் என்ரை மகளுக்கு ஒண்டும் சரிவருகுதில்லை. முப்பத்தொரு வயதாகியும் அவள் என்னோடை தானே இருக்கிறாள்?''**

மிதக்க விட்டிட்டு பாட்டுக்கு ஓடி, பாட்டு நிக்க ஒவ்வொரு போசாவோடை நிக்க வேணும். அதுவும் விளையாடினம். சும்மா ஓடுறதைவிட தண்ணீருக்குள்ள ஓடுறது கஸ்ரம். ஆனா எங்களுக்கு இதெல்லாம் பழக்கந்தானே"

என்றார் சிரிப்புடன் அந்தக் கடலரசி.

எல்லோரையும் விட வித்தியாசமாக வாழ்ந்தாலும், இவர் ஊரிலிருந்து அந்நியப்பட்டுப் போகவில்லை. இயல்பாகவே வாழுகிறார். ஊரவர்களும் இயல்பாகவே ஏற்றுக்கொள்கின்றார்கள். கடலுக்குப்போகின்ற நேரங்களில் மட்டும், சாறமும் தலைப்பாகையும் கட்டும் இவர், வீட்டிலிருக்கும் போது சாதாரணமான சட்டைகளையே அணிந்து எளிமையாக இருக்கின்றார்.

கிழிந்த வலையொன்றைப் பொத்திக்கொண்டிருந்த அப்பா

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

# காற்றும் நிலவும்

குண்டுப்புகை நிலவை விழுங்கியது. இடையிடையே விலகிய இருளில் கூர்முகம் காட்டியது நிலவு. அந்த நிலவில் அவை வெளீரெனத் தெரிந்தன. ஓ! ஈரம் காயாத கல்லறைகள். இன்று —துவி விதைக்கப்பட்ட புதைகுழிகள். நிலவு பொங்கி எறித்தது.

ஊய்.....ஊய்..... என மோதியடித்த காற்று அவைகளைத் தழுவிச் சென்றது. மழைக்காலத்து வண்டுகளின் சிறுசிறு இரைச்சலையும் ஈரம் தோய்ந்துபோன காற்றின் மெல்லிய இரைச்சலையும், தவிர ஏகாந்தம் நிரம்பிய இரவு. சிதறிப் பறந்த நட்சத்திரங்கள். மின்னி ஒளிர்ந்தன. இரவுப் பறவையொன்று தனியே கத்தியபடி குறுக்காக இறகுகளை அடித்தபடி விரைந்துபோனது.

நினைவுகளின் சுமையோடு காற்று ஒருகணம் மௌனித்து மீண்டும் ஊய்... ஊய்... என்ற பெருஞ்சத்தத்தோடு சுழன்றடித்தது. தன் பலமனைத்தையும் திரட்டி அவைகளைத் தழுவிச் சென்றது.

புகைமூட்டம் கவிந்து இருள் விலக, நிலவு மீண்டும் வந்து ஏக்கத்தோடு அவற்றைத் தொட்டு நிற்பதும் மறைவதுமாக........

நிலவு ஏக்கத்தோடு காற்றைக் கேட்டது.

'நண்பா, என்னை மூடி நின்று மறைக்கும் இந்த இருட்திரையை விரட்டி விடமாட்டாயா? நான் இந்த மண்மீது துயின்றுகொண்டிருக்கும் மண்ணின் குழந்தைகளை ஆசைதீர அணைக்கவேண்டும். எனக்கு உதவி செய்வாயா?'

நிலவின் ஆதங்கம் காற்றைச் சிலிர்க்க வைத்திருக்கவேண்டும். காற்று ஒருகணம் அமைதியாகி, மீண்டும் மூசி ஆர்ப்பரித்தது. சின்னஞ்சிறு சருகுகள் படபடத்தன. செடிகொடிகள், இலைகள் சிலுப்பி ஆடின.

'நண்பா, இந்த மண்ணின் குழந்தைகளின் கடைசி மூச்சையும் சுமந்து கொண்டு நிற்பவனே, திசைகளைத் தொட்டு எல்லைகடந்து நிற்கும் நீ, என்மீது இரக்கம் காட்ட மாட்டாயா?' நிலவு மீண்டும் மீண்டும் யாசித்தது.

மீண்டும் மௌனம். புதிய அலையாய், புழுதிச் சுழலாய் காற்று புதைகுழி மண்ணைத் தன்னோடு அணைத்துக் கொண்டது. நேற்று விதைக்கப்பட்ட வித்துடல், இன்னும் நினைவாய் எழுப்பப்படாத கல்லறை, காற்று ஒருகணம் சுதந்திரமாகச் சுற்றிவந்து நிதானித்தது. நிலவோடு பேசத்தொடங்கியது.

'இந்த மண்ணின் குழந்தைகளின் மூச்சுக்காற்றுகளையும் கனவுகளிற் சுமந்து நான் என்னுள் இரசிக்கின்றேன். அலையின் குமுறலாய் என்னுள் பொங்கி எழும் அவர்களின் நினைவுச் சுமைகள்....... மண்ணை முத்தமிட்டபடி வீழ்ந்த இறுதிக்கணநேரத்துடிப்புகள் அனைத்தையும் சுமந்து நான் புதுப்பொலிவு பெற்றுள்ளேன். ஆனாலும் இத்தனைக்கும் மத்தியில் எதிரியின் குண்டுகள் என்னைச் சேதப்படுத்தின. உன் உயரத்துக்கு எட்டமுடியாத என்னுடல்......... காற்று, உதவமுடியாமல் தடுக்கும் தன் இயலாமையை நினைத்து வருந்தியது.

நீண்ட பெருமூச்சாக அது ஒருகணம் பொங்கி எழுந்து அடங்கியது. மீண்டும் கல்லறைகளைத் தொட்டது. சிலிர்த்தெழுந்து பூரித்தது.

இந்த நாட்டின் விடுதலைக்காக இவர்கள் மண்மீது சாயும்போது இவர்களைத் தடவிச் செல்கின்றேன். தொட்டணைக்கின்றேனே, எத்தனை மெய்சிலிர்க்கும் சம்பவங்கள்! உலகத்தில் எங்கும் காணமுடியாத தோற்றமாக, என்னோடு இரண்டறக் கலந்துவிட்ட கரும்புலிகள்........ வெடிமருந்துப் பொதிகளோடு வாகனமேறி, வெடிமருந்தோடு வெடித்தவர்கள், பொங்கித்தணியும் அலைகளூடே எதிரிப்படகை எரித்தவர்கள், இன்னும் எழுதாத வரிகளாக, தேதி குறித்த, நேரங்கணித்த சாவோடு, உலகமே அறியாமல் வெடித்தவர்கள்....... தேசம் ஒன்றின் விடிவிற்காக உடல் தூசாகிப் போனவர்கள்....என்னோடு கதைபேசி என்னோடு பாடியவர்கள்........

எனக்குள் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டிருக்கிறதே. கந்தகப் புகை சூழ்ந்து கனத்துப்போன என் உடல் இவர்களின் தியாக நினைவுகளைச் சுமந்து இலேசாகிப் பறக்கிறதே' காற்று பெருமையோடு அவற்றைப் பார்த்தது.

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

# மண்ணின் குரல்

விசித்திரன்

அந்தப் பாடசாலை அகதி முகாமாகி இருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் அதற்குள்...

இரு பெண்களிடையே வாய்த் தகராறு சிறிது சிறிதாகப் 'பெலமாகிக் கொண்டுவந்தது. தகராற்றின் காரணம் புரியவில்லை.. ஆனாலும் அவற்றிடையே தெறித்த சில வார்த்தைகள் கவனத்தை ஈர்த்தது.

"...இஞ்சேர்...கனக்கக்கதைக்காதை.... உன்ரை பணத்திமிர் உன்னோடை.... உன்ரை பிள்ளை 'சுவிஸ்ஸிலை' எண்டால் என்க்கென்ன.. ஊரிலை நீ மாளிகையிலை இருந்திருக்கலாம். ஆனால் இப்ப அகதிமுகாமுக்கைதான் தெரியுமோ...வார்த்தையை அளந்து பேசு...'

"நீ என்னை என்ன வேணுமெண்டாலும் சொல்லு. பிள்ளையை ஏன் இழுக்கிறாய்...உன்ரை பிள்ளைக்கு வெளிநாடு போகப் பொசிப்பில்லை....அதிலை கதை வேறை...'

"ஓ... உன்னைப்போல் நான் கோழைத்தாயே.. சண்டைக்குப் பயந்து பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்பிப் பிழைக்கிறதுக்கு.... நான் வீரனைப் பெற்ற வீரத்தாயடி... என்ரை பிள்ளை நாட்டுக்காக இயக்கத்திலை சேர்ந்து சண்டை பிடிக்கிறான் தெரியுமோ?....'

விஷயம் இதோடு நிற்க...

மேலே விசாரித்ததில் இருவரும் உடன் பிறந்த சகோதரிகள் என்ற செய்தியும் கிடைத்தது.

புதிய புறநானூற்றுத் தாய்மார் இன்னமும் எங்கள் மண்ணில் வாழ்வது பெருமைக்குரிய விடயம்தான்.

மறுநாள் அதே பாடசாலைப் பக்கம் போகும் போது இன்னொரு செய்தியும் கிட்டியது.

முதல் நாள் சண்டை பிடித்த வெளிநாட்டுக்கு மகனை அனுப்பிய தாய் முகாமில் இருக்கும் தன் இரண்டாவது மகனை, "ஏன் இயக்கத்துக்குப் போகாமை இங்கை சும்மா கிடந்து சாப்பிட்டுக் கொண்டு, ஊர் சுற்றி, என் மானத்தை வாங்கிறாய்?" என்று திட்டினாராம்....

இந்த விடயத்தைச் எனக்குச் சொன்ன அந்த நண்பர் தன் உணர்வாகச் சில வார்த்தைகளைச் சொன்னார்.

"சண்டைகளாலை பிரச்சனைகள் வருவது உண்மைதான். ஆனால் சில வேளைகளில் சண்டைகளாலை சில நன்மைகளும் உண்டாகின்றன. இந்தப் பெண்கள் சண்டையாலை மட்டுமல்ல.... இப்ப நடக்கிற பெரிய போர் தானே எங்கடை சனத்துக்கு 'எங்கடை நாடு' என்ற உணர்வினை ஏற்படுத்தியிருக்குது. வீடு ஒரு சின்னப் பிரச்சனை... ஆனா நாடு என்பது பெரிய விஷயமல்லே....!'

# விடுதலை உணர்வுடையீர்

கடலலையில் நடை பயிலும்
உடையணிந்த கடற்புலிகள்
படைபடையாய் அணி திரண்டு
தடை உடைத்துத் துறை புகுந்து சிங்கள
கடற்படையின் சுடுபடகுகளை
உடைத் தெறியும் உயிரான்மாக்கள்
ஒப்பற்ற உயிராயுதங்கள் என்றும்
அழியாத காவியங்கள் இவை
கடை, தெருவில் கிடைத்திடுமோ?
விடை பகர்வீர்! விடுதலை உணர்வுடையீர்!
விடுதலையின் விடி விளக்குகளாய்
விடியலது வைர முகப்புகளாய்
உயிரதனை எரிபொருளெரிவது போல்
எரித்தெரித்து எம் நிலை உயர்த்தும்
இணையற்ற ஆத்மாக்களை ஒவ்வொருவரும்
ஒரு கணம் நினைத்திடுவோம்!
உரிமையதை உயிர் மூச்சாய்
உயிர்களதை உலங்கூர்திகளாய்
உயிர் வாய்வை உள்வாங்கி – தமிழரது
உயிர் வாங்கும் கடற் கழுகுகளின்
உயிர் வாங்க உறுதி பூண்டவராய்
இந்து சமுத்திரத்தில் உள்ளிறங்கி
இள வயசில் சுழி ஓடி
உயிர் கொடுத்து உயிர் வாங்க
அடம் பிடிக்கும் இளம் புலிகள்

இலட்சியத்தின் இரட்சகராய்
உவர் நீருள் எரிநெருப்பை
அணையாது அணைத்திழுத்து
கடலதனில் உடல் குளித்து
கடற்படையடிக்கும் கரும்புலிகளினை
எவரும் எடை போட முடியாது?
இன்னும் சில மணியில் உயிர் பிரியும்
உயிருள்ள புலிகளுக்கு அது புரியும்
அரை நொடியும் பிந்தாமல், பிசகாமல்
அவையடித்து அவைபிரியும்
உலகம் இதை உணரும்!
உயிரனைத்தும் உடன் வியக்கும்!
என்றாலும்
இவைகளை உலகம் இருட்டடிக்கும்...
எம் கடற் புலிகளுக்கு இவைபிரியம்
இவர்களிலே யார் பிரியம்
ஒளி வீசி ஒழிகின்ற உயிர் மீது
உயிர் வாழும் எவர் பிரியம்?
உயிர்மேல் பிரயமுள்ள இன்னுயிர்க்கு
உணர்விருந்தால்தான் புரியும்.
ஊருறங்கும் வேளையதில்
உணர் வெழுந்து ஆயுதமாய்
எதிரியவன் உடல் கிழிக்க
எதிர் நீச்சல் உடனடிக்கும்
படையுன்னை எவை அடிக்கும்
கடமையிலே கடற்புலிகள்
கருமமதில் கரும்புலிகள்
தருமத்தில் தமிழ்ப் புலிகளதாய்
உருவத்தில் உணர்வு கடந்தவராய்
உயிரோடு விளையாடும் உளமிக்க
உன்னத ஆத்மாக்கள்
கடல் இவர்கள் களம்
களம் இவர்கள் மனம்
மனம் இவர்கள் பலம்
பலம் படைத்த இவர்களினால்
புலம் கிடைக்கும் நிசம்
நலம் பெறுக, நம் கடற்புலிகள்
நிலம் துலங்கி நிலை கொள்ளும்
பலம் பெறுக, பலம் பெறுக

–சிவா சின்னத்தம்பி

# யாழ் நகரை...

பிடித்து வைத்திருக்கின்றீர்கள். இதனை எவ்வளவு காலத்திற்குப் பிடித்து · வைத்திருக்கப் போகின்றீர்கள்? அத்துடன், துருப்புக்கள் சகலரையும் யாழ்ப்பாணத்தில் குவித்து வைத்திருக்கின்றனர்.

## புலிகள் கட்டமைப்பு சிதையவில்லை

நாம், யாழ்ப்பாணச் சண்டையில் சந்திரிகா அரசு எதிர்பார்த்தது போல் மாபெரும் உயிர்ச்சேதத்தைச் சந்திக்கவில்லை. மொத்தமாக 500 போராளிகள் வரை வீரமரணம் அடைந்திருக்கின்றார்கள். 1500 பேர்வரை காயப்பட்டிருக்கின்றார்கள். இவர்களில் ஏராளமானோருக்குச் சிறுகாயங்களே ஏற்பட்டிருக்கின்றன. எவ்வளவு பெரிய படைக்கலச் சக்தியோடு, படையணியோடு இராணுவம் நகர்ந்த போதும் நாம் விட்டுவிட்டு ஓடவில்லை. நாங்கள் நேர்நின்று முகம் கொடுத்துப் போராடியது உங்களிற்குத் தெரியும். இப்படியாகப் போராடி, எதிரிக்குப் பலத்த சேதத்தையும் ஏற்படுத்தினோம். எதிரி 1000க்கும் அதிகமாக படையினரை இழந்துவிட்டான். ஆனால் எதிரி, பொய்யான பிரச்சாரத்தை இன்று செய்கின்றான். 4000 க்கும் மேற்பட்ட படையினர் காயம் அடைந்திருக்கின்றார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டமைப்பு, படையமைப்பு எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. இன்னும் என்ன செய்யப் போகின்றார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்தைப் பிடித்து வைத்திருக்க நாங்கள் சும்மா இருக்கமாட்டோம். நாங்கள் தென்தமிழீழத்தில், மட்டக்களப்பில் பெரிய இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவோம். பொருண்மிய மையங்களை அழிப்போம். அப்போது மட்டக்களப்புப் பிரதேசத்தைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்படும். அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து தென்தமிழீழத்திற்குப் படைகளை அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பும் போது யாழ்ப்பாணத்தில் சிறீலங்காப் படைகளின் பாதுகாப்புப் பலவீனப்படும். நாங்கள் யாழ்ப்பாணத்தில் ஊடுருவி, ஊடுருவி அழிப்போம். நிம்மதியாக யாழ்ப்பாணத்தில் இருக்க விடமாட்டோம். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் எங்கள் பக்கம் அவன் இப்போது பெரிய சதிவலையை விரிக்கின்றான்.

'வாருங்கள், மக்களே வாருங்கள். உங்களிற்கு மின்சாரம் போட்டுத் தருகின்றேன், வீடு கட்டித் தருகின்றேன். நிவாரணம் தருகின்றேன். சம்பளம் தருகின்றோம்' என்று மன்றாடுகின்றார்கள். மக்கள் இல்லாத யாழ்ப்பாணத்தை வைத்துத் கொண்டிருந்தால் உலகம் அவர்களைத் திட்டும். இன்றைய சூழ்நிலையில் எங்களுக்குச் சாதகமான சில அம்சங்கள் உண்டு. ஒரு சாதகமான அம்சம் என்னவென்றால், இதுவரையில் தமிழ் நாட்டில் மௌனமாக இருந்து வந்த சக்திகள் இப்பொழுது ஈழத்தமிழ் மக்களுக்குச் சார்பாகக் குரல் கொடுக்கின்றன. ஆகவே இனிமேலும் தமிழ் மக்களின் மேல் கைவைத்தால் சர்வதேச உலகம், தமிழகம் தட்டிக் கேட்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் பொறுமையாக இருப்போம். போராடுவோம். வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களிடையே பெரிய அளவில் எழுச்சி ஏற்பட்டுள்ளது. அந்த மக்கள் பெருமளவில் உதவி செய்கின்றனர்.

பெரியளவில் எழுச்சி இருக்கின்றது. இன்று எங்களிற்கு நன்றாகத் தெரியும், இந்த யாழ்ப்பாணப் படையெடுப்பிற்குப் பின்பு எங்கள் மக்கள் மத்தியில் சந்திரிகா அரசு மீது ஒரு ஆத்திர உணர்வு, வெறுப்புணர்வு ஏற்பட்டுள்ளதோடு, விடுதலை உணர்வு மேலும் அதிகரித்துள்ளன என்று. அதாவது விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இல்லாத பல அறிஞர்கள், ஆசிரியர்கள், அரச அதிகாரிகள் என்ற ரீதியிலே எல்லோரும் ஒன்றாக ஒரே தேசிய உணர்வோடு பிரச்சனையை அணுகுகின்ற, பார்க்கின்ற ஒரு புதிய எழுச்சி தோன்றியுள்ளது. இது எங்களிற்கு நல்லது. எங்கள் படைப்பலமும் பெருகினால்தான் எங்கள் உயிரிழப்புக் குறையும். ஆகவே இவ்விடயத்தில் ஆட்சேர்ப்பு விடயத்தில் புலிகளிற்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும். அரச அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் பலர் புதிய பல நெருக்கடிகளிற்கு உள்ளாக்கப்படுவார்கள். நாம் நேரடியாகச் சந்திரிகாவோடு நடக்கின்ற பேச்சுவார்த்தைகளின் கதவுகளை மூடியிருக்கின்றோம். ஆனால் இனி, பேச்சுவார்த்தையொன்று சர்வதேச மத்தியஸ்தத்தோடு நடக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

அப்படியானதொரு பேச்சுவார்த்தையை நடாத்துவதாக இருந்தால் புலிகள் பங்குபற்றுவர். ஆனால் அப்படிப் பேச்சுவார்த்தை நடந்தாலும், எமது மண்ணை ஆக்கிர மித்துள்ள இராணுவம் வெளியேற வேண்டும் என்பதை த்தான் நாம் சர்வதேச உலகத்திடம் வலியுறுத்துவோம். முதலில் இராணுவத்தை விலக்கு! எங்கள் மக்கள் தங்களுடைய பிரதேசங்களிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அதன் பின்பு ஒரு சர்வதேச ரீதியான மத்தியஸ்தத்துடன் நாங்கள் பேசத் தயார். இன்று அவர்கள் வெற்றி மாலை சூடி, பட்டாசுகள் கொளுத்தி பெரிய ஆர்ப்பாட்டங்கள் செய்தாலும் கடைசியில் இறங்கி வந்து புலிகளுடன் பேசவேண்டிய நிர்ப்பந்தமும், சர்வதேச மத்தியஸத்தத்தின் நிர்ப்பந்தமும் கட்டாயம் வந்துதான் ஆகும். இன்றைய காலகட்டத்தில் நாங்கள் வந்து எத்தனையோ நெருக்கடிகளை, சவால்களை எதிர்கொண்டு இருந்தாலும், நாங்கள் உறுதி தளராமல், போராட்டத்தில் பற்றுக்கொண்டு விடுதலையில் பற்றுக்கொண்டு சில நடவடிக்கைகளை ஒட்டுமொத்தமாக எமது மக்களின் ஒற்றுமையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். எமது இயக்கத்தில் இளம்பரம்பரை சேர வேண்டும். இளம்பரம்பரை, தானாக இந்த விடயங்களை உணர்ந்து போராட்டத்தில் பங்களிப்புச் செய்ய முன்னிற்கின்றது. இது எமது இயக்கத்திற்கு ஒரு நல்ல வலுவாக இருக்கும்.

பேச்சுவார்த்தையை நடாத்துவதாக இருந்தால் புலிகள் பங்குபற்றுவர். ஆனால் அப்படிப் பேச்சுவார்த்தை நடந்தாலும், எமது மண்ணை ஆக்கிர மித்துள்ள இராணுவம் வெளியேற வேண்டும் என்பதை த்தான் நாம் சர்வதேச உலகத்திடம் வலியுறுத்துவோம். முதலில் இராணுவத்தை விலக்கு! எங்கள் மக்கள் தங்களுடைய பிரதேசங்களிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அதன் பின்பு ஒரு சர்வதேச ரீதியான மத்தியஸ்தத்துடன் நாங்கள் பேசத் தயார்.

# நெருக்கடியிலும்..

உதயசிங்கம் குமாரதாசன்
தனபாலசிங்கம் சிவரூபன்
அரியநாயகம் சிறீராம்
ஞானேந்திரன் செந்தில்ரூபன்
அம்பிகைநாதன் அரவிந்தன்
உயிரியல்– தர்மராஜன் வினோதன்
கொக்குவில் இந்துக் கல்லூரி
கணிதம்–கைலாசபிள்ளை நகுலேந்திரன்
வேம்படி மகளிர் கல்லூரி
கலை–சிவதர்சினி தங்கராசா
காட்லிக் கல்லூரி
கணிதம்–எஸ். ரமேஸ், எஸ். நந்தகுமார்
பருத்தித்துறை பெண்கள் உயர் கல்லூரி
உயிரியல்–சிவப்பிரியா குழந்தைவடிவேலு

(தற்போது எடுக்கப்பட்ட ஓர் கணிப்பின்படி யாழ். மாவட்டத்தில் இருந்து சுமார் 70,000 மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது)




கேணல் கிட்டு ஞாபகார்த்த
எழுச்சி மாலை
நிகழ்ச்சிகள்

* தமிழீழ தேசிய கொடியேற்றல்
* கேணல் கிட்டுவின் உருவப்படம் திரைநீக்கல்
* சிறப்புரை (நடமுரளிதரன்) * நடனம் * பேச்சு * கவிதாஞ்சலி
* எழுச்சிப் பாடல்கள் * நாடகம்
(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் - சுவிஸ் கிளை)
* மக்கள் மேடையில் தேசிய பாதுகாப்பு நிதி வழங்குதல்

இந் நிகழ்ச்சியின்போது தமிழீழ மண் மீட்பு நிதிக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொடர் அதிஸ்டலாபச் சீட்டின் முதல் மாதத்திற்குரிய அதிஸ்டலாபச் சீட்டுக்கள் விற்பனைக்கு விடப்படும். ஒவ்வொரு மாதமும் 100 அதிஸ்டசாலிகள் இதன் மூலம் தெரிவாவர்.

எங்கள் தாயகத்தை எதிரியிடமிருந்து மீட்க மண் மீட்பு நிதிக்காய் வாரி வழங்குவோம் !

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

Volkshaus, Stauffacher Str. 60, 8004 Zurich

14.01.96 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி

TAMIL EELAM

தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் கிளை)

# பெருநெருப்பாய் நிமிர்வீர்

என்பிள்ளையானாலும் எவர்பிள்ளையானாலும்
எனக்கொன்றே.
கண்களுக்குள்ளே நான் பேதம் காணவில்லை.
இடதும், வலதும் ஒன்றே.
முந்தையர்பூமி மூச்சுத்திணறுகின்றது.
வந்தெழுவீர் என்பிள்ளைகாள்!
பூட்டனும், பேரனும், தந்தையும் விட்ட தவறுக்கு
பாரச்சிலுவை சுமக்கவேண்டிய பலனுமக்கு.
நாளை உம்பிள்ளை
குற்றப்பட்டியலில் உம்பெயரைக் குறிக்கக்கூடாது.
அதனால் எழுவீர்!
புலியாய் நிமிர்வீர்!
பெருமையுள்ள எம்வயலிலெல்லாம்...
உரிமையற்ற ஒருவன் உழுகின்றான்.
எம்மூரின் ஒவ்வொரு பிடிமண்ணும்
இரும்புப்பிடிக்குள் இறுகியுள்ளது.
காலைக்கும், மாலைக்கும் கூட கைவிலங்கு..
பேயிருக்கும் வீடாய்.
பிணக்காடாய் போனதெம் நிலம்.
ஓலமிட்டுத் தலையிலடித்துக் கத்துகிறது காற்று.
யாருமற்ற சூனியத்தில் பாலைச்சரிக்கிறது நிலா.
மாரிமழையினால் வேர்பிடித்த
முற்றத்துச் செவ்வரத்தை
மொட்டுக்கள் சிலிப்பி, முகம் மலர்த்தி
பறித்துத் தலைசொருகுவார் எவருமின்றி,
வழிபார்த்து, விழிபனித்து, துளிசிந்தும்.
பொறுத்தருளும் பொழுதல்லப் பிள்ளைகாள்.
அதனால் எழுவீர்!
புலியாய் நிமிர்வீர்!
யாரை அனுபவியென ஊர்கொடுத்து வந்தோம்
காரையும், சூரையும் படரும்
கலட்டுத்தரையெனினும்
எமக்கது தாயின் வயிறு.
கிட்டியும், கிளித்தட்டும்,
கீரிமலைக்குளியலுமாய்
பொட்டிட்டிருந்த புனிதம் அழிந்தது.
மொட்டை மரமானது எம்வாழ்வு.
நகரும் ஒவ்வொரு நொடியும்
பகைவன் பலம் பெறுவான்
பெரும்படையாகுவீர் புதல்வீர்!
நிகரற்ற பெருநெருப்பாய் நிமிர்வீர்!
பிரபாகரன் காலம் வரலாறாகட்டும்.
புயல் புகுந்த மாதிரியாய்...
பகைதுரத்த ஊர்புகுவோம்.
சிவந்த சூரியனெழும் ஒரு விடிகாலைப்
பொழுதில்
பகையெரிந்து போனது ஊருக்கு
வருகவென
உள்ளேயிருந்து உறவை அழைப்போம்.
சாணம் மெழுகிய திண்ணைத்தரையில்
உண்டமயக்கத்தில் உறங்கிக் களிப்போம்.
அதனால் எழுவீர்!
புலியாய் நிமிர்வீர்!

புதுவை இரத்தினதுரை

Disigned by Euro Graphics & Printings Ltd - 0181 801 3822
Printed by Observer Group News papers